தரணி போற்றும் தவம் செய்ய தடையேதும் இல்லை

– தவத்திரு. எஸ்.பி. மூர்த்தி ஸ்வாமிகள்







Sri Paripoorna Vinayagar

ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகள் துணை

தரணி போற்றும் தவம் செய்ய தடையேதும் இல்லை.

ஆசிரியர்
தவத்திரு. எஸ்.பி. மூர்த்தி ஸ்வாமி அவர்கள்

விலை : ரூ. 100/-

வெளியிடுவோர்
R. அருண் அவர்கள்
8, Portway, Clase Reading, RGI-6, LB U.K.

Kamalapatha Illam, Flat A-3,Chandrasekar Apts.,
123, Balakrishnan Street, West Mambalam, Chennai - 33.

எவரெடி ஆப்செட் பிரிண்டர்ஸ்
எண்-6/21, அழகிரிபுரம் முதல் தெரு,
கோடம்பாக்கம், சென்னை - 600 024.
போன் : 42122271, 98412 98471



ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகள்

பொருளடக்கம்

1.	முன்னுரை	-	1
2.	அன்பர்கள் அடியாராதலும் அருட்பணி ஆற்றலும்	-	11
3.	தவம் என்றால் என்ன? தவம் ஏன் மேற்கொள்ள வேண்டும்	-	19
4.	தவத்திற்கு முந்தைய பயிற்சிகளும் அனுபவங்களும்	-	29
5.	தவம் செய்வதற்கான ஏற்பாடுகளும் தவம் செய்யும் முறைகளும்	-	35
6.	தவத்தின் பயன்கள்	-	41
7.	தவம் செய்பவர்களுக்கு மற்ற அடியார்கள் செய்ய வேண்டிய உதவிகள்	-	45
8.	முக்தியடைய தவம் எந்த அளவிற்கு துணை நிற்கிறது?	-	47
9.	தவத்தின் பல படிகள்	-	51
10.	தவம் செய்பவர்களுக்கு அடியார்கள் உலகம் தற்போது செய்துவைத்துள்ள அனுகூலங்கள்	-	53
11.	தவம் செய்யாதாரின் நிலை	-	55
12.	தவசிகள் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள அருளனுபவங்கள்	-	57

ஆக்கியோன் குறிப்பு

ஆண்டவர் விநாயகரை குருவாக கொண்டு வழிபட்டதனால்தான் ஆண்டவர் ஒரு வித்தியாசமான மகானாக உருவாக முடிந்தது. உலகில் உள்ளோர் யாவரையும் முக்தியடையச் செய்ய வழிவகுத்த ஒரே மகான் தவத்திரு ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகள் ஆவார். அத்தகைய தகுதியை அல்லது ஆற்றலை அவருக்கு அளித்தவர் விநாயகப்பெருமானே ஆவார். அத்தகைய விநாயகப்பெருமானின் பெருமைகளைப்பற்றி நாம் இங்கு அறிந்து கொள்வோம்.

விநாயகர் பெருமை

ஔவைபிராட்டியார் கைலாயத்திற்கு செல்லவேண்டும் என்று விரும்பி விநாயகருக்கு பூஜை செய்து கொண்டிருந்தார். அது சமயம் திரு சுந்தரமூர்த்தி நாயனாரும், திரு சேரமான் பெருமாள் நாயனாரும் கைலாயத்திற்கு கிளம்பி போய் கொண்டிருந்தனர். அதைப் பார்த்த ஔவை பிராட்டியார் விநாயகருக்கு அவசர அவசரமாக பூஜை செய்து முடிக்க திட்டமிட்டார். இதை அறிந்த விநாயகர் ஔவையாரிடம் நிதானமாக பூஜை செய். கவலைப்படாதே பூஜை முடித்தவுடன் நான் என்னுடைய தும்பிக்கையால் விரைவில் உம்மை கைலாயத்திற்கு அழைத்துச்செல்கிறேன் என்று கூறினார். இதைக் கேட்ட ஔவையார் அப்படியே நிதானமாக பூஜைசெய்தார். பூஜை முடிந்தவுடன் விநாயகர் காட்சி கொடுத்து ஔவையாரை திரு சுந்தரமூர்த்தி நாயனார் மற்றும் சேரமான் பெருமாள் நாயனார் ஆகியோர் செல்வதற்கு முன் கைலாயத்திற்கு அழைத்து சென்றார். ஔவையார் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

"மூவர்களை உண்டு பண்ணி முத்தொழிலும் ஈந்தவனே" என்று ஆண்டவர் பாடியுள்ளார். பிரம்மா, விஷ்ணு,சிவன் இவர்களால் படைத்தல், காத்தல், அழித்தல் தொழில்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

"திரிபுரம் எரிப்பதற்கு சிவனுக்கு உபதேசித்தவர்" என்ற ஆண்டவர் பாடல் வரிகள், ஆணவம்-கன்மம்-மாயை ஆகிய மும்மலங்களை அழிப்பதற்கு விநாயக பெருமான் சிவனுக்கு உபதேசித்தார் என்ற பொருளை விளக்குகிறது.

தேவர்கள் மூவர்கள் காணாத் திருவடி
சிதம்பரத்தில் நடிக்கும் திருவடி
பாவனைக்கு எட்டாப் பரமன் திருவடி
பக்தர்கள் தேடிப் பிடிக்கும் திருவடி

என்பது நம் ஆண்டவர் பாடிய பாடல். இதற்கான விளக்கம். இறைவன் -பிரம்மா, விஷ்ணு, ருத்ரன்,மகேச்வரன், சதாசிவம், நாதம், பிந்து, சக்தி, சிவம் ஆகிய ஒன்பது நிலைகளில் இருக்கிறார். இதில் இறுதியாய் கூறப்பட்டுள்ள சக்தி,சிவம்,ஆகிய இரண்டும் இரு திருவடிகளாகத் திகழ்கின்றன. அதாவது விறகு ஒரு தொட்டுப் பார்க்கக் கூடிய பொருள். அதை நெருப்பைக் கொண்டு பற்ற வைத்தால் எரிகின்ற சக்தி அதனுள்ளே இருக்கின்றது. ஆனால் அது கண்ணுக்குத் தெரிவதில்லை. அதாவது உருவமாக விறகும் அருவமாக எரிகின்ற சக்தியும் உள்ளது. அதுபோல அருள் வடிவமாகவும் , ஞானநிலையாகவும் இரண்டு திருவடிகளாக (சக்தி, சிவம்) திகழ்வது தான் விநாயகப் பெருமானின் திருவடி. அத்தகைய திருவடிகளை ஞான நிலை எய்திய பக்தர்கள் மட்டுமே காண முடியும். அந்த ஞான நிலையை அடைய தவம் அவசியம். அந்த தவத்தை செய்வதற்கான வழிமுறைகளை ஆண்டவர்

வகுத்துள்ளார்.அந்த வழிமுறைகளை அறிய ஆண்டவர் குற்றால குகையில் கடுந்தவம் ஆற்றினார். பரிபூரண விநாயகரின் அருள் அவருக்கு கிடைத்தது. இவ்வாறு பல பெருமைகளைக் கொண்டவர் தான் ஸ்ரீ விநாயக பெருமான் அவர்கள்.

19 மற்றும் 20-ம் நூற்றாண்டுகளில் தமிழகத்தில் அரவிந்தர், ராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர், ரமண மகரிஷி, மகான் சேஷாத்ரி சுவாமிகள் மற்றும் காவ்ய கண்ட கணபதி முனிவர் போன்றோர் அருளாட்சி புரிந்தனர். ஆயினும் இவர்களில் யாரும் தன்னுடைய சீடர்கள் என யாரையும் ஏற்கவும், வழிநடத்தவும் இல்லை. ஆனால் 1856-ம் ஆண்டு தோன்றி 1923-ம் ஆண்டு மறைந்த ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகள் மட்டும் உலகத்து உயிர்கள் அனைத்தையும் உய்விக்கும் பொருட்டு விநாயகப்பெருமானை வணங்கி, தவம் இருந்து பரிபூரண அருளைப் பெற்றும், அவ்வருளை அனைவருக்கும் வழங்க யாவரையும் அடியாராக ஏற்றுக் கொண்டார்கள். சீடருள் எனனையும் சேர்த்தாய் போற்றி என்ற மந்திரத்திற்கேற்ப பல சீடர்களை உருவாக்கி அருளினார்கள். சீடர்களை ஏற்றுக்கொண்டதோடு ஒவ்வொரு அடியாரையும் அவ்வப்போது கவனித்து குறைகளைக் களைந்து தண்டித்து கண்டித்து இன்பம் நல்கியும் வருகிறார்கள். அருளையும் பொருளையும் அள்ளி வழங்கி வருகிறார்கள்.

தவவாழ்வு எக்காலத்திலும் பயனளிப்பதே என்பது யாவரும் ஏற்கும் உண்மை. அத்தவவாழ்வை தமது அடியார்களுககு அருளி தவம் மேற்கொள்ள வேண்டிய முறைகளை கற்று கொடுத்து நிறைவேற்றி வருகிறார்கள். அவர்களுக்கு முக்தி கிடைக்கவும் வழி செய்கிறார். அருட்சட்ட அடியார்களில் பலரும் அருட்சட்டம் ஏற்காதவர்களும், தவம் செய்ய அஞ்சி ஜென்மா எடுத்ததன்

நோக்கத்தையே உணராமல் ஒதுங்கியே நிற்பதைக் கண்டு பல காலமாய்நான் வேதனைப் பட்டதுண்டு. கண்ணிருந்தும் குருடராய் வாழ்வதா? என அங்கலாயத்ததுண்டு. எல்லா மகான்களும் தாங்கள் முக்தியடையத்தான் பாடுபடுவார்களே தவிர பிறர் முகதியடைய பாடுபட்டாரில்லை. ஆனால், ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் ஒருவர்தான் எல்லோரும் முக்திபெற வழிவகுத்துள்ளார்கள்.

எனவே எல்லோரும் தவம் செய்து பலன்பெற தவம் பற்றி ஒரு புத்தகம் தனியாக எழுதி வெளியிடவேண்டும் என்று வெகுநாளாக எண்ணியிருந்தேன். இப்படி இருக்கும்போது 2010-ம் ஆண்டு திருமதி கலா அருண் இல்லத்தில் சென்னையில் ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகள் ஸஹஸ்ரநாம அர்ச்சனை விழா நடந்தது. பொதுவாக ஆழ்நிலைதியான நிகழ்ச்சியின்போது பல கேந்திரவிழாக்களில் ஏதாவது அருட்குறிப்பு ஆண்டவரிடமிருந்து வருவது உண்டு. இங்கு நடந்த விழாவில் ஆழ்நிலை தியானத்தின் போது "தரணி போற்றும் தவம் செய்ய தடையேதுமில்லை" என்ற புத்தகம் வெளியிடவேண்டும் என்றும், அதன் ஆசிரியர் தவத்திரு எஸ்.பி.மூர்த்தி இருப்பார் என்றும், 12வது கோடி அர்ச்சனை சென்னை ரங்கநாதன் தெருவில் நடக்கும்போது வெளியிட வேண்டும் என்றும் ஆண்டவரிடமிருந்து அருட்குறிப்பு வந்தது. புத்தகம் வெளியிட வேண்டிய பொறுப்பை தவத்திரு அருண் கவனிப்பார் என்றும் வந்தது.

பின்பு தவத்திரு. கே.எஸ்.கே. ஸ்வாமிகளை அணுகினபோது அவர் சொன்னார் எஸ்.பி.எம் தவத்தின்போது மார்கழி மாதத்தில் இந்த புத்தக வேலையை துவங்கி செய்யுமாறு கட்டளையிட்டார்கள். அதன்படி யோசித்து சுமார் 100 பக்கங்கள் தவத்தின்போது

எழுதப்பட்டது. பிறகு தவத்திரு. அருட்பிரகாசதாசன் ஸ்வாமிகள் இதைப்படித்துப் பார்த்து சில நல்ல கருத்துக்களை கூறினார். தவத்திரு. குருமணி ஸ்வாமிகளிடம் இதை கொடுத்து அவர் படித்தபிறகு எதை நீக்க வேண்டுமோ, எதை சேர்க்க வேண்டுமோ சேர்த்து முறைப்படி புத்தகம் அச்சடிக்க வேண்டும் என்றார். அவ்வாறே அவரை அணுகிய போது அவருக்கு பல முக்கியமான வேலைகள் இருப்பதால் அவற்றை முடித்துவிட்டு பிறகு புத்தகம் பற்றி சிந்தித்து எழுதி தருகிறேன் என்று சொன்னார். சமீபத்தில் அவருடைய நான்காவது மகள் திருமணம் மற்றும் அவருக்கு 60-வது வயது பூர்த்தியாகி சஷ்டியப்தபூர்த்தியும், முடிந்தவுடன் அவரது இல்லத்து விழாவும் இருந்ததால் புத்தக வேலைகளை முழுப்பொறுப்புடன் கவனிக்க முடியவில்லை. தற்சமயம் எல்லாம் முடிந்து இரவு பகல் பாராமல் சிந்தித்து அருமையாக செயல்பட்டு முழுபொறுப்பு எடுத்துக் கொண்டு பல அரிய கருத்துக்களை கூறியும் எழுதியும் வந்தும் அடிமைக்கு மிகப்பெரிதும் உதவியாக இருந்தார். அவர் வசிப்பது பாண்டிக்கு அருகில் உள்ள வில்லியனூர் என்னும் ஊரில், ஆனால் இந்த புத்தகம் தயாரிப்பதற்காக சென்னைக்கு வந்து பல நாட்கள் தங்கியும் புத்தகம் அச்சடித்து வெளிவருவதற்கு எல்லாவிதமான ஏற்பாடுகளையும் உதவியையும் செய்தார். தவத்திரு. மணி ஸ்வாமிகள் இந்த கட்டுரையைப் படித்துப் பார்த்து அச்சுப்பிழைகளைத் திருத்தி எங்கங்கே என்ன என்ன வரவேண்டும் என்கிற ஆலோசனை தந்து புத்தகம் அச்சடித்து வெளிவர உதவினார்.

அவர்க்கு அடுத்தாற்போல் எவரெடி ஆப்செட் பிரிண்டர்ஸ் உரிமையாளர் திரு. பாஸ்கர் மற்றும் திரு. சுபாஷ் மிக குறுகிய காலத்தில் அச்சடித்து வெளிவருவதற்கும் மிகவும் உதவினர். ஆண்டவர் சம்பந்தப்பட்ட எந்த வேலையாக இருந்தாலும்

அதற்குத்தான் முதலில் முக்கியத்துவம் கொடுப்பவர். பொறுப்புடனும், மிகவும் ஆர்வத்துடனும் செய்யக் கூடியவர்கள். தவத்திரு. அருட்பிரகாசதாசன் ஸ்வாமிகள் முதன்முதலாக பலபல விஷயங்களை கூறியும் பல கருத்துக்களை எழுதி வழங்கியும் புத்தகம் வெளிவருவதற்கான பணிகளில் சிலவற்றை பொறுப்புடன் எடுத்துக்கொண்டு செய்தார்கள். போடோக்கள் பலவற்றையும் கொடுத்து உதவினார். இதைத்தொடர்ந்து பல தவசிகள் தத்தம் அனுபவங்களையும் அருளால் முன்னேற்றமடைந்ததையும், தவத்தினால் ஏற்பட்ட நன்மைகளையும் எழுதி புத்தகம் நன்கு வெளிவர பெரிதும் உதவினார்கள். தவசிகள் பலர் அவர்களது புகைப்படங்களையும் அனுப்பி வைத்தார்கள். இந்த புத்தகத்தில் ஏதேனும் அச்சுப்பிழை, எழுத்துப்பிழை இருந்தால் அதை திருத்திக் கொள்ள அடிமை கடமைப்பட்டுள்ளேன். அடிமைக்கு தெரிந்த சிலவற்றை மேலும் இங்கு எழுத கடமைப்பட்டுள்ளேன்.

ஒரு மனிதன் அல்லது ஒரு உயிர் அருளால் முன்னேற்றமடையவும், ஞானம் பெறவும், முக்தி பேறு பெறவும் குருவின் அருள் இருந்தால்தான் பெறமுடியும். குரு அருள் இல்லையேல் திருவருள் இல்லை. அதற்கு குரு சதா நம்மை கவனித்துக் கொண்டும், நம்முடைய புண்ணிய பாவங்களை பைசல் பண்ணுபவராகவும், வினைகள் முழுவதுமாக கரைத்தும், முக்திபேற்றுக்கு மிகவும் உறுதுணையாகவும், ஆன்மீகத்தில், அருளால், தவத்தில் எந்த தடையுமில்லை முன்னேறுவதற்கு உறுதுணையாகவுமம் பக்கபலமாகவும் இருத்தல் முக்கியம். இவை எல்லாவற்றையும் அளிக்கக்கூடியவர்தான் நமது ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகள் ஆவார். நமது அன்றாட பிரச்சனைகளையும் நிவர்த்தி செய்யக் கூடியவர், முக்திப்பேற்றையும் சுலபமாக கிடைக்க வழிவகுப்பவர்.

ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகள் சிறுவயதில் பல மாதங்கள், வருடங்கள் தவமேற்கொண்டு பிறகு ஸ்ரீ பரிபூரண விநாயகர் காட்சி பெற்று, ஆலிங்கணம் புரிந்து இரண்டறக் கலந்தவர். தாம் முக்தியடைய வேண்டும் என்ற மாபெரும் கருணைக் கொண்டு அதற்காக கடுந்தவம் குற்றாலத்திலும், மேலும் பல ஊர்களிலும் பல ஆண்டுகள் மேற்கொண்டு விநாயகரிடம் வரம் வாங்கினவர். “எல்லையற்ற காட்சி தந்து எமனுக்கிடமில்லாமல் பல்லுயிருக்கும் காட்சி கொள்ள பலனளித்த சின்மயமே” என்று பாடியுள்ளார். இப்பூவுலகில் எல்லோரும் முக்தி பெற பாடுபட்டவர். இதற்காக விநாயகர் முன் அங்கீகாரம் பெற்று அருள்சட்டம் என்ற பதினாறு கொள்கைகளையுடையதை மக்களுக்காக வழங்கினார்கள். இதர நெறியாக கடைபிடிப்பவர்கள் படிப்படியாக முன்னேறி ஆண்டவனது அருளைப் பூரணமாகப் பெற முடியும் என்பது உண்மை. ஒவ்வொரு கொள்கைகளும் மிகவும் அருமையானது எல்லோரும் எளிதில் கையாளக் கூடியவைகள். உயர்ந்த பலனை அளிக்கக் கூடியது. அடியார்கள் இதை ஏற்று கடைபிடிப்பதற்கு ஆண்டவரே உறுதுணையாக உள்ளார் என்பதில் எள்ளளவும் சந்தேமில்லை. இதில் ஒரு முக்கியமான கொள்கை நிஷ்டை அவசியம் இருக்க வேண்டும் என்பதே. நிஷ்டைக்கு மிக முக்கியத்துவம் கொடுத்துள்ளதால் இது அவசியம் என்று சொல்லப்பட்டுள்ளது. நிஷ்டையில்தான் எல்லாவிதமான அருளையும் பொருளையும் பெறமுடியும். சகஜமாக நிஷ்டை இருந்தாலே போதும் என்கிறார். இதற்கு தனியாக எந்த உடையோ, ஆசனமோ அல்லது இடமோ தேவையில்லை. மனம் எவ்வளவுக்கெவ்வளவு இறைவனிடமோ அல்லது உயர்ந்த பொருளாகிய குருவிடம் அல்லது குருவின் மந்திரத்தில் ஈடுபடுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு மனம் தூய்மையடைகிறது. பக்குவப்படுகிறது. தெளிவடைகிறது, ஞானம்

கிடைக்க வழிவகுக்கிறது. "பக்தி வழியே சென்று பல ஜென்மம் புசித்தாலும் கர்மம், பக்தியோகம், ஞானமார்க்கம், ஒன்றுக்கு ஒன்று தொடர்பு இருந்தாலும் முக்தி கிடைக்காதது என்று முத்தோலிர்ந்த மொழி" என்று ஆண்டவர் பாடியுள்ளார். இதை கடைபிடிப்பவர்களுக்கு முக்தி கிடைப்பது மிகவும் சிரமமாகும். கூடவே தொண்டு செய்தல் முக்கியம். உடலால் நாம் செய்யும் தொண்டு உடலினால் நாம் செய்த பாவவினைகளைப் போக்குகிறது.

ராமகிருஷ்ண பரமஹம்சரிடம் ஒருசீடன் கேட்டான் என்னால் அருளைப் பெற கஷ்டப்படமுடியவில்லை, மனமானது அடிக்கடி உலக வாழ்க்கையிலும், மாயையிலும், உலக இன்பத்திலும் செல்கிறது, நற்காரியங்களை செய்யவும் முடியவில்லை. இவ்வாறே எனது பிறவி ஒவ்வொன்றாக போய்க்கொண்டிருந்தால் எப்படி கடைதேறுவது என்றான். அதற்கு பரமஹம்சர் சொன்னார் ஒருவன் இந்த பிறவியில் ஐ.ஏ.எஸ். படிப்பு படித்து முடித்துவிட்டால் மறுபிறவி எடுக்கும்போது எல்.கே.ஜியிலிருந்து படிப்பதைப்பார்கிறோம். இதைபோல செல்வம் எவ்வளவு இருந்தாலும் அது நற்காரியங்களில் செலவழிக்காமலும் தர்மத்துக்கு செலவிடாமலும் இருந்தால் மறுபிறவியில் இந்த செல்வம் பயன்படுவதில்லை. ஆரம்பத்திலிருந்துதான் சம்பாதிக்க வேண்டியுள்ளது. இதேபோல உடலை பேணிக்காத்தாலும் அந்த உடல் அழிந்து வேறு உடல் மறுபிறவியில் பொருத்தப்பட்டு அநுபவிக்கிறோம், ஆனால் நாம் செய்த புண்ணிய பாவங்கள் மறுபிறவியில் தொடருகிறது. நாம் செய்த தர்மங்களுக்கு தகுந்தவாறும், நாம் செய்த நற்காரியங்களுக்கு தகுந்தவாரும் மறுபிறவி அமைகின்றது. நாம் இந்த பிறவியில் எவ்வளவு அருளை சேமித்து வைத்துள்ளோமோ அதை அடுத்தப் பிறவிக்கு எடுத்துச் செல்லலாம். அதற்கு மேலே

அருளைப் பெற பாடுபட்டால் போதும், கல்வி, செல்வம், உடல், பொருள், இவையெல்லாம் மறுபிறவிக்கு பயன்படாவிட்டாலும், அருள் முழுவதுமாக பயன்படுகிறது. தவம் எந்தளவுக்கு மேற்கொண்டுள்ளோமோ அதற்கு மேலே மறுபிறவியில் தொடரலாம் என்றார்.

அருள்சக்தி அன்னை சொல்வார்கள் நிஷ்டையினால்தான் கர்மத்தை விலக்க முடியும். இதிலிருந்துதான் எல்லா வைபவங்களும் பெறமுடியும், வாழ்க்கைக்கு வழிகாட்டுவதும் அதுதான். மோட்சத்திற்கு வழிகாட்டுவதும் அதுதான். பலநாட்களாக நிஷ்டை இருந்து வருகின்றோமே, ஆண்டவர் வழியை பின்பற்றி நடந்து வருகின்றோமே, ஒன்றும் தோன்றவில்லையே, கிடைக்கவில்லையே என எண்ணக்கூடாது. மனம் சளைக்காமல் தொடர்ந்து இவற்றைக் கடைபிடித்து வந்தால் ஒருநாளைக்கு ஒரு செகண்டில் அருளை அள்ளித்தருவார்கள் நமது ஆண்டவர் என்று கூறுவார்கள்.

“தியான நெறிதரும் தேசிகா போற்றி” என்ற ஆண்டவர் அர்ச்சனை மந்திரத்தில் வருவதற்கேற்ப தியானம் தொடர்ந்து செய்யவும், தவம் மேற்கொள்ளவும் அவரே அனுக்கிரஹம் செய்வார். “**தடையெல்லாம் நீக்கியாள் தன்மையோய் போற்றி**” என்ற அர்ச்சனை மந்திரத்தில் வருவதற்கேற்ப எல்லாவிதமான தடையையும் நீக்கி தவம் பூர்த்தியடையவும் அருள்புரிவார்.

“பற்றிப்பிடித்து உந்தன் பாதநிலை காணாமல்
உற்றுப்பார்த்தேன் உரையார் பராபரமே”

இறைவனின் அல்லது குருவின் திருவடியை சதாமனதில் நிறுத்த வேண்டும். உள்ளே திருவடியைக் காண முயற்சிக்க வேண்டும். திருவடியை சிலையிலோ அல்லது போட்டோவினிலோ பார்த்தால்,

வெறுமனே உற்று பார்த்தால், எந்த அருளும் பெறமுடியாது. திருவடியை கெட்டியாக மனதில் பிடித்துக் கொண்டு அருள்காட்சி பூரணமாக பெற பாடுபடவேண்டும்.

"உலகம் வணங்கும்படி உயர்த்தி வைத்தாலும்
உடனே இகழும்படி தாழ்த்தி விட்டாலும்
கலகப்படுத்தி யெந்தன் சிரசைக் கொய்தாலும்
கையும் காலும் வெட்டியெரிந்தாலும் உன்னை விடேன்" -
ஆண்டவர் பாடல்

"எத்தனையோ சித்துக்களை எதிரில் காட்டினாலும்
ஏமாந்து செய்வதினிப் பலிக்காது பலிக்காது
செத்த பிணம் பிழைத்துவந்தாலும் உனை நம்பேன்
சென்ம மெடுக்க இனி முடியாது முடியாது"

மறுபடியும் மறுபடியும் ஜென்மா எடுக்காமல் இதே பிறவியில் முக்தி பெற நாம் பாடுபட வேண்டும் என்று எல்லோரையும் கேட்டுக்கொள்கிறேன்.

ஆண்டவர் அருள்

தவத்திரு. எஸ்.பி. மூர்த்தி ஸ்வாமிகள்

ஸ்ரீலஸ்ரீ அருள்சக்தி அன்னை

முகவுரை

ஸ்ரீ இரெட்டியப்பட்டி அடிகளார் பெருமையைத் தமிழுலகம் அறியும் வண்ணம் **தரணி போற்றும் தவம் செய்ய தடையேதுமில்லை** என்ற அறிவும் ஆக்கமும் செறிந்த சிறந்த நூலை உருவாக்கியுள்ளார்கள். உலகில் பிறந்த மனிதர்கள் அனைவரும் உண்மையான மனிதர்களாகிவிட மாட்டார்கள். உலகம் என்பது என்ன? ஐம்பொறிகள், ஐம்புலன்கள் ஆகியவற்றை அடக்கி ஆளும் திருவருள் பெற்றவர்களே உண்மைத் தவம் செய்து உலகை உய்யவைக்கின்றனர்.

மெய் வாய் கண் மூக்கு செவியென பேர்பெற்ற
ஐவாய வேட்கை அவாவினை
கைவாய் கலங்காமல் காத்திருககும் ஆற்றலுடையான்
விலகாது வீடு பெறும்

இத்தகைய பொறிபுலன்களை அடக்கி அற்புதமாய் வாழும் பெரியவர்கள் **தரணி போற்றும் தவசிகள் ஆவர்**. "தவம் செய்வார் தம்கருமம் செய்வார் மற்றெல்லாம் அவம் செய்வார் ஆசையுட்பட்டு" நீலம் நீர் தீ காற்று வானம் இவை ஐந்தும் தவசிகள் வயப்படும்.

நிலம் – தொட்டுணரப்படும்
நீர் – தொட்டுணரப்படும்
தீ – தொட்டுணரப்படும்
காற்று – பட்டுணரப்படும்
வானம் – யாராலும் காணமுடியாது, தொட்டு உணரமுடியாது.

அந்த வானந்தான் மனம். அந்த மனதை அடக்கி மாண்புபெறும் சான்றோரே தவசிகள் ஆவர். நாமறிந்த வரையில் **ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள்** உண்மைத் தவசிகளாவார். நம்மிடையே இருக்கிறார். தவம் செய்வார் தம் கருமம் செய்வார் – இதுவேநெறி. ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகள், ஸ்ரீ மாம்பலம் சுவாமிகள், ஸ்ரீலஸ்ரீ அன்னையார் எல்லோரும் தரணி போற்றும் தவசிகள். நாமும் முயலுவோம். மனவசியத்தில் மங்கலமாக விளங்குவோம்.

–இராம. தட்சிணாமூர்த்தி
முன்னாள் கல்லூரி முதல்வர்

பதிவுரை

தவத்தின் பெருமைகளை பற்றிய புத்தக வெளியீட்டு விழாவிற்கு என்னை அழைத்ததற்காக என் முதற்கண் நன்றியை ஆண்டவருக்கு தெரிவித்துக் கொள்கிறேன். எப்பேர்பட்ட வாய்ப்பு!, புத்தகத்தின் தலைப்பு அருமை. புத்தகத்தில் தங்களுடைய தவத்தின் சிறப்பினை பற்றி எழுதியுள்ள தவசிகளுடைய சிறப்பும் அருமை. ஆண்வடர் தேர்வு பண்ணிய தவசிகள் தவத்தின் சிறப்பினைப் பற்றி பிரமாதமாக எழுதியுள்ளார்கள். ஸ்ரீ அருள்பிரகாசதாசன் சென்ற வருடம் நடந்த எங்களது இல்லத்து லட்சார்ச்சனை விழாவின் போது, ஆண்டவர் கோடி அர்ச்சனையின் போது இந்த புத்தகம் வெளிவர இருப்பதாகவும், அதை நான் வெளியிடவேண்டும் என்றும் அருமையான இனிப்பான செய்தியினை கூறினார்.

நான் இதை செய்வதற்கு என்ன புண்ணியம் செய்தேனோ? கரும்பு தின்ன கூலியா? அடியேனுககு தவம் செய்ய ஆண்டவர் உத்தரவு தந்து நான் மூன்றாம் ஆண்டில் காலடி வைக்கிறேன். தவத்தின் பெருமைகளை பற்றி சிறந்த தவசிகளின் கருத்துக்களைப் படித்து நான் பயனடைந்ததைப் போல் அடியார்களும், அன்பர்களும் பயன்பெறுமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். இந்த புத்தகம் பல பதிப்பகங்கள், வாசகசாலைகள் கண்டு உலகமெங்கும் சென்றடைவதற்கு ஆண்டவர் அனுக்கிரஹம் செய்ய வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

சீலமிகு ஸ்ரீ அருட்பிரகாசதாசன், தவசிகள், அடியார்கள், அன்பர்கள் அனைவருக்கும் என்னுடைய நமஸ்காரம்.

வாழ்க ஸ்ரீ குருநாதர் புகழ்! வளர்க அருட்சட்டம்!!

R. அருண்
U.K.

அணிந்துரை

மகான்களும் தவமும் :

ஸ்ரீலஸ்ரீ அருள்சக்தி அன்னையார் அருட்சட்ட நெறியில் அணுவளவும் தவறாமல் சிறப்பான முறையில் நிட்டையையும் பேணிவந்தனர். ஆண்டுகள் சில கடந்தன. பக்குவமுற்ற அன்னை அவர்களைத் தம் வழிக்கு ஈர்த்து, குற்றாலத்திலே தாம் இயற்றிய தவத்தை, பிள்ளையார் குப்பத்திலேயே நடத்த செய்ய, அருட்பெருங் கருணை அருள சுவாமிகள் திருவுளம் கொண்டார்கள்.

உயர்ந்த தவநிலையை அருளுமுன், சில மாதங்கள் அன்னை அவர்களின் உடம்பைத் தூய்மை செய்தார்கள். தவத்தில் பாவம் கலந்த கெட்ட ரத்தமெல்லாம் வெளிவந்து நல்ல சுத்தமான ரத்தம் ஊறிவருவது இறைவனின் செயல். ஒருசமயம் நிர்விகல்ப சமாதி தவம் கிடைப்பதற்கு முன்னால் அன்னை சிரமத்திற்கு உள்ளானார்கள். அந்த சிரமம் தாங்க முடியாமல் இருக்கும் போது நமது ஆண்டவரை வேண்டி "தாய் பெரிய குடும்பத்தில் உள்ளது, சிரமத்தை தாங்கவும் மற்ற பணிகளை செய்யவும் தாய்க்கு கஷ்டமாக உள்ளது" என்று தாய் கூறினது, அதற்கு ஆண்டவர் "கௌதம்பிராட்டியை கண்ண பிரான் உடல் சுத்தம் செய்ததை கூறி தாயின் நிர்விகல்ப சமாதிக்காக ஆண்டவர் குடல் சுத்தம் செய்து கொண்டிருக்கிறார்" என்று சொன்னார், மேலும் "தாய் மட்டுமா கஷ்டப்படுகிறது! தாயின் தவத்திற்காக ஆண்டவரும்தான் கஷ்டப்படுகிறார்" என்று ஆண்டவர் சொன்னார்.

மகான்களில் பலர் தனது சீடரால் வினையை அநுபவிக்க முடியவில்லை என்றால் சீடர்களின் வினைகளில் சிலவற்றை

தானே அநுபவிப்பதுண்டு. தாய் அவர்கள் சிறிய வயதிலேயே சரீரப்பற்றை விட்டுவிட்டார்கள். உபவாசத்தினால் சரீரத்தில் ஏதாவது கஷ்டங்கள் வந்தால் "ஆத்மாவா கஷ்டப்படுகிறது? சரீரம்தான் கஷ்டப்படுகிறது விட்டுத் தள்ளுங்கள்" என்று தாய் அவர்கள் சொல்வார்கள். "வினையினால் ஜொலிக்கும் இத்தேகம் வினைப்போகமே தேகங்கண்டாய்" என்பன போன்ற ஆண்டவர் வார்த்தைகள். நாம் செய்த கர்மாவினால்தான் இத்தேகம் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை உணர்த்துகிறது. கர்மாக்களை அனுபவித்து தீர்த்துவிட்டால் பிறவி கிடையாது.

ஞானோந்திரியங்கள், கர்மேந்திரியங்கள் இரண்டும் மனிதனுக்குள் அடங்கி உள்ளன. ஞானேந்திரியங்கள் என்பது கழுத்துக்கு மேல் உள்ள உறுப்புகள் ஆகும். கர்மேந்திரியங்கள் என்பது கழுத்துக்கு கீழே உள்ள உறுப்புகள் ஆகும். ஞானேந்திரியங்கள் மாறுபட்டுள்ளன. 8 லட்சம் மனிதப்பிறவிகள் உள்ளன. அதாவது 8 லட்சம் பேர்கள் மனிதர்களில் வித்தியாசமான பிறவி எடுக்கின்றார்கள். மாறுபட்ட முகங்கள், உடலமைப்புகள் கொண்டவர்களாக பிறக்கின்றார்கள். நாம் மனிதனை அடையாளம் காண இது உதவுகிறது. மனிதனை மேல்நிலைக்கு கொண்டு செல்வது அந்த ஞானேதிரியங்களான உறுப்புகள்தான் முக்கியமாக செயல்படுகிறது. கண், வாய், மூக்கு, செவி, மெய் என்ற ஐந்தும் ஐம்பொறிகளாகக் கூறப்படுகின்றன. இவற்றை அடக்கினால்தான் பின்பு மனம் அடங்கும். மனம் அடங்கினால் தான் ஆத்ம தரிசனம் கிடைக்கும். வேறு எண்ணங்கள் எதுவும் தோன்றாது. இந்த மனம் அடங்குவதற்குத் தான் தவம்

இருக்கிறோம். "ஐம்பொறிகளை வெல்லும் ஆற்றலே போற்றி" என்று வரும் அர்ச்சனை மந்திரம் இங்கு நினைவு கூறத்தக்கது.

காஞ்சிப்பெரியவாள் உயர்திரு. சந்திரசேகர சரஸ்வதி சுவாமிகள் பலநாட்கள் மௌனம் இருந்துள்ளார்கள. முதலாவதாக வாய் மௌனம். அதாவது பேசாமல் இருத்தல், பிறகு கண் இசை கூட அசையாமல் கட்டை போல மூல நட்சத்திரத்தன்று மனம் மௌனம் மனம்அடங்கியிருத்தல். கடைசியில் சரீர மௌனம். மௌனமாக இருந்தால்தான் நாம் இறைவனை உணரமுடியும். நம் உள்ளே இருக்கும் ஆன்மா புலப்படும்.

மேல்நிலை அடைய அதற்கு அடுத்து பெரிதும் உதவுவது உணவு கட்டுப்பாடு. அதாவது விரதங்கள் பெரிதும் உதவுகின்றன. "குறித்தனை விரதம் தெருட்டினை வினையை" என்று சாதுராம் சுவாமிகள் சொல்வார்கள். பசியைப்பொறுத்துக் கொள்ளுகின்றவன் மேல்நிலைக்கு வரகூடியவனாவான். வெள்ளிக்கிழமை தோறும் விரதம் அவசியம் என்று நம் ஆண்டவரே கூறியுள்ளார். அடியார்களில் சிலரை தேர்ந்தெடுத்து உபவாசம் இருக்க சொல்லியுள்ளார்கள். சிலர் இன்றும் அருள்சக்தி அன்னை அடக்கமான ஆடிப்பூர நாளிலிருந்து ஆண்டவர் அடக்கமான மார்கழி அனுஷ நட்சத்திரம் வரை ஆண்டவர் அருள்குறிப்பின்படி விரதங்கள் கடைப்பிடிக்கிறார்கள்.

"உபவாசத்தினில் உய்ப்போய் போற்றி", "உபாதி அனைத்தும் ஒழிப்போய் போற்றி" என்ற இரண்டும் நம் ஆண்டவர் அர்ச்சனை மந்திரங்கள். உபவாசத்தினால் தான் வியாதிகள் நீங்கும் அல்லது குறையும். எல்லாவற்றிற்கும் உடையவனிடத்தில்

நம்பிக்கை வைக்க வேண்டும். உறுதி வேண்டும். ஆண்டவர் சிரமப்பட்ட மாதிரியோ அல்லது அருள்சக்தி அன்னை சிரமப்பட்ட மாதிரியோ அல்லது மாம்பலம் தம்பதியர்கள் தவம் செய்த மாதிரியோ நம்மால் சிரமப்பட இயலாது என்பதால் தவத்தில் சில சலுகைகள் கொடுத்து வினையைப் போக்குகிறார்.

நம் ஆண்டவர் நெருப்பு மாதிரி. எவ்வளவுக்கெவ்வளவு அடியார்கள் சிரமப்படுகிறார்களோ ஆண்டவர் காட்டிய வழியிலேயே நடந்து சிரமத்தையும் தாங்கிக் கொள்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு எல்லாமே மிகவும் நன்மையாக முடியும். சிரமப்பட்டால்தான் முடிவு நன்றாக இருக்கும். இங்கு வினையை அனுபவிக்க வில்லை என்றால் நரகத்தில் அனுபவிக்க வேண்டியதுதான் என்று ஆண்டவரே திரு. வைத்தியநாத சுவாமிகளிடம் கூறியுள்ளார். நரகத்தையும் அவருக்கு காண்பித்தார்கள்.

நரகம் என்பது கடுமையாக துன்பத்தை அனுபவிக்க கூடிய இடம். அங்கே சில பணியாட்கள் இருப்பார்கள். அவர்கள் மனிதர்களை கட்டி வைத்து ஆணி வைத்து அடிப்பார்கள், சாட்டையால் அடிப்பார்கள், ஓடும் ஆற்றில் நீந்தி வரமுடியாத இடத்தில் தள்ளுவார்கள், தீயில் தூக்கிப் போடுவார்கள். அவர்கள் தொழில் அதுதான். யாரும் தடுக்க முடியாது என்று ஆண்டவர் கூறிவிட்டு எது தேவலாம்? என்று கேட்டுள்ளார்கள்.

மாம்பலம் சுவாமிகள் கருத்துப்படி ஆண்டவர் பாடலில் கூறப்பட்டுள்ளது என்னவென்றால் "ஒரு நெருப்பு ஆறு கீழே

ஓடுகின்றது. மயிர்பாலத்தில் நாம் நடக்கின்றோம். சிறிது ஏமாந்தால் கீழே உள்ள நெருப்பாற்றில் விழ வேண்டியதுதான்" என்பார்கள். மாம்பலம் சுவாமிகள் செய்த தன்னலங்கருதாத இறைப்பணி, பின்பற்றிய கடுமையான விரதங்கள், நேர்மையும், ஒழுக்கமும் கொண்ட செயல்பாடு, நம்பிக்கையும் வைராக்கியமும் கொண்டு ஞானிகளிடையே அவர் காட்டிய நாட்டம் இப்படிப்பட்ட உயர்ந்த குணங்களினாலே மாம்பலம் சுவாமிகள் உயர்ந்த நிலையை அடைந்தார்கள்.

"மாதவம் மிக்கதன் பலனால் மாயையை விலக்கி
வேதவித்தக னருளால் வேள்வியை நடத்தி
பூதலத்தில் சற்குருப் பெருமையை பாரெங்கும் சாற்றி
ஈதலத்தில் அருள்வேந்தராய் வந்தாள்வாய் போற்றி"

என்பது மாம்பலம் சுவாமிகள் பற்றி அருட்குறிப்பில் வந்த பாடலாகும். உயர்ந்த தவம் செய்ததால் மாயைப் போக்கினவர் மாம்பலம் சுவாமிகள். விநாயகர் அருளால் அற்புத காட்சிப் பெற்றவர். வேள்விகள் மற்றும் யாகங்கள் நடத்தியவர், என்றால் கடுந்தவம் ஆற்றியவர், நெறி தவறாமல் வாழ்ந்தவர். உலகெங்கும் ஆண்டவருடைய பெருமையை உணர்த்தியவர், உணர்த்திக் கொண்டும் இருப்பவர். இவ்வுலகத்தில் அருள்பரவ ஒரு சிறு தலைவனாக இருந்து ஆட்சி செய்து கொண்டிருப்பவர்.

மாம்பலம் தாய் அவர்களும் இதுபோன்றே செயல்பட்டு முக்தி அடைந்தவர்.

"சக்தி வடிவில் பக்தியைக் கண்டு
முக்தி பெற்றிட முதல்வன் துணைக்கொண்டு
சித்திக்கும் மங்களநாள் பாக்கியம் பெற்றிட
அஸ்த அருள்பெற்ற அருளரசியே போற்றி போற்றி"

என்பது மாம்பலம் தாய்க்கு அருள்குறிப்பில் வந்த பாடல், அருள்சக்தி அன்னையின் வடிவில் முக்தி பெற்றவர். விநாயகப் பெருமான் மற்றும் ஆண்டவரின் துணைக்கொண்டு முக்தி அடைந்தவர். திருமணமாகாத பெண்கள் மாம்பலம் தாயை வணங்கினால், அவரது அருளால் திருமணம் கைக்கூடும். அருள்சக்தி அன்னையார், சென்னையிலிருந்த மாம்பலம் தாயை தன்னுடன் பிள்ளையார்குப்பத்திற்கு அழைத்து சென்று அத்தகைய சக்தியை அருளச்செய்து அனுப்பினார். இது நடந்த உண்மை.

பக்தர்கள் கோயிலில் தெய்வத்தைக் காண்கிறார்கள். யோகிகளோ இருதயத்தில் காண்கிறார்கள். ஞானிகளோ உலகெங்கும் தெய்வத்தை காண்கிறார்கள். கர்மம், யோகம், பக்தி, ஞானம் ஆகிய 4 மார்க்கங்களில் பக்தி மார்க்கத்தைக் கடைப்பிடித்து இறைவனை நாடி துதித்தால் ஞானம் பெற முடியும். சிறுவயதிலேயே பக்தி மார்க்கத்தை மேற்கொண்டால் ஒரே பிறவியிலேயே ஞானியாகி முக்தி அடையலாம். உலகத்தையே மகான்கள் தன்னுள் அடக்கி வைத்துள்ளார்கள். அதனால் தான் கிருஷ்ணபரமாத்மா நமது வாயினுள் உலகத்தைக் காண்பித்தார்கள். சிறிய குழந்தையாக இருக்கும்போது, கிருஷ்ணர் மண்ணைத் தின்றார், யசோதை கண்ணபிரானை அடித்து வாயைக் காட்டச்சொன்ன போது, வாயில் உலகத்தையே கிருஷ்ணர்

காட்டினார்கள். இவ்வாறு யாவற்றையும் கடவுளும் மகான்களும் எங்கும் எதையும் மக்களுக்கு காட்ட முடியும்.

அருள்சக்தி அன்னையார் கூட அடியார்களுக்கு 9 கிரகங்களினால் ஏற்படும் துன்பங்களை தடுத்து பெருமளவு குறைத்து அடியார்களை காப்பாற்றி வருகிறார்கள். திரு. கே.எஸ்.கே. ஸ்வாமிகள் ஆடி மாதத்தில் தவமிருந்த போது இந்த கருத்தை வலியுறுத்தி "நவஜோதி அருள்சக்தி அன்னை" என்று அன்னையாரைப் பற்றி அடியார்கள் அறிய வழிவகுத்தார். அதற்கென ஒரு தனி காட்சி கொடுத்து அதை படமாக தயாரித்து அடியார்களுக்கெல்லாம் வழங்கி தற்போது எல்லோருடைய இல்லத்திலும் அப்படமானது வைத்து பூஜிக்கப்பட்டு வருகிறது. இதனால் அடியார்கள் கிரகங்களின் தாக்கம் பற்றி கவலைப்படாமல் வாழ்கிறார்கள். பிள்ளையார்குப்பம் அருள்சக்தி அன்னை ஆஸ்ரமத்தில் பத்தாண்டுக்கு முன்னே நவசக்தியை மிஞ்சும் தவசக்தி என்ற நாடகமும் மிக பிரமாதமாக அரங்கேறியது. அருள்சக்தி அன்னையின் தவப்பயனால் அடியார்களை கிரகங்களின் பிடியிலிருந்து மீட்டு காப்பாற்ற முடிகிறது. இது அருள்சட்ட அடியார்களுக்கு மட்டுமே இந்த உலகில் கிடைத்த பாக்கியமாகும்.

ஆண்டவர் வாழ்ந்த காலத்தில் தமது தவ சக்தியால் பல அடியார்களுக்கு உதவ வேண்டும். பிணிகளைப் போக்க வேண்டும், பல்வேறு துன்பங்களைப் போக்க வேண்டும் என்ற நோக்கில் பல இடங்களுக்குச் சென்றுள்ளார்கள். ஏழைப் பணக்காரர் என்றோ, இன்னார், இனியார் என்றோ ஆண்டவர் பார்த்தது கிடையாது.

"சக்தி வடிவில் பக்தியைக் கண்டு
முக்தி பெற்றிட முதல்வன் துணைக்கொண்டு
சித்திக்கும் மங்களநாள் பாக்கியம் பெற்றிட
அஸ்த அருள்பெற்ற அருளரசியே போற்றி போற்றி"

என்பது மாம்பலம் தாய்க்கு அருள்குறிப்பில் வந்த பாடல், அருள்சக்தி அன்னையின் வடிவில் முக்தி பெற்றவர். விநாயகப் பெருமான் மற்றும் ஆண்டவரின் துணைக்கொண்டு முக்தி அடைந்தவர். திருமணமாகாத பெண்கள் மாம்பலம் தாயை வணங்கினால், அவரது அருளால் திருமணம் கைக்கூடும். அருள்சக்தி அன்னையார், சென்னையிலிருந்த மாம்பலம் தாயை தன்னுடன் பிள்ளையார்குப்பத்திற்கு அழைத்து சென்று அத்தகைய சக்தியை அருளச்செய்து அனுப்பினார். இது நடந்த உண்மை.

பக்தர்கள் கோயிலில் தெய்வத்தைக் காண்கிறார்கள். யோகிகளோ இருதயத்தில் காண்கிறார்கள். ஞானிகளோ உலகெங்கும் தெய்வத்தை காண்கிறார்கள். கர்மம், யோகம், பக்தி, ஞானம் ஆகிய 4 மார்க்கங்களில் பக்தி மார்க்கத்தைக் கடைப்பிடித்து இறைவனை நாடி துதித்தால் ஞானம் பெற முடியும். சிறுவயதிலேயே பக்தி மார்க்கத்தை மேற்கொண்டால் ஒரே பிறவியிலேயே ஞானியாகி முக்தி அடையலாம். உலகத்தையே மகான்கள் தன்னுள் அடக்கி வைத்துள்ளார்கள். அதனால் தான் கிருஷ்ணபரமாத்மா நமது வாயினுள் உலகத்தைக் காண்பித்தார்கள். சிறிய குழந்தையாக இருக்கும்போது, கிருஷ்ணர் மண்ணைத் தின்றார், யசோதை கண்ணபிரானை அடித்து வாயைக் காட்டச்சொன்ன போது, வாயில் உலகத்தையே கிருஷ்ணர்

காட்டினார்கள். இவ்வாறு யாவற்றையும் கடவுளும் மகான்களும் எங்கும் எதையும் மக்களுக்கு காட்ட முடியும்.

அருள்சக்தி அன்னையார் கூட அடியார்களுக்கு 9 கிரகங்களினால் ஏற்படும் துன்பங்களை தடுத்து பெருமளவு குறைத்து அடியார்களை காப்பாற்றி வருகிறார்கள். திரு. கே.எஸ்.கே. ஸ்வாமிகள் ஆடி மாதத்தில் தவமிருந்த போது இந்த கருத்தை வலியுறுத்தி "நவஜோதி அருள்சக்தி அன்னை" என்று அன்னையாரைப் பற்றி அடியார்கள் அறிய வழிவகுத்தார். அதற்கென ஒரு தனி காட்சி கொடுத்து அதை படமாக தயாரித்து அடியார்களுக்கெல்லாம் வழங்கி தற்போது எல்லோருடைய இல்லத்திலும் அப்படமானது வைத்து பூஜிக்கப்பட்டு வருகிறது. இதனால் அடியார்கள் கிரகங்களின் தாக்கம் பற்றி கவலைப்படாமல் வாழ்கிறார்கள். பிள்ளையார்குப்பம் அருள்சக்தி அன்னை ஆஸ்ரமத்தில் பத்தாண்டுக்கு முன்னே நவசக்தியை மிஞ்சும் தவசக்தி என்ற நாடகமும் மிக பிரமாதமாக அரங்கேறியது. அருள்சக்தி அன்னையின் தவப்பயனால் அடியார்களை கிரகங்களின் பிடியிலிருந்து மீட்டு காப்பாற்ற முடிகிறது. இது அருள்சட்ட அடியார்களுக்கு மட்டுமே இந்த உலகில் கிடைத்த பாக்கியமாகும்.

ஆண்டவர் வாழ்ந்த காலத்தில் தமது தவ சக்தியால் பல அடியார்களுக்கு உதவ வேண்டும். பிணிகளைப் போக்க வேண்டும், பல்வேறு துன்பங்களைப் போக்க வேண்டும் என்ற நோக்கில் பல இடங்களுக்குச் சென்றுள்ளார்கள். ஏழைப் பணக்காரர் என்றோ, இன்னார், இனியார் என்றோ ஆண்டவர் பார்த்தது கிடையாது.

மச்சுவீடாயினும், குச்சுவீடாயினும் ஆண்டவர் செல்லத் தயங்கமாட்டார். கடுந்தவம் மேற்கொண்டு முடிந்தவுடன் நேரே சென்று அருள்சட்டம் பரவ ஆண்டவர் வழிவகுத்தார்கள்.

தவமாற்றிய அருள்சக்தி அனனை இல்லத்திற்கும் நிறைய அடியார்கள் வருகை தந்து தங்களது குறைகளை கூறுவார்கள். உடனே அன்னை அவர்கள் "உடையவன் பொறுப்பு எல்லாம் நலமாகும் விபூதி பூசி வரட்டும்" என்பார்கள். அன்னை அவர்களின் அன்பு கனிந்த கண்ணோக்கமே அனைத்து நோய்களையும் நீக்கி அருளும் அற்புத ஆற்றலை நேரில் கண்டவர்களே அறிவர். வருகின்ற அடியார்கள் எத்தனை பேராயினும் சுவையான உணவளித்து உபசரிப்பதில் வல்லவர் நமது அன்னையார். சிலர் பிணியுற்ற காலங்களில் அன்னையாருக்கு கடிதம் எழுதி திருநீற்றை அனுப்ப சொல்லி வேண்டுவர், கடிதத்தை அஞ்சலில் சேர்த்தவுடனேயே பிணி நீங்கி விடும். அதன்பின் அன்னையிடமிருந்து பிரசாதம் வரும்.

அடியார் பலரும் அங்கே அன்புடன் வினாவி ஐயங்களை தெளிவு செய்து கொள்வர். அருட்பாடல்களை இசைத்து அனைவரையும் ஆனந்தகடலில் அமிழ்த்துவர். ஆண்டவரின் அருட்பாங்கை அகமுற நினைத்து உருகுவர்.

–தவத்திரு. **அருள் அறிவழகன் குருமணி ஸ்வாமிகள்**

வில்லியனூர், புதுவை

தரணி போற்றும் தவம் செய்ய தடையேதும் இல்லை

முன்னுரை :

இப்பூவுலகில் மனிதனாய் தோன்றிய ஒவ்வொருவனும் சுகமாக வாழ வேண்டும் என ஆசைப்படுகிறான். அதற்காக கடுமையாக உழைக்கிறான். எப்போதும் சிந்தனை செய்கிறான் அதனால் மனதில் எண்ணங்கள் பல தோன்றுகின்றன. அந்த எண்ணங்கள் மனதிற்கு மகிழ்ச்சியையும் கவலையையும் கொடுக்கின்றன. அந்த எண்ணத்தையே கட்டுப்படுத்துவதுதான் தவம். பிறகு தானாக மனம் கட்டுப்படும்.

இது கேட்பதற்கு சாதாரணமாக தோன்றினாலும், நடைமுறையில் சாத்தியமாகாது. எப்போதும் அலைபாய்ந்து கொண்டிருக்கும் மனதை ஒரு நொடிகூட கட்டுப்படுத்த முடியாது. அதற்குத்தான் பயிற்சி தேவை. நமக்கு பயிற்சி அளிக்க ஒரு குரு தேவை. அவர் கூறும் வழிமுறைகளால் பயிற்சி நன்முறையில் அமையும்; தவம் கைகூடும்.

பொதுவாக எல்லா மகான்களும் குடும்பத்தை விட்டு, செய்யும் தொழிலை விட்டு, பாச பந்தங்களையும் விட்டால்தான் தவம் செய்ய முடியும் என்று சொல்கிறார்கள். அது பொதுவான கருத்து. இதை எவ்வளவுபேர் ஏற்றுக்கொண்டு சந்நியாசி போல் வாழ முடியும்? இந்த பரபரப்பான உலகில் வசதியாக வாழ்கின்ற எவரும் அதை விட்டுவிட்டு வாழ தயாராக மாட்டார்கள். அதனால் அவர்கள் "தவம் செய்ய யாராலும் முடியாது" என்றே கூறுவார்கள். அதை மாற்றி இல்லறத்தில் இருந்து கொண்டே மற்ற வேலைகளையும் பார்த்துக் கொண்டே "தவம் செய்ய முடியும்" என்று கண்டவர் தான் ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் ஆவார்.

இதை படிக்கின்ற உங்களுக்கு அது எப்படி முடியும் என்ற கேள்வி எழும். அதுதான் ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகளுடைய தனிப்பெரும் பெருமையாகும். ஆண்டவர் பரிபூர்ண விநாயகருடைய அவதாரமாக தோன்றியவர். அதனால் இளமை பருவத்திலேயே விநாயகரை சிந்தையில் கொண்டு அவர்மீது பற்றுவைத்து அவரை வழிபட்டு வந்தார்கள். காலஓட்டத்தில் விநாயகருடைய அருள் அவருக்கு சிறிது சிறிதாக கிட்ட ஆரம்பித்து நாளடைவில் குடும்பத்திலிருந்த பற்றையே அறுத்துக் கொண்டு தனிமையை நாடி விநாயகரை அதிதீவிரமாக வழிபட்டு பல ஆண்டுகள் தவமிருந்து விநாயகருடைய பரிபூர்ண அருளைப் பெற்றவர் ஆவார். தாம் முக்தியடைய முயன்றதோடு எல்லோரும் முக்திபெறுவதற்கு வழிகோல வேண்டும் என்று விரும்பி அதற்கும் விநாயகரிடமிருந்து அருள் பெற்றவர். அதனால்தான் இப்பூவுலக மக்களைப் பக்குவப்படுத்த எண்ணி அருள்சட்டம் என்ற ஒன்றை வகுத்துள்ளார்கள். அதை முறையாக கடைப்பிடிப்பவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு தவம் கொடுத்து அத்தவத்தின் வாயிலாக அவர்களுடைய நல்வினை தீவினை எல்லாம் கரையச் செய்து நிர்மலமாக்கி அவர் முக்தியடைய விநாயகப்பெருமானிடம் சிபாரிசு செய்கிறார். விநாயகர் அப்படிப்பட்டவர்களுக்கு முக்தி அளிக்கிறார். இப்படி ஓர் ஏற்பாட்டை விநாயகரே அருளி அவரே ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகளாக அவதரித்து இந்த வழியினை மக்களுக்கு காட்டியுள்ளார்கள். எனவே அந்த இரெட்டியப்பட்டி ஸ்வாமிகளை நாம் குருவாக ஏற்று அவரது அருள்சட்டத்தை பின்பற்றி அவரது அருளால் தவம் ஏற்று சீரிய முறையில் தவம் செய்து வினைகளை கரைத்து முக்திபெற முயல வேண்டும். அதற்கான வழிகளை இனி காண்போம்.

ஆண்டவர் வாழ்க்கையும் தவமும் :

சிறுவயதிலிலேயே ஆண்டவர் விநாயகப் பெருமானை வணங்கி அவரை நினைத்து தியானம் செய்து பழகினார். அதன்பின் தீவிரமாக நிஷ்டை இருந்து விநாயகர் அருளுக்கு பாத்திரமானார்.

சர்வஜித்து ஆண்டிலே ஒரு திருநாளிலே விடியற்காலை வழக்கம்போல் சுவாமிகள் வைகை நதியில் நீராடி தியானத்தில் அமரச் செல்லும்போது என்றும் காணாத தோற்றம் ஒன்றை ஆற்றங்கரையிலே சுவாமிகள் கண்டார்கள். நமக்கு குருமூர்த்தியாக ஏற்று வழிபட்டுவரும் விநாயகப் பெருமானை ஒளி உருவில் அங்கே கண்ணாறக் கண்டு பேரின்பம் பெற்றார்கள். அருகில் ஆர்வத்துடன் அணைத்து அகமகிழ்வதற்காக சென்றபோது அத்திருமேனி அழகியதொரு சிலாவிக்கிரமாக காணப்பெற்றது. அப்போதே அதனை அடுத்திருந்த அரசமரத்தடியில் அன்பர்கள் சூழவிருக்க, எடுத்து அமைத்து நன்னீராட்டி வழிபாடு செய்து தலையார கும்பிட்டு கூத்தாடினார்கள். அன்பர்குழாமும் ஆரவாரித்து ஆனந்தமுற்றது.

அதுமுதல் சுவாமிகள் நாள்தோறும் விடியல் நீராடியதும் விநாயகப் பெருமானாருக்கு திருமஞ்ஞனம் தீபாராதனை முதலிய உபசாரங்களை நெறிமுறை பிறழாது செய்து பிறகு அங்கேயே அமர்ந்து ஒருசில மணிநேரம் நிஷ்டை இருப்பார்கள். நிஷ்டையின் போது ஆண்டவர் (இரெட்டியப்பட்டி ஸ்வாமிகளை அன்பால் அழைக்கும் சொல்) விநாயகரிடம் பல கோரிக்கைகளைத் தாக்கல் செய்து பயனளிக்குமாறு பிரார்த்திப்பார். அவ்வப்பொழுது விநாயகப் பெருமான் ஆண்டவருக்கு பல நன்மைகளையும் மக்கள் படும் துயரம் போக்க அருள் நலத்தையும் வழங்கலானார்கள். சுவாமிகள்

நிஷ்டை இருந்ததன் பயனாய் பெற்று வந்த அருளை பயன்படுத்தி குறையோடு வந்தவர்களின் குறைகளையெல்லாம் ஆற்றோடே போகச் செய்து நிறைபூண்டு வாழச் செய்தார்கள். நலம்நாடி வந்தவர்கள், நாளினும்நல் நலம் ஓங்கப் பெற்றார்கள். மனத்தூய்மை விரும்பியவர்கள் தினந்தூய்மை மிகுந்தார்கள். சுவாமிகள் தலைசிறந்த அன்பினோடு தவமாகிய பூஜையினை சற்றும் தவறுதலின்றி நடத்தி அன்பர்களிடத்தே இறைவனுடைய இன்னருளானது மடைதிறந்து பாயச் செய்தார்கள்.

சுவாமிகளின் பொதிகை நோக்கம் :

12 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வந்த மதுரை மாநகராகிய தாய்க்கும், அதன் அரிய அங்கங்கள் போன்ற வைகைக்கும், மீனாட்சி ஆலயத்திற்கும், பிறவற்றிற்கும் போய் வருகிறேன் என்று நன்றியோடு கூறிவிட்டு மதுரையிடம் விடைபெற்று சென்றார்கள். பொதிகை மலைக்குப் போய்த் தங்கிப் பொன்னம்பல கூத்தனின் அருளைப் பெறவேண்டும் என்னும் உள்ளக் கருத்தோடே சென்று திருச்செந்தூர் போய்ச் சேர்ந்தார்கள். பரஞான வடிவான திருமுருகன்கை வேலினை உள்ளூர வழிபடும் முறையினை நனிஉணர்ந்து உளஞானம் மிகுந்தார்கள். முருகனது அருளாணை கிடைத்ததும் சுவாமிகள் செந்தூரை விட்டு பொதிகையை நோக்கி புறப்பட்டார்கள்.

குற்றாலத்தை விரைந்து அடைந்து, உருகி வழிபாடாற்றி, உடையவன் கணக்கின்படி மலையின் மீது சென்று செண்பகமாதேவி என்னும் இடத்தில் மறைவான குகை ஒன்றிலே மனதை அடக்கி தனியே அமர்ந்து விட்டார்கள். சுவாமிகள் தனித்திருந்து தவமாற்றச் சென்ற குகையும் அதன் சுற்றுப்புறமும்

இயற்கை அழகு மிகுந்தது, உள்ளத்தை ஒருவழிப்படுத்தும் தன்மையது. குகையின் உள்புறம் இருண்டதலம் ஆதலால் சாதாரணமான மனமுடைய மக்கள் எவரும் அங்கு சென்று தங்கி வாசம் செய்ய விரும்ப மாட்டார்கள்.

தனித்தவ ஒழுக்கம் :

அக்காலத்தில் பெரும்பாலும் மக்கள் யாரும் போய் வருவது வழக்கமாயில்லாத குகைக்குள் சென்றமர்ந்த சுவாமிகள் உடையவன் சேவடியைத் தவிர வேறு எந்தப் பொருளின் மீதும் சிந்தனை செல்லாத சிறந்த நிஷ்டையில் இருந்து வந்தார்கள். உடையவனது பூரண அருளை நாடி உருகி உருகி அழுதார்கள். மதுரைக் கடையிலே மனத்தினுள்ளேயே மறைவாக அழுத சுவாமிகள் மலைத் தனிக்குகையிலே வெட்கம் விட்டு வெளிப்படையாக அவனருளுக்காக கதறினார்கள் என்பதில் ஐயமில்லை. அது அவரது வரலாறு கூறும் உண்மை.

மண்டல மௌனம் :

இடையே அன்னையார் இறைவனடி சேர்ந்தபோது அவர்க்குரிய இறுதிப்பணிகளை செவ்வனே ஆற்றியதுமே வீட்டில் சாய்வு நாற்காலியிலே சுவாமிகள் சென்று உட்கார்ந்து விட்டார்கள். அன்று அமர்ந்தவர்கள் சரியாக ஒரு மண்டலம்வரை இப்படி அப்படி அசையவில்லை. மௌனம் சாதித்து, கண்ணை மூடிக்கொண்டு இருந்து விட்டார்கள். அப்போது அவர்களது மனம் இருந்த நிலையையும், ஆன்மா அடைந்த அனுபவமும் யாரால் அறிய முடியும்? அடியார் கூட்டம் அளவில்லாமல் வந்து தரிசித்துப் போயின. ஒவ்வொரு நாளும் உற்றார் உறவினர் பலர் வந்து சுவாமிகளின் மோன நிஷ்டையைக் கலைக்க முயன்று வந்தார்கள்.

எத்தனை பேர் முயன்றும் ஏதும் பயனில்லாது போயிற்று. ஒரு மண்டலம் முடிந்தது. பலர் வாய்க் கூச்சலோடு கையாலும் சுவாமிகளைத் தொந்தரவு செய்தார்கள்.

சுவாமிகள் கண் விழித்தாலும் இன்னமும் கர்த்தனுடைய கழல்களை விட்டு அகலாத சிந்தையராய் உலக நினைவு அற்றவராய் இருந்தார். சிறிது நேரம் கழித்து மெல்ல எழுந்து வீட்டுக்கு வெளியே செல்பவர் போலச் சென்று அப்படியே நடந்துவிட்டார் சுவாமிகள். யார் கண்ணிலும் படாமல் சுவாமிகள் பொதிகை உச்சியினை அடைந்தார்கள். யாவருக்கும் அருள்பாலிப்பதற்காக பொதிகையிலே நிர்விகற்ப சமாதியிலே அமர்ந்திருந்தார்கள். ஏற்கனவே பலமுறைப் பண்டுத்தப்பட்ட துறை ஆதலின் சுவாமிகள் வெகுவிரைவிலேயே மிக உன்னத நிலையை அடைந்தார்கள். "புனிதனது பூரண அருளைப் பெற்றால்தான் இதோடு பூர்த்தியாகும்; முக்திப்பேற்றை அடையலாம்; உலகத்தார்க்கும் அவ்வருளை வழங்கி அவர்களும் இனிப் பிறவாத மோக்ஷ சாம்ராஜ்ஜியத்தை அடையும்படி செய்யலாம்" என்று சுவாமிகள் திண்ணமாக எண்ணி இருந்தார்கள்.

உலகத்தின் மீது இரக்கம் :

இப்படியெல்லாம் இடருற்று இடைவிடா ஊக்கத்தோடு தவமாற்றியதன் பயனாய் உடையவன் அருளை உன்னத அளவிலே பெற்று, எல்லா பற்றும் அற்று ஆண்டவரும் அவர்களுமாய் நின்றார்கள்.

அடியவர்களினது நல்வினை ஒருபுறமும், ஆண்டவனது அருட்குறிப்பு மற்றொரு புறமாக இருக்கவே "தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்று உலகத்தின் உயிர்களின் மீது

இரக்கங்கொள்ளலானார்கள். மக்கள் மறுபடியும் பிறாவது வீடுபேறு அடைவதற்க்கு இக்கலிகாலத்தில் கையாளக்கூடிய எளிய முறைகள் யாவை? என அவனருளை நினைந்து வேண்டினார்கள். முன்னரே அவனது அருள்கொண்டு சிந்தித்து வைத்திருந்த சில திட்டங்களையும் அவனிடத்தில் விண்ணப்பித்து விளக்கம் கோரினார்கள். உலக மக்களின் வறுமை முதலில் போக்கப்பட வேண்டும். அடுத்து உடல் பிணி நீக்கப்பட வேண்டும். முடிவில் மீண்டும் பிறவாத முக்தி நிலை கிடைக்கப் பெற வேண்டும் என்ற கருத்துகளை மையமாகக் கொண்ட "அருள்சட்டம்" என்ற ஒன்றை வகுத்து அருளினார்கள். இது சுவாமிகள் 12 ஆண்டுகள் குற்றாலக் குகையில் கடுந்தவம் ஆற்றியதன் மிகப் பெரிய பயனாகும்.

ஆண்டவர் அன்றாட வாழ்க்கையில் அருள்சட்டம் மூலம் மக்களை கொஞ்சம் கொஞ்சமாக பக்குவப்படுத்தி பிறகு உயர்ந்த முக்தி நிலைக்கு இட்டுச் செல்ல முடியும் என்று கண்டார்கள். இதை பரீட்சித்துப் பார்க்க வேண்டும் என்று பல அடியார்களுக்கு உபதேசம் செய்தார்கள். காசியிலிருந்து கன்னியாகுமரிவரை அப்படிப்பட்ட உள்ளம் கிடைக்கின்றதா என்று ஏங்கினார்கள். ஏனென்றால் இது கடுமையான வைராக்கியமும், பக்தியும், மனவலிமையும் கொண்ட ஒருவரால்தான் கடைபிடித்து இறுதிவரை உறுதியாக இருந்து முக்தி பெற முடியும். அப்படி செய்தால்தான் குருவினுடைய செயலாக இதனை உலகம் ஏற்றுக்கொள்ளும் என்று ஆண்டவர் எண்ணினார்கள்.

அதன்படியே பிள்ளையார்குப்பம் அருள் சக்தி அன்னைக்கு பூரண ஆசி கொடுத்து தவம் செய்து இல்லறத்தில் இருந்து கொண்டே முக்தி அடைய முடியும் என்பதை நிரூபித்தார்கள்.

அருள்சக்தி அன்னையார் தமது இல்லத்திலேயே 2 1/2ஆண்டுகள் கடுந்தவம் இருந்து அனைவரும் வியக்கும் வண்ணம் பேச்சின்றி, உணவின்றி, வேறு எச்செயலுமின்றி நிர்விகல்ப சமாதி நிலை எய்தினார்கள். இது அருள்சட்டத்திற்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றியாகும்.

விநாயகர், ஆண்டவருக்கு முக்திக் கொடுத்தார். ஆனால் ஆண்டவர் தமக்கு முக்தி கிடைத்தால் மட்டும்போதாது எல்லோரும் முக்தி பெற வேண்டும் என்று விநாயகரிடம் வேண்டினார். அதற்கு தாங்கள் யாருக்கு முக்திக் கொடுக்க வேண்டும் என்று சிபாரிசு செய்கிறீர்களோ அவர்களுக்கு நான் முக்தி தருகிறேன் என்று விநாயகர் வாக்குறுதி தந்தார்.

எந்த மகானும் அருள் கொடுத்தால் மறுபடியும் தவம் செய்து அருள்பெற வேண்டும். விநாயகரை இருதயத்தில் ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகள் எப்போதும் வைத்துக் கொண்டிருப்பதால் எந்த நேரத்திலும் அருளை வாரிவழ்க முடியும்.

ஆண்டவர் அதற்குரிய நபர்களைத் தேர்வு செய்வதற்காக அருள்சட்டம் வகுத்து பின்பற்றச் செய்து தவம் கொடுத்து அடியார்களைப் பக்குவப்படுத்தி தகுதியானவர்களுக்கு முக்தி கிடைக்க விநாயகரிடம் சிபாரிசு செய்கிறார். விநாயகர் அவர்களுக்கு முக்தி கொடுக்கிறார். இந்த ஏற்பாடு வேறு எந்த மகான்களிடமும் இதுவரை இல்லை. இதுதான் மற்ற மகான்கள், ரிஷிகள், ஆச்சாரியர்கள் மேலும் முனிவர்களுக்கும் ஆண்டவருக்கும் உள்ள வேறுபாடு. இத்தகைய தரணி போற்றும் தவத்தை மேற்கொள்ள அடியார்களுக்கு தடை ஏதும் இல்லை. “நிஷ்டையில் இன்பம் நிறைப்போய் போற்றி” என்ற அர்ச்சனை மந்திரத்திற்கேற்ப

நிஷ்டையில் இன்பத்தை அளிக்கிறார்.

"உட்கார வைத்தருள் ஊட்டுவோய் போற்றி" என்ற அர்ச்சனை மந்திரத்திற்கேற்ப அடியார்கள் சிலரைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு 3 நாட்கள், 12 நாட்கள், 24 நாட்கள், 48 நாட்கள் என மௌன உபவாசம் (லயம் மொழி ஈடேற்றி) கொடுத்து பக்குவப்படுத்தி வருகிறார் நம் ஆண்டவர்.

"உறக்கமில் மெய்த்தவ ஊற்றம் போற்றி" என்னும் மந்திரத்திற்கேற்ப நாம் உறக்கத்தில் இருந்தாலும் ஆண்டவரை நினைக்கச் செய்து நம்மை தெளிவு படுத்துகிறார்.

வினையைப் போக்கும் வழிகள் :

தவம் செய்பவர்கள் தன்னுடைய வேலையை செய்பவர்கள் ஆவர். அதாவது தாம் அனுபவிப்பதற்காக இந்த ஜென்மாவில் கொண்டு வந்துள்ள ப்ராரத்துவ கன்மங்களை தவத்தின் பயனால் எளிதாக கரைக்கவும், இப்பிறவியில் செய்யும் புண்ணிய பாவங்களை புண்ணியப்பாவங்கள் எனப்படும் (ஆகாமியத்தை) தம்மைப் போற்றுவார் மற்றும் தூற்றுவார் வாயிலாக இல்லாமல் ஆக்கவும், மறுஜென்மாவில் அனுபவிப்பதற்காக எஞ்சியிருக்கும் வினைகளாகிய சஞ்சிதத்தை தவசிகனலாய் எரிக்கவும் பாடுபடுவார்கள்.

ஆனால் மற்றவர்கள் எல்லாம் ஆசையின் காரணமாக பல பாவங்களைச் செய்து பழி சேர்த்துக் கொள்வார்கள்." புண்ணிய பாவம் இரண்டும் புனர்ஜென்மம் எடுத்திடும் பண்ணிய தவங்கள் பரிபக்குவம் அடைந்திடும்" என ஆண்டவர் பாடியிருக்கிறார். புண்ணியம் செய்தாலும் சொர்க்கம் சென்று சிலகாலம் இன்பத்தை

அனுபவித்து பின்பு பூலோகத்தில் பிறக்கின்றார்கள். அதுபோல் பாவம் செய்தவர்கள் சிலகாலம் நரகம் சென்று துன்பப்பட்டு பிறகு பூலோகத்தில் பிறந்து மீண்டும் மீதியுள்ள கர்மாக்களை அனுபவிக்கின்றார்கள். இவை இரண்டும் இல்லாமல் இருப்பதற்குத்தான் தவம் செய்ய வேண்டும். பண்ணிய தவங்கள் பரிபக்குவம் அடையும் என்பது இதைச் சுட்டிக் காட்டுவதற்குத்தான்.

"மோட்சம் விரும்பும் ஜென்மம்
முழுதும் தொடரும் கர்மம்
சூட்சுமம் இதுவே என்று
துன்பம் இன்பம் சகிப்பாய்" – என்பது ஆண்டவர் பாடல்

நாம் மோட்சம் அடைய விரும்பினால் இந்த ஜென்மா முழுவதும் தவம் செய்தும், முற்பிறவியிலே செய்த நல்வினைகளை, தீவினைகளை அனுபவித்தும், அருளாலும் கரைத்து விடவேண்டும். அப்போது ஏற்படும் துன்பங்களை சகித்துக் கொள்ளுதல் நலம். இதைத்தான் ஆண்டவர் "நாம் தேடும் கர்மம் இது, நம்மை விட்டகலாது சார்ந்து உன்னைக் கொல்லும் அது சர்பவிஷம் பொல்லாது" என்று நல்வினை, தீவினைகளைப் பற்றி கூறியிருக்கிறார்.

நமது ஆண்டவர் சட்டத்தை கடைபிடிப்பவர்கள் பாபங்கள் செய்ய அஞ்சுவார்கள். புண்ணியம் செய்தால் அதனால் பாவங்கள் கரையுமே தவிர புண்ணியம் சேராது. ஞானிகள், தவசிகள், மகான்கள், ரிஷிகள், சிறந்த பக்தர்கள் ஆகியவர்களைப் பார்த்தால் நாம் நமஸ்கரிக்க வேண்டும். அவர்களுக்குத் தேவையான நன்மைகளைச் செய்தல் வேண்டும் அவர்களுடைய ஆசியால் நல்வினைகள் மாய்ந்து போவதுண்டு. நம்மை தூஷிப்பவர்கள் தீவினைகளைப் பெறுகிறார்கள்.

அன்பர்கள் அடியாராதலும் அருட்பணியாற்றலும்

இறைவனுக்குத் தொண்டு செய்வதன் மூலமாகவும் வினைகள் கரைகின்றன. தவம் மேற்கொள்ளும் காலத்திலும் ஆண்டவருக்குத் தொண்டு செய்யலாம். "தொண்டின் பெருமை துலக்குவை போற்றி" "தொண்டர் பணி செய்பவர்கள் சூட்சாதி சூட்சமெல்லாங் கண்டுத் தெளிவாரோடி; ஏகுயிலே! காணாத காட்சியெல்லாம்" என்ற ஆண்டவருடைய பாடல் வரிகளின்படி ஆண்டவருடைய காட்சி களெல்லாம் தொண்டருக்கு நிச்சயம் கிடைக்கும். தொண்டர்களுக்குத் துன்பம் வந்தால் அதை ஆண்டவர் முழுமையாகப் போக்கிவிடுகின்றார். "தொண்டர்கள் துன்பம் துடைப்போய் போற்றி" என்ற அர்ச்சனை மந்திரம் இதற்கு சான்று.

அன்பர்கள் ஆண்டவரைப் பற்றி கேள்விப்பட்டு அருட்சட்டம் ஏற்றுக்கொண்டு அடியார்களாக ஆகிறார்கள். சிலர் தமக்கிருந்த சில வியாதிகள் மற்றும் சில பிரச்சினைகள் ஆண்டவர் அருளால் நீங்கப்பெற்ற பின்பு அருட்சட்டம் ஏற்று வழுவாமல் கடைப்பிடிக்கிறார்கள். சிலர் கேந்திரவிழாக்களில் கலந்து கொண்டு சிறந்த அருட்சட்ட அடியாராகி பிறகு ஆண்டவரிடம் முறையிட்டு கேந்திராதிபதியாகி, கேந்திரவிழாக்கள் செய்தும் வருகிறார்கள்.

கேந்திர விழாக்களை சிறப்பாக செய்ய விரும்பி பிரமாதமாக செய்பவர்களை ஆண்டவர் தடுத்தாட்கொண்டு சில குறிப்புகள் கொடுத்து அதை செம்மையாக நிறைவேற்றுகிறார்களா என்று கவனிக்கிறார். அதன்பிறகு தவமும் அருளுகிறார். "குறிப்பும் விளக்கமும் கொடுப்பவா போற்றி" என்ற ஆண்டவர் அர்ச்சனை மந்திரத்திற்கேற்ப குறிப்பும் அதற்குரிய விளக்கமும் கொடுத்து நமக்கு நன்கு புரியும்படி செய்கின்றார். சிலருக்கு பட்டமும் பதவியும் கிடைக்கின்றது.

ஒருசில அடியார்கள் கேந்திரவிழா பூஜை செய்யாதவர்களாக இருப்பவர்கள் அருட்சட்டம் ஏற்று கடைபிடித்து வந்தும் அன்றாடம் நிஷ்டை இருந்தும் வருகின்றார்கள். அவர்களையும் ஆண்டவர் பக்குவப்படுத்தி பல பணிகளைக் கொடுத்து செய்வதற்கு வேண்டிய பொருள் வசதியையும், மனப்பக்குவத்தையும், தைரியம், தெம்பு ஆகியவைகளையும் கொடுத்து அனுக்கிரஹம் செய்து வருகின்றார்.

ஆண்டவர் மறைவிற்குப்பிறகும் ஆண்டவரே பல அடியார்களை பக்குவப்படுத்தி வருவதை நாம் பார்க்கிறோம். தவத்திரு. நரசிம்மலு நாயுடு சுவாமிகள், தவத்திரு. கீ. இராமலிங்கனார் இருவரும் ஸ்ரீலஸ்ரீ அருள்சக்தி அன்னையின் ஆசியால் "வழிகாட்டும் வான்பொருள்" என்ற புத்தகத்தை 1937-ம் ஆண்டு எழுதி வெளியிட்டனர். ஆண்டவருடைய வாழ்க்கை வரலாறும், கொள்கைகளும் அவர் வாழ்ந்த காலத்தில் ஆற்றிய அருட்பணிகளும், எனப் பல்வேறு சந்தேகங்களுக்கான பதிலும் இந்தப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளன. ஆண்டவர் அருட்குறிப்பின்படி தவத்திரு. பாலகவி சுவாமிகள் ஆண்டவர் சரிதத்தை செய்யுள் நடையில் நூற்றுக்கும் மேலான பக்கங்களைக் கொண்ட புத்தகமாக எழுதி வெளியிட்டுள்ளார். பாலகவி சுவாமிகளும், காஞ்சிபுரம் திருமதி சு. மங்கையர்க்கரசி அம்மையாரும் சேர்ந்து கருணை மிகு வள்ளல் அருள்நிறை சரிதம் 4000 பாடல் கொண்ட புத்தகம், "மூவர் அர்ச்சனைக் கொத்து" என்ற புத்தகத்தை வெளியிட்டுள்ளார்கள். இவைகளுக்கெல்லாம் பிரதான காரணமாய் திகழ்ந்தவர் ஸ்ரீலஸ்ரீ அருள்சக்தி அன்னையார் அவர்கள். ஆண்டவர் வாழ்ந்த காலத்திலேயே அடியார்கள் விஷயம் தாயிடமும், தாய் விஷயம் ஆண்டவரிடமும் இருக்கும் என்று ஆண்டவரே வாக்களித்தார். அதன்படி இன்றும் நடந்து வருகிறது.

அருள்சக்தி அன்னை ஆஸ்ரமம், புதுவை மாநிலம் கிருமாம்பாக்கம் அருகில் பிள்ளையார்குப்பத்தில் உள்ளது.

ஆண்டவர் தற்சமயம் 36 தவசிகளைத் தேர்ந்தெடுத்து தவம் கொடுத்துள்ளார். அதில் பலர் பிள்ளையார்குப்பம் அருட்சக்தி அன்னை ஆஸ்ரமத்திற்கு அருகிலுள்ள வினைத்தீர்க்கும் விடுதியில் ஆண்டவர் அருட்குறிப்பின்படி தவமிருந்து வருகிறார்கள். சிலர் தமது இல்லங்களிலும், சிலர் இரெட்டியப்பட்டியிலுள்ள குருபாத நிலையத்திலும் தவமிருந்து வருகிறார்கள்.

இவ்வாறு அடியார்களை தவங்கொடுத்தும் பணிகொடுத்தும் பல நன்மைகள் வாழ்வில் கிடைக்க வழிகொடுத்தும் ஆண்டவர் பக்குவப்படுத்தி வருகின்றார். பொதுவாக மகான்கள் யாரும் அருளை வழங்கமுடியாது. பொருளை வேண்டுமானால் வழங்கலாம், திரும்ப பொருளை சம்பாதித்துக் கொள்ளலாம், அருளை வழங்கினால் மறுபடியும் சம்பாதிக்க முடியாது. மறுபடியும் பிறவி எடுத்து அருளை சம்பாதிக்க வேண்டும். ஆனால் நமது ஆண்டவர் அருட்கொடி ஏற்றி அருளை வழங்குவதைப் பார்க்கிறோம். இதற்கு மூலகாரணம் நம் ஆண்டவர் ஸ்ரீ பரிபூரண விநாயகரின் அவதாரமாவார். விநாயகருடன் இரண்டறக் கலந்தவர். விநாயகரும் நமது ஆண்டவரும் ஒன்றே. மூவர்களான பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியோர் மற்றும் தேவர்கள், ரிஷிகள், சப்தரிஷிகள், இந்திரன், சக்குதேவதை எல்லாமே விநாயகருக்குள் அடக்கம். விநாயகர் பெருத்த வயிற்றுக்குள்ளும் சிலவற்றை அடக்கி வைத்துள்ளார். அதனால் நம் ஆண்டவர் சாட்சாத் பரம்பொருளாவார். விநாயகரே குருவடிவில் நமது ஆண்டவராக தோன்றியுள்ளார். நம் ஆண்டவர் பிறந்த இடமும், சமாதி அடைந்த இடமும் ஒன்றே. இவை அனைத்தையும் வைத்துதான் நாம் அவதாரம் என்று சொல்கின்றோம். மற்றும் அவரே பாடலில் “உன்னையான் என்று காட்டி” என்றுள்ளார்.

ஆண்டவரை அடியார்கள் நேரில் சேவித்த காலங்களிலே “உடையவன் கணக்கு இப்போதேவா விளங்கிவிடும்? இன்னும் போகப்போகத்தான் விளக்கமுறும் என்றும்; அவருடைய

அருட்கொடி உலகமெங்கும் பறக்கும் என்றும் அவர் சொல்வதுண்டு. ஆண்டவரது அருள் ஆட்சி உலகிலுள்ள மிக மிகப்பெரிய அரசாட்சியினும் மேலானது. அதை நடத்தும் சிப்பந்திகளும், உத்தியோகஸ்தர்களும் அளவிறந்த பேராவர் என்றும் கூறுவது உண்டு. ஆண்டவர் கூறிய வாக்கு இன்றும் அருமையாக நடப்பதைப் பார்க்கின்றோம். ஆண்டவர் அருளால் பல அற்புதங்களும், ஆச்சரியங்களும் இன்றும் நடந்து வருகின்றன. புதிதுபுதிதாக அடியார்களும், அன்பர்களும் வருகின்றார்கள். அவர்களுக்கும் எல்லா நன்மைகளும் நடந்து வருகின்றன.

வறுமைப்பிணி நீங்க :

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் வழியை பின்பற்றுபவர்களுக்கு வறுமைப்பிணி நீங்கும், வறுமை இருந்தால் அவர்கள் பொருளைத் தேடத்தான் விரும்புவார்களேதவிர அருளைப் பற்றி சிந்திக்க மாட்டார்கள். அருட்சட்டம் பற்றி எவ்வளவு தெளிவாகச் சொன்னாலும் அதை அவர்கள் ஏற்று பின்பற்ற மாட்டார்கள். அதனால்தான் ஆண்டவர் வறுமையை நீக்கி செம்மையான வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கிறார். அதன்பிறகு அவர்கள் மகிழ்ச்சியில் ஆண்டவரையும், அருள்சட்டத்தையும் போற்றி ஏற்றுக் கொள்வார்கள். எனவேதான் ஆண்டவர் அடியார்களின் வறுமைப்பிணியை முதற்கண் நீக்குகிறார்.

நோயற்ற வாழ்க்கை வாழ வழிவகுத்தல் :

பின்பு மனம், வாக்கு, காயம் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளை நீக்குகிறார். அதாவது மனம் சஞ்சலப்படாமல் குழப்பமில்லாமல் தெளிவான சிந்தனையுடன் வாழ வழிவகுக்கிறார். உடலிலுள்ள வியாதிகளை நீக்கி நோயற்ற வாழ்க்கை வாழவும் வழி செய்கிறார். உணவுக் கட்டுப்பாட்டிலேயே பல பிணிகள் நீங்குவதை நாம் கண்கூடாகப் பார்த்து வருகிறோம். விபூதியும் துளசியும் இட்ட

தீர்த்தம் எல்லாவிதமான பிணிகளையும் போக்குகின்றது. உணவைக் குறைக்கக் குறைக்க வருகின்ற பிணியும் குறையும். பிணியில்லாது வாழும் ஒருவன் எதைச் சொன்னாலும் செய்வான். எங்கும் எதிலும் மகிழ்ச்சியுடனும், சுறுசுறுப்புடனும் ஈடுபடுவான். இவைகளை எல்லாம் அறிந்துதான் ஆண்டவர் இரண்டாவதாக உடல்பிணியைப் போக்குகிறார்.

பிறவிப்பிணி நீங்கி முக்தி பெற அருளுதல் :

மூன்றாவதாக பிறவிப்பிணியை நீக்குகிறார். அதாவது மீண்டும் மனிதனாகவோ அல்லது வேறு உயிர்களாகவோ பிறக்காமல் முக்தி அடைவதற்கு வழிவகுக்கிறார். முன்ஜென்ம் வினைகளையும், இந்த ஜென்மாவில் செய்த நல்வினை தீவினைகளையும் அனுபவித்தும்; அருளால் கரைத்தும் வினைகளே இல்லாமல் ஆக்கிவிடுவார் அதனால் அடுத்த ஜென்மம் என்று ஒன்று இல்லை. இறைவனுடைய திருவடியை அடையப்போகிறோம் என்ற நிலையை உண்டாக்கித் தருகிறார். இதையாராவது வேண்டாம் என்றா சொல்லப் போகிறார்கள்? கரும்பு தின்ன கூலி கேட்பார்களா? மாட்டார்கள் அல்லவா? அதனால்தான் இத்தகைய அருமையான ஏற்பாட்டை உருவாக்கி இந்த ஏற்பாடு கிட்ட அருள்சட்டம் ஏற்று நடக்க ஆண்டவர் வழிவகுத்துள்ளார்கள்.

மாம்பலம் சுவாமிகள் "எத்தொழில் செய்தாலும் ஏது அவஸ்தைப் பட்டாலும் முக்தர் மனம் மோனத்தே" என்ற பட்டினத்தார் வாக்கை அடிக்கடி சொல்வார்கள். நமக்கு எத்தகைய துன்பம் இருந்தாலும் மனம் மட்டும் இறைவனிடம் இருந்தால் நல்ல நிலை அடைய வழிவகுக்கும்.

"சகஜ நிஷ்டையை அருள் சாதுவே போற்றி" என்ற ஆண்டவர் அர்ச்சனை மந்திரத்திற்கேற்ப சகஜமாக மனம் மட்டும் இறைவனிடம் சதாநாட்டம் கொண்டே இருத்தல் மிக மிக முக்கியம்.

அடியார்கள் நிஷ்டையை அவரவர்களுக்கு இயன்ற வகையில் காலை ஸ்நானம் முடிந்த பின்னும் அல்லது இரவில் படுக்கும் முன்பும் 2மணி நேரத்திற்கு குறையாமல் இருந்து வரவேண்டும். அதுதான் கர்ம விலக்கம். அதிலிருந்துதான் எல்லா வைபவங்களும் பெற முடியும். வாழ்க்கைக்கு வழிகாட்டுவதும் அதுதான்.

ஒருவேளை நிஷ்டையின் போது எந்த ஒரு காட்சியோ கருத்தோ தோன்றவில்லையானால் அதற்காக மனம் சளைக்கக் கூடாது. தொடர்ந்து நிஷ்டை இருந்தால் என்றாவது ஒருநாள் ஒருவிநாடியில் ஆண்டவர் அருளை அள்ளித்தருவார் என்று அருள்சக்தி அன்னை கூறுவார்கள். அருள்சக்தி அன்னை அவர்கள் பெரிய குடும்பத்தில் அதிலும் புகுந்த வீட்டில் இருந்தும் அன்றாடம் குறைந்தது 5 அல்லது 6 மணி நேர நிஷ்டையில் அமர்ந்துள்ளார்கள். காலை 3 மணிமுதல் 5 மணி வரையிலும், பகல் 11 மணி முதல் 1 மணி வரையிலும் இரவில் 11 மணி முதல் 1 மணி வரையிலும் நிஷ்டை இருந்துள்ளார்கள். ஆகவே அடியார்கள் அன்றாடம் நிஷ்டையிருக்க பழகிக் கொள்ள வேண்டும்.

அடியார்களில் சிலர் "ஓம் குருநாதா", "ஓம் குருநாதா" என்று மனதிற்குள் சொல்வதைப் பார்க்கிறோம். ஓங்காரத்தை மட்டும நினைத்து தியானம் செய்வதுமுண்டு. ஓம்குருநாதா என்று தியானித்து வருபவர்கள் கடைசியில் ஆண்டவர் காட்சி கிடைக்கப்பெற்று முக்தி பெற்றும் உள்ளனர். ஓங்காரத்தை நினைத்தே தியானித்தவர்கள் ஸ்ரீ பரிபூரண விநாயகர் காட்சி பெற்று முக்தி அடைந்துள்ளனர்.

பொதுவாக முருகர், அம்பாள், சிவன் இவர்களை நினைத்துத் தியானித்தவர்கள் அந்த அந்த கடவுளை நினைத்து முக்தி பெற்றுள்ளனர். சிலர் ஏயேசு கிறிஸ்துவை தியானித்தும் ஜெபம் செய்தும் நல்ல நிலையை அடைந்துள்ளார்கள். சிலர் முகமது நபி, அல்லாவை தியானித்து பூரண அருளைப் பெற்றுள்ளார்கள்.

அதனால்தான் நமது ஆண்டவர் எல்லா மதத்தினருக்கும், மொழியனருக்கும், இனத்தவருக்கும் பொதுவான வந்தனை வழிபாடு ஒன்றை கூறியுள்ளார்கள்.

அன்றாடம் காலை 4 மணி முதல் 5 மணிக்குள் பச்சைநீரில் குளிப்பது, மருந்தருந்தாமல் இருப்பது, வெள்ளிக்கிழமை விரதம் பேணுவது, அறமன்றம் அனுகாமலிருப்பது, உடல், பொருள், ஆவி அனைத்தையும் இறைவனிடம் ஒப்படைத்து அருள்வாழ்வு வாழ்வது ஆகிய இவைகளை எல்லோரும் பின்பற்றலாம் என்று ஆண்டவர் கூறியுள்ளார்கள். மேலும் அவரவர்களுக்குரிய வழியில் வழிபாடு ஆற்றலாம்.

ஓரறிவு முதல் ஆரறிவு வரை உள்ள உயிர்கள் எல்லோரும் இறைவனை அடையலாம். மனிதனாகப் பிறந்தவர்கள் ஆரறிவு படைத்துள்ளதால் நல்லது, கெட்டது அறியவும் நிஷ்டை இருக்கவும் மனப்பக்குவம் அடையவும் முடியும். எல்லா உயிர்களும் நற்கதி அடைய வழிவகுத்தவர் நமது ஆண்டவர். ஆண்டவர் சட்டத்தை மேற்கொண்டு நடப்பவர்கள் இந்தப் பிறவியில் நல்ல கதி அடைய முடியவில்லை என்றாலும் இனிவரும் பிறவிகள் குறைந்து நற்கதி அடைய வழிஉண்டு. நமது ஆண்டவர் வழியில் தவம் செய்தவர்கள், வினையைக் கரைத்தவர்கள் எந்த இடத்தில் விட்டுவிட்டார்களோ அவர்கள் மறுபிறவியில் விட்ட இடத்திலிருந்து தொடர வழியுண்டு. புண்ணியம் நிறைய செய்தவர்கள் தான் நமது ஆண்டவர் வழியில் பொதுவாக நிறையபேர்கள் வந்து சட்டத்தைக் கடைபிடித்து வருவதைப் பார்க்கிறோம். பக்குவப்பட்டவர்கள், பக்குவப் படாதவர்கள் எல்லோரையும் கடைத்தேற்றும் பொருட்டு நமது ஆண்டவர் இந்த பூவுலகில் தோன்றி அனைவரையும் காத்து ரட்சித்து பக்குவப்படுத்தி வருவதைப் பார்க்கின்றோம்.

இராசவிருட்சம் சிவமாய் இன்வேம்பு சக்தியாய்
ஆசையுடன் வந்தே யமர்ந்து வெகுநேசமுடன்
புத்திரனைப் பெற்றார் இப்பூதலத்தில் எல்லோரும்
முக்திபெற வென்றே முதல் – என்ற

ஆண்டவர் பாடலுக்கு ஏற்ப எல்லோரும் முக்திபெற வழிவகுக்கத் தோன்றியவர் தான் நமது குருநாதர்.

ஸ்ரீ மாம்பலம் ஸ்வாமிகள் மற்றும் ஸ்ரீலஸ்ரீ மாம்பலம் தாய் இல்லறத்தில் இருந்து கொண்டே ஆண்டவர் அருட்சட்டம் ஏற்று அதைத் தீவிரமாகக் கடைபிடித்தார்கள். ஸ்ரீலஸ்ரீ அருள்சக்தி அன்னையால் ஆட்கொள்ளப்பட்டு தமது 40வது வயதில் அருட்சட்டம் பற்றி ஸ்ரீதாயின் மூலமாக அறிந்து ஆச்சரியப்பட்டு அதன்பிறகு விருப்பப்பட்டு அருள்சட்டம் ஏற்று நடந்தார்கள். அதிதீவிரதரனாக செயல்பட்டு அன்னையின் பாராட்டுக்கு உரியவரானார். குறுகிய காலத்திலேயே அருள்மிகப் பெற்று இரெட்டியப்பட்டியில் ஸ்ரீ ஆண்டவருக்கு ஆலயம் அமைத்து 14-9-1972 அன்று குடமுழுக்கும் நடத்தினார். ஸ்ரீலஸ்ரீ அருள்சக்தி அன்னை ஆலயம் அமைத்து 8.6.1984-ல் கும்பாபிஷகம் மாம்பலம் சுவாமிகள் முன்னிலையில் பிள்ளையார்குப்பத்தில் நடந்தது. இரெட்டியப்பட்டியிலேயே குருபாத நிலையம் எனும் சத்திரம் கட்டி அங்கேயே தங்கி 80வயது பூர்த்தியாகும் காலத்தில் தம்பதிகளாக தவம் இருந்ததன் பயனாய் நிர்விகல்பம் கிடைத்து உயர்ந்த நிலையை அடைந்தார்கள். ஆயினும் அவர்களுக்கு இல்லறம் தடையில்லை. ஆண்டவர் இவர்களுடைய பக்குவம் அறிந்து தவம் கொடுத்து தன்னுடன் சேர்த்துக் கொண்டார்.

இன்றும் ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் வழியைப் பின்பற்றுபவர்கள் இல்லறத்தையும் கவனித்துக் கொண்டு தவசிகளாகவும் இருந்து பயன்பெற்று வருகிறார்கள். இந்தப் பிறவியிலோ அல்லது இனிவரும் ஒருசில பிறவியிலேயோ அவர்களால் நிச்சயம் முக்தி அடைய முடியும். இதில் சந்தேகம் இல்லை. ஆண்டவர் தவத்தில் பலப்பல காட்சிகளை இன்றும் அடியார்களுக்கு காண்பித்து வருகிறார்கள். பின்னால் நடக்கப் போவதையும் காண்பிக்கின்றார்கள். நமது ஆண்டவர் முக்காலமும் உணர்ந்த ஞானி ஆதலால் அவர் கூறுகின்ற எல்லாவற்றையும் அடியார்கள் தைரியமாக செய்ய முடிகின்றது.

தவம் என்றால் என்ன?
தவத்தை ஏன் மேற்கொள்ள வேண்டும்?

"தபஸ்" என்ற சமஸ்கிருத சொல்லே தமிழில் தவம் என்ற சொல்லாக பயன்படுகிறது. "தப்" **(Thab)** என்றால் எரித்தல் என்று பொருள். கடவுளுக்கும் குருவிற்கும் அடியார்களுக்கும் தொண்டு செய்யும் ஒருவனுடைய ஆன்ம ஈடேற்றத்திற்கு தடையாக இருக்கும் இந்திரியங்களின் தவறான செயல்களை எரிப்பதே தவம் எனப்படும். மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் பஞ்சேந்திரியங்களால் நிகழும் அசத்தான செயல்களை அறவே ஒழித்தால் மெய்ஞானம் கிடைக்கும். அதாவது நல்லநதி நீரிணைக் கொண்டும், நல்ல பசும்பாலைக் கொண்டும் இறைவனுக்கு திருமஞ்சனம் செய்வது, நல்ல சுவையுடனான நெய்வேத்தியம் செய்வது, ஆகியவைகளுக்காகவும் குருவினுடைய அநுஷ்டானத்திற்காகவும் ஆண்டவரின் அடியார்களுடைய மிகப்பெரும் துன்பத்தை போக்கவும் தன்னுடைய வினைகளை கரைத்து தான் மோட்சம் அடைவதற்காகவும் இறைவனை நாடி தன்னைத் தக்க வைத்துக் கொள்வது தவமாகும். இதைத்தான் மோட்சம் விரும்புஞ் சென்மம் முழுதுந்தொடருங் கர்மம். சூட்ச மிதுவேயென்று துன்பமின்பஞ் சகிப்பாய் என்றும் ஆண்டவர் அழகாக பாடியுள்ளார். மேலும் நாம் செய்த வினைகளினால் நமக்கு ஏற்படும் துன்பங்களை தாங்கிக் கொண்டு பிற உயிர்களுக்கு துன்பம் செய்யாமல் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டு வாழ்வதே ஒரு தவம்தான். இதைத்தான் "உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை அற்றே தவத்திற்கு வழி" என்று வள்ளுவர் கூறியுள்ளார்.

இறைவனையும் குருவையும் நாம் ஏன் வணங்க வேண்டும்? தனு (சரீரம்) கரணம்(மனம்) புவனம் (உலகம் மற்றும் உலகிலுள்ள இன்பம் தரும் பொருள்கள்) போகம் (இன்பத்தை அனுபவித்தல்) ஆகியவைகளை நமது முயற்சி ஏதுமில்லாமலேயே நமக்கு இறைவன் கொடுத்துள்ளான். இதற்கு நன்றி தெரிவிப்பதற்குத்தான் நாம் இறைவனை வணங்க வேண்டும். இது மானுடராய்ப் பிறந்த நம்மால்தான் முடியுமே தவிர பிற உயிர்களால் முடியாது.

இதைத்தான் ஔவையார்

"அரியது கேட்கின் எறிதவழ் வேலோய்! அரிது அரிது
மானிடராதல் அரிது
மானிடராயினும் கூன்குருடு செவிடு பேடு நீங்கிப் பிறத்தல் அரிது
பேடு நீங்கி பிறந்த காலையும் ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது
ஞானமும் கல்வியும் நயத்த காலையும் தானமும் தவமும் தான் செயலரிது
தானமும் தவமும் தான் செய்வராயின் வானவர் நாடு வழி திறந்திடுமே"

என்று முருகப் பெருமானிடம் பாடியுள்ளார். இவ்வுலகத்தில் நாம் மகிழ்ச்சியாக வாழ அத்தனை தகுதிகளையும் வாய்ப்புகளையும் இறைவன் கொடுத்துள்ளதால் அவருக்கு நாம் நன்றி தெரிவிக்க வேண்டாமா? நமது சரிரத்தையும் மனத்தையும் கொண்டு அவற்றை கொடுத்த இறைவனை நினைத்து வணங்குவதை விட வேறு எதற்கு இந்த சரீரமும் மனமும் பயன்பட வேண்டும். எனவேதான் நாம் இறைவனையும் வணங்க நமது ஆன்மீக தகுதியை வளர்த்துக் கொள்ள நம்மை தவித்துக் கொள்ளச் செய்தாவது நாம் தவமிருக்க வேண்டும்.

குரு என்ற சொல்லில் "கு" என்ற எழுத்து அஞ்ஞானம் என்ற பொருளைத் தருகின்றது. "ரு" என்ற எழுத்து நீக்குதல் என்ற பொருளைத் தருகின்றது. அதாவது நம்மிடமிருக்கக் கூடிய அஞ்ஞானத்தை நீக்கி நாம் மெய்ஞானம் பெற வழிவகுப்பவர் குரு ஆவார். எனவேதான் குருவை நாம் வணங்குகின்றோம். குருஅடி பற்றினால்தான் திருவடி அடைய முடியும்.

இவ்வாறு கடவுளையும் குருவையும் வணங்குவதற்கும் தன்னுடைய துன்பங்களை பொறுத்துக் கொண்டு பிறருக்கும் எந்த துன்பமும் செய்யாமல் இருக்க நாம் தவம் மேற்கொள்ளுவதற்கே நாம் புண்ணியம் செய்திருக்க வேண்டும். எல்லோரும் தவம் செய்ய எண்ணமாட்டார்கள். அந்த பாக்கியம் உள்ளவர்களுக்குத்தான் தவம் செய்யும் வாய்ப்பு கிட்டும். இதைத்தான் வள்ளுவர்,

தவமும் தவமுடையார்க்கு ஆகும் அவம்அதனை
அஃதிலார் மேற்கொள் வது

என அழகாக கூறியுள்ளார். இறைவனை வணங்குவதற்கே இறைவனுடைய அருள் வேண்டும் என்ற கருத்தை விளக்கும்.

"அவனருளாலே அவன்தாள் வணங்கி" என திருவாசகத்தில் மாணிக்க வாசகர் பாடியது மிகப் பொருத்தமானதன்றே!

"என்னை நன்றாக இறைவன் படைத்தான், தன்னை நன்றாக தமிழ்ச்செய்யுமாறே" என திருமூலர் கூறியுள்ளார். அதாவது இறைவன் நம்மை நன்றாக படைத்து காத்து ரட்சிக்கும் போது நாம் அவனை வணங்கி அவனுடைய அருளைப் பெற்று முக்தியடைய நம்மை வருத்திக் கொள்வதில் தவறேதுமில்லை.

மேலும் தவத்தின் வாயிலாக எதை வேண்டுமானாலும் இறைவனிடமிருந்து கேட்டுப் பெறமுடியும். அதில் முக்கியமானதுதான் முக்தி. இதைத் தான் வள்ளுவர்

"வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும்"

மிக அழகாக கூறியுள்ளார். நமக்கு ஏன் கடவுள் மனித ஜென்மா அளித்தார் என்று சிந்தித்துப் பார்த்தால் மீண்டும் ஒரு ஜென்மா நாம் எடுக்காமல் இருப்பதற்கு வழிவகுத்துக் கொள்வதற்காகவே என்பது நன்றாக புரியும். முற்பிறவியில் செய்த கர்மாக்களை அநுபவிப்பதற்காகவும் மறுபிறவி கிடைக்காமல் இருக்க தவம் செய்வதற்காகவே இந்த ஜென்மா எடுத்துள்ளோம். இது நம்மைப் போன்ற மனிதர்களாக பிறந்தவர்களைத் தவிர பிற உயிர்களால் முடியாது. இவ்வுலகில் நாம் காணும் இன்பங்களை தொடர்ந்து துயிக்க முயலாது நாம் எதற்காக பிறந்தோமோ அதற்கான வேலைகளை மட்டும் செய்வதே அறிவுடைமையாகும். ஆசைக்கு அடிமையானால் துன்பம் தொடரும். இதைத்தான் வள்ளுவர்

"தவஞ்செய்வார் தங்கருமஞ் செயவார்மற் றல்லார்
அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு" – என்று கூறியுள்ளார்.

இந்த உலகின் நிலையாமைத் தன்மை பல்வேறு பிணிகள், முதுமைத் துயர், இறப்பென்னும் துன்பம் ஆகியவற்றை எண்ணி அறிவில் சிறந்தோர் செய்யத்தக்க கடமையாகிய தவநெறியை மேற்கொள்வார்கள். இதைத்தான் நாலடியார் என்னும் நூல்

தரணி போற்றும் தவம் செய்ய தடையேதும் இல்லை.

"நிலையாமை நோய் மூப்புச் சாக்காடென்றெண்ணித்
தலையாயார் தங்கருமஞ் செய்வார்" என்று அழகாக கூறுகிறது.

விளக்கின் ஒளி புகுதலால் ஓரிடத்து நிரம்பிக் கிடந்த இருள் மறைதல் போல ஒருவரது தவத்தின் முன்னே அவர் செய்த தீவினை மறைந்து ஒழியும் இந்த கருத்தை

"விளக்குப் புகவிருள் மாய்ந்தாய் கொருவன்
தவத்தின்முன் நில்லதாம் பாவம்" என்று நாலடியார் என்னும் நூல் கூட தெளிவாக கூறியுள்ளது.

பிறர் நமக்கு துன்பம் தரக்கூடிய சொற்களை கூறினாலும் செயல்களை செய்தாலும் அதற்காக நாம் மனம் வருந்தி பொறுத்துக் கொள்ள வேண்டுமே தவிர ஆத்திரப்பட்டு பழிவாங்கும் எண்ணத்தோடு நாமும் அதற்கு துன்பம்தரக் கூடியவைகளை செய்யக் கூடாது. அதுவே ஒரு தவம். இதைத்தான்

"திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அறனல்ல செய்யாமை நன்று" என்று வள்ளுவம் கூறுகின்றது.

எனவே கோபத்தை அடக்கி பிற உயிர்களுக்கு துன்பம் செய்யாமல் மனதைக் கட்டுப்படுத்தி இறைவனையும் குருவையுமே மனதில் நிலைநிறுத்தி ஆண்டவனிடம் நமது துன்பங்களை முறையிட்டு அவைகள் தீரும்வரை நமது வினைகள் கரைக்கப் படும்வரை மிகக் கடினமான தவத்தை துன்பம் பாராமல் நாம் தவம் செய்தால் இன்பமான முக்தி இறுதியில் கிடைக்கும்.

5-1-97 அன்று தவத்திரு. கே.எஸ்.கே. ஸ்வாமிகள் மூலமாக எஸ்.பி.எம் ஸ்வாமி தவம் அறையில் ஆண்டவர் அளித்துள்ள குறிப்பு : இரெட்டியப்பட்டியில் நடந்தது.

1. இந்த தவம் தந்த பாடம் (கூர்ந்து கவனித்தால் எல்லாம் மூன்று எழுத்துப் பதம் அடங்கிற்று)

சிந்தை தெளிவு பெற்று
பந்த பாசம் ஒழிய
எந்தை சிவம் சொந்த வழியை
தந்த பலன் அன்றோ!

விளக்கம் : தீபம் ஒளியை நாடிய பூச்சி போன்று ஆனேன்! அருள்சக்தி அன்னை அரசி தந்த ஞானம் அன்றோ. என் தகப்பனார் திரு. சாம்பசிவம் ஸ்வாமிகள் வழிகாட்டினார் என்று பொருள்.

2. டிசம்பர் 97 தவம் குறிப்பு பாடல் :

திரிகின்ற பாலெல்லாம் திரட்டிப் பாலாகா!
வருகின்ற பாடலெல்லாம் அருட்பாடலாகா!
ஊருகின்ற கேணி நீரின் சுவைக்கு ஈடாகுமோ!
மாறுகின்ற மனத்தெளிவிற்கு மாதவமே வீடாகும்!
கரும்பே இனித்தாலும் இனிப்பே கரும்பாகா!
காந்தமே இரும்பானாலும் இரும்பு காந்தமாகா!
இருளே நிறைந்திருந்தாலும் அருள் ஒளி அழித்திடுமோ!
அருளே நிறைந்த அருட்பாடல் அனைத்தையும் அளித்திடுமே

3. 25-12-2002 காலை 9.20 மணிக்கு எஸ்.பி.எம் தவத்தின் போது ஆண்டவர் அருட்குறிப்பில் வந்தபாடல்

"பத்மம், பாயும் நதியில் தான் தோன்றி போகும்
உத்தமர் மனம் ஆழம் அறிந்த பின்பே ஏகும்
சீருடை நாயகனின் தொந்தி மறைகின்ற வழியினிலே

தரணி போற்றும் தவம் செய்ய தடையேதும் இல்லை.

ஓர் உடை ஞானி வழங்கிடும் தீர்ப்பு அறிவாய் அன்றோ"

பத்மம் – தாமரை, பாயும் நதியில் ஓடுகின்ற ஆற்று நீரில்

தான் தோன்றி போகும் – ஆறு எப்படி போதிறதோ அப்படி போகும்

உத்தமர் மனம் – நல்லவர் உள்ளம்

ஆழம் – மனிதனின் வேகம்

அறிந்தபின்னே ஏகும் – புரிந்துக் கொண்டவர்களுக்குத்தான் புரியும்

சீருடை நாயகன் – காவல்காரன் (போலீஸ்)

ஓர் உடை ஞானி – நம் குருநாதர் (ஏக வஸ்திரம் தரித்தவர்)

வழங்கும் தீர்ப்பு – அதுபோன்று தண்டனையை உறுதிப்படுத்துகின்றது

தொந்தி மறைகின்ற வழியினிலே – தொந்தி குறைக்க செய்கின்ற தண்டனை போல்

4. எஸ்.பி.எம் தவம் 20-12-2003 மாலை 6.05 மணிக்கு இரெட்டியப்பட்டியில் தவம் ஆற்றினபோது வந்த அருட்குறிப்பு:

ஆண்டவர் 15-12-03 காலை 8 மணிக்கு முதலில் எஸ்.பி.எம் அறைக்குதான் வந்திருக்கிறார். எஸ்.பி.எம் அவரை கவனிக்கவில்லை. ஏதோ ஞாபகமாக படித்துக் கொண்டோ, ஏதோ எழுதிக்கொண்டிருந்தார். வேறு சிந்தனையோ செய்து கொண்டிருந்ததால் திரு. எஸ்.ஜி.என் அறைக்கு போனார். அங்கு தவம் நன்றாக நடப்பதாக சொன்னார். 75% மார்க் என்றார். திரு. எஸ்.பி.எம்க்கு அப்போது தெரியாது.

ஆண்டவர் பிறகு திரு. ரங்கநாதன் அறைக்கு போனார் அங்கு திரு. ரங்கநாதன் ஆண்டவரை வரவேற்று இரண்டு கையையும் நீட்டி

ஏதோ கேட்டார். ஆண்டவர் (பணப்பை ஒன்று) பொற்கிழி போடுவது போல போட்டார் பிறகு திரும்பி வரும் போது மீண்டும் திரு. எஸ்.பி.எம் அறை வழியாகத்தான் வந்தார். அப்போது திரு. எஸ்.பி.எம். பார்த்து வணங்கினார். ஆண்டவர் சிரித்துக் கொண்டே போய்விட்டார். திரு. எஸ்.பி.எம் மார்க் 65% என்றும் திரு. ரங்கநாதன் மார்க் 55% என்றும் சொன்னார். இது பரமரகசியம். 50% மார்க் கிடைத்திருக்கிறது திருமதி சரஸ்வதி தாய்க்கு தவம் நன்றாக நடந்திருக்கின்றது.

5. 12-01-99 மாலை 5 -20 மணிக்கு அருட்குறிப்பில் வந்த விளக்கம் :

சரீரம் கனமாக இருக்கும்போது தண்ணீரில் மிதப்பதில்லை. உதாரணத்திற்கு ஒரு இரும்பு பலகைமேல் படுத்தால் தண்ணீரில் மூழ்கிவிடுவார். அதே ஒரு மரப்பலகைமேல் படுத்தால் மிதந்து கொண்டே இருப்பார். அப்படி மனம் பாரமாக இருந்தால் சரீரம் இன்பத்தை அநுபவிக்க முடியாது. மனம் லேசாக இருந்தால் ஆனந்தத்தில் மிதப்பது போல இருக்கும்.

அப்படி மிதக்கின்ற சரீரம் ஒருநாள் நிச்சயம் கரை வந்து சேரும். அதே சரீரம், மனம் கல்லாக இருந்தால் சம்சார சாகர கடலில் மூழ்கிவிடும் மீண்டும் பிறவி வரும் அதற்காகத்தான் மனதிற்கு பயிற்சி கொடுக்கிறார். ஆண்டவர். மனம் தூய்மையாக மென்மையாக ஆகிவிட்டால் சரீரம் ஆனந்தத்தில் மிதந்து ஒருநாள் நிச்சயம் கரைவந்து சேரும்.

6. 12-1-99 மாலை 4-50 மணிக்கு வந்த அருட்குறிப்பின் விளக்கம் :

எள், வேர்கடலை, ஆமணக்கு சூர்யகாந்தி போன்ற தானியங்களிலிருந்து எண்ணெய் எடுக்கிறோம். மேல் தோல்

பிரிந்து சக்கையாகி விடுகிறது. எண்ணெய் தனியாக பிரிகிறது. வலி எல்லாம் மேல் தோலுக்கு மட்டுமே அப்படி எரிச்சல் எல்லாம் தோல் மட்டுமே அவஸ்தைபடும். எண்ணெய் எடுத்தபிறகு தோலில் வலி ஏற்படாது, செக்கு சுற்றும்போது மட்டும்தானே சக்கை தனியாக பிரிகிறது.

ஏன் இந்த நேரத்தில் மட்டும் இப்படிப்பட்ட வலிவருகிறது? டாக்டர் எந்த டெஸ்ட் எடுக்கச் சொன்னாலும் முதலில் வயிற்றில் ஒன்றும் இருக்கக் கூடாது என்று சொல்வார். ஆபரேஷன் செய்தால் கூட வயிற்றில் ஒன்றும் இருக்கக் கூடாது அப்படி தவத்தின்போது வயிறு காலியாக இருக்கும் எந்த டெஸ்டிற்கும் அது உகந்த நேரம். வினையை அநுபவிக்க அதுவே சரியான தருணம். தோல் எரிச்சல் பட்டு வினை கரைகிறது. சார்பிழிந்து சக்கை தனியாகிறது இதுவே தத்துவம்.

7. 2001-ம் ஆண்டு தவத்தின் போது வந்த அருட்குறிப்பு :

நான் உள்ளே வரும்போது நீ சொல்கிறாய் மாம்பலம் ஸ்வாமி சொல்வார்களாம் “வழியில் எங்கும் இறங்கக் கூடாது, ரயில் வேகமாக போகும், வழியில் நின்றால் கூட இறங்காதே, கடைசியில் ரயில் நிற்கும் இடத்தில்தான் இறங்க வேண்டும் எட்டிக்கூட பார்க்காதே” என்றார். அதற்கு என்ன பொருள்? என்ன அர்த்தம்? இதன் விளக்கம் : தவம் செய்யும்போது யாரையும் பார்க்க கூடாது, கவனம் முழுவதும் தவத்தில் இருக்க வேண்டும். கடைசிவரை தவம் முடியும் வரை வேறு சிந்தனையில் மனம் செலுத்தாமல் இருக்க வேண்டும்.

8. 27-12-2010 : காலை 6.45 மணிக்கு

"சத்திரம் சென்று தவம் ஆற்றி வந்தேன்
புத்திரர்கள் புடை சூழ வந்ததின் பலனால்
வஸ்திரம் தரித்து மகிழ கேந்திரம் உருவாகும்
சித்திரைமாதம் முதல் சிந்தனை வரட்டும்"

விளக்கம் : எஸ்.பி.எம். சாமியின் மூன்று பிள்ளைகளும் எஸ்.பி.எம். தவத்தின் போது வந்ததனால் அவர்கள் ஆண்டவர் அலங்காரத்தில் பங்கு கொண்டு வந்தால் புதிய கேந்திரம் உருவாக்க வழி வகுக்கும் சித்திரை மாதம் முதல் சிந்தனை செய்து வந்தால் நடக்கும்.

எஸ்.பி.எம் ஸ்வாமிகள் தவத்தின்போது பலபல அருட்குறிப்பும் பாடல்களும் விளக்கமும் வந்துள்ளது. ஒரு சிலவற்றை இங்கு எழுதியுள்ளேன். இவ்வாறு பலபல தவசிகளுக்கும் வந்துள்ளது. ஆண்டவர் தவசிகளுக்கு என்ன என்ன செய்ய வேண்டும், பிரச்சனைகள் தீரவும், பிணி தீரவும், மனம் நிம்மதி பெறவும், விழாக்கள் நன்கு நடைபெறவும், நன்மைகள் பல பெறவும் அநுக்கிரஹம் தவசிகளுக்கு தவத்தினபோது செய்து வருகின்றார்கள். ஒருபக்கம் வினையையும் கரைத்து மறுபக்கம் அருளாலும் பொருளாலும் முன்னேற்றமடையச் செய்கின்றார்.

தவத்திற்கு முந்தைய பயிற்சிகளும் அநுபவங்களும்

ஸ்ரீ ஆண்டவருடைய அடியார்கள் அருட்சட்டத்தை வழுவாது கடைபிடிப்பதன் பயனாய் ஆண்டவரை தன் உள்ளத்துக்குள்ளே கொண்டு வந்து நிறுத்தி அவரை மனக் கண்ணால் பார்க்கும் தகுதியை சிறிது சிறிதாக பெறுகின்றார்கள். சிறிதளவு பயன் கிடைத்ததுமே மகிழ்ச்சியுற்று அதை பெரிதளவாக்க விரும்புகின்றார்கள். இதனால் அவர்கள் எப்போதும் ஆண்டவரையே நினைத்துக் கொண்டு இருக்க பழகுகின்றார்கள். பழகப் பழக ஆண்டவரிடம் உறவாடும் தகுதி அதிகரிக்கப்படுவதை உணருகின்றார்கள். இதைத்தான் ஆண்டவரும் "உன்னைப் படைத்தவனாரு உனக்குள்ளே யிருக்கின்றான் பாரு" என்று கூறியுள்ளார்கள் எனவே அவரைப் பார்க்கவும், ஆண்டவரோடு உறவாடவும் விரும்பி தனிமையில் நாட்டம் ஏற்படுகின்றது. ஆங்காங்கே இடம்பொருள் ஏவல் கருதாமல் பிறர் என்ன நினைப்பார்களோ, ஏது கேட்பார்களோ என்றெல்லாம் நினைக்காமல் ஆண்டவரை மனதில் கொண்டு வேண்டுவதற்கு விரும்புகிறார்கள். இது உண்மையான அன்பு பூண்டு அருள்சட்டம் பின்பற்றுபவர்களுக்கு கிடைக்கும் பாக்கியமாகும். இவர்கள் தன்னைப் போன்று பிற அடியார்களிடம் இதுபோன்ற எண்ணம் ஏற்படுகிறதா என்பதை சூட்சமமாக கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்புகிறார்கள். தன்னை விட பிறருக்கு ஏற்படும் அநுபவம் மிகுதியாக இருந்தால் தான் அதைவிட மிகுதியான அளவில் ஆண்டவரிடம் ஈடுபாடு கொள்ள எத்தனிக்கிறார்கள்.

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்,
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்கு ஜீவன் சிவலிங்கம்
கள்ளல் புலன்னைந்தும் காளாமணி விளக்கே"

என்று திருமூலர் பாடிய பாடலுக்கு ஏற்ப உள்ளமாகிய கோயிலில் நம் ஆண்டவரை தரிசிக்க விரும்புகின்றோம். இந்த அநுபவத்தினால் அடியார்கள் ஆண்டவரை நினைத்து தியானம் செய்ய முயற்ச்சிக்கிறார்கள்.

கேந்திர விழாக்களில் தியானம் :

வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் ஆங்காங்கே நடைபெறும் ஆண்டவருடைய விழாக்களின் போது முதன்மையான நிகழ்ச்சியாக ஆழ்நிலைதியானம் மேற்கொள்ளப்படுகின்றது. பல்வேறுபட்ட சூழ்நிலைகளிலிருந்து வரக்கூடிய அடியார்கள் ஆண்டவர் விழாவில் கலந்து கொள்ளவும், ஆண்டவர் அருளை பெறவும் இந்த நிகழ்ச்சி அவர்களைத் தகுதியுடையவர்களாக ஆக்குகின்றது. ஆண்டவர் திருவுருவப்படத்தின் முன் அடியார்கள் கூட்டமாக அமர்ந்து ஓம் ஒலியை எழுப்பி ஐம்பொறிகளையும் அடக்கி ஆண்டவரை தியானிக்கின்றார்கள். அக்கம்பக்கத்தில் பல ஒலிகள் இருந்தாலும், சமையல் வாசனை மற்றும் பல வாசனைகள் எழுந்தாலும், தன் மீது பாம்பே ஊர்ந்து சென்றாலும் அவைகள் அத்தனையும் பொருட்படுத்தாது ஆண்டவரை மட்டுமே மனதில் நினைத்து தங்களது குறைகளையும் வினைகளையும் தாக்கல் செய்து அவைகளெல்லாம் நீங்கி தாம் நலம் பெற பிரார்த்திக்கின்றார்கள். இவ்வாறு தியானம் மேற்கொள்வது அடியார்களின் முயற்சியில் முதற்படியாகும்.

மனதை அடக்கி கட்டுப்படுத்துவது என்பது எளிதல்ல. தண்ணீரில் பந்தை அமுக்கினால் அது வேறு ஒருபக்கமாக எழும். மீண்டும் அமுக்கினால் மறுபடியும் எழும் இப்படி பல முறை அந்த பந்தை நீரில் அமுக்கி பழகினால் ஒருமுறை அந்த பந்தை நம்மால் அமுக்கிவிட முடியும். அதுபோல பல்வேறு எண்ணங்களில் அலைந்து திரிந்து கொண்டிருக்கும் மனதை பலமுறை தியானம் மேற்கொள்வதன் வாயிலாக ஒருநாள் அடக்கி விடமுடியும். இதற்கு நம்பிக்கையும் விடாமுயற்சியும்தான் காரணம். மனம் கூடவில்லை என்றால் சளைத்துவிடக்கூடாது. ஆண்டவரை மனதில் கொண்டு வந்து நிறுத்த வேண்டும் என்ற வெறியோடு முயற்சி செய்ய வேண்டும். விழாக்காலம் அல்லாமல் மற்ற நேரங்களிலும் சூழ்நிலையைப்பற்றி கவலைப்படாமல் இத்தகைய தியானம் மேற்கொள்ள முயல வேண்டும்.

அதிக கட்டுப்பாடின்றி தனியாகவோ அல்லது கூட்டாகவோ எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் சுமார் அரை மணிநேரம் வரையில் கண்ணை மூடிக் கொண்டு ஆண்டவரை நினைப்பதும் பிரார்த்திப்பதும் தியானம் எனப்படுகின்றது. தவம் பற்றி ஒரு ஆண்டவர் விழாவில் அருள்வாக்காக வந்ததை இங்கு பிரசுரிக்கின்றோம்.

எண்ணமில்லாத புலன் அனுபவமே தியானம் எனப்படும். அது மூளையோடு மட்டுமின்றி மற்ற எல்லா புலன்களுடன் கலந்ததன் விளைவாகவோ வரும் காட்சியல்ல. அதனால் இதற்கு கண்களை மூடிய நிலையோ திறந்தநிலையோ அல்ல. இந்த

உணர்வு ஒரு பொருளை பார்ப்பதிலும் பார்த்து தெரிந்து கொள்ளாமல் இருப்பதாலும் உள்ள வேறுபாட்டைக்காட்டுகிறது. தியானகாட்சிகளில் பார்க்கப்படும் பொருள் என்பதே கிடையாது.ஆகவே தியானம் சுற்றிலும் எல்லா பொருட்களும் இருக்கும் போதே நிகழ முடியும். அவற்றை பார்த்தாலும் அவற்றின் நினைவு மனதில் பதிவதில்லை. இது அனுபவத்தால் மட்டும் நிகழவில்லை என்பதை உணர்த்தும்.

இந்த தியானத்தில் ஒன்றை உருவாக்கும் பெருமிதம் இருக்கிறது. அது கண்களுக்கும், மூளைக்கும் இதயத்திற்கும் குற்றமில்லாத புனிதத்தை அளிக்கிறது. ஒரே மாதிரியான சலிப்பூட்டும் உணர்ச்சிகளிலிருந்து விலகி நமக்கு அமைதியை ஊட்டுகிறது. மிகுந்த பெருமை உடைய சிறப்பான ஒரு அனுபவத்திற்கு அது மனக்கதவை திறக்கிறது. அந்த நிலையில் கண்களை திறந்தாலும், மூடியிருந்தாலும் பொருள் இல்லை. இதுதான் தவத்தின் பெருமை ஆகும்.

நிஷ்டை :

பலநாட்கள் தியானம் செய்து பழகிய அடியார்கள் விடியற்காலை 4 மணிக்குள் ஸ்நானம் செய்த பிறகு பூஜையறையில் அமர்ந்து எந்தவித சப்தமும் இல்லாத சூழ்நிலையில் சுமார் ஒருமணிநேரமோ அல்லது அதற்கு மேலாகவோ ஆண்டவரை தியானிக்கலாம். இரவு சுமார் 10 மணிக்குமேல் படுக்கை அறைக்கு செல்லும்போதும் அங்கேயும் நிசப்தமான சூழ்நிலையில் ஆண்டவரை தியானிக்கலாம்.

முன்இரவில தூங்கியும் நள்ளிரவு சுமார் 1 மணி அளவில் விழிக்கும் பழக்கமுடையவர்கள் 1 மணிமுதல் 3 மணிவரை ஆண்டவரை தியானிக்கும் போது ஆண்டவர் நமது மனதில் தோன்றி நம்மோடு உறவாடுவதை நன்றாக உணரமுடியும். அவ்வாறு உணரும்போது நமக்கு மகிழ்ச்சியாக இருக்கும்.

"நிஷ்டையில் இன்பம் நிறைப்போய் போற்றி" எனவரும் அர்ச்சனை மந்திரம் இதற்கு சான்றாகும். இந்த நேரத்தில் நம்முடைய எல்லா தேவைகளையும் ஆண்டவரிடம் கேட்டு உரிய பதிலை பெற்று பயனடையலாம். இத்தகைய நிஷ்டை அடியார் வாழ்க்கையில் தியானத்திற்கு அடுத்த இரண்டாவது படியாகும்.

"நிஷ்டை எனும் ஒரு தன்மையில் நிகரில் நிலையருள்வாய்" கட்டுக்களை வெட்டி சுகக்கரை சேர்த்தருள்புரிவாய் என்ற ஆண்டவருடைய பாடல் வரிகள் மேற்கூறிய கருத்துக்களை மெய்ப்பிற்கின்றனவல்லவா! இவ்வாறு எளிதில் நிஷ்டை மேற்கொள்ள பழகியபிறகு ஆண்டவர் அடிக்கடி சகஜநிஷ்டையையருள்வார். எடுத்துக்காட்டாக ஒருநாள் பூஜையறையிலிருந்து ஸ்ரீலஸ்ரீ அருள்சக்தி அன்னையார் அவர்கள் வெளியில் வரக்கருதி வாயிற்படியருகில் வரும்போது இந்த வாயிற்படி கடந்து வெளியில் செல்லாகாது என்ற ஆண்டவர் ஆணை பிறந்தது. அன்னையார் ஒன்றும் தோன்றாமல் திகைத்து நின்றனர் அப்போது ஆண்டவர் "நிருவிகற்ப சமாதியிற் புகும் நிஷ்டை தந்தருள் அற்புதா! இனி எனக்கொன்றும் வேண்டாம் நின்பதமல்லாமல் வேறு எந்தையே" என்றும் அருட்பாடலின்

அடிகளைக் கூறி விளக்கம் அருளினார். உடனே நம் அருள்சக்தி அன்னையார் ஆண்டவரின் திருவடிகளை மிகமிக உருக்கமோடு தியானித்த வண்ணம் நாற்காலியில் அமர்ந்தனர்.

அருள்சக்தி அன்னையைத் தொடர்ந்து மாம்பலம் ஸ்வாமிகளும், மாம்பலம் தாயும் சகஜ நிஷ்டையை பல முறை ஏற்றிருக்கின்றார்கள். தற்சமயம் தவத்திரு. அருள்பிரகாசதாசன் அவர்களுக்கும் ஆண்டவர் அருளிவருகின்றார்கள்.

தவம் தியானமும் நிஷ்டையும் வரப்பெற்ற அடியார்கள்தவம் மேற்கொள்ளும் தகுதியை எளிதிலேயே பெறுகின்றார்கள். குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட நாட்கள் மிகுந்த கட்டுப்பாடுகளோடு ஆண்டவரை தியானிப்பது தவமாகும். இதுபற்றி அடுத்த தலைப்பில் விரிவாக காண்போம்.

தவம் செய்வதற்கான ஏற்பாடுகளும் தவம் செய்யும் முறைகளும்

அவரவர் இல்லத்தில் தவம் செய்வது சிலருக்கு வசதியாக இருக்கும், பலருக்கு தன் வீடு தவம் செய்ய சாத்தியமாக இருக்காது. அதுபோன்ற சூழ்நிலை உள்ளவர்கள் மேற்சொன்ன இடங்களில் ஏதாவதொன்றை தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். தவம் செய்யும் காலத்தில் தமக்கு தேவையான உதவிகளை செய்யவும், பூஜை செய்யவும் உரிய நபர்களை துணைக்கு அழைத்துச் செல்வது நலம். தேவையான விநாயகர், ஆண்டவர், அருட்சக்தி அன்னை மற்றும் மாம்பலம் தம்பதியர்கள் படங்களை எடுத்துச் செல்ல வேண்டும். தினமும் பூஜைக்குத் தேவையான மாலைகள், புஷ்பங்கள், தேங்காய், பழங்கள், வெற்றிலைப்பாக்கு, பால், தயிர், அன்னம், இனிப்பு மற்றும் கார வகைகள் ஆகியவைகளுக்கு வழி செய்துக் கொள்ள வேண்டும்.

பணியாற்ற ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் உதவிக்கு இருந்தால் தவசிக்கு கவலை இல்லாமல் இருக்கும். விளக்கு, எண்ணை, திரி, தீப்பெட்டி, நெய், பத்தி, கற்பூரம், சாம்பிராணி, ஐந்துகிளை ஆரத்தி, பூஜை தட்டு, பஞ்சபாத்திரம், உத்தரணி, தீர்த்தம் அருந்த கிண்ணம், குத்துவிளக்கு யாவும் கட்டாயம் தேவை.

ஆண்கள் மற்றும் பெண்கள் தவம் செய்ய ஆடை அணிவது உள்ளிட்ட பல வசதிகளைப் பற்றி ஏற்கெனவே தவசியாக இருக்கக்கூடியவர்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். காஃபி, டீ போன்ற எந்த ஒரு பானத்தையும் அருந்தக் கூடாது. வேகவைத்த எந்தப் பொருளையும் உண்ணக் கூடாது, சிற்றுண்டி மற்றும் சாப்பாடு எடுத்துக் கொள்ளக் கூடாது. உப்பு, புளி, சேர்க்கக் கூடாது,

பால் மற்றும் பழங்களை மட்டும் காலை 8 மணிக்கு ஒருமுறையும், இரவு 8 மணிக்கு ஒருமுறையும் எடுத்துக் கொள்ளலாம். பசியைத் தாங்க இயலாதவர்கள் மதியம் 2 மணியளவில் பழச்சாறு அருந்தலாம்.

விடியற்காலை 4 மணிக்கும் மாலை 4 மணிக்கும் தவறாமல் பச்சை நீரில் ஸ்நானம் செய்தல் வேண்டும். ஒரு நாளைக்கு 5 முறை ஸ்ரீ விநாயகர் மற்றும் ஸ்ரீ ஆண்டவர் சிலைகளை தாமிர அல்லது பித்தளைத் தட்டில் வைத்து 3 முறை சுற்றி நமஸ்கரிக்க வேண்டும்.

வெளிநபர்கள் யாரும் தவசியை பார்க்கக் கூடாது. தவசியும் ஜன்னல் வழியாக யாரையும் பார்க்கக் கூடாது. தவமிருக்கும் காலங்களில் தவமிருக்கும் இடத்தை விட்டு வெளியே செல்லக் கூடாது. டிவி பார்ப்பது, ரேடியோ கேட்பது, செய்திதாள்களை வாசிப்பது, பிறர் கூறுகின்ற கதைகளைக் கேட்பது கூடாது. வழிகாட்டும் வான்பொருள், கருணை மிகு வள்ளல், ஆண்டவர் அருட்பாடல் புத்தகம், மூவர் அர்ச்சனைக் கொத்து, அருட்சட்டத் திருவிளக்கு, ஐவர் அர்ச்சனை மலர் போன்றப் புத்தகங்களை படிப்பது நல்லது. அதில் கூறப்பட்டுள்ள கருத்துக்களைப் பற்றி சிந்திப்பது, எழுகின்ற ஐயப்பாடுகளை ஆண்டவரிடம் தாக்கல் செய்து ஆண்டவரிடம் விளக்கம் கேட்பது, அவர் பதிலுக்காக காத்திருப்பது, திடீரென பதில் வரும்போது மகிழ்ச்சி அடைவது ஆகியவைகளெல்லாம் தவம் இருக்கும் காலங்களில் மேற்கொள்ள வேண்டிய செயல்பாடுகளாகும்.

அன்பரோ, அடியாரோ தவசிகளிடம் வந்து அவர்கள் வினைகளையோ, குறைகளையோ கூறினால் அவைகளைக் கேட்டு ஆண்டவரிடம் தாக்கல் செய்ய வேண்டும்.

ஆண்டவரிடமிருந்து பதில் வரட்டும் கூறுகிறேன் என்று பலகையில் எழுதி காட்டி, பிரசாதம் கொடுத்து அனுப்ப வேண்டும். அவர்கள் தேவையற்ற கருத்துக்களை சொன்னால் அவற்றை பொருட் படுத்தாமல் விட்டுவிட வேண்டும். தவ அடியார்கள் தூய்மையான குறிப்பாக வெண்மையான ஆடை அணிவதே சிறப்பு.

"சித்தா சனங்களெல்லாம் செகமயக்க மாய்த்தோன்றிப்
பத்மா சனமிட்டுப் பார்த்தேன் பராபரமே" – என்ற

ஆண்டவர் பாடிய வரிகளின்படி ஆண்டவர் அமர்ந்தக் கோலம் பத்மாசனம். நாம் மரத்தாலான பெஞ்ச்சுகள் அல்லது கட்டிலில் அமர்ந்தும் படுத்தும் தவம் செய்யலாம். உறங்கி விழிக்கும் போது மறந்தும் வாய்த்திறந்து பேசிவிடக் கூடாது. ஆர்வத்தின் காரணமாய் தவறியும் பேசிவிடக் கூடாது. பாசம் கடந்த நிலை உள்ளவர்களுக்கு பரம்பொருளை நினைத்துக் கொண்டே இருப்பவர்களுக்கும் கடவுளின் நாமம் உள்ளேயே நிலைத்து நிற்கும். அஷ்டயோகங்களையும் அறிந்த தவசிகள் நிஷ்டையிலே நிலைத்து நிற்க முடியும்.

மந்திரமொன்றை நினைந்து நினைந்து
மனங்குவி யும்படி சிந்தை தெளிந்துநீ வாடுவாய் –
தினந்தேடுவாய்

என்பது சந்தப்பாடல் வரிகள். ஏதாவது ஒரு மந்திரத்தை மனதில் நினைத்து மனம் நன்கு அதில் குவியும்படி எப்பொழுதும் கூறிவந்தால் சிந்தை தெளிந்து ஆனந்தம் ஏற்பட்டு அதிலேயே லயித்துவிடுவோம். ஓம் குருநாதா, உச்சிஷ்டகணேசா ஊர்துவ கணேசா காத்தருள் கணேசா போன்ற ஏதாவதொரு மந்திரத்தை மனம் நினைத்தால் நமக்குள்ளே மறைந்துள்ள பொருளைக் காணமுடியும்.

மனோலயம், மனோமுக்தி, மனோநாசம் என்று மூன்று வகை உள்ளது. மனம் உயர்ந்த பொருளை லயிக்கிறது. இதில் நாளடைவில் ஈடுபட்டு முக்தி அடைந்து தன்னாலேயே அந்த பரம்பொருளின் மீது நாட்டம் ஏற்படுகிறது. பிறகு மனம் நாசமடைந்து கட்டுக்குள் அடங்கிவிடும். பொருள் ஒன்று மட்டுமே மிஞ்சும்.

"இயற்கை யகப்பற்றுப் புறப்பற்று நீங்கியும்
எல்லா மிவனாகி யிரண்டறக் கலந்தபின்
பார்த்த விடமெல்லாம் பராபர மொன்றாகிப்
பக்குவ ஞானிகள் பட்டபா டுகள் பொய்யோ"

எந்த பொருளின் மீதும் சிறிதும் பற்று வைக்காமல் எந்த ஆசையும் படமால் இவையெல்லாம் நீங்கியவுடன் கடவுள் அல்லது குருவிடம் கலந்த நிலையானது எங்கும் எதிலும் குரு மற்றும் கடவுளின் காட்சி பெறுவதானது பக்குவ ஞானிகளால்தான முடியும். இதற்காக எங்கும் எதிலும் பரம்பொருளைக் காண்பதற்காக பட்ட பாடுகள், கஷ்டங்கள் கொஞ்சமில்லை என்று ஆண்டவர் பாடியுள்ளார்.

சாலோகம் சாமீபம் சாரூபம் சாயுஜ்ஜியம் இந்த 4 பதவிகளில் சாலோகம் என்பது குருவின் கொள்கைகளை கடைப்பிடிப்பதாகும். சாமீபம் என்பது கடவுளை நெருங்குவது, அடிக்கடி அவரை நினைத்து வழிபடுவது. சாரூபம் என்பது அவரைப் போலவே அவருடைய ரூபமாகவே நாம் ஆகிவிடுவது இது நாளடைவில் ஏற்படுவது. சாயுஜ்ஜியம் என்பது இறைவனிடம் அல்லது குருவிடம் இரண்டறக கலப்பதாகும்.

தவசிகள் சந்திப்பு நிகழ்ச்சியில் வந்த ஆண்டவர் அருட்குறிப்பு

தவசிகள் எப்படி உருவாக்கப்படுகிறார்கள்?

அருட்சட்ட அடியார்களின் கேந்திரங்கள் பெற்றவர்கள் ஒழுங்காக ஒவ்வொரு ஆண்டும் பெருமுயற்சி செய்து கேந்திர விழா நடத்துபவர்களும், தினமும் தவறாமல் விடியல் நான்கு மணிக்கு ஸ்நானம் செய்கிறவர்களும், தினந்தோறும் ஒரு பத்து நிமிடமாவது ஆண்டவரை நினைத்து நிஷ்டை இருப்பவரும், வெள்ளிக்கிழமை உபவாசம் ஒழுங்காக கடைபிடிப்பவரும் தான் தவசிகளாக தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். இது வரையில் மேற்கூறியசெயல்களை சரியாக செய்யாதவர்கள் இனி வரும் நாட்களில் ஒழுங்காக செய்யும் படி கேட்டுக்கொள்கிறேன்.

பூர்வ புண்ணிய வசத்தால்தான் இந்த தவசிகள் உருவாக்கப் படுகிறார்கள். அவரவர்களுக்கு எந்த இடம் எந்த காலம் எத்தனை நாள் எல்லாம் ஆண்டவரால் குறிக்கப்பட்டு அதன் படி நடப்பதற்கு வழி வகுக்கிறார்கள். சிலருக்கு வீட்டிலேயும் சிலருக்கு வெளியூரிலும் இந்த தவம் ஏற்படுவதற்கு காரணம் அவரவர்கள் குடும்ப சூழ்நிலைகள் மற்றும் அவர்களுடைய தொழில், வயது , குடும்ப பொறுப்பு போன்றவைகளிலும் கணக்கில் கொண்டு ஆண்டவர் குறிப்பிடுகிறார். யார்யாருக்கு என்னென்ன பாக்கியமோ அதை அப்படியே ஏற்றுக்கொண்டு முழுதிருப்தியுடன் தவமிருக்க வேண்டும்.

தவசிகள் முக்கியமாக செய்ய வேண்டியவை என்ன?

1. இடைவிடாமல் ஆண்டவரையே நினைத்து எதையும் செய்கின்ற பழக்கம் ஏற்பட வேண்டும். எங்கு சென்றாலும், எந்த வேலை செய்தாலும், படுத்தாலும், தூங்கினாலும், தூங்கி எழுந்தாலும், மனம் எப்போதும் 24 மணிநேரமும் ஆண்டவரைப் பற்றியே நினைத்துக் கொண்டிருத்தல் வேண்டும். எல்லா வேலையும் பார்க்கலாம். ஆனால் ஞாபகம் மட்டும் எப்போதும்

ஆண்டவரிடம் இருக்க வேண்டும். எதை செய்தாலும், சாப்பிட போனால் கூட ஆண்டவரிடம் சொல்லிவிட்டு சென்று சாப்பிடுங்கள். இதுதான் முதல்படி

2. தினந்தோறும் சரியாக 4.00 மணிக்கு காலையில் குளிக்க வேண்டும். அலாரம் வைத்து எழுப்பி பழகிக் கொள்ளலாம். பிறகு தானாக ஆண்டவர் எழுப்பி விடுவார். 4.30 மணிக்குள் கண்டிப்பாக குளிக்க வேண்டும். இது இரண்டாவது படி.

3. உபவாசம் வெள்ளிக்கிழமை ஆரம்பம் பிறகு 6 மாதம் 1 வேளை சாப்பாடு + 1 வேலை பலகாரம் இருக்கலாம். பிறகு வரு-ம் முழுவதும் பலகாரம் இருக்கலாம். அதற்கு மேல் நிலைக்கு வந்தால் பால் பழம் மட்டும் அருந்துகிற விதமாக அமையும். குறிப்பாக மௌனத்தின்போது ஆகாரக்கட்டுப்பாடு பழகி விடும். வெள்ளிக்கிழமை விரதம் முதலில் முக்கியம் எல்லாம் எதற்காக? அந்த நாட்களில் ஆண்டவரை அதிகமாக நினைக்க வேண்டும் என்பதற்காக உங்களுக்கு அவர் கனவில் கொடுத்துள்ளார் என்பதை கவனித்து அதில் தீவிரமாக உழைத்து முன்னுக்கு வரவேண்டும். அப்போதுதான் மேல்நிலைக்கு போக முடியும். இது மூன்றாவது படி.

சுருக்கமாக சொன்னால் 1. விடியல் 4 மணி ஸ்நானம், 2. நிஷ்டை, 3. உபவாசம் இந்த மூன்றுமே மிக முக்கியமானது ஆகும். இவ்வாறு குருநாதரை மனதில் நினைத்துக் கொண்டிருக்கும் பழக்கம் ஏற்பட்டால் தானாக முக்திக்கு வழிவகுப்பார். பாசபந்தம் விலகி, எல்லா உயிரிடத்திலும் அன்பு பாராட்டும்போது மேல்நிலைக்கு வருவதற்கு வழிவகுக்கும் . இன்று இங்கு ஆரம்பிக்கப்படும் இந்த அருள்நிஷ்டை உங்கள் இல்லத்தில் தினந்தோறும் உங்களுக்கு கிடைக்க ஆண்டவர் அருள்புரிய வேண்டும் என்று என் உரையை நிறைவு செய்கிறேன்.

தவத்தின் பயன்கள்

"சஞ்சித கட்டையெல்லாந் தணலா யெரித்துனது
குஞ்சித பாதத்தைக் கொடுப்பாய் பராபரமே" என்பது

ஆண்டவர் பாடல். தவமிருக்கும் காலத்தில் நாம் விட்டுவந்திருக்கும் சஞ்சிதம் அடுத்தப் பிறவியை கொடுக்காமல் தவிர்க்க ஆண்டவரைப் பிரார்த்திக்க வேண்டும். தவத்தின் மூலமாகத் தான் சஞ்சிதத்தை எரிக்க முடியும்.

"தவமெனும் சுவாலையில் பவமெரிந்து பொன்றிடும்
சிவனருள் சிறந்து தோன்றுமே – அல்லாதவர்
சவம்போல் இருப்பர் என்றுமே
மாண்டு மண்ணாய் போவதற்குள்
ஆண்டவன் அருள் ஒளியை
கூண்டினுள் கண்டு குலாவு நீ ஐயா
பவக்கடல் தாண்டி மேலே போகலாமய்யா"

என்று சித்திரமுத்து அடிகளார் பாடியுள்ளார்கள். தவக்கனலின் மூலமாக பாவங்களை எரிக்க வேண்டும். இல்லையேல் அவை மறுபிறவி எடுக்கும். எனவே தான் ஆண்டவர் அருள்சட்டத்தில் தவத்திற்கு மிகவும் முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது.

"கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைபட் டவர்க்கு" – என்பது வள்ளுவன் வாக்கு.

எமனையே அழிக்கக் கூடிய சக்தி தவத்திற்கு உண்டு. முறையாகவும் உண்மையாகவும், தீவிரமாகவும் தவம் செய்பவர்களுக்கு அத்தகைய ஆற்றல் நிச்சயம் கிட்டும் என்று

இங்கே விளக்கப்படுகிறது. குஞ்சித பாதத்தை கொடுப்பாய் என்றால் தூக்கிய திருவடி தரிசனத்தைக் கொடுப்பாய் என்று பொருள்.

"ஆகாமி யங்க ளணுவளவுந் தோன்றாமல்
யோகா மிசங்கள் தந்த உறவே பராபரமே"

என்பது ஆண்டவர் பாடல்வரிகள். ஆகாமியம் என்பது இப்பிறவியில் நாம் செய்த நல்வினை தீவினைகளாகும். நாம் செய்கின்ற தவத்தின் பயனாய் நமக்கு உதவி செய்பவர்களிடம் நாம் செய்யும் புண்ணியங்களும் நமக்கு தீங்கு செய்பவர்களிடம் நாம் செய்கின்ற பாவங்களும் சென்றடையும். பொதுவாக அருட்சட்ட அடியார்கள் பிறருக்கு தீங்கு தரக்கூடிய செயல்களை செய்ய மாட்டார்கள். பொய் சொல்ல மாட்டார்கள், துன்பப்படுபவர்களைக் கண்டால் ஆண்டவரிடம் முறையிட்டு அவர்களுக்கு இன்பம் பயக்கும் செயல்களை மட்டுமே செய்வார்கள். பிறர் துன்பத்தை தம் துன்பமாகக் கருதி அத்துன்பம் நீங்க பாடுபடுவார்கள் இதுதான் மற்றவர்களுக்கும், சட்ட அடியார்களுக்கும் வேறுபாடு.

"பிராரத்துவ கன்மம் புசித்துமுடி வானவுடன்
சிரோரட்சண மேயுனது சேர்வை பராபரமே"

என்பதும் ஆண்டவர் பாடல்வரிகள்தான். பிராரத்துவம் என்பது இப்பிறவியில் அனுபவித்தே ஆக வேண்டும் என்பதற்காக நாம் கொண்டு வந்துள்ள நல்வினை தீவினைகளாகும். அவைகளை அனுபவித்துதான் கரைக்க முடியுமே தவிர வேறு வழியில்லை. அந்த அனுபவ வதையை சற்று குறைத்துக் கொடுக்குமாறு ஆண்டவரிடம் முறையிடலாம். அவ்வாறு முறையிடுவதற்கும் நமக்கு ஒரு குரு தேவை அல்லவா? நம்மைப் போன்ற

மனிதர்களிடத்திலா முறையிட முடியும்? அந்த குரு தான் ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் ஆவார்.

நாம் என்ன கேட்கிறோம் என்பதை அவர் கவனித்துக் கொண்டே இருக்கிறார். நாம் செய்துள்ள வினைகளுக்கேற்ப நம்மை எப்படி லகுவாக துன்பம் அனுபவமிக்க பணிப்பது என்பதை அவர் வகுப்பார். அந்த துன்பம் எப்படி நீங்கியது என்றே நமக்கு தெரியாத வகையில் நீக்கிவிடுவார் அதுதான் ஆண்டவருடைய பெருமை!. அப்படி பிராரத்துவ கன்மத்தை அனுபவித்து முடித்துவிட்டால் நாம் இறைவன் திருவடியாகிய முக்தியை அடைவது நிச்சயம்.

கொஞ்சம் கொஞ்சமாக குடும்ப பாசத்தையும் ஆசையையும் குறைத்துக் கொண்டே வந்தால்தான் வினைகளை அனுபவிப்பதில் நாட்டம் ஏற்பட்டு முக்தியடைய வாய்ப்பு ஏற்படும். ஆசை , பொறாமை, கோபம் இருக்கும் வரையில் நம்மால் முக்தியைப் பற்றி சிந்திக்கவே முடியாது.

இந்த தவத்தினால் என்ன பயன்? தவம் இருப்பவர்களுக்கு வீடு பேறு பெறும் பாக்கியம் கிடைக்கும். வீடு என்றால் இரண்டு அர்த்தம் உண்டு. இந்த உலகில் வாழ்வதற்கு நல்ல வீடும், மோட்சம் என்ற முக்திபேறு வீடும் கிடைக்கும். நீங்கள் இப்போது கவனித்துப் பார்த்தால் புரியும். எந்தெந்த தவசிகளுக்கு இப்போது வீடு நன்றாக அமைந்திருக்கிறது என்று பார்ப்போம்.

திரு. கடலூர் ஸ்வாமி வீடு புதுப்பிக்கப்பட்டது, திரு. இளந்தோப்பு ஸ்வாமி வீட்டு வாசலில் கடைகட்டி புதுப்பிப்படுகிறது. திரு. பாக்கம் ஸ்வாமி வீடு புதுப்பிக்கப்பட்டு விளக்கு பூஜை சிறப்பாக

நடந்தது. திருமதி சரஸ்வதி தாய் வீடு புதுப்பிக்கப்பட்டு ஆண்டவர் விழா நடந்தது. திரு. குருமணி ஸ்வாமி புதிய வீடு வாங்கி விரைவில் அதை அழகாக மாற்றும் பணியை தொடங்கப்போகிறார். திரு. கைலாசம் தன் மகன் பெயரில் வீடு கட்டியிருக்கிறார். திரு. எஸ்.ஜி.என். ஸ்வாமி, திரு. கே.எஸ்.கே. ஸ்வாமி, திரு. எஸ்.பி.எம் ஸ்வாமி, திரு. எஸ்.எஸ்.என் ஸ்வாமி போன்றோர்கள் வீட்டை அடிக்கடி புதுப்பித்துக் கொண்டு இருக்கிறார்கள். திருமதி பவானித்தாய் வீடு மாடியும் அழகாக புதுப்பிக்கப்பட்டு விழா நடக்கிறது. திருமதி கீதா தாயும் சொந்த வீடு பெற்றுள்ளார். திரு. ரங்கநாதன் ஸ்வாமி வீடும் விரைவில் புதியதாக அமையும். திரு. ஆரணி ஸ்வாமி வீடு மிக அழகாக புதுப்பிக்கப்படுகிறது. இப்போது எண்ணிப்பார்த்தால் எல்லோரும் இகத்தில் வீடு அமைந்து விட்டது. இனி பரத்தில் மோட்ச வீடுதான் கிடைக்க வேண்டும். அதுவும் நிச்சயம் கிடைக்கும் அதற்காக பாடுபட வேண்டும்.

தவம் செய்பவர்களுக்கு மற்ற அடியார்கள் செய்ய வேண்டிய உதவிகள்

3 நாட்கள், 12 நாட்கள், 24 நாட்கள் மற்றும் 48 நாட்கள் என ஆண்டவர் குறிப்பின்படியும் அருள்சக்தி அன்னையின் வழி நடத்துதல் படியும் அடியார்கள் தவம் மேற்கொள்கிறார்கள். அவ்வாறு தவம் மேற்கொள்ளும் காலங்களில் அவர்களால் பேசமுடியாது. யாரையும் அவசியமில்லாமல் பார்க்கக் கூடாது. வெளி உலக நிகழ்ச்சிகள் அவர்கள் காதிற்கு எட்டக் கூடாது.

இத்தகைய கட்டுப்பாடுகளுடன் தவம் செய்ய வேண்டியிருப்பதால் மற்ற அடியார்கள் அவர்கள் நிம்மதியாக தவம் செய்ய உதவ வேண்டும். அதாவது விடியற்காலை தவசி நீராடுவதற்கு முன்னால் இரவே குளிப்பதற்கு போதுமான அளவில் நல்ல நீரை சேமித்து வைக்க வேண்டும். நீராடிய பிறகு உடுத்திக் கொள்வதற்கு தேவையான ஆடையை முன்னால் இரவே தோய்த்தது உலர்த்த வேண்டும்.

தவசி குளித்து விட்டு வருவதற்குள் பூஜை அறையை சுத்தம்செய்து கோலமிட்டு விளக்கேற்றியும் ஊதுபத்தி ஏற்றியும் வைக்க வேண்டும். தவசி ஸ்ரீ விநாயகர் மற்றும் ஆண்டவர் சிலைகளை மூன்று முறை வலம் வருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். தீர்த்தம் அருந்த விபூதி மற்றும் துளசியோடு நன்னீரும் கொண்டு வந்து வைக்க வேண்டும். அடுத்து பூஜை அறை மற்றும் தவஅறையில் உள்ள பழைய பூக்களையெல்லாம் அப்புறப்படுத்தி புதிய பூக்களைச் சாற்றவேண்டும். நன்னீரும் பாலும் கொண்டு விநாயகருக்கும் ஆண்டவருக்கும் அபிஷேகம் செய்து அர்ச்சனை செய்ய வேண்டும். தவ அறையில் உள்ள படங்களுக்கும் அர்ச்சனை செய்ய வேண்டும்.

நைவேத்தியங்கள் ஏற்பாடு செய்து உபசாரங்களுடன் தீபாராதனை செய்ய வேண்டும். பூஜையின் முடிவில் ஐந்து கிளை

ஆரத்திமட்டும் தவசியிடம் கொடுத்து ஆராதனை செய்ய உதவ வேண்டும். தவசி இரண்டாவது முறையாக விநாயகர் மற்றும் ஆண்டவர் சிலைகளை மூன்று முறை சுற்றி வலம் வந்த பிறகு தவ அறையில் அனைவரும் தியானம் செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அருட்சட்டசதக அந்தாதி பாடல்கள் ஐந்து பாடி முடித்து ஓம் டேப் ஒலிக்க வைத்து மின்விளக்குகள் அணைக்கப்பட வேண்டும். தியானம் முறையாக நடைபெற உதவ வேண்டும். அதன்பின் அனைவரும் நமஸ்கரித்து தவசியிடம் பிரசாதம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

புதிதாக வந்துள்ள அன்பர்களும், அடியார்களும் ஏதாவது குறை அல்லது வினையைப் பற்றி கூற விரும்பினால் அதை அவர்கள் தவசியிடம் நயமாக கூறும்படி உதவ வேண்டும். அதற்கு பதிலாக தவசி ஜாடையாகவோ அல்லது பலகையில் எழுதியோ தெரிவித்தால் அதை அந்த அடியார்க்கு புரியும்படி விளக்க வேண்டும். தவசி அவர்களுக்கு பிரசாதம் கொடுக்க விபூதி, குங்குமம், பழங்கள் ஆகியவைகளை தயார் செய்து தவசியிடம் கொடுக்க வேண்டும். தவசி ஆண்டவரிடம் வேண்டி அனைவருக்கும் பிரசாதம் வழங்கிய பிறகு அடியார்களுக்கு தேவையறிந்து உணவளித்து அனுப்ப வேண்டும்.

அதன்பிறகு தவசிக்கு கைவசம் உள்ள பழங்களை தோல் மற்றும் விதை நீக்கி சிறு சிறு துண்டுகளாக்கி வெள்ளி தட்டில் வைத்து அதன் மத்தியில் ஒரு வெள்ளிக் கிண்ணத்தில் நெய்யையும் வைத்து வாழை இலையால் மூடி கொண்டு வந்து தவ அறையில் வைக்க வேண்டும். தவசி உணவருந்திய பிறகு அந்த இடத்தை சுத்தம் செய்து தவசிக்கு வேண்டிய சட்டம் சம்பந்தமான புத்தகங்கள், வெள்ளைப் பேப்பர், பேனா, மற்றும் அட்டை ஆகியவற்றை தரவேண்டும். தவஅறையில் எந்நேரமும் விளக்கு எரிய நல்லெண்ணை வைக்க வேண்டும். இதேபோல் மாலையிலும் அடியார்கள் தவசிக்கு உதவ வேண்டும்.



ஸ்ரீ மாம்பலம் ஸ்வாமிகள்

ஸ்ரீலஸ்ரீ மாம்பலம் தாய்

முக்தியடைய தவம் எந்த அளவுக்கு துணை நிற்கிறது?

"கொள்ளினும் நல்ல குருவை கொள்ளுக!
உள்ள உடல் பொருள் ஆவி உடன் ஈக!"

என்ற திருமூலர் கூற்றுபடி ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகள் என்ற நல்ல குருவினை அடியார்கள் ஏற்று அவர் காட்டிய வழியில தவம் செய்வதால் அடியார்களுக்கு முக்தி கிடைப்பது நிச்சயம்.

இந்த சரீரத்தைக கொண்டு தெய்வ பேரின்பத்தைஅடைகின்ற ஒரே வழி ஞான நோக்கோடு உள்முகமாக ஆன்ம உணர்வினாலே தியானம் லயித்து யோகத்திலேயே அமர்வதுதான் இறைவனுடைய பேரின்பத்தை நாடி அந்த முயற்சியில் ஈடுபட்டால் படிப்படியாக நான் என்னும் நினைப்பு நீங்கி எல்லாம் அவனே என்ற தெளிவு உண்டாகிறது. இந்த உணர்வு வலுவடையும்போது உடம்பு என்ற தசை உணர்ச்சியும் தனிப்பட்ட உயிர் என்ற அகங்களின் உணர்ச்சியும் நினைப்பு மறப்பு என்ற மன உணர்ச்சியும் அனைத்தும் அகன்று தெய்வ ஆனந்த நிலையிலேயே எல்லாம் ஒன்றுபட்டு விடுகின்றன. இதுவே அநுபூதி நிலை என்பதாகும்.

ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மல இருளிலே அலைகின்ற நம்மை அந்த பரஞ்சோதி வலிய வந்து ஆண்டு கொண்டு மும்மலங்களை அறுத்து களைத்து அருளுகிறார். எங்கும் நினைத்து எல்லாமும் ஆகிநிற்கும் பரம்பொருள் நம்முள்ளத்துக்குள்ளே அகப்பட்டுக் கொண்டான் என்ற ஆனந்தம் பொங்கி பெருகுகின்றது. இத்தகைய ஆனந்தத்தினால், வினைப்பயனால் எடுத்த இந்த ஜென்மாவில் இந்த உடலைக் கொண்டு வினைகளை கரைக்க முடிகிறது.

பிறப்பிலேயே கலந்து உயிரை ஆட்டி வருகின்ற கர்ம பலனை நமது பெரியோர்கள் சஞ்சிதம் பிராருத்துவம் ஆகாமியம் என்று மூன்றாக பிரித்து சொல்வார்கள்.

சஞ்சிதம் என்பது முப்பிறவிகளில் செய்த வினைகளின் பயன்கள் சேர்ந்து தங்கியுள்ள குவியல்கள். பிராரத்துவம் என்பது சஞ்சித குவியலிலிருந்து இப்பிறவியில் அநுபவிப்பதற்கு என்று முனைத்து நிற்கும் வினைப்பகுதி. ஆகாமியம் என்பது நிகழ்காலத்திலேயே செய்கின்ற வினை அதாவது பிராரத்துவ வினையை நுகரும்போது நமக்கு ஏற்படுகிற விருப்பு வெறுப்புகளால் புதிதாக நாம் செய்கின்ற நிகழ் வினை.

இந்த மூன்று விதமான வினைகளின் விளைவுகளிலிருந்தும் ஜீவன் முக்தர்களாக நாம் செய்யும் தவம் வழிவகுக்குகிறது. எனவே பிராரத்துவத்தை இந்த உடலைக் கொண்டு அநுபவித்து கரைக்க முடிகிறது. அவ்வாறு அநுபவிக்கும்போது துன்பம் மிகுதியாக இருந்தால் ஆண்டவரிடம் முறையிட்டு அந்த துன்பத்தின் அளவைக் குறைத்துக் கொள்ளலாம். மிகவும் துன்பமாக இருக்கும்போது அதைப்பற்றி நாம் மனதில் நினைக்கும்போது அதை ஆண்டவர் ஏற்றுக் கொண்டு நம்மை துன்பத்திலிருந்து விடுவிக்கிறார். எனவே நாம் நம் உடலை பேணிக்காத்து வருகிறோம். இந்த உடல் இல்லையானால் வினைகளை அநுபவிக்க முடியாது இதைத்தான் திருமூலர்

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன்
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே!

நாம் அநுபவிப்பதற்காக கொண்டு வந்துள்ள பிராரத்துவம் என்ற வினைப்பகுதி நீங்கலாக எஞ்சியுள்ள வினைகளாகிய சஞ்சிதத்தை தாம் தவம் செய்யும் வாயிலாக ஆண்டவருடைய கருணையினால் அதை எரிக்க வேண்டும். இதைத்தான் ஆண்டவர்

“சஞ்சித கட்டையெல்லாம் தணலாக எரித்துனது, குஞ்சித பாதத்தைக் கொடுப்பாய் பராபரமே” என்று ஆண்டவர் விநாயகரை வேண்டி பாடியது இங்கே நினைவு கூறப்படுகிறது. தவக்கனலில் பவக்கடலையே கொன்றிடச் செய்ய முடியும். அத்தகைய தவத்தை ஆண்டவர் நமக்கு கொடுத்திருப்பதால் பயம் நமக்கு ஏது?

இப்பிறவியில் செய்த நல்வினை தீவினைகளாகிய ஆகாமியங்கள் நம்மை போற்றியும் புகழ்ந்தும் வாழ்பவர்களிடத்தும் தூஷிப்பவர்களிடத்திலுமாக முறையே புண்ணிய பாவங்கள் சென்றடைகின்றன. ஆண்டவருடைய கருணையினால் எஞ்சியவை இல்லாமல் ஆகிறது. எனவே கர்மாக்கள் அனைத்தும் நாம் செய்த தவத்தினால் தீர்ந்துவிடுவதால் ஜீவன் முக்தர்களாக ஆகிவருகிறோம்.

ஜீவன் முக்தர் என்ற நிலை எய்திய பிறகு நாம் மற்றவர்களைப் போல வாழமாட்டோம். பிறர் கண்களுக்கு வழக்கமாக சாப்பிடுவது போலவும், பேசுவது போலவும் இதர செயல்களை செய்வது போல தோன்றினாலும் நமது எண்ணங்களிலும், செயல்களிலும் மிகுந்த வேறுபாடு இருக்கும். இறைசிந்தனையோடு இறைவனோடு உறவாடிக் கொண்டிருந்தும் கருணைப்பார்வையோடும் நாம்

நடமாடுவது நமக்கு மட்டுமே தெரியும். யாரிடத்திலும் எப்பொருளின் மீதும் பற்று இருக்காது. பிறர் புகழ்ச்சியில் மயங்க மாட்டோம். பிறரால் துன்பம் நேர்ந்தால் கலங்கமாட்டோம், அரசர்களுக்கு அடிபணிய மாட்டோம்.

இத்தகைய நிலையடைந்த பிறகு நாம் முக்தியடைவது உறுதிதானே! இதைத்தான் சாலோக சாமீபம் கடந்த சாரூபம் சாய்ச்சியும் என்ற நான்கு நிலைகளில் நான்காவது நிலையாகிய சாயுஜ்ஜிய நிலையையடைவது உறுதி. சாலோகம் என்பது ஆண்டவருடைய கொள்கைகளைப் பின்பற்றி நடப்பது. சாமீபம் என்பது அவருடன் நெருங்குவது. அடிக்கடி அவரை நினைத்து வழிபடுவது ஆகும். இதற்கு அடுத்துதான் தவசியாக அவருடைய ரூபமாக நாம் ஆகும் சாருப நிலையாகும். இறுதியாக சாயுஜ்ஜியம் என்பது தவத்தின் பலனாய் ஆண்டவருடன் இரண்டறக் கலப்பது ஆகும். அடியார்கள் தவமாற்றுகின்ற போது ஆகாரம் அதிக அளவு இல்லாதபோது பசித்தே இருப்பார்கள். பிறருடைய பார்வையும், தொடர்பும் இல்லாது தனித்தே இருப்பார்கள். ஒருநாளில் பெரும்பாலான நேரங்களில் விழித்தே இருப்பார்கள். இதை ஆண்டவர் பசித்திரு, விழித்திரு, தனித்திரு என்று அடிக்கடி சொல்வார்கள். இதனுடைய முதன்மையான நோக்கம் மற்றும் உள் பொருள் என்றால் இவ்வவாறு இருந்தால் இந்த மூன்று சொற்களின் முதல் எழுத்துகளாகிய ப, த, வி ஆகிய மூன்றும் சேர்த்து முக்தியாகிய பதவி கிடைக்கும் என்பதாகும். எனவே அனைவரும் அருள்சட்டமேற்று தவம் மேற்கொண்டு முக்தியடைய பாடுபடுவீர்களாக.

தவத்தின் பல படிகள்

தியானம் மற்றும் நிஷ்டை ஆகியவைகளைக் கடைப்பிடித்த பின்னர் தவம் மேற்கொள்கிறோம். அந்த தவத்தின் தொடக்கம் முதல் முடிவு வரை 7 படிகள் உள்ளன. அவையாவன

1) உலகப்பற்று அறுதல்.

மண்ணாசை, பெண்ணாசை, பொண்ணாசை,ஐந்து இந்திரியங்கள் மூலம் உண்டாகும் தவறான ஆசைகள் மற்றும் ஈஷணாத்ரயம் (மூவேடனை) என்னும் செல்வம் மனைவி – புத்திரன் இவர்கள் மேல் இருக்கும் பற்று , புகழ் பெறுவதன் மேல் ஆசை, இவையெல்லாம் இல்லாமல் இருத்தல், இந்த நிலை தவத்தின் தொடக்கத்திற்கு அடிப்படையான இன்றியமையாததான மனோ நிலை ஆகும். இது உயர்ந்த தவ நிலைக்காக கூறப்பட்ட தகுதி நிலை. இதைத் தான் ஈடனை மூன்றும் என்பார் போற்றி என்ற மந்திரம் கூறுகிறது. பிறவி அறவே வேண்டும் என்று தவம் மேற்கொள்பவர்கு இந்த தகுதி முக்கியம்.

2) தேவர்களின் தரிசனம் :

மேற்சொன்ன தகுதியுடன் தவம் செய்பவர்களுக்கு யோகிகள், ஞானிகள், ரிஷிகள், சித்தர்கள், மற்றும் தெய்வங்கள், பலரின் தரிசனம் கிடைக்கும். ஊனக்கண்ணுக்கு புலப்படாத தெய்வ சக்திகள் இவர்கள் கண்ணுக்கு புலப்படும்.

3) குண்டலினி மேலே ஏறுதல் :

குண்டலினி (அல்லது பாம்பு போன்ற வளைந்த சக்தி அல்லது விசித்திரமான அக்னி) சரீரத்தின் மத்தியாகியமூலாதார சக்கரத்தில் அசைவின்றி (தூங்குவது போல) கிடைக்கும் மூலசக்தி. அது பாம்பு போல் வளைந்திருப்பதால் குண்டலினி (வளைந்து) எனப்படுகிறது. அது உயிருள்ள பொருள்கள் எல்லாவற்றின் நெருப்புப் போன்றதும் மின்சாரம் போன்றதுமான சக்தி படைத்தது.

இந்த குண்டிலினி சக்தி, தவக்கனலின் காரணமாக அடிப்பட்டபாம்பு சீறுவது போல் மூலதாரத்திலிருந்து சீறி எழுகிறது.மூலாதாரம் என்பது குய்யத்திற்கும் குதத்திற்கும் நடுவே உள்ள பகுதியாகும். அவ்வாறு சீறி எழும் இந்தக் குண்டலிநீ சக்தி முதுகுத்தண்டு வழியாக மேலே செல்லுகிறது. செல்லும் வழியில் சுவாதிஷ்டானம் (லிங்கபீடம்), மணிப்பூரகம் (வயிறு), அநாகதம் (இதயம்), விசுத்தி(கழுத்து), ஆக்ஞை(இருபுருவங்களிடையே), இவற்றைக் கடந்து ஸஹஸ்ராரத்தை அடையும். இந்த குண்டலிநீ யோக சக்தி பற்றிய செய்திகளை லலிதா சஹஸ்ர நாமம்,சௌந்தர்ய லஹரி ஆகியவற்றின் உரை நூல்களில் விளக்கமாகக் காணலாம்.

4) குரு தரிசனம் உள்ளே காணுதல் :

குண்டலிநீ இறுதியாய் அடையும் ஸஹஸ்ராரச்சக்கரமாம் ஆயிரம் இதழ்த் தாமரையிலே குருவின் தரிசனம் கிடைக்கும்.ஆகவே குருகமலம் என்றுஇதைச்சொல்வார்கள்.

5)அமுதம் உண்ணுதல் :

மேற்சொன்ன ஸஹஸ்ரார கமலத்தின் நடுவிலிருக்கும் சந்திர மண்டலத்திலிருந்து வெளியாகும் அமிர்தம்.அதனைத் தவம் செய்பவன் உண்டு களிக்கிறான்.

6)ஸஹஸ்ரார கமலத்தில் அருளுணர்வுடன் அமருதல்:

தலையின் உச்சியிலுள்ள ஸஹஸ்ராரகமலத்தில் உள்ள பரமாத்மா சக்தியோடு இந்த ஜீவாத்மா சக்தி கலந்து ஒன்றாகிறது.

7) துதிய வெளியில் உலகைக்கடந்து நிற்றல் :

ஊண் உடம்பு முழுவதையும் கடந்து ஆகாயவெளியில் ஒன்றாய் இணைந்த பரமாத்ம ஜீவாத்ம சக்திகள் உலகம் எங்கும் பரந்து நிற்கும். இது பேரின்ப அனுபவம் ஆகும்.

தவம் செய்வதற்கு அடியார்கள் உலகம் தற்போது செய்து வைத்துள்ள அனுகூலங்கள் யாவை?

பொதுவாக அடியார்கள் அருள் சக்தி அன்னையார் காலத்திலிருந்து அவரவரது இல்லங்களிலேயே தவம் செய்து வந்துள்ளார்கள். இன்றும் பலர் அவ்வாறு செய்து வருகின்றார்கள். தவசிகளின் எண்ணிக்கை நாளுக்குநாள் பெருகி தற்போது 40 அடியார்கள் தவமாற்றி வருகின்றனர். இவர்களில் பலர் இரெட்டியப்பட்டியில் உள்ள ஆண்டவர் ஆலயத்திற்கோ, அல்லது பிள்ளையார் குப்பத்தில் உள்ள அருள் சக்தி அன்னை ஆசிரமத்திற்கோ சென்று தமது தவத்தை பூர்த்தி செய்யவே விரும்புகிறார்கள். தாம் தவம் செய்கின்ற இடத்திலிருந்து பிள்ளையார் குப்பம் மற்றும் இரெட்டியப்பட்டி ஆகிய ஊருக்கு அருகில் இருப்பவர்கள் அங்கே சென்று தவத்தை பூர்த்தி செய்கின்றார்கள்.

அவ்வாறு செய்ய இயலாதவர்கள் இரெட்டியப்பட்டியில் தங்கி தவம் செய்வதற்கு குருபாத நிலையத்தில் பல அறைகள் கட்டப்பட்டுள்ளன. தியான மண்டபம் மற்றும் குளியல் அறைகள் வசதியாக கட்டப்பட்டுள்ளன. அங்கிருந்தபடியே ஸ்ரீஆண்டவர் ஆலயகோபுரத்தை தினமும் தரிசிக்க வாய்ப்புள்ளது. இங்கே தங்கி 3நாட்களோ 12நாட்களோ தவம் செய்து முடிவடையும் நாளில் ஆண்டவர் ஆலயத்திற்கு சென்று அபிஷேக பால் அருந்தி அருட்பாடல் பாடி பூர்த்தி செய்கின்றனர்.

மேலும் பிள்ளையார் குப்பத்தில் ஸ்ரீ அன்னை ஆலயத்திற்கு அருகிலேயே வினைதீர்க்கும் விடுதி என்று ஒன்று கட்டப்பட்டு அதில் பல தவ அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த அறைகளில் பலபேர் தங்கி தவம் செய்து ஸ்ரீ அன்னை ஆலயத்திற்கு சென்று அபிஷேக பால் அருந்தி பூர்த்தி செய்கின்றனர்.

மேற்சொன்ன இரண்டு இடங்களிலும் நிம்மதியாக தவம் செய்ய தேவையான அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொறு தவசியும் தத்தமக்கு ஒரு நபரை உடன் அழைத்துசென்றால் உதவிகரமாக இருக்கும். இரெட்டியப்பட்டியில் தவசிகளுக்கு வேண்டிய பூமாலைகளையும் பூக்களையும் தவமிருக்கும் இடத்திற்கே கொண்டு வந்து கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அது போல பால், பழங்கள்,மற்றும் இளநீர் யாவையும் தவசிகள் தவமிருக்கும் இடத்திற்கே வழங்கப்படுகிறது.

இது போல பிள்ளையார் குப்பத்திலும் அனைத்து ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது. சுத்தமான அவ்வப்பொழுது புதிதாக கறந்த பசும் பால் தவசிகளுக்கு கிடைக்க வழியுண்டு.இரெட்டியப்பட்டியில் தவம் செய்பவர்களுக்கு ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால் ஆண்டவர் ஆலயத்திற்கு சென்று ஆண்டவரிடம் முறையிட்டு விபூதி,மற்றும் பன்னீர் பிரசாதம் பெற்று வந்து தவசிகளிடம் சேர்ப்பிக்க ஏற்பாடு உள்ளது.இது போல் பிள்ளையார்குப்பத்திலும் உள்ளது.

தவசிகள் தவம் பூர்த்தியாகும் நாளில் ஸ்ரீ ஆண்டவர் குரு பூஜை விழா ,ஆண்டவர் ஜெயந்திவிழா, வசந்த விழா, ஆகியவைகளிலேயே கலந்துகொள்வதற்கும் வாய்ப்பாக உள்ளது. இது போல அருள் சக்தி அன்னையாருக்கு குரு பூஜை விழா,நவராத்திரி விழா ஆகியவைகளிலும் பிள்ளையார் குப்பத்தில் தவம் செய்யும் அடியார்கள் பங்கு பெற முடிகிறது. மூன்று நாள் தவம் செய்பவர்களுக்கு அங்கே முன்னமே 12நாள் தவம் இருப்பவர்கள் தவம் ஆரம்பித்து வைப்பார்கள். அடுத்து பல பல தவசிகள் ஒரே இடத்தில் ஏக காலத்தில் தவமிருப்பதால் தவம் பற்றிய அச்சம் இல்லாமல் இருக்கும். ஆகாரத்திலும் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளலாம். பூஜை செய்வதிலும் ஒருவருக்கொருவர் உதவி செய்யலாம்.

ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகள் அருள்குறிப்பின்படியும் ஸ்ரீலஸ்ரீ அருள்சக்தி அன்னையின் அருளாசியினாலும் வருடா வருடம் தவம் மேற்கொள்ளும் ஆண் தவசிகள்

தவத்திரு. கிருஷ்ணமூர்த்தி ஸ்வாமிகள்

தவத்திரு. மணி ஸ்வாமிகள்

தவத்திரு. எஸ்.பி.மூர்த்தி ஸ்வாமிகள்

தவத்திரு. குருநாதன் ஸ்வாமிகள்

தவத்திரு. ரங்கநாதன் ஸ்வாமிகள்

தவத்திரு. குருமணி ஸ்வாமிகள்

தவத்திரு. சிவக்குமார் ஸ்வாமிகள்

தவத்திரு. கைலாசம் ஸ்வாமிகள்

தவத்திரு. ஐயப்பன் ஸ்வாமிகள்

தவத்திரு. வெங்கடேசன் ஸ்வாமிகள்

தவத்திரு. ஐஜடி குப்புசாமி ஸ்வாமிகள்

தவத்திரு. சுகுமார் ஸ்வாமிகள்

தவத்திரு. சிவானந்தம் ஸ்வாமிகள்

தவத்திரு. விநாயகம் பிள்ளை ஸ்வாமிகள்

தவத்திரு. நடேசன் ஸ்வாமிகள்

தவத்திரு. அருண் ஸ்வாமிகள்

தவத்திரு. குஞ்சிதபாதம் ஸ்வாமிகள்

ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகள் அருள்குறிப்பின்படியும் ஸ்ரீலஸ்ரீ அருள்சக்தி அன்னையின் அருளாசியினாலும் வருடா வருடம் தவம் மேற்கொள்ளும் பெண் தவசிகள்

தவத்திருமாட்டி பவானி தாய்

தவத்திருமாட்டி இந்திரா தாய்

தவத்திருமாட்டி மாலா தாய்

தவத்திருமாட்டி பானு தாய்

தவத்திருமாட்டி சாரதா தாய்

தவத்திருமாட்டி கோமதி தாய்

தவத்திருமாட்டி பிரேமா தாய்

தவத்திருமாட்டி கீதா தாய்

தவத்திருமாட்டி குருலட்சுமி தாய்

தவத்திருமாட்டி ராஜி தாய்

தவத்திருமாட்டி சாந்தி தாய்

தவத்திருமாட்டி பானுமதி தாய்

தவத்திருமாட்டி வனமாலி தாய்

தவத்திருமாட்டி வேதவல்லி தாய்

தவத்திருமாட்டி பாரதி தாய்

தவத்திருமாட்டி சித்திரா தாய்

தவத்திருமாட்டி அனுராதா தாய்

தவத்திருமாட்டி ராஜம் தாய்

தவத்திருமாட்டி உஷா தாய்

தவம் செய்யாதாரின் நிலை

ஸ்ரீ ஆண்டவரின் அடியார்களில் தவம் வேண்டி ஆண்டவரிடம் முறையிடாதவர்கள் மற்றும் முறையிட்டு அதற்கான உத்திரவு கிடைக்காதவர்கள் கவலைப்பட வேண்டாம். அவர்கள் ஆண்டவரிடம் பிரார்த்தனை செய்தால் சில பணிகளை அவர்களுக்கு கொடுத்து செய்யச் சொல்வார் ஆண்டவர். அதை திறம்பட செய்தவர்களை ஆண்டவர் கணக்கெடுத்து அவரவர்கள் செய்த பணியின் தன்மைக்கும் அளவுக்கும் ஏற்ப ஆண்டவர் நன்மை பயப்பார்கள். இதைத்தான் “பணியளித்து இன்பம் பயப்போய் போற்றி” என அர்ச்சனை மந்திரமாக வழங்கியுள்ளார்கள்.

அவரவர்களுடைய உடல்தகுதி, கல்விதகுதி மற்றும் திறமைக்கு தகுந்த பணிகளை ஆண்டவர் கொடுக்கிறார். அதை அவரவர்கள் திறம்பட செய்து ஆண்டவர் அருளுக்கு பாத்திரராகுவார்களாக. மேலும் தவம் செய்யாதவர்கள் தினசரி பூஜை செய்தல், அருட்பாடல் பாடுதல், தியானம் செய்தல், கேந்திர விழாக்களில் பங்கு பெறுதல், அடியார்களுக்கு தொண்டு செய்தல், அன்றாடம் விடியல் நீராடுதல், மருந்து அருந்தாது இருத்தல், பிரச்சனை அல்லது நோய் உண்டாகும் காலங்களில் ஆண்டவரிடம் முறையிட்டு அவைகளை தீர்த்துக் கொள்ளுதல் ஆகிய செயல்களால் இவர்கள் ஆண்டவரின் அருளுக்கு

பாத்திரராகிறார்கள். தவம் செய்யாதவர்கள் இப்பிறவியில் முக்தியடைய தவறினாலும் தொடர்ந்து அருட்சட்டத்தில் இருந்தால் அடுத்தபிறவியிலாவது முக்தி நிச்சயம். ஒரு பசு தனது கன்று வந்து மடியில் முட்டி ஊட்டும்போது பாசத்தினால் நக்கிக் கொடுத்து பால் சொரிகிறது, இது இயற்கை. அதே பசு தன் கன்று இறந்து விட்டால் அக்கன்றின் உடல் தோலின் வைக்கோலை உள்ளே வைத்து தைத்து போலிக்கன்றாக்கி அருகில் கொண்டு செல்லும்போதும் ஒருவாறு நக்கிக் கொடுத்து பால் சொரிகிறது அல்லவா? அதுபோல்தான் எல்லா அடியார்களையும் ஆண்டவர் காப்பாற்றுவார்.

தவசிகள் வாழ்க்கையில் ஏற்பட்ட அருளனுபவங்கள்

ஸ்ரீலஸ்ரீ அருள்சக்தி அன்னையின் அனுபவங்கள்

ஸ்ரீலஸ்ரீ அருள்சக்தி அன்னையவர்கள் காந்தநாடாவில் உறையாற்றி உள்ளதின் சாராம்சம் என்னவெனில் உலகில் மக்கள் முக்தி அடைய நான்கு வழிகள் கூறப்பட்டுள்ளன. அவை கர்மம், பக்தி, யோகம், ஞானம். இந்த மார்க்கங்கள் அல்லாது நம் ஆண்டவர் குறிப்பிட்டுள்ள வழி அடியார்களுக்கு தொண்டு செய்வதால் முக்தி கிடைக்கும் என்றார். அதற்கு நாயன்மார்களும், ஆழ்வார்களும் உதாரணம் என்பர். இரண்டாவதாக ஸ்ரீ தாய் அவர்கள் தமக்கு கிடைத்த தவம் வாசியோகம் எனும்வழி. அது நெருப்பில்இட்டு புடமாகுவது போன்றது என்றும் அவ்வழி அடியார்களால் பின்பற்றுவது கடினம் என்றும். மாற்றுவழி ஒன்று அருளவேண்டும் என்றும், சதாசர்வகாலமும் ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகளிடம் முறையிட்டு வந்ததாக கூறப்பட்டுள்ளது. இதுவே அடியார்கட்கு தொண்டு செய்யும் நோக்கத்தின் மிக உன்னதமான லட்சியம் இதை ஆண்டவரிடம் கேட்டு பதில் பெறவில்லையே என பலமுறை கூறியுள்ளார். ஆனால் ஆண்டவருக்கா தெரியாது? எண்ணுவார் எண்ணமெல்லாம் ஈடேறச் செய்திடுவார் எங்கள் குருநாதர் என்று ஓர் அடியார் பாடியது போல் ஸ்ரீ அன்னையின் எண்ணத்தை பூர்த்தி செய்யும் வகையில்தான் இன்று நடந்துவருகிறது.

ஸ்ரீ தாய் அர்ச்சனை மந்திரத்தில் 7 இடங்களில் வருவது போல் தவம் செயத்தூண்டு அருள்பவர் தவநெறியினை நனி சாற்றுபவர், தவவொளியெங்கும் பரப்புவர், திருவடி தரிசனம்

தருபவர், திருவருட்பள்ளியின் சட்டாம் பிள்ளையாய் திகழ்பவர் என்பவெல்லாம் அருள்சக்தி அன்னையே என்றால் மிகையாகாது. அப்படியொரு எளிய முறையில் சிரமமின்றி, இல்லத்தில் அன்றாட நிஷ்டை இருந்து வருவதை உயர்வு படுத்தி மூன்று நாட்கள் மௌனத்தவம் ஆக்கி அருள்பவர் அன்னை.

ஓர்முறை தவத்திரு. சாதுராம் சுவாமிகள் இயற்றிய 7 பாடல்களின் பொழிப்புரை புத்தகத்தில் அண்டபகிரண்டம் எனத்தொடங்கும் அருட்பாடலின் பதவுரைகளை நன்கு படித்து ஆராயச் சொன்னார். அடுத்து ஒருமுறை மூன்று தவசிகள் முறையே திரு. குருநாதன் ஸ்வாமி, திரு. ரங்கநாதன் ஸ்வாமி மற்றும் அடியேன் குழுவாக அமைத்து ஸ்ரீலஸ்ரீ தாயின் உருவசிலைக்கு சிறப்பான அலங்காரம் செய்து வழிபடச் சொன்னார். இதெல்லாம் எதற்கு என்பது காலப்போக்கில்தான் புரிகிறது. தவத்திரு. அருள்பிரகாசதாசன் ஆலயநிர்மானப் பணிகள், ஆலய, ஆஸ்ரம நிர்வாகப் பணிகள், ஆண்டவர் குறிப்பினை ஏற்று கோடிஅர்ச்சனை, லட்சார்ச்சனை, சகஸ்ரநாம அர்ச்சனை, வழிபாட்டு கேந்திரம், ஆன்மீக சுற்றுலாவிற்கான பணிகள், போன்ற மாபெரும் பணிகளை ஏற்று நடத்துவதாலும், வயதும், உடல் வலிமையின்மையின் காரணங்களாலும் பணியை (Delegate) பிரித்துத்தர எண்ணி எனக்கு எழுத்துப்பணி, தவத்திரு. என்.ஆர்.என்க்கு குறிப்பின்படி செயலாக்கம் பணி, எல்லாவற்றையும் அடியார்கட்கும், அன்பர்கட்கும் எடுத்துறைக்கும் சொற்பணி என தந்தருளியது விளங்கியது.

தவம் செய்பவர்களுக்குதான் எத்தனை தேவைகள், அமைதிகாக்க, அன்றாட கடன்கள் கழிக்க, அவருடன் வரும் பணியாளருக்கு தங்க, உணவருந்த, உறங்கும் வசதிகள், தவம்

இருப்பவர்களுக்கு தேவையான பழம், புஷ்பம், பூசைப் பொருட்கள் மற்றும் பூசை புரிபவர் ஏற்பாடு செய்தல், தவம் பூர்த்தி நாளில் ஆற்ற வேண்டிய பணிகள் பல யாவற்றையும் கண்காணித்தல் மற்றும் அவர்களது Next of Kin கேட்கும் விவரங்களுக்கு தொலைபேசியிலோ, தபாலிலோ பதில்கள் அளித்தல் போன்றவை எனது தலையாய பணியாகிறது. இவைகள் எல்லாவற்றிற்கும் மற்றும் நான் ஆற்றும் தவத்திற்குமாக சேர்த்துதான் மதிப்பெண்கள் நடத்தும் விழா சிறப்பாக அமைவதன் மூலமாகவோ, தவநாட்களை கூட்டியோ, மற்றும் பல வசதிவாய்ப்புகள் அளித்தோ, ஆனந்தம் மேலும் நல்லதொரு மன அமைதியின் மூலம் வெளிப்படுத்துகிறார் என்பது நிதர்சனமான உண்மை.

தவம் செய்வார் எல்லாம் தம் கர்மம் செய்வார் செல்வர் மற்றல்லார் அவம் செய்வர் ஆசையுட்பட்டு என்ற வள்ளுவர் வாக்கு எவ்வளவு உண்மை என்பதை உணரமுடியும். இவைகள் கிடைப்பதற்கு அருட்சக்தி சட்டசதக அந்தாதி பாடல் 100-ல் கூறியுள்ளதுபோல் பக்தி வேண்டும் என்பதாகும்.

-ஸ்ரீலஸ்ரீ அருள்சக்தி அன்னை

ஸ்ரீ மாம்பலம் சுவாமிகளின் அனுபவங்கள்

என் அனுபவத்தை சொல்கிறேன். பயன் உள்ளதை எடுத்துக் கொள்ளுங்கள

ஆண்டவர் சொன்னார்...........
"பொல்லார் இருப்பிடத்திற் போகாதே மனமே
பொல்லாங்கு நேர்ந்துவிடுங் கண்டாய்
நல்லார் இருப்பிடத்தை நாடி நாடி
நலத்தைத் தேடிக் கொள்வாய் மனமே"

என்று..... அதன்படி அடியேன் சிறு வயதில் கும்பகோணத்தில் இருந்தபோது மளிகைக் கடைக்காரர் கும்பலிங்க செட்டியார் என்பவர் ஈ.வே.ரா. பெரியார் எழுதும் "குடியரசு" என்ற பத்திரிக்கையை படித்து என்னிடம் வந்து நாஸ்திகவாதம் பேசுவார். அதை மறுக்கும் சக்தி இல்லாததால் அதை அப்படியே ஏற்றுக் கொண்டு நானும் அதை பேசலாயினேன். திருவண்ணாமலைக்கு அடுத்த ஒரு சிறு சிற்றூர் பாலூர் என்ற கிராமத்தில் எங்கள் குடும்பம் இருந்தது. அங்குதான் நான் சிறுவயதில் கல்வி கற்றேன். அவர் நல்ல படிப்பும் பண்பும் உள்ளவர். அவர் ஒரு பிராம்மண பிரம்மச்சாரி. அவரிடம் நான் கற்ற கல்வியை அப்படியே பேசினேன். அதைக் கேட்டு அவர் சிரித்து விட்டு, "இதை எங்கே கற்றாய்? இனி அம்மாதிரி பேசாதே" என்றார். "நான் கேட்கிற கேள்விகளுக்கெல்லாம் பதிலளித்தால் இனி அப்படி பேசுவதில்லை" என்றேன். அதே மாதிரி எல்லாவற்றிற்கும் பதில் சொல்லி, "இனி நல்லாருடன் நட்பு கொள். அது கிடைக்காத நேரங்களில் நல்லார் எழுதிய நூல்களைப் படி" என்று ஒரு திருக்குறள் புத்தகத்தை தந்தார். அதில்

"தொட்டனைத்தும் ஊறும் மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத்து ஊறும் அறிவு"

என்றபடி நல்லறிவு பெரிதும் உண்டாயிற்று. ஒரு பெரியார் சொன்னார், சாதாரணமாக ஒரு மாஞ்செடிக்கு மல்கோவா, பீத்தர் போன்ற மரக்கிளைகளைக் கொண்டு வந்து ஒட்டு கட்டினால் அது பிறவியின் பயனைக் கொடாமல், எந்த கிளையில் சேர்க்கப்பட்டதோ அந்த கிளையின் பயனைக் கொடுக்கிறது. அதுபோல் நல்லார் நட்பு உயர்ந்த நிலைக்கு கொண்டு போய்விடும். பிற்காலத்தில் கும்பகோணத்திலேயே திருவண்ணாமலையில் இருக்கும் ரமண மஹரிஷிகளைப் பற்றிய சரித்திரத்தைப் படித்து, அவரை குருவாக

வைத்து வணங்கி வந்து, பல மஹான்களுடைய சரித்திரத்தைப் படித்து கொஞ்ச நாளில் திருவண்ணாமலைக்கே வியாபாரத்தையும், குடும்பத்தையும் மாற்றி வந்து, தினம் தவறாமல் ரமணாஸ்ரமம் போகும் பழக்கம் ஏற்பட்டது. அவருடைய தத்துவம், நான் என்னும் அகந்தை ஒருவனுக்கு முற்றிலும் அற்றால் ஆத்ம தரிசனம் கிடைக்கும். ஆத்மதரிசனமே கடவுள் தரிசனம். அதுவே முக்திநிலை என்பது. சுருக்கமாக சொல்கிறேன். சிரத்தை உள்ளவனுக்கு 4 மைல் நடக்க வேண்டுமென்றால் 2 மைல் போவது போல இருக்குமாம். அதாவது எல்லாவற்றையும் சுலபமாக, அடைய முடியாத பிரம்ம பிரயத்னம் என்று சொல்லக் கூடியதும், சுலபமாக கைகூடும் என்பது முயற்சி இருந்தால் மோட்சமும் கிடைக்கும்.

சேந்தமங்கலம் ஸ்வாமிகள் சொன்னார், "ஒரு பட்சிக்கு பறந்து மேலே போக எப்படி இரண்டு இறக்கையும் ஓயாமல் அடிக்கிறதோ, அதே போல் ஒரு மனிதனுக்கு முயற்சியும், வைராக்கியமும் இந்த இரு இறக்கையும் நிற்காமல் வேலை செய்தால்தான் மனிதன் மேல்நிலைக்கு போக முடியும்" என்று. மற்றொன்று மஹரிஷியிடம் தெரிந்து கொண்டது "பிறருக்கு ஒருவன் கொடுத்ததெல்லாம் தனக்கே கொடுத்துக் கொள்கிறான்". "இருப்பது பிறருக்கு கொடுத்தது நமக்கு" என்பது இந்த உண்மையை அறிந்தால் எவன்தான் கொடாதிருப்பான் என்பார். மற்றொன்று உலகத்தை நீ சீர்திருத்தம் செய்ய நினைக்காதே, உன்னை நீ சீர்திருத்தம் செய்து உயர்ந்த நிலையை அடைய முயற்சி செய். உலகத்தை உடையவன் பார்த்துக் கொள்வான். பிறகு பூர்வ புண்ய வசத்தால் ஸ்ரீலஸ்ரீ அன்னையைப் பற்றியும் ஸ்ரீ ஆண்டவரைப் பற்றியும் அறியும் வாய்ப்பு கிடைத்தது. துன்பம் ஒன்று வரும்போதுதான் இன்பத்தை தேடுவது இயல்பு. அப்படி வாழ்க்கையில் வியாபாரத்தில் ஏற்பட்ட ஒரு சங்கடத்தை நிவர்த்தி

செய்து கொள்ள முதல் குருவாகிய ரமண மஹரிஷிகளை விட்டு ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகள் சட்டத்தை பின்பற்ற நேர்ந்தது. சங்கடமும் காற்றாய் பறந்தது.

ரமண மஹரிஷிகள் வழியானது : முதலாவதாக தேகபிமானத்தையே விட்டு பிறகு எல்லா ஆசாபாசங்களையும் நீக்கி ஆத்ம விசாரம் செய்ய வேண்டும். படிப்படியாக துறவு நிலையை அடைய நேரிடும். ஆனால் நமது ஆண்டவர் வழியோ இதுவரை எந்த மஹானாலும் சொல்லப்படாத ஒரு அற்புதமான எல்லோரும் கையாளக்கூடிய சுலபமான வழி. அதாவது குடும்பம் தொழில் எல்லாவற்றையும் வைத்துக் கொண்டே முடிவான முக்தி நிலையை அடையலாம் என்பது. அதற்கு உதாரணமாக நமது அன்னையையே காணலாம். அவர்கள் ஒரு பெரிய குடும்பத்தில் அதுவும் சுதந்திரமாக வாழ முடியாத புருஷ ஜென்மாவாக இல்லாமல் ஸ்திரி ஜென்மாவாக குடும்பத்தில் உள்ள பெரியோர்களுக்கெல்லாம் அடங்கி எல்லோரும் போற்றக்கூடிய வகையில் குடும்பப் பொறுப்பை கவனித்துக் கொண்டு ஸ்ரீ ஆண்டவர் சட்டத்தை ஏற்று அதே குருநாதரும் இப்படி ஒரு சிஷ்யாள் கிடைக்கவில்லையே என்று எதிர்பார்த்த குறையையும் போக்கி உண்மையான சிஷ்யை எப்படி குருவிற்கு உடல், பொருள், ஆவி மூன்றையும் ஒப்படைக்க வேண்டுமோ அப்படியே கடைபிடித்தார்கள். அதை அறிந்து ஆண்டவரும் பூர்ணமாக அநுக்கிரகம் செய்துவிட்டு சென்றார்கள். இன்றைக்கும் உலகத்தாருக்கு குடும்பப் பற்று நீங்காதவர்கள் போலவே காட்டிக் கொண்டு, வரும் எண்ணிலாத அடியவர்களுக்காகவே அருள்பாலிக்கவே ஒரு இடத்தில் தங்கி அநுக்கிரக்கிக்கிறார்கள்.

தாயைப் பற்றி முதலில் அறிந்த போது இல்லறத்தில் இருக்கும் ஒரு ஸ்திரி ஜென்மாவிற்கு எப்படி ஜீவன் முக்தி நிலைக்கு ஏதுவாகிய நிர்விகல்ப சமாதி வரும். இரண்டரை வருடம் அந்த

நிலையில் இருந்ததாக சொல்கிறார்களே என்று எண்ணியிருந்தேன். பிறகு அடியேன் நேரில் காணும்படி எட்டு மாதம் ஒரு தடவையும், ஆறு மாதம் ஒருதடவையும் நிர்விகல்ப சமாதி காணும் பாக்கியம் கிடைத்தபோது தான் ஆச்சரியமும் பக்தியும் மேலிட்டன. மஹான்கள் எல்லோரும், தான் அடைந்த வழியை நேரில் சிஷ்யனுக்கு சொல்லியும், பாடியும் இருப்பதை புத்தகமாக இயற்றியுள்ளார்கள். அதே போல நமது குருநாதரும் செய்திருக்கிறார். ஆனால் மற்ற மஹான்கள் எல்லோரைக் காட்டிலுமே மேலான ஒன்றைச் செய்திருப்பதுதான் போற்றக் கூடியதாக அமைந்துள்ளது. அதாவது தான் அடைந்ததோடு நில்லாமல் தன் குருவாகிய பரிபூர்ண விநாயகர் அருளையே நாடி இதுவரை வீட்டைத் துறந்துதான் முக்தி நிலை அடையக்கூடும் என்ற வழக்கத்திற்கு மாறாக குடும்பம் தொழில் எல்லாம் இருக்கையில் இடைவிடாது இறைவன் இடத்தில் அசைக்க முடியாத பக்தியும், வைராக்கியமும் இருந்தால் பூர்ண நிலையை அடையலாம் என்ற சட்டத்தை ஏற்படுத்தி நமக்குத் தந்துள்ளார்.

அதுமட்டுமல்ல, மற்ற குருமார்கள் உபதேசம் செய்துவிட்டு அவன் நடப்பதை கவனிக்க மாட்டார்கள். அப்படியல்ல நமது ஆண்டவர், சதா தோன்றாத் துணையாக இகம் பரம் இரண்டிற்கும் வழிகாட்டி ஆனால் அவரவர்கள் செய்த கர்மாவிற்கு ஏற்றபடி பலனை அநுபவித்துக் கொண்டு எவ்வளவு பக்தி வைராக்கியத்தை கடைபிடிக்கின்றார்களோ அதற்கேற்றவாறு பக்குவம் பெறுகிறார்கள். நமது ஆண்டவர் மிகவும் கருணாமூர்த்தி நாம் செய்யும் குற்றங்களை எல்லாம் பார்த்து தண்டிப்பது என்றால் ஒருவர் கூட சட்டத்திற்கு அருகதை உள்ளவர்கள் ஆக மாட்டார்கள். “அன்னையினும் தயவுடையார்” என்று பாடியிருக்கிறார்கள். அன்னைக்குத்தான் தயவும், கருணையும் அதிகம் உண்டு என்பதற்காகவோ என்னவோ நமக்கெல்லாம் அருள்பாலிக்க ஓர்

அன்னையையே தேர்ந்தெடுத்து வைத்துள்ளார்கள். அன்னை என்றால் அன்னையேதான். பார்த்தவர்கள் எவரும் எங்கள் அன்னை, எங்கள் அன்னை, என்னிடம்தான் அதிகம் பிரியம் அன்னைக்கு என்று எல்லோரும் எண்ணும்வண்ணம் குழந்தைகள் அனைவரையும் ஒன்றுபோல் எண்ணி அவர்களுக்கு ஏற்றபடி அறிந்து உபதேசித்து ஆட்கொள்ளும் அருமையும் அன்னை என்ற சொல்லுக்கு உகந்தபடி எந்த எந்த குழந்தைக்கு எந்த எந்த ஆகாரம் ஊட்ட வேண்டும் என்ற பரிவோடும், உணவு ஊட்டுவதும் அறிந்து அனுபவித்தவருக்கே புரியும். அதை எழுத என்னால் சக்தியில்லை. ஒருபகுதியை அதாவது சட்டத்தை பரப்புவது, அதில் உள்ள சந்தேகங்களை நிவர்த்திப்பது, சங்கடங்கள், பிணிகள் ஏதாவது வந்தால் ஸ்ரீஅன்னையிடம் சென்றாலோ, அல்லது கடிதம் எழுதி பிரசாதம் வரவழைத்து உபயோகப்படுத்தினாலோ, அல்லது அன்னையை நினைத்தாலோ பிணிகளும், குறைகளும் பறந்தோடும்படி அநுக்கிரஹம் செய்து வைத்துள்ளார்கள் நம் ஆண்டவர்.

தவிர மற்றொரு பகுதி ஆண்டவரே கவனித்து வருகிறார். அதாவது அடியார்கள் சன்னதிக்கு வந்து நீண்ட காலத்திற்கு இந்த சட்டத்தையும், குருநாதரையும் அறிந்து என்றென்றும் நீடுழி பல மதத்தினரும் பல நாட்டாரும் வந்து அருள்பெற வேண்டும் என்ற கருணையோடும், சிறிய மூலஸ்தானம் என்ற கர்பகிரஹத்தை விரிவுபடுத்த அனுமதி தராமல் அடியார்களுக்காகவே உள்ள மண்டபம் கோபுரம் மட்டும் ஏற்படுத்தி முதலில் அடியார் விடுதி என்று ஒரு பகுதியை ஏற்படுத்தி மறுபடி பாண்டிச்சேரி ஆர்.வி. கோபால் என்பவர் சத்திரம் ஏற்படுத்தி அதற்கும் மேலாக திருவிசைநல்லூர் ஜி. சரவணப்பிள்ளை என்பவரால் பெரிய ஒரு சத்திரம் ஏற்படுத்தி எல்லா சௌகரியங்களையும் தந்து பக்குவப்பட்ட அடியார்களை ஈர்த்து வருகின்றார்கள் நம் ஆண்டவர். மற்றும் ஒரு

விசேஷம் எந்த ஒரு தேவாலயத்திற்கு சென்றாலும் ஒரு உண்டிப் பெட்டி அங்கு இருக்கும் அதைப் பார்த்தவுடன் காசு போடு என்று கேட்பதைப் போல் நினைவு வரும். யாரும் ஒரு பைசாவாவது போடாமல் வர மனம் வராது. தவிர தேங்காய் உடைக்க, அர்ச்சனை செய்ய, அபிஷேகம் செய்ய என்ற கட்டணங்கள் தரவாரியாக கோயிலுக்கு வரும் பக்த கூட்டங்களுக்குத் தகுந்தாற்போல் கட்டணம் ஏற்படுத்தி அடிக்கடி வியாபாரம் போல் கட்டணங்கள் கூட்டிக் கொண்டே இருப்பார்கள். அம்மாதிரி உண்டிப் பெட்டியோ மற்ற கட்டணங்களோ நமது தேவாலயத்தில் கூடாது என்ற நியதியையும் ஏற்படுத்தி பிரார்த்தனை கூட செய்து கொள்ளக் கூடாது என்றும், இஷ்டப்பட்டதை மட்டும் செய்ய அநுக்கிரஹம் செய்துள்ளார் நம் ஆண்டவர். நாளுக்கு நாள் பக்தர்கள் கூட்டம் பெருகி வருவதற்கேற்ப அடியார்களுக்கு உணவு வசதியில்லாத அந்த கிராமத்தில் கஷ்டப்படக் கூடாது என்ற அக்கறையோடு எந்த தேவாலயங்களிலும் இல்லாத ஒரு நியதி கடும் பஞ்சக் காலத்திலும் ஒருவர் கூட உணவு கிடைக்கவில்லையே என்ற நிலை இல்லாமல் விழாக் காலங்களில் வரும் கூட்டங்கள் அத்தனைக்கும் உணவளிக்கும் அருமை உள்ளபடியே "அன்னையினும் தயவுடையார்" என்ற பாடல் நம் ஆண்டவருக்கே பொருந்தும்.

கடைசியாக சட்டத்தைப் பற்றிய ஒரு சிறப்பு அம்சத்தையும் எனக்குத் தெரிந்த அளவில் இங்கு சொல்ல விரும்புகிறேன். விடியல் 4.00 மணிக்கு பச்சைத் தண்ணீரில் ஸ்நானம் செய்வது என்ற மிக உயர்ந்த முக்கியமான உன்னதமான நியதியை முன்னால் குறிப்பிட்டபடி வைராக்கியத்தை கடைப்பிடித்து அனுசரிக்குமாறு அடியார்கள் எல்லோரையும் வணங்கி கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக நிஷ்டை என்ற ஒரு முக்கியமான விஷயம். அதற்கு அவரவர்கள் சக்திக்கு ஏற்றபடி காலத்தைக் கூட்டிக் கொண்டே வந்து எப்போதும் முடிவான நிலை என்ற ஆண்டவர் குறிப்பையும்

உணர்ந்து நடந்து வர வேண்டுகிறேன். மூன்றாவதாக உபவாசம் பற்றியது. எல்லோருக்கும் பொதுவாக உள்ளது வெள்ளிக்கிழமை விரதம். அத்துடன் மற்ற நாட்களிலும் உணவிற்கென்று ஒரு காலம் வைத்து மற்ற நேரங்களில் இரவு பகலென்று பாராமல் கண்ணில் காணும் நேரங்களில்எல்லாம் கிடைத்ததை முடிந்தவரை சாப்பிட்டு கொண்டிருப்பதை விட்டு வைராக்கியம் பூண வேண்டும். பக்குப்பட்டவர்கள் அறிந்து ஆண்டவரால் குறிப்பிட்ட பலதரப்பட்ட உபவாசம் உள்ளவர்களும் அந்த காலக் கட்டம் முடிந்ததும் மனம் போனபடி நடக்காமல் அவர்களும் உணவிற்கென்று காலம் ஏற்படுத்தி கட்டுப்பாட்டுடன், வைராக்கியத்துடன் நடந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

உயர்நிலையை அடைய நமது ஆண்டவரால் குறிப்பிட்ட மேலே சொன்ன மூன்று அம்சங்களும் மிக முக்கியமான பகுதியாகும். இடைவிடாது "முயற்சி" என்ற ஓர் இறகும், "வைராக்கியம்" என்ற ஓர் இறகும் நிற்காமல் வேலை செய்து பட்சிகள் ஆகாயத்தை நோக்கிப் பறப்பது போல் அடியவர்களும் மேல்நிலையை அடைய பாடுபடுமாறு வேண்டிக் கொள்கிறேன்.

–ஸ்ரீ மாம்பலம் ஸ்வாமிகள்

தவத்திரு. அருள்பிரகாசதாசன் ஸ்வாமிகள் அனுபவங்கள்

ஸ்ரீ மாம்பலம் ஸ்வாமிகள் அஷ்டோத்ரசதநாம அர்ச்சனை மந்திரத்தில் வருகின்ற இரண்டு மந்திரங்களைப் பார்த்தால் புரியும்.



"சிந்தனை செய்து வாழ்ந்தனை போற்றி"
என்றும்
"சிந்தனைக்கு விருந்தானோய் போற்றி"
என்றும் வருகின்ற மந்திரங்கள்தான் அவை.

அருள்சட்டத்தில் முக்கியமான பகுதி இது.

தினமும் தவசிகள் நாம் இன்று என்ன அடியார்களுக்காக செய்யலாம் என்பதை ஆண்டவரிடம் முறையிட்டு வரவேண்டும். அப்படி செய்து வந்தாலே உங்கள் கடமை என்ன என்பது புரியம். அதை உடனுக்குடன் செயல்படுத்தினால் நல்ல பயன் இருக்கும். ஒரு காரியம் செய்ய ஆரம்பிக்கும்போதே அது சரி என்றால் அதற்கு ஆண்டவர் வழிவகுப்பார். தவறு என்றால் உடனே ஏதாவது தடைபோட்டு காட்டுவார். இதுதான் ஸ்ரீ மாம்பலம் ஸ்வாமிகள் அடிக்கடி சொல்லும் விளக்கம். வெளியே புறப்படும் போதே மழை வருகிறது, அல்லது யாராவது இடைஞ்சல் செய்கிறார்கள், அல்லது கால் தடுக்கிறது, தலை தட்டுகிறது இப்படி ஏதாவது தடை வந்தால், ஏன் வந்தது என்று சற்று சிந்தித்து பார்க்க வேண்டும். அதே போல் சரியாக நடக்கும் போது அதற்கான Support கிடைப்பதை பார்த்து ஓஹோ இதற்காகத்தான் ஆண்டவர் இதை உணர்த்தியிருக்கிறார் என்பதை புரிந்து கொள்ளலாம். அதுதான் தினமும் சிந்தித்து பார்ப்பது முக்கியம்.

சிந்தனைக்கு விருந்தானார் ஸ்ரீ மாம்பலம் ஸ்வாமிகள் என்று எதற்காக சொல்லப்பட்டது? அவருடன் பேசும்போது பல உதாரணங்கள் கொடுத்து புரிய வைப்பார். அந்த உதாரணங்கள் பொருத்தமாகவும், நன்றாக ஞாபகம் வைத்துக் கொள்ளும்படியும் இருக்கும். உதாரணத்திற்கு சில "கும்பிட்டுக் கொடுக்காதே, கும்பிட்டு வாங்காதே" என்று சொல்லுவார். அதாவது யாரிடமாவது எதாவது வாங்க வேண்டுமானால் மிகப் பெரிய இடத்தில் வாங்காதே. மிகத் தாழ்ந்த இடத்திலும் வாங்காதே என்பார். அதனால் பின்னால் பல கஷ்டங்கள் வரும் என்பார். எண்ணித்துணிக கருமம் என்றால் எதைச் செய்தாலும் ஆராய்ந்து செய், அப்படி முடிவு எடுத்து ஆரம்பித்து விட்டால் எக்காரணம் கொண்டும் பின் வாங்காதே. முடித்தே தீர வேண்டும் என்று தீவிரமாக செயல்பட்டு முடிக்க

வேண்டும் என்பார். அதுதான் அவருக்கு "திருப்பணி திலகம்" பட்டம் கிடைக்க வழி செய்தது. இப்போது திரு. கே.எஸ்.கே. ஸ்வாமிக்கு ஆண்டவர் என்னென்ன வேலை அளித்துள்ளார் என்று பார்ப்போம். அதில் ஏதாவது ஒரு வேலை சரியாக செயல்படாவிட்டால் கூட நீங்கள் சுட்டிக்காட்டலாம். ஏனென்றால் அன்றாட பணியாக இருப்பதால் குறைகள் இருக்கக் கூடாது.

ஒவ்வொரு மனிதனும் சுகமான வாழ்வு வாழ வேண்டும் என்று ஆசைப்படுகிறான். அதற்காக கடுமையாக உழைக்கிறான். எப்போதும் சிந்தனையில் மூழ்கி செயல்படுகிறான்.

அதனால் எண்ணங்கள் தோன்றிக் கொண்டேயிருக்கும். அந்த எண்ணங்கள் மனதிற்கு சந்தோஷத்தையும், கவலையையும், மிகுந்த துக்கத்தையும், மிகுந்த ஆனந்தத்தையும் கொடுக்கிறது. அந்த எண்ணங்கள் எங்கு மனதில் உதிக்கின்றதோ அந்த உதிக்கின்ற எண்ணத்தையே கட்டுப்படுத்துவதுதான் தவம்.

இது கேட்பதற்கு சாதாரணமாக தோன்றினாலும் நடைமுறையில் சாத்தியமாகாது. சூழலுகின்ற ஒரு உருளையைப் போல் எப்போதும் உருண்டு ஓடிக்கொண்டேயிருக்கும் ஒருநொடிக் கூட கட்டுப்படுத்த முடியாது. அதற்குதான்ட பயிற்சி செய்ய ஒரு குரு தேவை. ஒரு வழிகாட்டி தேவை.

பொதுவாக எல்லா மஹான்களும் குடும்பத்தை விட்டு, செய்யும் தொழிலை விட்டுவிட்டு பிறகு பாசபந்தங்களை நீக்கித்தான் தவம் செய்ய முடியும் என்று சொல்கிறார்கள். அது பொதுவான கருத்து. இதை எவ்வளவுபேர் ஏற்றுக் கொண்டு சந்நியாசி போல் வாழ முடியும். இந்த பரபரப்பான உலகில் வசதியாக வாழ்கின்ற எவரும் எதையும் விட்டுவிட்டு வாழ தயாராக மாட்டார்கள்.

அதனால் அவர்கள் தவம் செய்ய யாராலும் முடியாது என்றே கூறுவார்கள். அதை மாற்றி குடும்பத்தில் இருந்துகொண்டே தொழிலையும் பார்த்துக் கொண்டு எல்லா வேலைகளையும் செய்து கொண்டே தவம் செய்ய முடியும் என்று கண்டவர்தான் ஸ்ரீஇரெட்டியப்பட்டி ஸ்வாமிகள். அவர் 12 ஆண்டுகள் குற்றால குகையில் கடுந்தவம் ஆற்றி பரிபூர்ண விநாயகரின் பூரண ஆசிபெற்று அதற்கான வழியை கண்டார்.

அவருடைய கொள்கை, அன்றாட வாழ்க்கையில் ஒரு கொள்கை வகுத்து அதன்மூலம் கொஞ்சம் கொஞ்சமாக பக்குவப்படுத்தி பிறகு உயர்ந்த முக்தி நிலைக்கு போகமுடியும் என்று கண்டார்கள்.

சரி இதை பரீட்சித்து பார்க்க வேண்டும் என்று பல ஊர்களுக்கு சென்று பல அடியார்களுக்கு உபதேசம் செய்தார்கள். காசியிலிருந்து கன்னியாகுமரி வரை அப்படிப்பட்ட ஒரு உள்ளம் கிடைக்கிறதா என்று ஏங்கினார்கள். ஏன் என்றால் இது ஒரு கடுமையான வைராக்கியமும், பக்தியும், தைரியமும், மன வலிமையும் கொண்ட ஒருவரால்தால் கடைசிவரை உறுதியாக இருந்து முக்தி பெறமுடியும். அப்படி செய்தால்தான் குருவினுடைய செயலாக உலகம் ஏற்றுக் கொள்ளும் என்று ஆண்டவர் எண்ணினார்கள்.

அதன்படியே பிள்ளையார்குப்பம் அருள்சக்தி அன்னைக்கு பூரண ஆசி கொடுத்து தவம் செய்து இல்லறத்தில் இருந்து கொண்டே முக்தி அடைய முடியும் என்று உலகிற்கு நிரூபித்தார்கள்.

ஏன் தவம் செய்ய ஆசைப்பட வேண்டும் :

தவம் செய்து கடைசிவரை வைராக்கியமாக இருந்து முக்தி பெற வேண்டும் என்று ஆசைப்பட்டு பிறகு அதற்கான முழு

முயற்சியுடன் ஈடுபட்டால்தான் தவம் செய்ய முடியும் என்று புரிந்து கொள்ளவேண்டும். இவ்வாறு இல்லாதவர்கள் பாதியிலேயே பாதை மாறி போய்விடுவார்கள்.

பொதுவாக தினசரி வாழ்க்கையில் இரவில் தூங்க வேண்டும் என்றால் நாம் என்ன செய்கிறோம். கதவை தாழ்ப்பாள் போட்டுவிட்டு, பிறகு எல்லா விளக்குகளையும் அணைத்துவிட்டு இரவு விளக்கு போட்டுவிட்டு, பிறகு கட்டில், மெத்தை, தலையணை எல்லாம் வைத்துக் கொண்டு ஆரம்பத்தில் மெல்லிய இசையை ஒலித்துக் கொண்டு கண்களை மூடி தூங்க நினைக்கிறோம். அதாவது தூங்குவதற்கான சூழ்நிலையை முதலில் உருவாக்கினால்தான் தூக்கம் வரும் என்று தெரிந்து அதன்படி நடக்கிறோம்.

அப்படித்தான் தவம் புரிவதற்கு தகுந்த சூழ்நிலையை உருவாக்க ஆண்டவர் சில வழிமுறையை உருவாக்கி உள்ளார். அதன்பிறகு அருள்சக்தி அன்னையிடம் அடியார்கள் பொறுப்பு முழுவதும் அளித்துவிட்டு அருள்சக்தி அன்னையின் எந்த கோரிக்கையையும் ஆண்டவர் நிர்வகித்தார்கள். "தாய் சொன்னா தடை ஏதும் இருக்காது. அப்படியே நடக்கும்" என்பதை அடியார் உலகம் நன்றாக புரிந்து கொள்ளும்படி ஆண்டவர் ஆசி கொடுத்ததால் எல்லோரும் அருள்சக்தி அன்னையிடம் சென்று விளக்கம் கேட்டு ஆசிபெற்றார்கள்.

எனவே எந்த அடியாரும் தவம் செய்ய வேண்டுமானால் முதலில் அருள்சக்தி அன்னையிடம் முறையிட்டு ஆசிபெற வேண்டும். பிறகு அருள்சக்தி அன்னையே வழி நடத்தி சென்று ஆண்டவரிடம் பூரண ஆசி வாங்கி தருவார்கள். எந்த குழந்தையும் தாயாரிடம் தான் எதையும் கேட்டு பெறும், தாய் சொன்னபடிதான் நடக்கும். அதனால் அருள்சக்தி அன்னையின் கருணையை அறிந்து அடியார்கள் கூட்டம் நாளுக்கு நாள் பெருகியது.

"தவம் செய தூண்டருள் சக்தியே போற்றி" என்றும் வருகின்ற மந்திரங்ளின் பொருள் விளக்கம் பார்த்தால் தாய் எப்படி தவசிகளை உருவாக்குகிறார் என்பது புரியும்.

இனி தவம் செய்வது எப்படி என்று பார்ப்போம்

தவஅறை எப்படி இருக்க வேண்டும்?

பொதுவாக வீட்டின் உள்ளே வருவோர் போவோர் வரும்படியான இடத்தில் தவஅறை இருக்கக் கூடாது. அதிக சத்தம் இல்லாத. அதிக வெளிச்சம் இல்லாத ஒரு அமைதியான அறைதான் தவம் செய்ய ஏற்ற இடமாக இருக்க வேண்டும். அன்றாடம் பயன்படுத்தும் படுக்கை அறைகூடாது. பூஜை அறைக்குப் பக்கத்தில் உள்ள அறையே தவம் செய்ய ஏற்ற இடமாக இருக்கும். அப்படி வசதி இல்லாதவர்கள் பிள்ளையார் குப்பத்திலும், இரெட்டியப்பட்டியிலும் தவம் செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட அறையில் தங்கி தவம் ஆற்றலாம். அதற்கும் ஆண்டவர் எந்த நேரத்தில், எந்த இடத்தில் எத்தனை நாட்கள் தவம் செய்ய வேண்டும் என்று குறிப்பு கொடுக்கிறார். அதனால் தவசிகளுக்கு திட்டம் போட்டு தவம் செய்வதற்கு வழிவகுக்கிறார்.

ஆண்டவர் வாழ்ந்த காலத்தில் அடியார்களை வரிசையாக அமர்த்தி அவர்கள் தியானம் செய்யும்போது அவர்கள் சிரசில் வலது கையை வைத்து ஆசீர்வதித்து அஸ்ததீட்சை செய்வார்கள். அதனால் அவர்களுக்கும் மனம் கூடுவது சுலபமாக இருக்கும். அதன்பிறகு அருள்சக்தி அன்னை அவர்கள் அப்படி அடியார்களுக்கு ஹஸ்த தீட்சை புரிந்துள்ளார்கள். அதில் திரு. மாம்பலம் ஸ்வாமிகள் முதலாவதாக விளங்கினார். பிறகு மாம்பலம் ஸ்வாமிகள் மாம்பலம் தாய்க்கு அனுக்கிரஹம் செய்து இருவரும் சேர்ந்து கடுந்தவம் இரெட்டியப்பட்டியில் மாடியில் தனித்தனி அறையில் பல நாட்கள் தங்கி தவம் ஆற்றி முக்திபெற்று நிர்விகல்ப சமாதி பெற்றார்கள்.

அதனால்தான் அவர்களுக்கு ஆலயம் அமைத்து இன்று வழிபாடு நடக்கிறது. பிள்ளையார்குப்பத்தில் அருள்சக்தி அன்னையின் சமாதிக் கோயில் எதிரில் தனி அறைகள் கட்டப்பட்டு தவசிகள் தவம் செய்கிறார்கள்.

வேறு எந்த மஹானாலும் சொல்லப்படாத புது வழியாக நம் குருநாதர் வழி இருக்கிறது. (வேதங்கள் ஓதி ஓதி தெரிந்து கொள்வது போல வேதங்கள் யாரும் தனியாகப் படித்து தெரிந்து கொள்ள முடியாது). அத்தியயனம் செய்த குரு மூலமாகத்தான் வேதத்தைக் கற்றுக் கொள்ள முடியும். அதுபோல நம் ஆண்டவர் வழி குரு மூலமாக தெரிந்து கொண்டு அதன்படி நடந்தால் நல்ல பலன் கிடைக்கும்.

தவசிகள் எப்படி நடக்க வேண்டும் என்பதற்கு தனியாக கட்டுப்பாடுகள் இருக்கிறது. அதை அப்படியே இங்கு எழுதிக் கொள்ளலாம். அதன்படி ஒவ்வொரு தவசியும் தாயிடம் தாக்கல் செய்தபின் தான் தவம் செய்யப் போக வேண்டும்.

தவம் எப்படி இருக்க வேண்டும் :

முதலில் கண்ணால் பார்ப்பது, காதால் கேட்பது, சாப்பிடுவது, பேசுவது எல்லாம் கட்டுப்பாட்டுக்கு கொண்டு வாருங்கள். தவ அறையில் ஐவர் படம், ஆண்டவர், தாய், விநாயகர் படம் ஒரு ஷெல்பில், 2 குத்துவிளக்குகள், ஒரு கட்டில் அதில் ஒரு தலையணை மற்றும் ஒரு போர்வை மட்டுமே இருக்கும்.

அதனால் வேறு எதுவும் பார்க்க முடியாது. தொலைக்காட்சி பெட்டி, வானொலி பெட்டி இருக்காது. புத்தகங்கள், செய்தித்தாள் எதுவும் இருக்காது. அன்றாடச் செய்தியைத் தெரிந்துக் கொள்ள முடியாது.

உலகத்தில் என்ன நடக்கிறது என்பதே தெரியாது. ஆகாரம் குறிப்பிட்ட அளவில் குறிப்பிட்ட நேரத்தில் தான் கிடைக்கும். நடுவில்

எதுவும் சாப்பிடக்கூடாது. எல்லாவற்றையும் ஆண்டவர் கவனித்துக் கொண்டிருக்கிறார் என்ற பயம் எப்போதும் இருக்கணும்.

மனதில் தோணுகின்ற எண்ணங்களை ஆண்டவர் கவனித்து கொண்டிருக்கிறார் என்று தவசிகளுக்குத் தெரியும். அந்த ஒரு கட்டுப்பாடுதான் மிக ஆச்சரியமாக இருக்கும். எப்படி பூனைக் குட்டியை தாய் பூனை பார்த்து பார்த்து கவனித்து வருகிறதோ அப்படி அடியார்களை ஆண்டவர் சதா சர்வகாலமும் கவனித்துக் கொண்டே இருக்கிறார் என்பதை தவசிகள் நன்கு உணர முடியும்.

முதல்நாள் மனம் தெளிவடைய சில மணி நேரங்கள் ஆகும். ஏன் என்றால் அன்றாட வாழ்க்கையில் விட்டுப்போன வேலைகள் பற்றியே முதலில் சிந்தனை இருக்கும். அன்று இரவுதான் மனம் அமைதி அடையும். ஆண்டவரை நினைக்கத் தோன்றும் 3 மணி முதல் தூக்கம் வராது. 4 மணிக்கு கட்டாயம் குளித்துவிட வேண்டும். அதன்பிறகு மனம் தெளிவாக இருக்கும். அப்போதுதான் ஆண்டவரிடம் முறையிட சரியான சந்தர்ப்பம் கிடைக்கும். பொதுவாக இரவு 2 மணியளவில் மனம் தெளிவாக இருக்கும். ஆண்டவருடைய கட்டளைகள் குறிப்பாக வருகின்ற நேரம்தான் அது.

மனக்குழப்பம் எப்படி வருகிறது?

மனதை கட்டுப்படுத்துவது என்பது அவ்வளவு சுலபமல்ல, சதா தாவிக்கொண்டே இருக்கும். அதனால் குருவின் திருவடியை மனதில் மீண்டும் மீண்டும் வைத்துக் கொண்டே இருந்தால் கொஞ்சம் கொஞ்சமாக மனம் தெளிவடைய ஆரம்பிக்கும். அதன்பிறகு ஆண்டவர் பணி கொடுத்ததை நினைத்து அதன்படி நடந்தால்தான் மனம் பக்குவம் பெறும். வீட்டில் நடைபெறும் லட்சார்ச்சனை, ஸஹஸ்ரநாம அர்ச்சனை பெருவிழாவின் போது மனம் குதூகலிக்கும். செய்த தவம் அங்கே பரிமளிக்கும் போது

மீண்டும் எப்போது தவம் வரும் என்று ஆவலாக இருக்கும். யார் யார் எப்படி தவம் செய்கிறார்கள். அவர்கள் விழாவின் போது பார்த்தால்தானே புரியும். அதற்காகத்தான் ஆண்டவர் அடிக்கடி பரிசு அளித்து ஊக்குவிப்பது போல விழாக்களை நடத்தச் சொல்லி அதன்மூலம் பல விஷ்யங்களை புரிய வைக்கிறார்.

தவத்திரு. கே.எஸ்.கே. ஸ்வாமிகள் தவத்தில் இருக்கும்போது வந்த அருட்குறிப்பும் விளக்கமும் :

முழுமையான தவம் மட்டுமே முக்திக்கு வழிகாட்டும் :

ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகள் 12 ஆண்டுகள் குற்றாலக் குகையில் இடைவிடாது தவம் ஆற்றினார்கள். அதுதான் கடுமையான தவம். பிறகு ஸ்ரீலஸ்ரீ அருள்சக்தி அன்னைக்கு முக்தி கொடுப்பதற்கு 2 1/2 ஆண்டுகள் இடைவிடாது நிர்விகல்ப சமாதி நிலையில் இருக்கும்படி வழிவகுத்தார்கள். அந்த 2 1/2 ஆண்டுகள் தான் கடும் தவம் பிறகு 6 மாதம், 8 மாதம் போன்றெல்லாம் இருந்தார்கள். ஆனால் தொடர்ந்து இடைவிடாமல் இருந்தது 2 1/2 ஆண்டு காலம்.

பிறகு ஸ்ரீ மாம்பலம் ஸ்வாமிகள் தவம் இருந்தார்கள். அப்போது அவர் சொன்னார்: எனக்கோ 80 வயதிற்கு மேல் ஆகிவிட்டது. பல குழந்தைகள் பிறந்து வளர்ந்து பல ஊர்களில் பல தொழில்கள் புரிந்து மனம் இடைவிடாது சஞ்சலப்பட்டுக் கொண்டு இருந்து விட்டது. இந்த நேரத்தில் என்னால் கடும் தவம் இருக்க முடியுமா? என்று கேட்டார்கள். அதற்கு ஆண்டவர், வயது ஒருபோதும் தவத்திற்கு தடையில்லை. ஆண்டவர் அருட்சட்டத்தில் முயன்றால் முடியாதது ஒன்றும் இல்லை என்றார். உடனே திரு. மாம்பலம் ஸ்வாமிகளுக்கு தைரியம் வந்துவிட்டது. ஏற்கனவே பல மஹான்கள் மூலம் பாடம் கற்ற ஸ்வாமிகளுக்கு ஆண்டவர் காட்டிய பாதை சுலபமாக புரிந்து விட்டது.

ஸ்ரீ மாம்பலம் ஸ்வாமிகள் கூறுகிறார் :

அடியேனுக்கு திருவண்ணாமலையில் திரு. ரமண மஹரிஷியிடம் ஈடுபாடு கொண்டபோது மனதை எவ்வாறு அடக்கி தியானம் செய்வது? எப்படி பற்றில்லாமல் வாழ்க்கையை நடத்திச் செல்வது என்பது பற்றி நன்றாக உணர்ந்து கொள்ள முடிந்தது. எனக்கு புதிராக இருந்தது, "இந்த ஆகார கட்டுப்பாடு" தான். பொதுவாக எல்லா ஞானிகளும் ஆகாரக்கட்டுப்பாட்டை வலியுறுத்தி சொல்லியிருந்தாலும் நம் ஆண்டவர் வழி தனி வழி.

இன்று இருக்கும் நிலைக்கு என்ன ஆகாரம், அடுத்த நிலைக்கு என்ன ஆகாரம், அதற்கு மேல் என்ன ஆகாரம் என்று படிப்படியாக வகுத்திருப்பது நம் ஆண்டவர் வழியில் மட்டுமே. சாதாரணமாக இல்லத்திலிருந்து எல்லா வேலையும் பார்க்கும்போது முதல் படியாக வெள்ளிக்கிழமை உபவாசம் வைத்திருக்கிறார். அதை சரியாக கடைபிடிப்பவர்க்கு படிப்படியாக ஒருவேளை பலகாரம் மட்டும். பிறகு பால்பழம் மட்டும் இப்படிப் படிப்படியாக அளித்து தேர்வு செய்கிறார். அப்படி பக்குவப்பட்ட ஜென்மாவிற்குதான் இப்போது 3 நாள் தவம் கிடைக்கிறது. பிறகு 12 நாள், பிறகு 24 நாள், 48 நாள் என்றெல்லாம் தவம் கொடுக்கிறார்.

இந்த ஆகாரக் கட்டுப்பாட்டிற்கும், மோட்சத்திற்கும் என்ன சம்பந்தம்? இந்த வழியை யார் நெறிமுறைப்படுத்தித் தந்தார்கள் என்றால் அருள்சக்தி அன்னைதான் ஏற்படுத்தினார்கள். ஆண்டவரா சொன்னார்? தாயே அநுபவத்தில் தெரிந்து கொண்டது என்று ஒலி நாடாவில் பதிவு செய்திருப்பதை போட்டுக் கேட்டால் தெரிந்து கொள்ளலாம். "தாய்பட்ட கஷ்டம் ஒருவரும் படமுடியாது. நல்லா சொல்லுது 18 வருஷம் வாசிக்குதிரையில் ஏற்றினார் ஆண்டவர். பெரிய குதிரை அந்த சிரமமெல்லாம் இப்ப யார் படுவார்கள் சாமி ஒருவரும் படமாட்டார்கள்". பின் எப்படி

ஸ்ரீ மாம்பலம் ஸ்வாமிகள் ஏற்று நடத்தினார் என்று கேட்கலாம். முதலிலேயே ஸ்ரீ மாம்பலம் ஸவாமிகள் ஆண்டவரிடம் தன் வயது 80 என்று சொல்லி என்னால் பட முடியாது என்று கேட்டபோதே அதற்காக கவலை வேண்டாம், உடையவன் பொறுப்பு என்று ஆண்டவர் வாக்கு கொடுத்துவிட்டதால் பாதிதூரம் பாடுபட்டதாலே மீதி தூரம் ஆண்டவரே அழைத்துச் சென்று விட்டார். அதுதான் தாயின் கருணை. இப்படி ஸ்ரீ மாம்பலம் ஸ்வாமிகள் முக்தி அடைந்ததின் பலனாய் இப்போது அடியார்கள் சுலபமாக இந்த வழிக்கு வருவார்கள் என்று ஸ்ரீ மாம்பலம் ஸ்வாமிகள் ஸ்ரீலஸ்ரீ அருள்சக்தி அன்னையிடம் வரம் கேட்டு பெற்று ஒரு புதிய வழியை கண்டுபிடித்தார்கள். அது என்ன வழி என்று பார்ப்போம்.

தவம் செய்வதற்கு முக்கியமானது ஆகாரக்கட்டுபாடு என்று ஸ்ரீ மாம்பலம் ஸ்வாமிகள் சொல்லியுள்ளார்கள் அது எதற்கு? புலன்களை அடக்குவதற்கு ஆகார கட்டுப்பாடு அவசியம். சர்க்கஸில் வளர்க்கும் சிங்கம், புலி, யானை எல்லாவற்றிற்கும் தேவையான குறைந்த ஆகாரமே கொடுப்பார்கள். வயிறு கொழுத்து இருந்தால் எந்த வேலையும் செய்யாது. தூங்கிக் கொண்டேயிருக்கும். ரிங் மாஸ்டர் சொல்கிறபடி கேட்காது. கிளி ஜோசியரிடம் சென்றால் கூட ஒரு நெல்லை கொடுத்து ஒரு சீட்டை எடுக்க சொல்வார். குரங்காட்டி மற்றும் வெளிநாடுகளில் டால்பின் ஷோ காட்டுகிறார்களே, அங்கே கூட மீன் ஆகாரம் காட்டித்தான் டால்பின் ஷோ நடத்துவார்கள்.

பசியை பொறுத்துக் கொண்டால் மற்ற எல்லாம் பொறுத்துக் கொள்ளலாம். அதனால்தான் பசி வந்தால் பத்தும் பறந்து போகும் என்று சொல்கிறார்கள். இப்படி ஆகார கட்டுப்பாடு ஆரம்பித்து முதலில் மனிதன் வேகத்தை தடை செய்கிறார். பிறகு நாக்கின் ஆசை, மனக்கட்டுப்பாடு, உடல் கட்டுப்பாடு இவைகளை

முறைப்படுத்துகிறார். உபவாசம் இருப்பவர்களுக்கு ஆகாரத்தை பார்த்தாலே குமட்டும். தீய எண்ணங்கள் வந்தால் சாக்கடை நாற்றம் போல் அடிக்கும். பிறகு தவறு செய்யவே பயப்படுவார்கள்.

அதற்கு அடுத்தபடி "மௌனம்" நாக்கிற்கு இரண்டு கட்டுப்பாடு. சுவைத்தலும், பேச்சும் கிடையாது. இது கொஞ்சம் கொஞ்சமாக எண்ணத்தை அழித்துவிடும். இதுதான் முதல்படி ஆகாரக்கட்டுப்பாட்டில் ஏன் பால்பழம் மட்டும் வைத்துள்ளார்? அறுசுவை உண்டி என்றால் உப்பு, புளிப்பு, காரம், இனிப்பு, துவர்ப்பு, கசப்பு என்று சொல்கிறோம். பால்பழம் சாப்பிடுபவர்கள் சர்க்கரைக் கூட சேர்த்துக் கொள்ளக் கூடாது. வெறும் பழம் எந்த சுவையும் தராது. பால் சர்க்கரை இல்லாமல் சாப்பிட்டால் சுவையே இருக்காது. இப்படி பல நாட்கள் சாப்பிட்டால் எந்த ஆகாரமும் சாப்பிட பிடிக்காது. ஏதோ அந்த நேரத்தில் எது கொடுக்கிறார்களோ அது போதும் என்று இருக்கும்.

ஆகாரம் இல்லாததால் தூக்கம் வராது. நாள் பூராவும் விழித்துக் கொண்டே இருக்க வேண்டும். தனியாக ஓர் இடத்தில் அமர்ந்து இருப்பதால் **தனித்திரு, விழித்திரு, பசித்திரு** என்று மஹான்கள் சொல்வது போல் அமைந்துவிடுகிறது. அதைத்தான் பசித்திருவில் ப-வும், தனித்திருவில் த-வும், விழித்திருவில் வி-யும் சேர்த்து பதவி கிடைக்கும் என்பார்கள். இப்போது ஸ்ரீ மாம்பலம் ஸ்வாமிகள் கண்டுபிடித்த வழி என்ன என்று பார்ப்போம். பொதுவாக அந்த காலத்தில் ஒரு ஊருக்குப் போக வேண்டுமானால் நடந்தே பல மைல் போவார்கள். அதற்காக ஆகாரத்தை மூட்டையாக கட்டி தோளில் தூக்கி சென்று ஆங்காங்கே தங்கி இளைப்பாறி செல்வார்கள். அப்படிப்பட்ட தூரத்தை கடப்பது மிகக் கடினம். பிறகு சுலபமாக போவதற்கு பஸ், ரயில், ஆகாய விமானம் எல்லாம் வந்தது.

அப்படி அடியார்கள் என்ன எதிர்பார்க்கிறார்கள் என்றால் சுலபமாக மோட்சம் அடைய முடியுமா? என்றுதான் கேட்கிறார்கள். நம் குருநாதருடைய சரித்திர புத்தகம் வழிகாட்டும் வான்பொருள் புத்தகத்தில் மூன்று காரணங்கள் ஆண்டவர் சுட்டிக்காட்டியிருக்கிறார். இந்தகால மக்கள்:

1. அளவிற்கு மீறிய ஆசையால் துன்பப்படுகிறார்கள்.
2. இயற்கையோடு ஒட்டி வாழாததால் பல நோய்களுக்கு ஆளாகிவிடுகிறார்கள்.
3. ஆண்டவரிடம் முழு நம்பிக்கை இல்லாமல் பல சந்தேகங்களுக்கு அடிமையாகி நிம்மதியில்லாமல் வாழ்கிறார்கள். இதை மாற்றுவதற்குதான் ஆண்டவர் அருட்சட்டம் ஏற்படுத்தினார்கள்.

இந்த மூன்று கொள்கைகள் தான் அருட்சட்டத்தின் ஆணிவேர். அதையேதான் ஸ்ரீ மாம்பலம் ஸ்வாமிகள் நெறிபடுத்தி இந்த கால மக்கள் சுலபமாக அருட்சட்டம் ஏற்று முக்தி பெறுவதற்கு வழிகண்டார்கள்.

1. வாராவாரம் வழிபாடு - வாரத்தில் ஆறுநாள் பொருள் சேர்த்தால் ஒருநாள் அருளைத் தேடு என்பதற்காக கேந்திரவிழா நடத்தச் சொல்கிறார்.
2. அடியார்களுடன் அடிக்கடி தொடர்பு கொண்டு சந்தேகங்களை போக்கிக் கொள்ள கேந்திரங்கள் வழி வகுக்கிறது.
3. அருட்சட்டத்தின் முக்கியமான கொள்கையாக விடியல் நீராட்டம், நிஷ்டை இரண்டும் வலியுறுத்தப்படுகிறது.
4. கொஞ்சம் பக்குவமானால் தவசிகளாக்கப்படுகிறார்கள்.

தரணி போற்றும் தவம் செய்ய தடையேதும் இல்லை.

5. தவம் என்றால் என்ன? சுலபமாக புரிய வைக்க 3 நாள் தவம் ஓர் எடுத்துக்காட்டு. ஆகாரக்கட்டுப்பாடு, புலனடக்கம் அதுதான் ஆரம்ப பாடம்.

6. 12 நாள், 24 நாள், 48 நாள் தவம் படிப்படியாக வரும். மொத்தம் 36 பேர்கள் தவசிகளாக தேர்ந்தெடுக்கப்பட உள்ளார்கள். 108 கேந்திரம், 12 நிருபர்கள் மொத்தம் இருப்பார்கள். இப்படி ஆண்டவர் அருளாட்சியில் யார் யாருக்கு என்ன வேலை என்று திட்டம் வழங்கப்படுகிறது. இது இன்னும் தொடர்ந்து நடைபெறும் போது ஸ்ரீ மாம்பலம் ஸ்வாமிகள் எப்படி சுலபமாக அருட்சட்டத்தை ஏற்பதற்கு வழி வகுத்திருக்கிறார் என்பது புரியும். தொடர்ந்து 2-3 ஆண்டுகள் தவம் இருப்பது கடினம் என்பதற்காக முதலில் 12, 24, 48 நாள் கொடுத்து தயார் செய்கிறார்கள். தவம் பூர்த்தி ஆகும் போது பல மாதங்கள் தொடர்ந்து இருக்கும். சிறுவயதிலேயே தவம் ஆரம்பிப்பதால் பிற்காலத்தில் கவலை இல்லை.

முக்திபேறு என்பது புண்ணியம், பாவம் இரண்டும் கரைந்துவிட்ட பிறகு கிடைப்பது. முக்த கிடைத்தவர்களுக்கெல்லாம் கோயில் கட்ட வேண்டும் என்பதில்லை. அனைவருக்கும் சிலை வைக்க வேண்டியதில்லை. விநாயகர் சிலை வைத்துவிட்டால் போதும். கடுமையாக தவம் புரிந்து, பல வரங்களை பெற்றவர்களுக்குத் தான் சிலை கிடைக்கும். ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகள், ஸ்ரீ ரமண மகரிஷிகள், ஸ்ரீ சேஷாத்திரி ஸ்வாமிகள், ஸ்ரீலஸ்ரீ அருள்சக்தி அன்னை, ஸ்ரீ மாம்பலம் ஸ்வாமிகள், தாய் இவர்களுக்கு சிலை கிடைக்கப்பெற்றுள்ளது. அவர்கள் ஜீவன் முக்தர்கள். உடல் மறையாது. குறையாது இருக்கும். பொதுவாக யார் மரணம் அடைந்தாலும், சில மணி நேரங்களில் கட்டைபோல் விறைத்துவிடும். ஜீவன் முக்தர்கள் உடல் மறைந்த பிறகும்

மென்மையாக இருக்கும். ஸ்ரீலஸ்ரீ அருள்சக்தி அன்னை, ஸ்ரீ மாம்பலம் ஸ்வாமிகள், ஸ்ரீலஸ்ரீ மாம்பலம் தாய் அடைந்த பிறகும் 2 நாள் கழித்துதான் சமாதி வைத்தார்கள். அதுவரை உடல் எந்த பாதிப்பும் ஆகவில்லை. பாண்டிச்சேரி அரவிந்த ஆஸ்ரம அன்னை கூட அப்படியே இருந்ததை பலர் நேரில் சென்று பார்த்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஜீவன் முக்தர்களுக்கு அவர்களைப் போலவே உருவசிலை வைத்து கோவில் கட்டுவார்கள். அவர்களுடைய முக்தி நாளுக்கு நாள் பிரகாசமாக இருக்கும். இப்போது விவேகானந்தர், ராகவேந்திர ஸ்வாமிகள் போன்றோர்க்கு 100வது ஆண்டுவிழா விமரிசையாக நடைபெறுவதை பார்த்தால் புரிந்து கொள்ளலாம். அவர்கள் எல்லாம் ஏதோ ஒரு கொள்கையை பரப்பி ஆன்மீகத்தை வளர்த்தார்கள்.

ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகள் அருளிய வழியை ஸ்ரீலஸ்ரீ அருள்சக்தி அன்னை மூலம் உலகிற்கு உணர்த்தி ஸ்ரீலஸ்ரீ அன்னை, இல்லத்தில் இருந்து கொண்டே முக்தி பெற வைத்து பிறகு ஸ்ரீ மாம்பலம் ஸ்வாமிகள் போன்றோர் வயதான காலத்திலும் ஞானம் பெற முடியும் என்பதை உலகிற்கு உணர்த்தி, பிறகு அவர் மூலமாக சுலபமாக எல்லா அடியார்களும் அருட்சட்டம் ஏற்று இல்லத்திலிருந்து கொண்டே படிப்படியாக தவம் கிடைத்து முக்தி பெற வழி வகுத்திருப்பதுதான் மிக ஆச்சரியமானது, அற்புதமானது. இதுவரை எந்த மஹானாலும் சொல்லப்படாதது மேலும் விளக்கம் பெற ஏதாவது கேள்வி கேட்க விரும்பினால் இப்போதே எழுதி ஸ்ரீலஸ்ரீ அருள்சக்தி அன்னை சிலையிடம் வைத்தால் பதில் கிடைக்கும்.

அடுத்தபடியாக அருட்சட்டத்தில் இருந்து பக்குவப்பட்டு பிறவா நெறி பெற்றவர்கள் பற்றி பார்ப்போம். இவர்களுடைய சமாதியில்

பிள்ளையார் பிரதிஷ்டை செய்திருப்பார்கள். ஏன் என்றால் இவர்கள் ஜீவன் முக்தர்கள் இல்லை. அதனால் அவர்களுக்கு மறைந்த பிறகு தனி சக்தி ஒன்றும் கிடையாது. அந்த நிலை வரமுடியாவிட்டாலும் ஜென்மா கடைத்தேறி மீண்டும் பிறவாதிருந்தால் போதும். அதுதான் நம் ஆண்டவர் வழி. திரு. வைத்தியநாத ஸ்வாமி, திரு. பாலகவி ஸ்வாமி, திரு. பி.ஆர்.வி. ஸ்வாமி, திருமதி கடுவனூர் தாய் போன்றோர்கள் மறுபிறவி எடுக்க வேண்டியதில்லை. அவர்கள் வாழ்க்கை நமக்கு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது.

தவம் என்றால் என்ன? 1) மௌனம் 2) உபவாசம் 3) தனிமை 4) கட்டுப்பாடு இதுதான் ஆரம்பநிலை.

தவம் எதற்காக ஆண்டவர் கொடுக்கிறார்?

அருள் சட்டத்தின் முக்கியமான நோக்கம் இல்லறத்தில் இருந்துகொண்டே எல்லா வேலையும் பார்த்துக்கொண்டே தொழில், குடும்பம் இரண்டையும் கவனித்துக்கொண்டே மனம் மட்டும் ஆண்டவரோடு ஒன்றி சதா சர்வ காலமும் இடைவிடாது குருநாதர் ஞாபகமாகவே வாழ்பவர்களுக்கு ஒரு நாள் நிச்சயம் ஞானம் பிறக்கும். அதன் பிறகு அயராது பாடுபட்டு பாச பந்தம் விலகினால் மோட்சம் நிச்சயம் கிடைக்கும். அதற்காக தான் ஆண்டவர் தவம் கொடுக்கிறார்.

தவசிகள் அனைவருக்கும் முக்தி கிடைக்குமா?

பரீட்சை எழுதிய அனைவரும் முதன்மையாகத் தேறுவாரா என்று கேட்டால் எப்படி? உழைப்புக்கேற்ற பலன் உண்டு. இந்த ஜென்மாவில் முடியாவிட்டாலும் அடுத்த ஜென்மாவிலும் விட்ட இடத்திலிருந்து பலன் உண்டு.

தவறு செய்தால் தண்டனை உண்டா?

ஆண்டவர் சட்டத்தில் முழுமையாக செய்தவர்களுக்கு எப்படி நல்ல மதிப்பெண்கள் கிடைக்கிறதோ அப்படி தவறுக்கும் தண்டனை உண்டு. குறிப்பிட்ட காலத்தில் பணம் கட்டாவிட்டால் அபராதம் 2% போடுவது போல சரியாக நடக்காவிட்டால் மைனஸ் மார்க் உண்டு. அதே போல் 100% சரியாக நடந்தால் போனஸ் மார்க்கும் உண்டு. அதுதான் அருள்சட்டத்தின் பெருமை.

ஆண்தவசிக்கும் பெண் தவசிக்கும் வேறுபாடு உண்டா?

பெண் தவசிகளுக்கு சில சலுகை உண்டு. குடும்ப பாரம் அவர்களுக்கு அதிகம் என்பதால் சில தவறுகள் தவிர்க்க முடியாமல் ஏற்பட்டால் அதற்கு அபராதம், தண்டனை கிடையாது. மற்றபடி ஆகாரம், மௌனம் எல்லாம் ஒன்று போல்தான் இருக்கும்.

தவசிகள் என்னென்ன பொருட்கள் எடுத்துச் செல்ல வேண்டும்?

ஆண்டவர், விநாயகர், தாய் பெரிய சைஸ் போட்டோவும் (இடத்திற்கு தக்கபடி) ஐவர் போட்டோவும் எடுத்துச் செல்ல வேண்டும். அதே படத்தைதான் ஒவ்வொரு ஆண்டும் உபயோகப்படுத்த வேண்டும்.

வெள்ளி, செவ்வாய், ஞாயிறு இந்த மூன்று நாளும் வைக்கக் கூடாது. ஆனால் வசந்தவிழாவிற்கு செல்பவர்கள் செவ்வாய் இரவே தான் தவம் ஆரம்பிப்பார்கள். வெள்ளிக்காலை முடிப்பார்கள். அன்று இரவே புறப்படுவார்கள். அதனால் அவர்களால் இந்த இரண்டு நாளும் தவிர்க்க முடியாத நாளாகும். அவர்கள் என்ன செய்ய முடியும் என்று கேட்டால் அவர்கள் செவ்வாய்கிழமை 3 படங்களையும், குருநாதர் கோயிலில் ஆண்டவரிடம் காட்டி முறையிட்டு, எடுத்து வந்து மாட்டலாம். திரும்பிப் போகும்போது படத்தை கழற்றி கோவிலில் ஆண்டவரிடம்

காட்டி எடுத்துச் செல்லலாம். பொதுவான விதி என்பதால் முடிந்த வரைக்கும் சரியாக கடைபிடித்தல் அவசியம்.

இரண்டு போர்வை, ஒன்று படுப்பதற்கு மற்றது கால் அடியில் போட்டுக் கொள்வதற்கு. மூன்று நாள் தவசிக்கு ஒரு போர்வை போதும். 12 நாள், 24 நாள், 48 நாள் இருப்பவர்கள் நடுவில் மாற்றிக் கொள்ள சௌகரியம் என்பதால் 2 போர்வை எடுத்துச் செல்லலாம். தலையணை ஒன்று மட்டுமே அனுமதி. தலைக்கு மட்டுமே, காலுக்கு கூடாது.

தேங்காய் எண்ணெய் 1 பாட்டில் : தினமும் காலையில் குளிக்கும் முன்பு தேங்காய் எண்ணெய் தலையில் (உச்சந்தலையில்) தேய்த்துவிட்டுதான் குளிக்க வேண்டும். அது உடல் உஷ்ணத்தை குறைக்கும். குளித்து வந்த பிறகு தலையில் தேங்காய் எண்ணெய் தடவி கொள்ளலாம், தலைவாரக் கூடாது. சீப்பு உபயோகப்படுத்தக் கூடாது. தலை நன்றாக காய்வதற்கு துணியால் துடைத்துக் கொள்ளலாம், ஹேர் ட்ரையர் உபயோகப்படுத்தக் கூடாது. சோப்பு தேய்த்துக் கொள்ளலாம், ஷாம்பு கூடாது. பவுடர் பூசிக்க கூடாது. சென்ட் போன்ற வாசனை திரவியம் கூடாது. ஆண்கள் வேஷ்டி, துண்டு, கௌமீயம் மட்டுமே உபயோகப்படுத்தலாம். பனியன் கூடாது. பெண்கள் பட்டுசேலை உடுத்தக் கூடாது. மெல்லிய வாயில் சேலை நல்லது அல்லது காட்டன் சேலை. பூ வைத்துக் கொள்ள கூடாது.

வெள்ளி சொம்பு, வெள்ளி தட்டு, வெள்ளி கிண்ணம், வெள்ளி டம்ளர் கட்டாயம் இருக்க வேண்டும். எவர்சில்வர் சொம்பில் தண்ணீர் இருந்தாலும் வெள்ளி டம்ளரில் ஊற்றிதான் குடிக்க வேண்டும். பாலும் வெள்ளி டம்ளர்தான். பழமும் வெள்ளி தட்டில்தான். நெய் 2 ஸ்பூன் காய்ச்சி உருக்கி காலையில் மட்டும் சாப்பிட வேண்டும்.

அந்த கிண்ணமும் வெள்ளிதான். ஸ்பூன் கூட வெள்ளிதான் உபயோகிக்க வேண்டும். இதற்கு ஒருமுறை ஏற்பாடு செய்துவிட்டால் பல வருஷம் அப்படியே இருக்கும். நான் 12 வருஷமாக ஒரே டம்ளர், சொம்பு, தட்டு, கிண்ணம், ஸ்பூன் தான் உபயோகிக்கிறேன். 20 வருஷம் ஆனாலும் ஒன்றும் ஆகாது. வருடத்தில் ஒரு முறைதான் உபயோகிக்கிறோம் மற்ற நாட்களில் உபயோகப்படுத்தக் கூடாது. இது முக்கியமானதாகும். தரையில் உட்காரக் கூடாது. பிள்ளையார்குப்பம் தாய் கோவில், தாய் தவம் ஆற்றிய அறை, இரெட்டியப்பட்டியில் ஆண்டவர் கோயிலில் மட்டுமே தரையில் உட்காரலாம். அதுவும் டவல் அல்லது பாய் போட்டு உட்கார வேண்டும். வேறு எங்குமே பெஞ்ச், நாற்காலியில்தான் அமர வேண்டும். படுப்பதும் அப்படியே. வேறு எங்கும் சென்று படுக்கக் கூடாது.

யார்மேலேயும் படக்கூடாது. யாரும் காலை தொட்டு ஒற்றிக் கொள்ளக் கூடாது. யாருக்கும் நமஸ்காரம் செய்யக் கூடாது ஜன்னல் கதவை திறந்து எட்டிப்பார்க்கக் கூடாது. ரோட்டில் செல்பவர்களை வேடிக்கை பார்க்கக் கூடாது. பறவைகளை கூட பார்க்கக் கூடாது என்பது பொது விதி. அதனால்தான் குகை போல் வைத்துள்ளார் ஆண்டவர். பிரகாசமான விளக்கு எரியக்கூடாது. பூஜைநேரத்தில் நாதஸ்வர இசை, ஓம் டேப் மற்றும் அருட்பாடல்கள் கேட்கலாம், அதுவும் பூஜை முடிந்த பிறகு உபயோகப்படுத்தக் கூடாது. புஸ்தகம் எதுவும் படிக்க கூடாது. வழிகாட்டும் வான்பொருள், அர்ச்சனை புத்தகம், அருட்பாடல் புத்தகம் படிக்கலாம்.வேறு எந்த போட்டோ, படம், புத்தகம் பார்க்க கூடாது. எந்த வேலை செய்தாலும் அந்த வேலையில் மனம் ஈடுபட்டு பிறகு எண்ணங்கள் எங்கோ சென்று விடும் என்பதற்காக இந்த ஏற்பாடு. தேன், சர்க்கரை, கல்கண்டு தேவையில்லை. பாலில் சர்க்கரை போடக்கூடாது. நன்றாக காய்ச்சி இருந்தால் போதும்.

லவங்கம், பாக்கு, ஏலக்காய் போன்ற லாகிரி வஸ்து உபயோகிக்க கூடாது. நடுவில் எதுவும் சாப்பிடக் கூடாது. தண்ணீர் மட்டுமே குடிக்கலாம். தட்டில் பழங்கள் ஒழுங்காக கட்பண்ணி நடுவில் நெய் கிண்ணம் ஸ்பூன் வைத்து கொடுப்பது நலம். காலை 6.30 மணி பூஜை முடிந்து 8 மணிக்குள் சாப்பிட வேண்டும். மாலையிலும் அப்படியே. பகல் 2 மணிக்கு ஜூஸ் சாப்பிடலாம். அதுவும் 4 மணிக்குள் சாப்பிட வேண்டும். கரண்ட் இல்லை என்றால் கையால் பிழிந்து சாப்பிடலாம். ரோஸ்மில்க், பாதாம்கீர் போன்றவை சாப்பிடக் கூடாது. பேரீச்சம்பழம் காலையில் மட்டும் சாப்பிடலாம். மாலையில் நெய் கூடாது.பழம் மட்டும்தான் சாப்பிட வேண்டும். மீதி வைக்காமல் சாப்பிடுவது நல்லது. கொடுப்பவர்கள் திட்டமாக கொடுக்க வேண்டும். குறைவாக இருந்தாலும் சரி, அதிகமாக கூடாது.

அமர்ந்துதான் சாப்பிட வேண்டும். எழுந்து நின்று சாப்பிடக் கூடாது. தண்ணீர் கூட அமர்ந்துதான் குடிக்க வேண்டும். விளக்கு எரிகிறதா, எண்ணெய் இருக்கிறதா என்று பார்த்துவிட்டுதான் சாப்பிட வேண்டும். நடுவில் யாராவது கதவு தட்டினால் எழுந்திருக்கக் கூடாது. கதவை நன்றாக தாழ்ப்பாள் போட்டுவிட்டு தான் சாப்பிட உட்கார வேண்டும். ஒருமுறை சாப்பிட்ட பிறகு மீண்டும் சாப்பிடக் கூடாது. எனவே கை அலம்பும் முன்பு முடிக்க வேண்டும். கை அலம்பினால் மீண்டும் சாப்பிடக் கூடாது.

கீழே விழுந்த பழத்தை எடுத்து சாப்பிடக் கூடாது. பழம் பிடிக்கவில்லை என்றால் நெய்யில் போட்டு சாப்பிடலாம், பாலில் போட்டு சாப்பிடலாம். வயிற்றில் இறுக்கமாக துண்டு கட்டிக் கொண்டு சாப்பிடக் கூடாது. ஃபிரியாக இருக்க வேண்டும். பழங்கள் மூடியே எடுத்து வரவேண்டும். யாரும் பார்க்கக் கூடாது. ஒரேமாதிரி

பழங்கள் கட் பண்ணி தரவேண்டும். அதற்காக தெரிந்தவர்களிடம் ஆலோசனை கேட்கலாம்.

அவசர அவசரமாக சாப்பிடக் கூடாது. அப்படி சாப்பிட்டால் பிடிக்காது. நிதானமாக 20-30 நிமிஷம் சாப்பிடலாம். நன்றாக சுவைத்து மென்று சாப்பிட வேண்டும். யாரிடமும் அதைபற்றி சொல்லக் கூடாது. எனக்கு இன்ன பழம் வேண்டும் என்று கேட்கக் கூடாது. அவர்கள் என்ன கொடுக்கிறார்களோ அதை அப்படியே ஏற்றுக் கொள்ளவேண்டும். தனியாக இருக்கும் நேரத்தில் பழத்தின் அளவு குறைவு / அதிகம் தேவை என்பதை சொல்லலாம். கேட்டுவிட்டு அதை கொடுக்க முடியாமல் போனால் அதனால் தவறு நேரிடும். பாவமாக கருதப்படும். அதிகமாக யாரையும் உள்ளே விடக் கூடாது. அரட்டை அடிக்கக் கூடாது. வம்பு பேசக் கூடாது. உலக விஷயங்களை பேசக் கூடாது. காலை, மாலை உள்ளேயே நடக்கலாம். திட்டமான உடற்பயிற்சி பண்ணலாம். உட்கார்ந்து கொண்டே இருக்க வேண்டும் என்பதில்லை. காலை நீட்டி படுத்துக் கொள்ளலாம் தவறில்லை. ஆண்டவர் நிறைய சுதந்திரம் கொடுத்துள்ளார். யாருக்கும் கடிதம் எழுதக் கூடாது. பதில் சொல்வது சுருக்கமாக இருக்க வேண்டும். தேவையானவற்றை மட்டுமே எழுதி காட்ட வேண்டும்.

ஆண்டவர் குறிப்பு கொடுத்தால் யாரிடமும் சொல்லக் கூடாது. தேர்ந்த தவசிகளிடம் பின்னால் கேட்டு விளக்கம் பெறலாம். கால் கீழே வைக்காமல் பலகாமணை போட்டு வைக்க வேண்டும். காலை / மாலை தினமும் தோய்த்த ஆடைதான் கட்டிக் கொள்ள வேண்டும்.

காலை வேஷ்டியோ, புடவையோ அப்படியே மாலை உபயோகிக்க கூடாது. யாராவது பொறுப்பாக தோய்த்து மடித்து தரவேண்டும். விபூதி குங்குமம் கொடுத்தால் கை மேல் பட்டு கொடுக்கக் கூடாது. யாருக்கும் தொட்டு விபூதி தடவக் கூடாது.

குழந்தைகளுக்கு சரி. தவம் முடிந்த நாளன்று யாரையும் பார்க்காமல் குனிந்த தலையுடனே கோவிலுக்கு வரவேண்டும். அங்கு யார்மேலும் படக்கூடாது. யாரைப்பார்த்தாலும் வணக்கம் சொன்னால் போதும். மற்ற கதையை கேட்கக் கூடாது. அபிஷேகப் பால் சாப்பிட்டபிறகு ஆண்டவர் பாடலை பாடி தவம் முடிக்க வேண்டும். அதற்கு முன்னால் பாடக் கூடாது. பால் சாப்பிட்ட பிறகுதான் தவம் பூர்த்தி ஆகிறது. மீதி வைக்க கூடாது. உங்கள் வெள்ளி டம்ளரில்தான் சாப்பிட வேண்டும். வேறு பாத்திரத்தில் குடிக்க கூடாது. அன்று பூராவும் சாப்பாடு சாப்பிடக் கூடாது. 2 முறைகூட பலகாரம் சாப்பிடலாம்.

வீட்டில் தவம் ஆரம்பித்தவர்கள் முதல்நாள் இரவு கோவிலுக்கு வந்து விட்டால் வீட்டில் விளக்கு எரிந்து கொண்டிருக்க வேண்டும். பால் சாப்பிடும் வரை விளக்கு எரிய வேண்டும.

தவசிகள் 1 நாளைக்கு 5 முறை விநாயகரை வலம் வரவேண்டும்

காலை மாலை குளித்தவுடன் – 2 முறை, காலை மாலை தீபாராதனை முடிந்தவுடன் 2 முறை, இரவு படுக்கும் முன்பு – 1 முறை கட்டாயம்

1. விநாயகர் / ஆண்டவர் வலம் வர வேண்டும்.
2. தவம் ஆரம்பிக்கும் நாளில் மாலை 5 மணிக்கு பலகாரம் சாப்பிட்டுவிட வேண்டும். தவத்தின் ஆரம்ப நேரம் இரவு 8 மணி முதல் 10 மணிவரை. ஆகாரம் குறைவாக இருக்க வேண்டும். 6.30 மணிக்கு பால் பழம் சாப்பிடலாம். வெளியில் சாப்பிடக் கூடாது. தவ அறைக்குள் போன பின்பு எதையும் சாப்பிடக் கூடாது. தண்ணீர்தான் குடிக்கலாம். மறுநாள் காலை பூஜை முடிந்தவுடன்தான் பால் பழம் சாப்பிடலாம்.

ஆண்டவருக்கு தீபாராதனை காட்டி முடிந்தவுடன் நமஸ்காரம் செய்துவிட்டு இந்த நிமிஷம் முதல் மௌனம் என்று மனதில் பிரார்த்தனை செய்து மௌனம் ஆரம்பிக்க வேண்டும். உடனே அது அமுலுக்கு வந்துவிடும். மீண்டும் மௌனம் முடிந்தபிறகுதான் பேசலாம். ஏதோ மறந்துவிட்டது என்று ரூமிற்கு வெளியே போகக் கூடாது. எதுவும் பேசக்கூடாது. எழுதிதான் காட்டலாம்.

100% கட்டுப்பாடு முக்கியம் ஆண்டவர் தவசிகளை கண்காணிக்கிறார் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். விடியல் நீராட்டம் 4 மணி (காலை / மாலை) ஆகாரக் கட்டுப்பாடு 100% மௌனம் 100%-"ம்" என்று கூட சொல்லக் கூடாது. இதில் எதுவும் தவறாமல் 100% மார்க் வாங்கினால் நல்ல பலன் கிடைக்கும்.

பழம் தோல் சீவ கத்தி போன்று எடுத்து வரவேண்டும், ஜூஸ் பிழிய ஜூஸர், சாத்துக்குடி பிழிய பிளாஸ்டிக் ஹேண்ட் ஜூஸர் எல்லாம் கொண்டுவரவேண்டும். பெஞ்ச், சேர், டேபிள் பேன், பெட்ஷீட், தலையணை, சோப்பு, தே. எண்ணெய், பழம், பால் வாங்க பணம், உதவி செய்ய ஆள், படம், விளக்கு, திரி, எண்ணெய், தீப்பெட்டி, கற்பூரம், கற்பூரத் தட்டு. பஞ்சபாத்திரம் உத்திரிணி, பூஜை சாமான், மணி, கொடிகட்ட கம்பி, துணி துவைக்க சோப்பு, குளிக்க பக்கெட், சொம்பு, உதவியாளர்களுக்கு தேவையானது, நைட்லாம்ப், விசிறி, எவர்சில்வர் சொம்பு, பலகாமணை, கோலமாவு, புஷ்பம், மாலை, நைவேத்தியம், பழங்கள், தேங்காய், ஊதுபத்தி, தாம்பாளம், வெற்றிலைபாக்கு, குங்குமம், விபூதி கிண்ணங்கள், கல்கண்டு, திராட்சை, அதற்கு தட்டு, சிலேட், சாக்பீஸ், பேப்பர், பேனா, கத்தரிக்கோல், செல்லோ டேப், ஸ்கெட்ச் பென், கிளை ஆர்த்தி, ஒற்றை தீபம், வேஸ்ட் கிளாத், வேஸ்ட் பேப்பர், வேஸ்ட்

கூடை, துளசி, டெய்லி காலண்டர், ஸ்டூல், டேபிள், கொசுவத்தி, கடிகாரம், டேப்ரிக்கார்டர், ஓம்டேப், இப்படிப்பார்த்துப் பார்த்து எல்லா சாமான்களையும் கொண்டுவந்து உபயோகிக்க வேண்டும். பிள்ளையார்குப்பம் வந்தால் எல்லா அயிட்டங்களும் வேண்டும். திரு. நாயணசாமி ரெட்டியாரிடம் எதுவும் கேட்டு பெறுவது கடினம்.

மிக மிக முக்கியமானது : விடியல் நீராட்டம் காலை / மாலை இரண்டு வேளையும் சரியாக 4 மணிக்கு குளிக்க வேண்டும் 4.30 மணி என்றால் மைனஸ் மார்க் கிடைக்கும். அதனால் அது முக்கியம். 3.30 மணி வரை விழிப்பிருக்கும். பிறகு நன்றாக தூக்கம் வந்து 5 மணிக்குதான் எழுந்திருப்பீர்கள் ஏமாற வேண்டாம். 3.30 மணிக்கு கூட எழுந்து உட்கார்ந்து கொண்டால் தூக்கம் வராது. 3.45க்கு கூட குளிக்கலாம். அப்படியே மாலையிலும் சரியாக குளிக்க வேண்டும். 100% மௌனம் ம் என்று கூட சொல்லக் கூடாது. பொதுவாக தூங்கி எழும்போது யாராவது கூப்பிட்டால் வாய் தவறி பதில் வந்துவிடும். தூங்கியபோது மௌனம் மறந்துவிடும். ஜாக்கிரதை உஷார் ஏமாற கூடாது. **எப்போதும் மௌனம் ஞாபகம் இருக்க வேண்டும்.**

ஆகாரக் கட்டுப்பாடு : எதையாவது தட்டில் புதிதாக வைப்பார்கள். ஸ்வீட், வேறு ஏதாவது பட்சணம் இப்படி வைத்து ஆசைகாட்டுவார்கள். ஏமாந்தால் போச்சு. தொடவே கூடாது. ஆசையே கூடாது. எதைப் பார்த்தாலும் வெறுப்பாக ஒதுக்க வேண்டும்.

காலில் எரிச்சல் இருந்தால் தேங்காய் எண்ணெய் தடவிப் படுங்கள். காலில் ஈரம் இருந்தால் எரிச்சல் வரும். நன்றாக துடைக்க வேண்டும். தலையில் அப்படியே நன்றாக துடைக்க வேண்டும்.

கெட்ட கெட்ட கனவு வரும். யாரோ துரத்துவது போல் இருக்கும். பல பயம், சந்தேகம் எல்லாம் வரும். கவலையே படக்கூடாது. தைரியம்தான் தேவை. சில சமயம் போரடிக்கும். நேரமே போகவில்லை போல் தோன்றும். முக்கியமான நிகழ்ச்சிகளுக்கு போகமுடியவில்லையே என எண்ணும், எல்லாம் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ண வேண்டும். நன்றாக தவம் முடிந்தால் மனம் சந்தோஷமாக இருக்கும். அதற்குதான் இத்தனைபாடு.

கே.எஸ்.கே. ஸ்வாமியின் 2001–ல் நடந்த 9வது ஆண்டு தவத்தின் போது தவசிகளுக்காக வந்த பாடல் :

நித்தமும் பக்தியால் மோனத்தை கண்டு!
சித்தமும் சக்தியால் ஞானத்தில் மூழ்கி!
பித்தமும் புத்தியாய் தெருளாய் மாறி!
தத்தமும் முக்தி பெற அஸ்த அருள் புரி தாயே!

இதன் விளக்கம் : இந்த அறையில் மௌனத்தின் பெருமையை உணருகிறேன். உள்மனம் அமைதி பெற்று மெய்ஞானத்தில் மிதக்கிறது. நீங்கள் அப்படியே ஆனந்தமாக சில நிமிஷங்கள் அமர்ந்திருக்கிறீர்கள். பைத்தியகார எண்ணங்கள் எல்லாம் மறைந்து புத்தியால் தெளிவு பெறுகிறீர்கள். தவம் முடிந்து எழுந்த உடன் ஏற்படும் அநுபவம் இது. வந்திருக்கும் அனைவரும் முக்தி பேற்றை அடைய வேண்டும் என்பதையே குறிக்கோளாகக் கொண்டு அதை அடைய அருள் சக்தி அன்னையை மனமுருகி வேண்டுகிறீர்கள். அதற்காகத்தான் சிரசில் வலக்கரம் வைத்து அருள்பாலிக்க வேண்டும் என்று கேட்கிறீர்கள். ஏன் என்றால் இன்னும் சில நாட்களில் இது முடிந்து விட்டால் தொடர்ந்து அந்த

இன்பம் கிடைக்க வேண்டுமே என்ற கவலைதான். இந்த பாடலின் உண்மையான அர்த்தமாகும்.

கே.எஸ்.கே. ஸ்வாமிகள் தவத்தின் போது கேட்ட கேள்விகளும் அருட்குறிப்பின்படி வந்த பதில்களும் :

1. கேள்வி : இல்லறத்தில் இருந்து கொண்டு எல்லா வேலைகளையும் பார்ததுக் கொண்டு தவம் செய்ய முடியுமா? காட்டிற்கு போகவேண்டாம் வீட்டிலேயே இருந்து தவம் செய்ய வழி இருக்கிறதா?

பதில் : திரு. மாம்பலம் ஸ்வாமிகள் அருளிய வாக்கில் சொல்லியுள்ளார் (MBM ஒலிநாடா) நம் ஆணடவர் வழி தனி வழி என்றும் மற்ற மகான்கள் சொல்லாத ஒரு புதுவழி என்றும், வருங்காலத்தில் யாரும் காட்டிற்கு சென்று, பற்றை விட்டு தவம் செய்து பக்குவப்பட முடியாது என்பதை 100 ஆண்டுகளுக்கு முன்பே உணர்ந்துதான் நம் ஸ்வாமிகள் இந்த அருட்சட்டத்தை ஏற்படுத்தி உள்ளார்கள. இப்போது வீட்டிலேயே அமர்ந்தும், இரெட்டியப்பட்டிக்குச் சென்றும் குருபாத நிலையத்திலும் அமர்ந்து தவம் மேற்கொள்ளும் கேந்திராதிபதிகளைப் பார்த்தால் புரிந்து கொள்ளலாம்.

எல்.கே.ஜி, யூ.கே.ஜி மாதிரி முதலில் மூன்றுநாள் தவம் என்ன என்பதை காட்டி பிறகு 12 நாள், 24 நாள், 48 நாள் தவம் வருவதற்கு வழி வகுத்திருக்கிறார் நம்குருநாதர். அப்படி தவம் இருப்பவர்கள் வியாபாரிகள், ஆசிரியர்கள், விவசாயிகள், அரசாங்க உத்தியோகஸ்தர்கள், வியாபாரத்தில் ஓய்வு பெற்று வீட்டில் இருப்பவர்கள் இப்படி பலதரப்பட்ட ஆண்களும், இல்லத்தரசிகளும் இப்படி தவத்தில் இருப்பதைப் பார்க்கிறோம். 12

நாள் தவம் கிடைத்தவர்கள் பாக்கியசாலிகள். அதிகபட்சம் 24 நாட்கள் தவம்தான் மற்ற எல்லா கேந்திரங்களின் அதிபதிகளுக்கும் கிடைக்கும். ஒருசிலர் மட்டுமே அதற்கு மேல் போக முடியும்.

2. கேள்வி : இந்த தவத்தினால் என்ன நன்மை ஏற்படும்?

பதில் : அரசாங்கத்தில் ஸ்பெஷல் அதிகாரி என்று சிலரை நியமித்து அட்மினிஸ்ட்ரேஷன் (Administration) வேலைகளை நடத்த செய்கிறார்கள். கார்பரேஷன் ஸ்பெஷல் அதிகாரி முதல்மந்திரியின் அந்தரங்க செயலாளர், பிரதமமந்திரியின் அந்தரங்க செயலாளர் இப்படி நியமிக்கிறார்கள். ஐ.ஏ.எஸ். பட்டம் பெற்றவர்கள் மேலும் நல்ல அனுபவம் கொண்டவர்களுக்கு திறமையின் பேரில் எப்படி வேலையை கொடுக்கிறார்களோ, அப்படி ஆண்டவர் அருட்சட்டம் பரவுவதற்கும், அருளாட்சி பெருகுவதற்கும் ஆண்டவரிடம் அப்பாயின்ட்மெண்ட் பெறுகிறார்கள் இந்த தவசிகள். முதலில் கேந்திராதிபதிகள் ஆன பிறகுதான் இப்படி தவம் தருவதற்கு வழி வகுக்கப்படுகிறது. எப்படி உயர்ந்த பதவிக்கு அரசாங்கத்தில் நல்ல உயர்ந்த சம்பளம் தருகிறார்களோ, அப்படி இந்த தவசிகளுக்கும் அருள் அள்ளி வழங்கப்படுகிறது. அது எப்படி தெரியும் என்றால் அவர்கள் இல்லத்து விழாக்களைப் பார்த்தால் புரிந்து கொள்ளலாம்.

3. கேள்வி : தவசிகள் செய்யும் தவம் அவர்களுக்கு உடனே பலன் கிடைக்க வழி செய்கிறதா? அதை எப்படி தெரிந்து கொள்வது?

பதில் : அரசாங்கம் ஒரு திட்டம் தீட்டி இவ்வளவு கோடி ரூபாய் இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லி அதற்காக ஒரு தனி டிபார்ட்மெண்ட் ஏற்படுத்தி, அந்த பணத்தை செலவழித்து அந்த பணியை நிறைவு செய்ய சொல்கிறார்கள். பணம்

போதவில்லை என்றால் மீண்டும் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம். செலவு செய்ய செய்ய அதை சரிபார்த்து மேலும் பணம் பெறுவதற்கு வழிவகுக்கிறார்கள். அதுபோல கேந்திராதிபதிகள் செய்யும் தவத்தை கொண்டு அருள்பெற்று அதன் மூலம் அவர்கள் இல்லத்து விழா சிறப்பாக ஆச்சரியப்படும்படியாக, அருளை அழகாக அள்ளி வழங்கும் விழாவாக நடைபெறுவதை பார்க்கிறோம்.

அது எங்கிருந்து வந்தது? இவர்கள் தவத்தில் டிபாஸிட் செய்யும் அருள் பிறகு அவர்கள் வீட்டில் நடக்கும் விழாவின் போது செலவிடப்படுகிறது. திரு. கே.எஸ்.கே. இல்லத்து விழா, திரு. எஸ்.பி.எம். இல்லத்து விழா, திரு. மணி ஸ்வாமி இல்லத்து விழா, திரு. பாக்கம் ஸ்வாமி இல்லத்து விழா, திரு. ஆரணி ஸ்வாமி இல்லத்து விழாவை வருடாவருடம் காண்பவர்களுக்கு வருடத்துக்கு வருடம் என்ன வளர்ச்சி? எப்படி அந்த தவசிகள் கேந்திரம் சிறப்படைகிறது? எப்படி தீவிரமாக அவர்கள் அருட்பள்ளியில் படிப்பது தெரிகிறது என்பதை கவனித்துப் பார்த்தால் புரியும். திடீர் திடீரென்று ஆண்டவர் குறிப்பு வந்து சில மணிநேரங்களில் பல அற்புதங்களை செய்து விழாவை நடத்துவதைப் பார்த்தால் புரியும். கேந்திராதிபதிகளும் மற்ற அடியார்களும் இதை நன்றாக அலசி ஆராய்ந்து பார்த்தால் மற்றவர்களுக்கு எடுத்து சொல்ல முடியும்.

4. கேள்வி : தவசிகள் விழா நடத்தி தவத்தை செலவு செய்து விடுகிறார்களே! அவர்களுக்கு பிறகு எப்படி மேலுக்கு வர முடியும்?

பதில் : அரசாங்கத்தில் ஒரு பணியை வெற்றியாக செய்து முடிக்கும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கு மேலும் பல பதவி உயர்வுகளை கொடுத்து, கடைசியில் சீஃப் செக்ரட்டரி, பைனான்ஸ்

செக்ரட்டரி போன்று பெரிய பதவிகள் கிடைப்பது போல உள்ளூரில் பிரமாதமாக விழா நடத்தி இருக்கும் அடியார்களை பிறகு பல வெளியூர்களுக்கும் அழைத்து அவர்களை மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்தி கேந்திரம் மூலமாக பாராட்டும், பரிசும் கிடைப்பதையும் அவர்கள் வாழ்க்கை வசதியும் பின்னர் பெருகுவதைப் பார்க்கிறோம்.

இப்போது எல்லா கேந்திரங்களுக்கும் போய்வரும் திரு. கே.எஸ்.கே. ஸ்வாமி, திரு. எஸ்.பி.எம் ஸ்வாமி, திரு. மணி ஸ்வாமி, திரு. பாக்கம் ஸ்வாமி போன்றோர்களை முன்னால் எவ்வளவு பேர்களுக்குத் தெரியும்? இப்போது எத்தனை பேருக்குத் தெரிகிறது. எப்படி அவர்களுக்கு வரவேற்பு கிடைக்கிறது? அவர்கள் எப்படி விழாவை சிறப்பாக சின்ன கிராமத்திலும் செய்வதற்கு வழிவகுக்க முடிகிறது? அவர்கள் இல்லத்தில் எப்படிப்பட்ட வளர்ச்சி கிடைத்திருக்கிறது? குழந்தைகள் வளர்ச்சி, தொழில் வளர்ச்சி, வாகன வசதிகள் மற்றும் பலர் நன்கு மதிக்கக் கூடியவர்களாக இருக்கின்ற நிலை எல்லாம் எங்கிருந்து வந்தது? அதுதான் அருட்சட்டத்தின் பெருமை! இப்படி அருளைப் பெற்று பலருக்கு நன்மை செய்து கொண்டேயிருந்தால் மேலும் அருள்வந்து சேர்ந்து கொண்டேயிருக்கும். பொருளை செலவு செய்தால் குறையும் என்கிறோம். அருளை செலவு செய்தால் பெருகும் என்பதை திரு. சாதுராம் ஸ்வாமிகள் அருளிய ஸஹஸ்ரநாம அர்ச்சனை மந்திரத்தின் பொருள் விளக்கத்தைப் பார்த்தால் புரிந்து கொள்ளலாம். அருளாளர்கள் அருளை அள்ளி வழங்கி பல காரியங்களை நடத்தியதை பார்க்கும்போது நமக்கு வியப்பாக இருக்கிறது.

ரமண மஹரிஷி, இராமலிங்க ஸ்வாமிகள், இராமகிருஷ்ண பரமஹம்சர், ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகள், ஸ்ரீலஸ்ரீ அருள்சக்தி அன்னை மற்றும் ஸ்ரீ மாம்பலம் ஸ்வாமிகள், ஸ்ரீ ராகவேந்திரர் ஸ்வாமிகள் இப்படி பல மகான்கள் வாழ்க்கை சரித்திரத்தைப் பார்த்தால் புரிந்து கொள்ளலாம். அவர்கள் அடியார்கள் மூலமாக அது பெருகிக் கொண்டேயிருக்குமே அல்லாது குறையவே குறையாது என்பதை தெரிந்து கொள்ளலாம். முழுமையான மோட்சம் அடைவதற்கு இதெல்லாம் சாதனைகளாக இருந்து கடைசிவரை வழிகாட்டும்.

5. கேள்வி : மோட்சம் அடைவதற்கும், இல்லறத்திலிருந்து தவம் செய்வதற்கும் என்ன சம்பந்தம்? இல்லறத்தானுக்கு எப்படி மோட்சம் கிடைக்க வழி கிடைக்கும் என்று புரியவில்லையே? விளக்க முடியுமா?

பதில் : மோட்சம் என்பது என்ன? நாம் செய்த பாவம் புண்ணியம் இரண்டையும் சுத்தமாக பைசல் செய்து ஆக்க வேண்டும். பிராரத்துவம் முழுவதும் புசித்து அநுபவித்து விடவேண்டும். சஞ்சிதத்தை தவத்தினால், அதாவது ஞானத்தால் எரிக்க வேண்டும். ஆகாமியம் அணுவளவும் தோன்றாமல் இருக்க குருநாதரை பிரார்த்திக்க வேண்டும். இப்படி மும்மலங்களையும் ஒழித்துவிட்டால் முடிவான மோட்சம் கிடைக்க வழி இருக்கிறது என்று திரு. குருமணி ஸ்வாமிகள் ஓம் குருநாதா டேப்பில் சொன்ன விளக்கம் அனைவருக்கும் ஞாபகத்தில் இருக்கும். அதுதான் குருநாதர் வழி தினசரி வாழ்க்கையிலேயே அருள்சட்டத்தை 100% கடைபிடித்தால் கொஞ்சம் கொஞ்சமாக பாசபந்தம் விலகி, கன்மாவை முழுமையாக அனுபவித்துவிட்டு, பாப புண்ணிய செயலை மேலும் செய்யாமல் கடுந்தவம் ஆற்றினால் மோட்சம் கிடைக்கும்.

அதற்கு இவைகளெல்லாம் சாதனைகள், இராணுவத்தில் சேருவதற்கு எப்படி ஆட்களை தேர்ந்தெடுத்து கடும் பயிற்சி கொடுக்கிறார்களோ அப்படி தவசிகள் கடும் வைராக்கியத்தை வளர்த்துக் கொண்டு, இடைவிடாமல் குருநாதரையே 24 மணி நேரம் நினைத்துக் கொண்டே எல்லா காரியங்களையும் செய்து வந்தால் முடிவான முக்திக்கு வழி கிடைக்கும். அவர்களால் இதை உணர முடியும். மற்றவர்களுக்கும் புரியவைக்க முடியும்.

It has to be experienced and cannot be explained என்று ஆங்கிலத்தில் சொல்வது போல, சர்க்கரை தித்திக்கும் என்று சொன்னால் அதை எப்படி விரிவாக சொல்ல முடியும்? ஒரு சிட்டிகை வாயில் போட்டு சப்புக் கொட்டி ரசித்தால் இனிப்பு என்றால் எப்படி இருக்கும் என்று புரியும். அதுதான் அருட்சட்டத்தின் பெருமை.

6. கேள்வி : இப்படிப்பட்ட கேந்திரம் எல்லா ஊர்களிலும் வருமா? கேந்திரம் ஏற்று நடத்துபவர்களுக்கு என்ன நன்மை கிடைக்கும்? மொத்தம் எத்தனை கேந்திரம் என்று ஏதாவது கணக்கு உள்ளதா?

பதில் : அந்தந்த ஊர்களில் உள்ள அடியார்கள் விழாவிற்கு வரும்போது மற்ற கேந்திரங்களில் நடப்பதைப் பார்த்து தனக்கும் கேந்திரம் கிடைத்தால் பரவாயில்லை என்று எண்ணி அவராக குருநாதரிடம் முறையிடுகிறார்கள். பிறகு ஆண்டவர் அருளால் கேந்திரம் கிடைக்கிறது. மொத்தம் 108 கேந்திரம் என்று ஆண்டவர் குறிப்பு உள்ளது. அதில் 12 கேந்திரம் 12 மாத லட்சார்ச்சனைக் கேந்திரம், மீதி ஸஹஸ்ரநாம அர்ச்சனை கேந்திரம் 96 வரும் என்று குறிப்பில் வந்துள்ளது. இந்த 108 கேந்திரங்களில் பல தவசிகளை உருவாக்கி அவர்கள் மூலம் அருள்சட்டம் பரவுவதற்கு மேலும் பல வழிகளை வகுப்பார் என்று தெரிகிறது.

தரணி போற்றும் தவம் செய்ய தடையேதும் இல்லை.

மேலும் ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகள் அருட்கோவில் சென்னையில் ஏற்பட்ட பிறகு பல "தியான மையம்" ஏற்படும் என்று குறிப்பு வந்துள்ளது. பெசன்ட் நகரில் ஒரு தியான மையம் வரும் எனத் தெரிகிறது. போகப்போக எல்லாம் புரியும். ஆண்டவர் அருள் வேகமாக பரவி வருகின்ற நேரம் இது. "5000 ஆண்டுகளுக்கு மேல் அதிசயங்கள் மெத்த, பொய்யேதும் இல்லையடா உலகமது உய்ய" என்று ஆண்டவர் பாடியிருப்பது போல கலியுகம் பிறந்து 5000 ஆண்டுகள் ஆகிவிட்டது. இனி வரும் நாட்களில் அருட்சட்டம் மிகப்பிரமாதமாக வளர்ச்சி அடையும்.

அருட்சட்ட அடியார்கள் பாக்கியசாலிகள், அருட்சட்ட கேந்திராதிபதிகள் பெரும் பாக்கியசாலிகள். அருட்சட்டத்தில் தவம் கிடைத்த தவசிகள் மிகவும் புண்ணியம் செய்தவர்கள். ஏனென்றால் இந்த தவசிகள் மெல்ல மெல்ல பக்குவம் அடைந்து மோட்சம் அடைவதற்காக முழுமையாக பாடுபடுவார்கள். அவர்கள் உழைப்பிற்கேற்ற பலன் நிச்சயம் கிடைக்கும். அவர்கள் மற்றவர்களிடம் இருந்து மாறுபட்டவர்களாக இருப்பார்கள். மதிப்பும், மரியாதையும் பெற்றவர்களாக வாழ்வார்கள்.

–தவத்திரு. அருள்பிரகாசதாசன் ஸ்வாமிகள்

தவத்திரு. மணிஸ்வாமிகளின் அனுபவங்கள்



இந்த அகண்ட ஆகாரத்தில் அரும்பெரும் அவதார புருஷர்களையும், முனி ஸ்ரேஷ்டர்–களையும், தவசிகளையும் தோற்றுவித்து புகழ்எய்த வழிவகுத்தது நமது பாரததேசம். அதில் குறிப்பாக தென்தமிழ்நாடு எனும் போதினிலே நல்ல தேன் வந்து பாயுது காதினிலே என்ற

கூற்றிற்கு இணங்க கடந்த 18-ம் நூற்றாண்டில் விநாயகரே அவதார புருஷராய் வந்து அவதரித்தவர்தான் நம் ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகள்.

அவரது அவதாரத்தின் நோக்கம் அடைதற்கறிய மனிதப்பிறவியை நன்கு அனுபவித்து ஏக்கமாக இராது, தூக்கமாம் துக்க சாகரத்தில் அழுந்தாது, அரும்பெரும் அன்றாட நெறிகளான விடியல் நீராட்டம், மருந்தருந்தாமை, வேழமா முகனையே தொழுகை, முக்காலும் நிஷ்டை கூடிடுதல், பஞ்சமாபாதகம் தவிர்த்தல் போன்றவற்றை செவ்வனே கடைபிடித்து பிறவாநிலை அடையச் செய்தல் என்பதே. இதனை ஆண்டவர் உலா வந்த காலத்து பலருக்கு உபதேசித்து அவரவர் பக்குவத்திற்கேற்ப அனுக்கிரஹம் செய்து தவத்தின் உயர்ந்த நிலையை அடையச் செய்தார்.

ஸ்வாமிகளது பிரதான சீடரான ஸ்ரீலஸ்ரீ அருள்சக்தி அன்னை அவ்வழிஒற்றி நடந்து தான் பெற்ற பேரின்பம், மற்ற அடியார்களும் பெறவேண்டி தவம் செய்யத் தூண்டுதல் தந்த "அருள்சக்தியாய் திகழ்ந்தார்". அவருக்கு முக்தி கிடைக்க ஆற்றிய மிகக் கடுந்தவத்தை உணர்ந்த ஸ்ரீ தாய் உடையவனிடம் முறையிட்டது யாதெனில் இல்லறத்திலிருந்து கொண்டே குடும்பம், தொழில், போன்றவற்றை வைத்துக் கொண்டே அன்றாட அருட்சட்ட அனுஷ்டானங்களை செவ்வனே கடைபிடித்து நிஷ்டையின் உயர்நிலையான தவம் ஆற்றுகின்ற சக்தி வேண்டும் என்பதே. அப்படி வரம் பெற்ற ஸ்ரீலஸ்ரீ அருள்சக்தி அன்னை யாவரையும் பக்குவப்படுத்தினார்.

ஆரம்பத்தில் அருட்சட்டம் ஏற்று செவ்வனே நடந்து வருபவர்கள், நாளடைவில் சிறந்த அடியாராகி இல்லத்தில்

ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகளுக்கு சகஸ்ரநாம அர்ச்சனை நடத்தும் கேந்திராதிபதியாகி பின் ஆண்டவரிடம் தமது அருட்தாகமாகிய தவம் ஆற்றும் ஆர்வத்தை கோரிக்கையாக வைக்கின்றனர். அதனை பரிசீலித்து ஸ்ரீதாய் அவர்கள் ஆண்டவரிடம் அனுமதிப் பெற்று தருகின்றனர். ஆரம்பத்தில் இப்படித்தான் 3 நாள் மௌன விரதம் ஏற்கும் தவசியாகின்றனர்.

இப்படிப்பட்ட அருட்பாதையில் பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்பு மூன்று நாட்கள் தவம் ஆற்றும் தவசியானேன். அன்றைய சரித்திர வரலாற்றில் மாபெரும் தவசிகள் காட்டில் தனித்து வாழ்ந்து அசுரர்களாலும், மற்றவர்களாலும் தடைகள் நேர்ந்ததையும், பல இன்னல்களுக்கு ஆளானதையும் கேள்விப்பட்டுள்ளோம். ஆனால் நமது ஆண்டவர் வழியில் இல்லறத்தவம் மேற்கொண்டு 3நாள், 12 நாட்கள், 24 நாட்கள் மற்றும் மண்டலத்தவம் ஆற்றுபவர்களுக்கு எந்தவித தடையும் வந்து தமது மௌனத்தவம் ஆற்ற இயலாமற் போனதாக ஓர் நிகழ்ச்சியும் ஏற்படவில்லை. இந்த உண்மையைத் தான் இந்த நூலின் தலைப்பாக கூறியுள்ளனர்.

அருட்சட்ட அடியார்களுக்குத் தவம் என்பது ஆண்டுதோறும் ஆண்டவர் நடத்தும் பரீட்சை போன்றதாகும். இதில் எனது அனுபவம் சிலவற்றை கூறுகிறேன்.

முதலாம் ஆண்டு மிககுறைந்த ஒளியில் தவம் செய்வதையும், மனம் பலவிதத்தில் பேதலிப்பதையும், நிறைவில் அடிமை என்ன பலன் பெற்றது என ஏங்கும்போது ஸ்ரீதாய் அருட்குறிப்பில் கூறிய வாக்கு : “என்னசாமி மிகக்குறைந்த வெளிச்சத்தில் உள்ளீர்களே, அதுவே போதும் என்றால் இருக்கட்டும் என்றும், ஸ்ரீதாய் வந்தபோது காணவில்லையே என்ன வெளியில் மண்ணை அலசி தங்கம் எடுப்பதை பார்க்கச்

சென்றதோ! என்றும், குழந்தை எவ்வளவு பால் குடித்தது என்பது தாய்க்குத்தான் தெரியும்" என்றும் மூன்று நிகழ்வுகளை தெளிவுப்படுத்தியது பிற்காலத்தில் அது எவ்வளவு கருத்தாழம் மிக்கது என்பதை உணர்ந்தேன்.

தவத்தின்போது சில பணிகள் தருவதுண்டு, அப்படி ஓர் ஆண்டு "பூர்ணத்தவம்" பற்றி எழுதக் கூறினார்கள், அதை அடிப்படையாகக் கொண்டுதானோ என்னவோ தற்சமயம் "திங்கள் திருப்பணி ஜோதி இதழில்" விழாக்கள் பற்றி எழுதும் பணி கிடைத்துள்ளது. ஓர் ஆண்டு தவத்தின் பூசையில் கரும்புத் துண்டு படைத்து முடிவில் அதனை யானைக்கு அளிக்கச் சொன்னார். அதன் தத்துவந்தான் என்னவோ அறியேன். சமீபத்தில் 24நாட்கள் மௌன தவத்தில் "அருட்சட்டத்திருவிளக்கு" என்ற ஸ்ரீமத் மாம்பலம் சுவாமிகள் இயற்றிய நூலின் இரண்டாம் பாகம் தயார் செய்து அது எப்படி அமைய வேண்டும் என்பதையும், வெளியிடும் நாள், அதன் விலை என்பன யாவற்றையும் குறிப்பில் அளித்தார். அதன்படி அவற்றை சிரமேற்றுச் செய்தேன்.

இப்படியாக எல்லா தவசிகளுக்கும் தவநாட்களில் இறை சிந்தையோடு கூடவே அடியார் உலகத்திற்கு அனுசரணையாக உள்ள சில பொறுப்புகளைக் கொடுத்து அதை செவ்வனே நடத்த ஆக்கமும், ஊக்கமும் தந்து பக்குவப்படுத்தி அடியார்களை அணுக்கத் தொண்டராக்குகிறார். அருட்சட்டம் பன்மடங்கு வளர்ச்சிப் பெற்று தற்சமயம் ஆண்டவரது கொள்கை உலகமெங்கும் பரவி வருவது நிதர்சனமான உண்மை. உலகம் போற்றும் வகையில் தனித்தவக் கொள்கையை அடியார்கள் ஏற்று நடத்துவதற்கு தடையேதும் இராமல் பரிபாலித்து வருகிறார் நம் ஆண்டவர் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

தரணி போற்றும் தவம் செய்ய தடையேதும் இல்லை.

எனவே ஏதும் சிரமமில்லாமல், செலவுகள் இல்லாமல், உடல்நலக்குறைவின்றி, மனநிறைவு தந்து, முக்திக்கு வழிகோலும் மௌனத்தவத்தை அடியார்களாகிய நாம் ஆண்டவரிடம் விரும்பிக் கேட்டு அதன்படி நெறியாக நடந்து பலன்பெறுவோமாக!. ஆண்டவர் முன்னவனாரிடம் வேண்டிப்பெற்ற வரத்தை நிறைவேற்ற ஓயாமல் உழைத்து சதாசர்வகாலமும் அடியார்களின் கூடவே இருந்து வழியினைக் காட்டி, குணங்களை எடுத்துரைக்கும் மெய்க்குருவாக நமக்கு கிடைத்துள்ளார். அவ்அரும்பெரும், மாபெரும் குருவினைப் போற்றி வணங்கி வளம் பெற்று முக்திப்பேற்றை அடைவோமாக!.

நமது ஆண்டவர் எப்படி ஓர் கருணைமிகு வள்ளல் என்பதை அடியார்களின் அன்றாட வாழ்க்கையில் உணர்வதைவிட தத்தம் மௌனத்தவத்தின் போது வெகுவாக உணர்ந்து ஆனந்தப்பட வாய்ப்பு உள்ளது என்பதை யாவரும் அநுபவித்து உணரக்கோருகிறேன்.

– சா. சுப்பிரமணியன் (மணி ஸ்வாமி)

தவத்திரு. எஸ்.பி. மூர்த்தி ஸ்வாமிகளின் அனுபவங்கள்

அருட்சட்ட அடியார்களுக்கு அடியேன் ஆற்ற வேண்டிய பணி



அருட்சட்டத்தில் சேர விரும்பும் பக்தர்களுக்கு ஆவண செய்தல், அடியார்களின் சந்தேகங்ளை ஆண்டவருடைய அருட்குறிப்பின்படி உணர்ந்து விளக்கமளித்து சந்தேகங்களை தீர்க்க பாடுபடுதல்.

கேந்திரங்களைப் பெற்று விழா நடத்த ஆர்வம் உள்ளவர்களுக்காக ஆண்டவரிடம் தாக்கல் செய்து கேந்திரம் கிடைக்க செய்து பிறகு அங்கு சென்று அதற்கான ஏற்பாடுகளை செய்தல்.

தவசிகளுக்கு தேவையான ஆலோசனை வழங்கி, உணவு எடுத்துக் கொள்ளுதல், விரதம் இருக்கும் முறை., இருக்க வேண்டிய காலம், இருக்க வேண்டிய இடம், மற்றும் மௌனநாட்களில் அவர்களை கவனித்து விளக்கம் அளித்தல் போன்றவை.

அடியார்களுக்கு உற்சாகமூட்டி விழா நடத்துவதற்கு பல ஆலோசனைகளை சொல்லி அவர்களுக்கு பொது நிதியில் உதவி வேண்டுமானாலும் வழங்கி, அருள்சக்தி அன்னை ஆஸ்ரம குழுவால் எல்லா சேவைகளையும் செய்வதற்கு வழி வகுத்து, இடைவிடாது பாடுபடவேண்டியது.

ஒவ்வொரு விழாவிற்கும் அருள்வாக்கு எழுதி அனுப்பினதை முறையாக படிக்கிறார்களா, அதனால் அடியார்களுக்கு பயன் இருக்கிறதா என்று சரிபார்த்து ஆவன செய்வது.

கோடி அர்ச்சனை, நவராத்திரி விழா, குருபூஜை விழா, ஜெயந்தி விழா மற்றும் சிறப்பாக நடக்க வேண்டிய விழாக்களை பற்றி முன்கூட்டியே அடியார்களுக்கு தெரிவித்து, அவர்களுடைய பங்கையும் தெரிவித்து, அதன்மூலம் அவர்கள் அருள்பெற வழிவகுத்தல் மற்றும் புதிய அடியார்கள் சேருவதற்கு வாய்ப்பளித்தல், புத்தகம், போட்டோ போன்றவற்றை நல்ல முறையில் விநியோகிக்க வழிவகுத்தல் போன்றவையெல்லாம் அடங்கும்.

அருள்பிரகாச தாசன் பட்டமளிப்பு விழா

7.10.2007 அன்று நடைபெற்ற தவசிகள் சந்திப்பின் போது நவஜோதி அருள்சக்தி அன்னை காட்சி

அருட்சட்டத்தைப் பற்றி நன்றாக புரிந்து கொண்டு அதை கேந்திராதிபதிகளுக்கு எடுத்துச் சொல்லி, அந்தந்த ஊரில் அவர்கள் எப்படி செயல்படவேண்டும் என்பதை அடிக்கடி ஆணித்தரமாக சொல்லி எல்லாம் நடத்திடல் வேண்டும்.

ஆண்டவருடைய குறிப்பும் விளக்கமும் எப்படி அழகாக வருகிறது? அது எப்படி செயலாக்கப்படுகிறது? 100க்கு 100 அது உண்மையான நிகழ்ச்சி என்று அடியார்களுக்கு எப்படி புரியவைக்கிறது? மேலும் அருட்சட்ட அடியார்கள் தீவிரமாக செயல்பட அது எப்படி உதவுகிறது? என்று கவனித்து கொண்டேயிருப்பது.

சிறப்பு கேந்திரம் தேர்வு மூலமாக கண்டெடுத்து, அப்படி செயல்பட்டவர்களுக்கு பரிசும், பாராட்டும், மற்றும் நல்லாசிரியர்களுக்கு பரிசும் பட்டமும் அளிப்பது, மற்றும் குழந்தைகள் நிகழ்ச்சியில் அவர்களுக்கு உற்சாகம் ஏற்பட வழிவகுப்பது, பால்குடம் அபிஷேகம், கனகாபிஷேகம், சங்கு அபிஷேகம், சிறப்பு அலங்காரம், விளக்குபூஜை, புறப்பாடு. உற்சவம் இப்படி எது செய்தாலும் அதிலேயே புதுமையும் நன்றாக மனதில் பதிந்து நல்ல பலன் கொடுக்கும் விதத்தில் ஏற்பாடு செய்தல் போன்றவைகளாகும்.

24மணிநேரமும் ஆண்டவரைப் பற்றியே சிந்தித்துக் கொண்டு, அருள்சட்ட பெருமைகளை ஒவ்வொருவருக்கும் நேரம் கிடைக்கும் போதெல்லாம் விளக்கி, அவர்களும் ஆர்வமாகவும், தீவிரமாகவும் செயல்பட வழிவகுத்தல் வேண்டும்.

கருங்கல் கோவில் திருப்பணி, ரங்கநாதன் தெரு கோவில் திருப்பணி, மற்றும் அடியார்களுக்கு தேவையான வசதிகள் இரெட்டியப்பட்டியிலும், பிள்ளையார் குப்பத்திலும் செய்து தருவதற்கு பாடுபட வேண்டும்.

–தவத்திரு. எஸ்.பி. மூர்த்தி ஸ்வாமிகள்

தவத்திருமாட்டி இந்திரா தாயின் அனுபவங்கள்

உலகில் பிறந்த நாம் அனைவரும் இறைவனை அடைய சுலபமான வழி தவம்தான் என்று தெரிந்திருந்தாலும் மஹான்களின் அருளாசியினால்தான் மனிதர்கள் தவம் செய்ய முடியும். தன்னை அறிவதுதான் தவம் என்பதாகும். தவம் கூடுவதற்கு பல யுக்திகள் உள்ளன அவற்றைப் பார்ப்போம்.

இறைவனிடம் தோன்றும் அளவற்ற அன்பே பக்தி என்பதாகும். கருமம், யோகம் இவைகளைக் காட்டிலும் பக்தி பெரியது. ஏனெனில் கர்மமும் யோகமும் பயனை நாடியே செய்யப்படுகின்றன. அமைதியை தருவது ஞானம், ஆனந்தத்தை தருவது பக்தி. பக்தி வழியில் சென்று ஞானத்தை அடைய முடியும். தவத்தில் வெற்றி காண நாம ஜபம் முக்கிய பங்கு வகிக்கிறது. இறைவனின் நாமத்தை சொல்வதால் அத்தவம் பரிசுத்தமாகி தரமானதாக தரணி போற்றக் கூடியதாக தவம் மேலோங்கி காணப்படுகிறது. தவம் இருந்தால் மூன்று லோகங்களுக்கும் சென்று வரலாம். உலகையும் உடலையும் விட்டு உயிர்புறப்படும்போது தவம் ஒன்றுதான் பெரும்துணையாக இருந்து எக்காலத்திலும் அழியாது வந்து உதவக்கூடியது.

"தவம்" என்றால் என்ன என்று சிந்திப்போம். தவம் என்றவுடன் யாரும் அஞ்சிவிடக் கூடாது. காட்டிற்குள் செல்வது, பட்டினி கிடப்பது, அக்னியின் நடுவே நிற்பது, ஒரு காலில் நிற்பது இவைகள் தாம் தவம் என்று கருதக் கூடாது. இவைகள் தவம் செய்ய சிலர்

பயன்படுத்திய யுக்தியாகும். தவம் என்பது தனக்கு வருகின்ற துன்பத்தை மனதார தாங்கிக் கொள்வது, இன்னொரு உயிருக்கு மனதார துன்பம் செய்யாமல் இருப்பது இந்த இரு தன்மைகளும் சேர்ந்த ஒரு பண்பே தவம் என்பதாகும்.

"துயருறும் உயிரைக் கண்டால் துயரறச் செய்தல் வேண்டும். பயமில்லா மனதும் வேண்டும், பசியிலா பக்தி வேண்டும்" என்று ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகள் கூறியுள்ளார். திருவள்ளுவர் திருக்குறளில் "உற்ற நோய் நோன்றல் உயிர்க்குறுகன் செய்யாமை அற்றே தவத்திற்கு வழி" இப்படிப்பட்ட தவ நெறியை ஒவ்வொரு மனிதனும் கடைபிடிக்க வேண்டும். தவம் செய்வதற்கு பெரிதும் உதவுவது மனம்தான். அந்த மனதை அடக்க நினைத்தால் அலையும், மனதை அறிய நினைத்தால் அடங்கும். மனதை அடக்க எளிதான வழி குருவிடம் சரணாகதி அடைவதுதான். மனம் மவுனமாக இருக்க பழக வேண்டும். மனம் நினைத்ததைதான் வாய் பேசும், வாயால் பேசும் போது எந்த நிலையிலும் உண்மையே பேச வேண்டும், அளவோடு பேச வேண்டும், இனிமையாக பேசவேண்டும். இப்படி இருந்தால் எளிதில் தவம் கைகூடும். தவம் செய்வதால் குருவினுடைய கிருபையும் இறைவனுடைய கருணையும் கிடைத்து இரண்டறக் கலக்கும் நிலையும் பெறமுடியும்.

உலகில் பிறந்த அனைவரும் எக்காலத்திலும், எந்த நேரத்திலும், எந்த நிலையிலும், எந்த இடத்திலும், எந்த வயதிலும் தவம் செய்யலாம். எப்படி நாம் விடும் மூச்சுக்காற்றை தடைசெய்ய முடியாதோ அதுபோல நாம் தவம் செய்ய எந்த தடையும் இல்லை. ஆகையால் நாம் எல்லோரும் தவம் செய்து முக்தி அடைவோமாக.

இல்லறத்தில் இருந்து கொண்டே முக்தி அடைய தவம் என்னும் சுலபமான வழியை சொல்லிக்கொடுத்த ஆண்டவர்க்கு மிக்க நன்றி. ஞானம் அடைவதற்காகத்தான் தவம் செய்கிறோம். மௌனம் என்பது ஞானத்தை அடையும் வழி என்று பொருள். பேசாமல் மட்டும் இருப்பதால் ஞானம் கிட்டிவிடாது. வாக்கு மௌனம்-வாய் திறந்து எதையும் எதையும் பேசாமல் இருப்பது. காஷ்டமௌனம் உடலால் எந்த வேலையும் செய்யாதிருத்தல். மனோமௌனம் மனதால் எதையும் சிந்திக்காதிருந்தால் ஒரு காரியம்நடக்க வேண்டுமெனில் மனம், இந்திரியம், புலன் மூன்றும் சேர்ந்தால் தான் நடத்த முடியும். மனம் நினைக்காவிட்டால் ஒரு காரியமும் நடக்காது. ஆகையால் மனோ மௌனமே ஞானத்திற்கு முக்கிய சாதனமாகும். நம்பிக்கை அதிகரித்தால் ஞானம் அதிகமாக இருக்கும். தவசிகள் தவம் செய்வதால் பல வரங்களை பெற முடியும்.தவம் செய்யும் காலத்தில் ஆண்டவர் கூடவே இருந்து உரையாடுவதால் மனம் குதூகலிக்கும்.

2002ம் ஆண்டு தவத்தின் போது தவம் செய்ய மனம் தடையாக இருக்குமோ? என்று கேட்டதற்கு ஆண்டவர் சில உபதேசங்களை என் மனதிற்கு புரியும் படி கூறினார்.அவற்றை இப்போது பார்ப்போம். சாதாரணமாக மனிதனுக்கு மனிதன் உபதேசம் செய்வது கேட்காமலே இலவசமாக கிடைக்கக் கூடியது. ஆனால் மகான்களிடமிருந்து உபதேசம் பெற மன்றாட வேண்டும். அப்படிப்பட்ட நல்ல உபதேசங்கள் மனதை தூய்மை செய்து அமைதியாக இருக்க வழி வகுக்கும்.

ஆண்டவர் கூறியது : மனதிற்கு பயம் கூடாது, சந்தேகமும் கூடாது என்றார். ஏனெனில் மனிதனை மரண பயமும், வீண் சந்தேகமும் கொள்ளாமல் கொன்று விடும் என்றார். மனிதன் ஆசையையும் சுய நலத்தையும் விட்டு விட்டு அன்போடும்

இரக்கத்தோடும், கருணையோடும், அறிவு, தெளிவு, சாந்தி என்ற மூன்றும் கிடைத்து சிறப்பாக வாழலாம் என்றார். ஆசையும், பற்றும்தான் மோட்ச நிலைக்கு தடை செய்ய கூடியவை என்றார்.

ஆசையின் மறு பெயர் மாயை, மாயை என்றால் பொய்யான ஒன்று உண்மையைபோல் காட்சி அளிக்கும். பிரம்மத்தை தவிர எல்லா இடங்களிலும் மாயை இருக்கும். இயற்கையின் தொடக்கம்தான் பிரம்மம். ஆதியை கண்டு பிடிக்க முயற்ச்சித்தால் அந்த கரணம் ஒடுங்கி விடும். பிரம்மத்தை காண முயற்சி செய்து பயிற்சி எடுத்துக் கொள்வதுதான் தவம் என்று கூறி முடித்தார். ஆண்டவர் பாடலில்

மனமே நீயிந்த ஜெகத்தனில் வாழ்க்கையை
மாயமென்று அறிந்திடு நிசமே என்று கூறியுள்ளார்.

ஸ்ரீலஸ்ரீ அருள் சக்தி அன்னை அவர்கள் ஆண்டவரின் அருள் சட்டக்கொள்கைகளை அனுபிசகாமல் பின்பற்றி தவமிருந்து அருள் பெற்று சிறந்து விளங்கி நம்மோடு இருந்து வாழ்ந்து காட்டியுள்ளார். அருள் சக்தி அன்னை அவர்கள் இன்றும் நம்மோடு மறைந்தும் அருள் புரிந்தும் வருகிறார். அன்னை அவர்கள் கூறுவார் அதாவது உடலை வளர்ப்பது பெற்றோர், அறிவை வளர்ப்பது ஆசிரியர், உயிரை வளர்ப்பது ஆண்டவர் என்பார். அதை நம்மால் நிமிடத்திற்கு நிமிடம் உணர முடிகிறது.

குரு உயிருக்கு ஒப்பானவர். உயிர் இல்லையெனில் வாழ்க்கை இல்லை. குருவின் துணைக்கொண்டு எதையும் சாதிக்கலாம். 2005-ம் ஆண்டு குருவே துணையென கொள்வீர் துணிந்து என்று குறிப்பு கொடுத்தார். அதில் குருவிடம் நாம் எந்தளவிற்கு நெருங்கியிருக்கிறார்கள் என்பதை நம்முடைய செயல்கள் காட்டிக்கொடுத்து விடும் என்றார். உதாரணமாக : நிழலை பார்ப்போம், முதலில் நிழலை நாம் தொடர்ந்து போவது போல்

தோன்றும். பிறகு நிழல் நம்மை தொடர்வது போல் இருக்கும். பிறகு நிழல் நம்மோடு இரண்டறக் கலந்துவிடும். அப்படி நாம் குருவை தொடர்ந்து அவர் சொற்படி நடக்க வேண்டும். பிறகு குருவானவர் நம்மை கண்காணித்துக் கொண்டே அருள்பாலிப்பார். பின்பு குருவுடன் இரண்டறக் கலந்து குருவேறு நாம்வேறு அல்ல என்பதை புரியவைப்பார் என்றார்.

தவசிகள் ஏதாவது தவறு செய்தால் அவை குருவிற்கு இழுக்கை ஏற்படுத்திவிடும். ஆகையால் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். தவம் மேற்கொள்வோர்கள் அன்பாக இருக்க வேண்டும். கோபம், சந்தேகம், பயம் கூடாது. நிதானம், உண்மை, நேர்மையாக இருக்க வேண்டும், கலைநயம் தேவை, அதிக தூக்கமோ, பேச்சோ, பதற்றமோ, கவலையோ கூடாது எப்போதும் இன்முகத்தோடு இருக்க வேண்டும். இப்படி இருந்தால் தவசிகளுக்கு சகஜநிஷ்டை கூட தடையேதுமில்லை. பூ, புல், மரம், செடி, கொடி இவைகள் கூட தவம் செய்கின்றன. தனக்காக வாழாமல் இறைவனுக்காகவே வாழ்கின்றன என்று புரிய வைத்தார். 2008-ம் ஆண்டு தவத்திற்கு 16 வரிகளில் திரு. அருள் பிரகாசதாசன் ஸ்வாமிகளிடம் ஒரு பாடலை எனக்காக கொடுத்தார். அதில் வழிகாட்டும் வான்பொருள் வேண்டி வந்திடும் பக்தர்களுக்கு எளிதாக விளக்கம் வரும் எழுத்தினை எழுதிக்காட்டு என்று கூறினார். அதைபோல் இன்றும் பல அடியார்களுக்கு எளிமையான விளக்கத்தை கூற ஆண்டவர் வழிவகுத்துள்ளார். அதே போல் அந்த பாடலில்

பெருமை பெறவேண்டும் என்று நான் என்றும் கேட்டதில்லை
அருமை தெரிந்து அடியார்கள் ஆனந்தம் கொள்ள வேண்டும்
வறுமை நீங்கி வளம் பெற்று விட்டால் பலரும்
உரிமையாக உன்னிடம் அருளை அள்ளி
செல்வார்களன்றோ என்று கூறினார்.

அதிலிருந்து பல அன்பர்கள் அடியார்களாகிய அருளை அள்ளிக் கொண்டு செல்கிறார்கள் என்பதை கண்கூடாக காண முடிகிறது. இந்த 2008-ம் ஆண்டு தவத்தை மெச்சி

யுகமதில் தவம் பூர்ணமாக செய்து
ஜகமதில் புகழும் அருளை பெற வேண்டி
அகமதில் மகிழ்ந்து செய்த செயலுக்கு
நகம் அழித்து செயல்பட வேண்டாமன்றோ

என்று ஆண்டவர் கூறியதிலிருந்து நகத்தை வெட்டாமல் இருக்கிறேன். ஒவ்வொரு வரிகளில் பல அர்த்தங்கள் உள்ளன. இப்படியெல்லாம் ஆண்டவர் கூடவே இருந்து கொண்டு நமக்கு சொல்லி கொடுப்பார்.

அதே போல் 2009-ம் ஆண்டு தவத்திற்காக ஒரு பாடல் வந்தது. அந்த பாடலில் பல அர்த்தங்கள் புதைந்து இருந்தது. அவற்றை பார்ப்போம்

பட்டிக்குப்பம் பாய்ந்து பாய்ந்து வலம் வருவாய்
தட்டிக்கேட்கும் தாயாக மாறி வலம் வரும்போது
குட்டிநகரம் சிருஷ்டி செய்து காட்டலாமே
எட்டி நின்று பார்க்கும் கூட்டம் பெருகிடாதோ

அதே போல் 2010 கோடி அர்ச்சனையின் போது இரெட்டியப்பட்டியில் ஊர் மக்களிடம் பழகும் வாய்ப்பு கிடைத்தது. இன்னும் பிள்ளையார் குப்பத்தில் சென்று வாழ்நாள் முழுவதும் அருள்பணி செய்ய ஆண்டவர் அருள்புரிய வேண்டும். அருள்சக்தி அன்னை ஆஸ்ரமம் அருகில் வாழ்ந்து அன்னையோடு உறவாட அருள்புரிய வேண்டும்.

பின்பு தவத்தைப் பாராட்டி ஒரு பாடல் கொடுத்தார் அதில் என்னுடைய குணாதிசயத்தையும் ஆண்டவருடைய அருளைப் பற்றியும் கூறியுள்ளார். அதில்

காதை நீட்டி கேட்கும் பழக்கம் காதணி விழாவின் போதே
வந்தது.
பேதை இவள் என்று பலர் எண்ணியிருந்தார்கள் அதனால்
சீதை போன்ற பொறுமையான பெண் என பெயர் எடுத்தேன்
போதனை பெற்று குருஅருள் என்றும் வழிநடத்துகிறாரே

கடந்த 10 ஆண்டுகளாக தவம் செய்து வந்தாலும் ஒன்றுமே தெரியாத நம்மை இப்படியெல்லாம் அவ்வப்போது பாராட்டி அருள்புரிகின்ற ஒரே குரு ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகள்தான் என்று கூறினால் அது மிகையாகாது. இப்படி 3 நாள், 12 நாள், 24 நாட்கள் தவம் என்று படிப்படியாக உயர்த்த வழிவகுத்து அவ்வபொழுது ஆண்டவர் குறிப்பை கேட்டு தவசிகளுக்கும், அடியார்களுக்கும் தெரியப்படுத்தி எங்களோடு அன்போடு நித்தம் நித்தம் அருளை ஆண்டவரிடம் இருந்தும் அன்னையிடம் இருந்தும் வாங்கி வழங்கிக்கொண்டிருக்கின்ற திரு. அருள்பிரகாசதாசன் ஸ்வாமிகளுக்கு கோடான கோடி நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மனதை தெளிவோடு வைத்துக் கொண்டு அருட்சட்ட நெறியை எக்காலத்திலும் கடைபிடித்து நம்பிக்கையோடு வாழ்ந்து இறைவனிடம் நம்மை அர்பணித்து ஒரே குருவை வேண்டி உண்மையாகவும், விவேகத்துடனும், வைராக்கியத்துடனும், விடாமுயற்சியுடனும், அனுஷ்டித்து தியானம் சதா சர்வகாலமும் செய்தால் தரணி போற்றும் தவம் செய்ய தடையேதும் இல்லை என்று கூறி ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகளின் அடியார்கள் என்று கூறி மண்ணுலகிலும், விண்ணுலகிலும் வீரநடை போட்டுக் கொண்டு செல்ல முடியும். அடியார்கள் அனைவரும் தவசியாகி அருளை பெற பாடுபடுவோமாக.

–தவத்திருமாட்டி இந்திரா ரவிநாராயணன்

தவத்திரு. ரங்கநாதன் ஸ்வாமிகளின் அனுபவங்கள்



இந்த பூவுலகை திருத்துவதற்கு பகவான் பல நேரங்களில் பல இடத்தில் பல அவதாரம் செய்துள்ளார். அது போல் கோடானு கோடி மக்களை கரையேற்ற விநாயகப் பெருமானே மனித உருவெடுத்து வந்து நம்மை ஆட்கொண்டார். அவர் தான் ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகள். பனிரெண்டரை ஆண்டுகாலம் குற்றாலக் குகையில் கடும் தவமாற்றி ஐங்கரத்தானான விநாயகப் பெருமானிடம் வரம் பெற்று பெரிய பொக்கிஷத்தை கையில் வைத்துக்கொண்டு விநாயகரை வேண்டியும் ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகள் ஏற்படுத்திய 16 அம்ச சட்ட அனுஷ்டானங்களை பிழறாமல் கடை பிடித்து வரும் அடியார்களுக்கு எல்லா வகையான அருளையும் செய்ய காத்துக்கொண்டு இருக்கிறார். இல்லறத்தில் இருந்து கொண்டே தொழிலையும் செய்து கொண்டே தவம் செய்ய முடியும் என்று சொன்னவர் ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகள்தான். பூர்வ ஜென்மத்து நற்பயன் இருந்தால் மட்டுமே இந்த ஜென்மத்தில் சட்டஅடியாராக முடியும். கிடைத்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொண்டு பூரண சரணாகதி அடைந்து அனைத்தும் நீரே. என்னை ஆட்டிவைப்பதும் ஆட்கொள்வதும் நீரே. குருநாதா என வேண்டி வரும் பக்தர்களின் கண்ணீரை துடைக்க பகவான் ஓடோடி வருவார். இராமாயணத்தில்வரும் ஆஞ்சநேயரை இராமபிரான் சென்று ஆட்கொண்டார். சிஷ்யன் குருவை தேடவில்லை. குருவே சிஷ்யனை தேடி வருகிறார். இது ஒரு பெரும் பாக்யம். தன் பலமும் தெரியவில்லை. தன்னுடைய பூர்வ ஜென்மாவின் வாசனையும் அறியவில்லை.அப்படிப்பட்ட ஜென்மாவை கடைதேற்ற வேண்டும் என்ற எண்ணத்திலேயே ஸ்ரீ இராமபிரான் அனுமானை ஆட்கொண்டார்.

பல ஆண்டுகளாக வெறும் பிண்டமாக அனுமனே கதி என இப்பேதை வளர்ந்து வந்ததை அறிந்த ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகள் அடியேனை ஆட்கொள்ள திருவுள்ளம் கொண்டார். அவர் அடியேனை ஆட்கொண்ட காலமும் பெறும் போராட்ட காலமாக இருந்தது. இல்லத்தில் இருந்த அனைவருக்கும் வியாதி, மருத்துவர், மருந்து என இருண்டிருந்த காலம். கலங்கரை விளக்காக காட்சி கொடுத்து எங்கள் குடும்பத்தை கரையேற்ற திருவுள்ளம் கொண்ட குருநாதர் எங்கள் குடும்பத்தார் அனைவரையும் சட்டம் மேற்கொள்ள பணித்தார். அது 1998ம் ஆண்டு.

அதே ஆண்டிலேயே அடியேன் இல்லத்தில் 1998 நவம்பர் மாதம் ஸ்ரீஇரெட்டியப்பட்டி ஸ்வாமிகளுக்கு ஸஹஸ்ரநாம அர்ச்சனை பெருவிழா நடத்த அருள் பாலித்தார். கடலிலே தத்தளித்துக் கொண்டிருந்த எங்களுக்கு ஏதாவது கட்டை கிடைத்தால் அதை பிடித்துக்கொண்டு நீந்தி கரை ஏறலாமே என்று தவித்துக் கொண்டிருந்த எங்களை கப்பல் மூலம் கரை ஏற்றினார். "உழைப்பு உயர்வு தரும்".உழைத்த உடல் உரம் பெறும். இவைகள் மனிதனுக்காக கூறப்பட்ட பழமொழிகள். ஆனால் மனிதனுக்காக இறைவன் உழைப்பது பற்றி யாராவது சிந்திக்கிறோமா? இறைவன் நம்மை கடை தேற்ற வேண்டி சதா சர்வகாலமும் நமக்காக இமை மூடாமல் உழைத்து வருகிறார். 1999-ம் ஆண்டே அடியேனுக்கு மூன்றுநாள் தவம் கிடைத்தது. புதிய அனுபவம் மௌனம், உபவாசம் (ஆகார கட்டுபாடு) தனிமை . முதல் ஆண்டு தவமே இன்பமான ஆண்டாக அமைந்தது. அடுத்த ஆண்டே (இரண்டாம் ஆண்டு) 3 நாள் தவத்தை தொடர்ந்து அதே ஆண்டில் 12 நாள் தவத்தை அருளினார் நம் ஆண்டவர்.

முதல் 12 நாள் தவத்தில் பயம் கலந்த மகிழ்ச்சி கிட்டியது. ஆண்டவரிடம் எப்படி பேச வேண்டும், குருநாதர் எப்படியெல்லாம் கேள்வி கேட்பார், பதில் எப்படி கூற வேண்டும் என்பன போன்ற பல விளக்கத்தை தவத்திரு கே.எஸ்.கே. ஸ்வாமிகள் , ஒரு புதிய மாணாக்கனுக்கு விளக்குவது போல் விளக்கி கூறியதன் பலன் ஆண்டவரை சதா தியானிக்கவும் ஆண்டவர் அருளை வேண்டி முறையிட்டு அழுததையும் இங்கு குறிப்பிட்டே ஆக வேண்டும். அழுத பிள்ளைதான் பால் குடிக்கும் என்பார்கள். ஆண்டவர் எங்கள் குடும்பத்தை ஒருதாய்ப் பூனை தன் குட்டிகளுக்கு வலிக்காமல் பத்திரமாக பாதுகாப்பாக தன் வாயால் கவ்வி செல்லுமோ அப்படி எங்களை பாதுகாத்து வருகிறார்.

2003ம் ஆண்டு தவத்தில் ஆண்டவர் ஓர் அற்புத நிகழ்ச்சியை காட்டினார். பொற்கிழியை கையில் கொடுத்து ஆசிர்வதித்தார். அதன் பலன் 2004 ல் அதுவரை செய்திருந்த அரசாங்க வேலையில் இருந்து என்னை விடுவித்து சுயதொழிலில் ஈடுபட வைத்தார். அதன் பலனால் தொடர்ந்து கட்டிட ஒப்பந்தக்காரராக பணிபுரிந்து தேவையான பொருளையும் சம்பாதிக்க வழி வகுத்துள்ளார்.

பல நிகழ்ச்சிகளை காட்டி விளக்கமும் தந்து வாழவைத்து வருகிறார். ஆண்டவரே சரணாகதி என அடைந்து அவரின் திருவடிகளை சிக்கென பற்றிக்கொண்ட அடியார்களை அவர் விடுவதும் இல்லை.விட்டு விலகுவதும் இல்லை. ஆண்டவரே கதி என இருப்பதால் 2004ம் ஆண்டு தீட்சையும் கிட்டியது.

இதன் பலனால் தான் 2007 ம் ஆண்டு புரட்டாசி மாத லட்சார்ச்சனை கேந்திரமாக பதவி உயர்வு கொடுத்தார்.தொடர்ந்து ஒவ்வொரு அடியார்க்கும் தொண்டு செய்யும் பாக்யத்தை கொடுத்து வருகிறார்.

12வது கோடி அர்ச்சனைக்கு பொறுப்பேற்று அடியார்களுக்கும் ஆண்டவருக்கும் தொண்டு செய்யும் பாக்கியத்தையும் கொடுத்துள்ளார்.

"கேட்டதை கொடுப்பார் கிரமமாக நீ இருந்தால்" என்பது போல் அனைத்து அடியார்களுக்கும் தவசியாகும் வாய்ப்பை தந்து ஆண்டவருடன் அணுக்கத் தொண்டனாக இருக்கும் வாய்ப்பை பெற அனைத்துசட்ட அடியார்களும் முயற்சிக்க வேண்டும். இதற்கு தேவை முயற்சி சரணாகதி இதுவே இந்த அடியேனின் பிரார்த்தனை.

வாழ்க சட்ட அடியார்கள். வளர்க ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமகளின் அருள் சட்டம்.

–தவத்திரு. ரங்கநாதன் ஸ்வாமிகள்

தவத்திருமாட்டி பவானி தாயின் அனுபவங்கள்



உலகில் அவ்வப்போது பல மஹான்கள் தோன்றிக்கொண்டே இருக்கிறார்கள். எப்படியாவது மக்களை கடைத்தேற்ற வேண்டும் என்பதனால் பல மஹான்கள் பல வழிகளில் உருவெடுத்து வருகிறார்கள். இல்லறத்தில் இருந்து கொண்டே தவம்செய்து முக்தி பெறலாம் என்பது ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகள் கண்டுபிடித்த புதிய யுக்தி.

உலக மாயையில் சிக்கிக்கொண்டவர்களில் தவம் இருக்க ஆயிரத்தில் ஒருவர்தான் அந்தகாலத்தில் முயற்சிப்பார். அவர்களில் சிலர் வறுமையினாலும் குடும்ப சூழ்நிலை காரணமாகவும், விரக்தியினாலும் வீட்டை விட்டு புறப்படுவார்கள். காட்டிற்கு சென்றுதான் தவம் செய்ய முடியும் என்று நினைத்து சென்றால்

விலங்குகளுக்கு இறையாவார்கள். சிலர் கோவில்களிலும், மலைகளில் அமர்ந்து கொண்டும் நாள் முழுவதும், வருடம் முழுவதும் அமர்ந்து தவம் செய்வார்கள். இப்படி மழையிலும், வெயிலிலும், உணவின்றி, விரக்தியினாலும், கோபத்தாலும், ஏமாற்றத்தாலும், வறுமையினாலும் தவம் செய்யத் தொடங்குவதால் தனக்கு தேவையானவை தவத்தின் பலனால் கிடைத்தவுடன் தவக்கோலத்தை விட்டு வெளியே வந்து விடுகிறார்கள். சித்துவிளையாட்டில் நாட்டம் வருகிறது. ஆகையால் தவம் செய்து முக்தி அடையாமல் போனவர்களே அதிகம்.

அப்படியே தவம் செய்து முக்தி அடைய வேண்டும் என்று நம்பிக்கையுடன் இருந்தவர்களுக்கு தவத்தின் போது பல தடைகள் வரும். பயமுறுத்தும் பேய்கள், அசுரர்கள், மோகினிகள் இப்படி பலவிதமான தடைகள் வந்து தவத்தை கலைப்பதற்கு முயற்சிகள் நடக்கும். இப்படிப்பட்ட காலங்களில் தவம் தடைபடும். ஏன் என்றால் சரியான குரு இல்லாததே இதற்கு காரணம்.

நம் ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகள் வழியில் முதலில் அன்பர்களாக சேர்ந்து பிறகு அடியாராக மாறி அன்றாடம் ஆண்டவரையே நினைத்து அருட்சட்ட கொள்கைகளை தவறாமல் கடைபிடித்து வந்தால் நிச்சயம் தவம் செய்ய வாய்ப்பு கிடைக்கும்.

அன்பாக பேசுபவர்கள், எப்போதும் வேலை செய்து கொண்டிருப்பார்கள், பசியை தாங்கக் கூடியவர்கள், உறக்கம் வராதவர்கள் பிறருக்காகவே வாழ்பவர்கள், தயாளகுணம் படைத்தவர்கள், பேசுவதையே தொழிலாக கொண்டவர்களுக்கு தவம் கிடைக்க வாய்ப்பு உண்டு.

அருள்சட்டத்தில் 16 அம்ச கொள்கைகளில் அனைவரும் நிஷ்டை அவசியம் இருக்க வேண்டும் என்ற ஒரு கொள்கையை கடைபிடித்து காலை, மாலை, இரவு நேரங்களில் நிஷ்டை இருப்பது

நல்லது. அருள்சட்டத்தில் தவம் என்பது இல்லத்திலோ, ஆலயத்தின் அருகில் உள்ள இடத்திலோ மிகவும் பாதுகாப்பான சூழ்நிலையில் அடியார்கள், அன்பர்கள் வசிக்கும் இடத்தில் தனி அறையில் கட்டில், ஃபேன், மின்விளக்கு, நாற்காலி இப்படி சாதாரணமாக இருக்கும் பொருட்களை வைத்து கொண்டு, ஆகாரங்கள் கொடுக்க உதவியாளர்கள், பால், பழங்கள், தேன், நெய், இருவேளைகள் உண்ணுவதற்கும் ஏற்பாடு செய்வார்கள். எந்த ஒரு தடையும் வராமல் இவர்கள் பார்த்துக் கொள்வார்கள். காலை மாலை இருவேளையும் பூஜை நடக்கும். தவம் செய்வோருக்கு வேண்டிய வசதிகளையும், எதைநோக்கி தவம் செய்ய வேண்டும் என்றும் அருள்பிரகாசதாசன் ஸ்வாமிகள் ஒவ்வொரு தவசிக்கும் விளக்குவார். எப்போதெல்லாம் தவசிகள் தவம் செய்தாலும் நம் குருநாதர் பார்த்துக் கொண்டேயிருப்பார். குருபார்வை இருப்பதால் எந்த ஒரு தடையும் தவத்தின்போது வராது.

பொதுவாக படிக்கும் மாணவர்கள் ஆரம்பத்தில் இருந்து கல்லூரியில் படிக்கும் வரை ஆண்டுக்கு ஒருமுறை தேர்வு எழுத வேண்டியுள்ளது. அப்படி தேர்ச்சிபெற்று வரும்நிலையில் கடைசியில் பட்டதாரி என்கின்ற பட்டம் கிடைத்து பிறகு வேலையை தேடி அலைவது வழக்கம். அதுபோல் அருள்சட்ட அடியார்களில் தவசிகளுக்கு ஆண்டுக்கு ஒருமுறை தேர்வுபோல் தவம் இருப்பதால் அவர்கள் அடுத்த நிலைக்கு செல்வது நன்றாகத் தெரியும். அவர்களது இல்லத்தில் நடக்கும் கேந்திர விழாக்களில் தவத்தின் பலன் தெரியும்.

உலகம் ஒரு மாயை என்பதை அறிந்துகொண்டு இறைவனையே நினைத்து சகஜ நிஷ்டை செய்து வந்தால் முக்தி கிடைப்பது நிச்சயம். முக்தி என்கின்ற நிலையை அடைந்தவுடன் மேல் உலகம் சென்று மக்கள் பணி ஆற்றி வரலாம் ஆகையால் **தரணி போற்றும் தவம் செய்ய எந்த ஒரு தடையும் இல்லை**

என்பதை ஆணித்தரமாக கூறுகிறேன். தவத்தினால் ஏற்பட்ட நன்மைகளைப் பற்றி இப்போது பார்ப்போம்.

என் கணவர் ஸ்ரீ வைத்தியநாத ஸ்வாமிகள் பல நாட்கள் நிஷ்டை செய்ததன் பலனால் தனது 54வது வயதில் ஓம்கார கணபதி மற்றும் குருநாதரின் காட்சி கிடைத்து முக்தி பெற்றார். 1989-ம் ஆண்டு அவர் முக்தி அடைந்தது முதல் என்ன செய்வது என்று அறியாமல் வாழ்ந்து வந்தேன். அடியேனுக்கு 3நாள் தவம் செய்ய ஆண்டவர் அருள்பிரகாசதாசன் ஸ்வாமிகளிடம் குறிப்பு கொடுத்தார். அதைக் கேட்டவுடன் மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். 3 ஆண்டுகளுக்குப்பிறகு 12 நாட்கள் தவம் செய்யும் பாக்கியத்தைப் பெற்றேன்.

2002-ம் ஆண்டு தவத்தின்போது வெள்ளைநிற ஆடை அணிய குறிப்புக் கொடுத்தார். தவம் இருந்த அறைக்கு மாதாபுரம் என்ற பெயரும், திருக்கோயில் திருப்பணி தங்குதடையின்றி நடைபெற காமதேனுவின் கடாட்சம், கிடைக்க குறிப்பு கொடுத்தார். திருமணம், சீமந்தம், காதுகுத்தல், வியாபார தொடக்கம், கிரஹப்பிரவேசம் செய்தல் போன்ற சுபகாரியங்களின் அழைப்பிதழ்களை குருகிருபா இல்லத்து குருவிடம் சமர்ப்பித்து மாதாபுரம் தாயிடம் ரூ.11/- ஆசீர்வாதம் பெற்றால் குபேரச் செல்வம் கொடுப்பதாக ஆண்டவர் குறிப்பு கொடுத்தார். பூர்ணம் சம்பூர்ணம் என்று 12 விதமான கொழுக்கட்டை நெய்வேத்யம் செய்ய குறிப்பு கொடுத்தார். அதன்படியே செய்து வந்தோம்.

2003-ம் ஆண்டு மாதாபுரம் என்றால் மாதாமாதம் பூரம் நட்சத்திரம் அன்று அருள்சக்தி அன்னைக்கு விசேஷ பூஜை செய்து அருளைப் பெற வேண்டும் என்று குறிப்பு கொடுத்தார். அதன்படி இன்றுவரை செய்து வருகிறோம். 12 நாட்கள் தவத்தின்போது 12 உருண்டைகள் லட்டு, மாலாடு, அவல் போன்ற (6,3,2,1) கோபுரம் போன்று அமைப்பில் நெய்வேத்யம் செய்ய குறிப்பு கொடுத்தார். அப்படியே முழுமையாக செய்து வந்தோம்.

2004–ம் ஆண்டு எங்கள் இல்லத்து விழாவிற்கு வந்த குறிப்பு பாடல் :

கதிரவன் உதயம் காணக்கண்டேன்
காட்சியில் மாட்சியை உணரக் கண்டேன் என்று தொடங்கி
ஈர்ப்பவர் ஈர்த்தால் எதையும் தரலாம்
காப்பவர் அருளை யாவரும் பெறலாம்

என்று அந்தப்பாடலில் அருளைப் பெறலாம் என்பதை விளக்கியுள்ளார்.

2005–ம் ஆண்டு எங்கள் இல்லத்திற்கு விழாவிற்கு வந்த குறிப்புபாடல்

கஜமுகனே கஜமுகனே! சிங்கார கஜமுகனே
வழிவழியாய் வந்தவரை வாழவைக்கும் கஜமுகனே
குருகிருபா இல்லத்தை காணவந்த கஜமுகனே
குறையெல்லாம் தீர்த்து வைக்கும் அருள்நிறைந்த
கஜமுகனே!

என்று வந்த குறிப்பு பாடலின் முடிவில் மாதாபுரம் தாய் இல்லம் வந்தருளும் கஜமுகனே என்று ஆண்டவர் வந்து அருள்புரிகிறார் என்பதை விளக்கியுள்ளார்.

2006–ம் ஆண்டு தடையேதும் இல்லை குறையேதும் இல்லை என்ற குறிப்பு கொடுத்தார். இந்த குறிப்பில் வந்த பாடலில்

பாதியில் முடிந்த வேலையைக் கண்டு
பீதி அடைந்து மனவேதனை கொள்ளாமல்
சேதியை குருகிருபா இல்லத்து குருவிடம் சமர்பித்து
மீதியை முடிக்குஆவண செய்யலாமே! என்று
அடியார்களுக்காக பாடல் கொடுத்தார்.



2003 தவசிகள் சந்திப்பில் ஒருகாட்சி



சதசம்பத் விநாயகர் காட்சி

2007-ம் ஆண்டு தவத்திற்காக வந்த குறிப்பு பாடலில் ஜீரணமாகாத ஜீவன்கட்கு ஜீரகரசம் கொடுக்கலாமே என்ற பணி கொடுத்தார். 12 நாட்களும் தவத்தில் வந்த அனைவருக்கும் ரசம் பிரசாதமாக கொடுத்ததால் உடல்பிணி நீங்க குருநாதர் அருள்புரிந்தார்.

2008-ம் ஆண்டு விழாவிற்கு வந்த குறிப்பு பாடலில் ஜோதியை கண்டேனே அருள்ஜோதியைக் கண்டேனே என்று தொடங்கி ஆழம் காணாத அருள்பெற்ற தவசியை கண்டேனே பெண் தவசியை கண்டேனே என்று மிக அழகாகவும் விளக்கியுள்ளார்.

2009-ம் ஆண்டு தவத்திற்காக வந்த குறிப்பில் 12 நாட்களும் 54 எண்ணிக்கையில் 12 விதமான கொழுக்கட்டை நெய்வேத்தியம் செய்ய சொல்லியிருந்தார். அதன்படி தினமும் செய்து முடித்தோம். விநாயகர் சிலைக்கு தினமும் மாலை அணிவித்து அலங்காரம் செய்யச் சொல்லியிருந்தார். அதன்படியே செய்து பரிபூர்ண அருளைப் பெற்றோம். அடியேனுக்கு உடல்உபாதை வந்தபோது "**உச்சி முதல் பிச்சு வரை பூச்சி கலந்த ஊண் உடம்பில் தச்சிருக்கும் வினையை தடுக்க வேண்டி குச்சி உள்ள ஆகாரமே சிக்கலைத் தடுக்கும் அச்சிறு அழகனை ஈறாறு முறை வலம் வரலாமே**" என்று வந்த பாடலில் என் உடம்பில் ரத்தத்தில் பூச்சியின் வி-ம் கலந்துள்ளதால் நார்ச்சத்து உணவுகளாகிய வாழைத்தண்டு, வாழைப்பூ, பீன்ஸ், கீரைத்தண்டு இவைகளை உண்ண உத்தரவிட்டார். அதன்பிறகு உடல் உபாதை தீர்ந்து மறுபிறவி பிறந்ததுபோல் 12 நாள் தவம் செய்ய முடிந்தது.

2010-ம் ஆண்டு தவத்திற்காக வந்த குறிப்பில் பால் சம்பந்தப்பட்ட நெய்வேத்தியங்கள் செய்ய வேண்டும் என்று கூறியதால் அதன்படி செய்தோம் தவம் இனிவரும் காலங்களில் சிறப்பாக அமைய வேண்டும் என்று குருநாதரை பிரார்த்திக்கிறேன்.

எல்லா குறிப்புகளும் அருள்பிரகாசதாசன் ஸ்வாமிகள் குருநாதரிடம் இருந்து பெற்று அடியேனுக்கு இதுவரை கூறியுள்ளது போல் இனி வரும் காலங்களிலும் தொடர்ந்து கூறுவதற்கு அவருக்கு நீண்ட ஆயுளும் ஆரோக்கியமும் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

எல்லோருக்கும் தவம் செய்ய வாய்ப்பு வழங்குவார் நம் குருநாதர் எல்லோரும் முயற்சி செய்யுங்கள் என்று கூறி என் உரையை நிறைவு செய்கிறேன்.

–தவத்திருமாட்டி பவானி தாய்

தவத்திரு. குருநாதன் ஸ்வாமிகளின் அனுபவங்கள்



1998-ம் ஆண்டு தவம் ஆரம்பம், அதன்பிறகுதான் என் குடும்பத்தில் எல்லா நிகழ்ச்சிகளும் விமரிசையாக நடந்தது. எனது பெரிய மகளுக்கும், சிறிய மகனுக்கும் கல்யாணம் வெகு விமரிசையாக நடந்தது. புது மனை வாங்கி புது வீடு கட்டினேன். பையனுக்கு 1 பையனும், 1 பெண்ணும், பெண்ணுக்கு 8 வருடம் கழித்து 1 பையனும் பிறந்தது. ஆண்டவன் அருளால் தவத்திற்கு வந்து 3 தவசிகளிடம் ஆசீர்வாதம் பெற்றுச் சென்றாள், உடனே கருவுற்று குழந்தை பிறந்தது. பெரிய பையனுக்கும் பெண்குழந்தை பிறந்தது. சிறிய பையனுக்கு அடியார்கள் ஆசியினாலும், கடவுளின் அருளாலும் ஒரு அழகான பெண் குழந்தை பிறந்தது. பக்கத்தில் புது வீடுகட்டி பூஜைக்கும், பழைய வீடு சாப்பிடுவதற்கும் லட்சார்ச்சனையின் போது மிகவும் உபயோகமாகவும், தாராளமாகவும் உள்ளது. முன்னால் பூஜை பழைய வீட்டில், பக்கத்து வீட்டில் அடியார்களுக்கு சாப்பாடும் இருந்தது. இன்னும் வசதியாக வெளியூர் அடியார்கள் தங்குவதற்கு வழிவகுக்கணும்

இறைவன் அருளால். தவத்திற்கு பிறகு தவத்தின் பலனாய் இப்படி சிறப்பு நிகழ்ச்சி ஆண்டுக்கு ஆண்டு சிறப்பாக நடக்கிறது. இந்த ஆண்டு மரகதவாசல், மாணிக்க வாசல் மிகப்பிரமாதமாக இருந்தது. எனக்கு சிறப்பு நிகழ்ச்சியென்றால் மிகவும் பயம், நன்றாக நடக்க வேண்டுமே, மற்ற பூஜை முறைகளை கவனிக்க முடியுமோ, முடியாதோ என்ற பயம். 150 பேருக்கு குறையாமல் வருடா வருடம் சிறப்பான அலங்காரம், சுவையான உணவு, சிறப்பாக பூஜை நன்றாக நடக்கிறது. வருங்காலத்தில் இதைவிட சிறப்பாக நடக்க வேண்டும். எனக்கு 3 நாள் தவத்திலிருந்து 12 நாள் தவம் கிடைத்து செய்து வருகிறேன். ஒருவருடம் தவத்தின்போது காலை, மாலை 24 அகல் விளக்கு ஏற்றி வழிபட்டதால் போன வருடம் தீபமங்கள ஜோதி தரிசனம் மிகச்சிறப்பாக ஒளிவிளக்கு அதாவது, 108 அகல்விளக்கு ஏற்றி பிரமாதமாக இருந்தது. ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் ஆண்டவர் அருளைவாரி வழங்கினார். பெரிய பையனுக்கு உடம்பு சரியாக இல்லை. தவ மகிமையினால் அறுவை சிகிச்சை செய்யாமல் நன்றாக உடல் தேறி வேலைக்குச் சென்றுள்ளான். எங்கேயோ இருந்த இரண்டாவது மகள் அருகில் பெங்களூருக்கு வந்துவிட்டார். அவள் வீட்டில் வழிபாட்டு கேந்திரம் வரணும். வந்து சிறப்பாக செய்யனும். 4000 சதுரடி வீடு கொடுத்திருக்கிறார்கள். ஆண்டவர் அருளால் உடல் உபாதை நிறைய இருந்தாலும் எனக்கு தெம்பு கொடுத்து பூஜைக்கு போக என்னால் வேலை செய்ய முடிகிறது.என்னே ஆண்டவர் அருள். இனி வருங்காலங்களில் தவம் நன்றாக நடந்து யாருக்கும் கஷ்டம் கொடுக்காமல் எனக்கும் கஷ்டமில்லாமல் இறைவன் திருவடியை என்மனைவியைப்போல நானும் அடையணும். இரெட்டியப்பட்டியில் சமாதி வைக்கணும்.

தவத்திரு. சா. குருநாதன்

தவத்திருமாட்டி. பானுமதி சுவாமிநாதன் அனுபவங்கள்

நான் சிறு வயது முதலே சிறந்த முருக பக்தையாக இருந்தேன். தினமும் சஷ்டி கவசம் படிப்பேன். பள்ளிப் பருவத்திலேயே செவ்வாய் கிழமை விரதம் இருப்பேன். கிருத்திகை அன்று வைத்தீஸ்வரன் கோயில் சென்று முத்துக்குமார சுவாமியை தரிசித்து விட்டு அபிஷேகம் முடித்து ஷண்முக அர்ச்சனை முடிந்த பிறகுதான் வீட்டிற்கு வருவேன். திருவிடை மருதூரில் என் அம்மாவின் பிறந்தகம் இருந்ததால் ஒவ்வொரு ஆண்டும் கோடை விடுமுறைக்கு அம்மாவுடன் அங்கு சென்றுவிடுவேன். அப்பொழுதுதான் ஆண்டவரை தரிசிக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. என் பாட்டி வீட்டிலிருந்து 4 வீடுகள் தள்ளி குருகடாஷம் இல்லம் இருந்தது. அதாவது அருள்சட்ட அடியார் திரு. சுவாமிநாதன் சுவாமிகள் இல்லம். அவர்கள் வீட்டில் தான் வாடிக்கையாக பால் வாங்குவது வழக்கமாக இருந்தது. நான் லீவிற்கு செல்லும் போது தாத்தா என்னை பால் வாங்க அவர்கள் வீட்டிற்கு அனுப்புவார். எனக்கு சுமார் 10 வயதிருக்கும். அவர்கள் வீட்டில் உள்ளே நுழைந்தவுடன் பெரிய ஆண்டவர் படம் மாட்டியிருக்கும். அதிகாலை 5.30 மணிக்கே அவர்கள் வீட்டில் எல்லோரும் குளித்துவிட்டு வீடெல்லாம் மெழுகி கோலமிட்டு விளக்கேற்றி உள்ளே நுழையும்போதே பக்தி பரவசமாக இருக்கும். எனக்கு அந்த சூழல் மிகவும் பிடிக்கும். ஆனால் நான் அவ்வளவு சீக்கிரம் குளித்திருக்க மாட்டேன் தாத்தாவிடம் இதைப்பற்றி சொல்வேன். தாத்தா அதற்கு அவர்கள் எல்லாம் சட்டம். அதனால் நீ கவலைப்படாதே என்பார். எனக்கு சங்கடமாக இருக்கும். குருகடாஷம் மாமி மிகவும் அன்பானவர். அந்த சிறு வயதிலேயே ஆண்டவரையும் அவரது அருள்சட்டம் ஏற்று நடக்கும் குருகடாஷம்

இல்லத்தாரையும் எனக்கு மிகவும் பிடிக்கும். பிற்காலத்தில் நானும் ஒரு அருட்சட்டக் குடும்பத்தினரின் மருமகளாக வரப்போகிறேன் என்று அப்பொழுது எனக்கு தெரிந்திருக்க வில்லை. எல்லாம் ஆண்டவர் கணக்கு. 30-4-1986-ல் எங்கள் திருமணம் ஆண்டவர் அருளாலும், தவத்திரு. மாம்பலம் திவ்ய தம்பதியினரின் ஆசீர்வாதத்துடனும் சிறப்பாக நடந்தது. பிறகு சிறிது சிறிதாக சட்ட அனுஷ்டானம் பற்றி தெரிந்து கொண்டேன். எல்லா அடியார்கள் இல்லத்து விழாக்களிலும் ஆர்வமாக கலந்து கொண்டு தொண்டு செய்ய ஆரம்பித்தேன். தவத்திரு. வைத்தியநாதன் சுவாமிகள்தான் எங்களுக்கு திருமணம் செய்து வைத்தார். அவர் ஆண்டவரைப் பற்றி நிறைய விஷயங்கள் எனக்குச் சொல்வார். நானும் ஆர்வமாக கேட்டு தெரிந்து கொண்டு சட்ட அடியாரானேன். ஆண்டவர் அருளால் எங்களுக்கு இரண்டு ஆண் குழந்தைகள் பிறந்தார்கள். அவர்களும் சிறு வயதிலேயே ஆண்டவர் அருட்சட்டம் ஏற்று நடக்கிறார்கள். எங்கள் பெரிய மகன் 9-வது வகுப்பில் படிக்கும் போது பள்ளியில் மயக்கம் ஏற்பட்டு வீட்டில் கொண்டு வந்து விட்டார்கள். தொடர்ந்து மூன்று நாட்கள் அதே போல் பிரச்சனை அப்பொழுது தவத்திரு. கே.எஸ்.கே. சுவாமிகள் தவத்தில் இருந்தார்கள். அவரிடம் சென்று பையனின் உடல்நிலைப் பற்றி கூறினேன். உடனே அவர் ஆண்டவரை கொலுவில் அமர்த்தி 11 நாட்கள் சுற்றினால் குணமாகிவிடும் என்றார். அன்றிரவே தவத்திரு. மணி ஸ்வாமிகள் எங்கள் இல்லத்திற்கு வந்து தங்கி மறுநாள் அதிகாலை ஆண்டவரை கொலு அமர்த்தி என்னென்ன செய்ய வேண்டும் என்று சொல்லிக் கொடுத்தார். மூன்று நாட்களில் எங்கள் பையன் குணமடைந்து விட்டான். ஆண்டவர் அருளை எண்ணி மகிழ்ந்தோம். நாங்கள் ஆண்டவர் கேந்திர விழா செய்ய நினைத்தோம். என்ன ஆச்சரியம் எங்கள் பையன்கள் இருவரும்

நம்ம வீட்டிலேயே எல்லா அடியார்களையும் அழைத்து பூஜை செய்யலாமே என்று கேட்டார்கள். எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. உடனே ஆண்டவரிடம் தாக்கல் செய்தோம். உத்தரவு கிடைத்தது. 4.4.2004 அன்றைய தினத்தை எங்களால் மறக்கவே முடியாது. அன்று அதிகாலை ரங்கநாதன் தெருவில் விநாயகர் பிரதிஷ்டை, திரு. நகரி கணேஷ் இல்லத்து விழா, மாலையில் எங்கள் இல்லத்து விழா. இப்படி அன்று மிகவும் விசேஷமான தினமாக அமைந்தது. அன்று பங்குனி உத்திரம். 118 பேர் அமர்ந்து அர்ச்சனை செய்தார்கள். இரண்டாம் ஆண்டிலிருந்து அடியார்கள் வசதி கருதி எங்கள் இல்லத்தின் எதிரில் உள்ள கல்யாண மண்டபத்தில் பூஜை செய்கிறோம். இப்படி சிரத்தையாக பூஜை செய்ததன் பலனாக மூன்றாம் ஆண்டே எனக்கு மூன்று நாள் தவம் கிடைத்தது. தொடர்ந்து ஆண்டவர் அருளால் எங்கள் பிள்ளைகள் நன்றாக படித்து வருகிறார்கள். ஐந்தாம் ஆண்டு பூஜையில் ஆண்டவர் குறிப்பு வந்து 3 நாள் தவம் 12 நாளாக உயர்ந்தது. எங்கள் மூத்த மகன் அருண் பிரகாஷ் யூனிவர்சிட்டி ரேங்க் வாங்கி தங்க மெடல் பெற்றான். காம்ப்பஸ்-ல் தேர்வு ஆகி நல்ல கம்பெனியில் வேலையும் கிடைத்தது. இளைய மகன் அஸ்வினுக்கும் நல்ல கல்லூரியில் சீட் கிடைத்தது. இவர்கள் இருவருமே நன்றாக படித்தார்கள் என்றாலும் ஆண்டவர் அருள் எங்களுக்கு பரிபூரணமாக கிடைத்ததால் இத்தனையும் நடந்திருக்க முடியும். 7-ம் ஆண்டு பூஜையில் சித்திவிநாயகர் குடமுழுக்கு அன்று 108 கொழுக்கட்டை செய்து முதலில் கோயிலுக்குள் எடுத்துச் செல்ல வேண்டும் என்று அடியேனுக்கு ஆண்டவர் குறிப்பு வந்தது. மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. சித்தி விநாயகர் குடமுழுக்குக்கு 2-நாள் முன்னதாகவே சென்று மாமியார் உதவியுடன் 108 கொழுக்கட்டைகள் செய்து நைவேத்தியம் செய்து

ஆண்டவர் அருள் கிடைக்கப் பெற்றேன். இந்த ஆண்டும் (8-ம் ஆண்டு விழா) ஆண்டவர் குறிப்பு வந்தது. ரங்கநாதன் தெருவில் ஆண்டவர் கோயிலில் நடைபெறவிருக்கின்ற கோடி அர்ச்சனையின் போது வெள்ளிதோறும் நடைபெறும் விளக்கு பூஜையை பொறுப்பேற்று நடத்த வேண்டும் என்று மூத்த மகன் வெள்ளை மலரால் ஒருநாள் பூஜை செய்ய வேண்டும். இளையவன் சிவப்பு மலரால் ஒரு நாள் பூஜை செய்ய வேண்டும் என்றும் ஆண்டவர் குறிப்பு கொடுத்துள்ளார். இப்படி ஆண்டவர் எங்கள் இல்லத்திற்கு பல குறிப்புகள் கொடுத்து வழிநடத்தி செல்கிறார். இந்த ஏழையின் மீது ஆண்டவர் அருள்கிடைத்துள்ளது. மேலும் பூஜையில் பங்கு கொள்ளும் எங்கள் பிள்ளைகளின் பள்ளி ஆசிரியைகளுக்கும் பணி நிரந்தரம், உயர்வு கிடைத்துள்ளது.

அடியார் ஒருவரின் மகனுக்கு பல ஆண்டுகளாக திருமணம் தடைபட்டு ஆண்டவர் விழாவிற்கு வந்த ஒருவாரத்தில் திருமணம் நிச்சயமாகியது. இப்படி பல நிகழ்ச்சிகள் சொல்லிக் கொண்டே போகலாம். அத்தனை பேரும் மறக்காமல் ஒவ்வொரு ஆணடும் ஆண்டவர் விழாவிற்கு வருகிறார்கள. ஏப்ரல் மாதம் வந்து விட்டாலே போன்கால் வந்துகொண்டே இருக்கும். உங்கள் இல்லத்தில் எப்பொழுது பூஜை வைத்திருக்கிறீர்கள் என்று கேட்பார்கள். இந்த கட்டுரையை எழுதிக் கொண்டிருக்கும்போது எங்கள் பிளாட்டில் உள்ள ஒரு பையன் தனக்கு வேலை கிடைத்து விட்டதாக வந்து சொல்லிவிட்டுப்போகிறான். அவனை பூஜைக்கு அழைத்தபோது எதார்த்தமாக “உனக்கு ஒரு வாரத்தில் வேலை கிடைத்துவிடும் பூஜைக்கு வந்து ஆண்டவரை தரிசனம் செய்துவிட்டுபோ” என்றேன். அவனும் பூஜையில் கலந்து கொண்டான். எல்லாம் ஆண்டவர் கணக்கு இப்படி படிப்படியாக ஆண்டுக்கு ஆண்டு எங்கள் இல்லத்தில் முன்னேற்றம். எங்கள்

ஊர் மக்களுக்கும் ஆண்டவர் அருள் பரிபூரணமாக கிடைத்துள்ளது. முதலில் ஆண்டவர் விழாவில் கலந்து கொண்டு தொண்டு செய்யும் பாக்கியம். பிறகு கேந்திரம், தவம் இப்பொழுது ஆண்டவர் குறிப்பும் கிடைக்கப் பெற்று மகிழ்ச்சியாக இருக்கிறோம். எங்களின் ஆயுட்காலம்வரை குடும்பத்துடன் சென்று ஆண்டவர் தொண்டு செய்ய அருள்புரிய வேண்டும். இதுவே எங்களின் வேண்டுதல். தவத்திரு கே.எஸ்.கே. ஸ்வாமிகள் கூறிய அறிவுரையின்படி தவத்தின்போதும், பூஜையிலும் நடந்து கொள்வதால் எல்லாம் சுபமாகவே உள்ளது. ஆண்டவரை வேண்டிக்கொண்டே ஒவ்வொரு செயலும் செய்யும்போது நிம்மதியாகவும் சந்தோஷமாகவும் இருக்கிறது. வளர்க அருள் சட்டம். பல்லாண்டு வாழ்க அருள் சட்ட அடியார்கள்.

–திருமதி பானுமதி சுவாமிநாதன்

தவத்திருமாட்டி மாலா சுப்பிரமணியம் அனுபவங்கள்



தவம் செய்வது முனிவர்கள் மற்றும் ரிஷிகளால் மட்டுமே முடியும் என்று நினைத்திருந்தேன், ஆனால் அருட்சட்டம் ஏற்ற பிறகுதான் அருட்சட்ட அடியார்களுக்கும் அந்த வாய்ப்பு உள்ளது என்பதை அறிந்தேன்.

பல அருட்சட்ட அடியார்கள் தவம் செய்த போதிலும் திரு. கே.எஸ்.கே ஸ்வாமிகள் தவம் செய்யும்போது பலநாட்கள் பூஜைகளில் கலந்து கொண்டும் ஆண்டவரின் அருட்குறிப்புகளை கேட்டும், ரசித்தும், ஆனந்தம் அடைந்தும், ஆச்சரியப்பட்டும் இருக்கிறேன். அவர் செய்யும் தவம் எவ்வளவு சக்தி வாய்ந்தது என்று உணர்ந்தேன்.

1993-ம் ஆண்டு எங்கள் இல்லத்தில் கிரகப்பிரவேசம் அன்று காலையில் சிறிது இடைவெளி இருந்த போது திடீரென்று

திரு. கே.எஸ்.கே. ஸ்வாமிகள் ஆண்டவருக்கு அர்ச்சனை செய்யலாம் என்று கூறினார். அன்று முதல் என் உள்ளத்திலும் ஆண்டவர் குடிகொண்டு விட்டார். அந்த ஆண்டே நான் சட்டம் எடுத்துக் கொண்டேன். பின்னர் வீட்டில் உள்ள அனைவரும் அருட்சட்டம் ஏற்றார்கள். அந்த ஆண்டே எங்களுக்கு சகஸ்ரநாம அர்ச்சனை கேந்திரமும் கிடைத்தது. அருள்சட்டத்தில் இருந்ததால்தான் ஆண்டவரின் கருணையால் மலைபோல் வந்த துயரங்கள் பனிபோல் உருகி நீங்கியது.

2001-ம் ஆண்டு திரு. கே.எஸ்.கே. ஸ்வாமிகளின் தவபூஜைக்கு சென்ற போது ஒரு பெண் சட்ட அடியார்க்கு தவம் கிடைத்து இருக்கிறது அதுயார் என்று கண்டுபிடியுங்கள் என்று சஸ்பென்ஸ் வைத்தார். அது யாராக இருக்கும் என்று அறிய எல்லோருக்கும் மிகுந்த ஆவலாக இருந்தது. திரு. சம்பத்குமார் ஸ்வாமிகளின் லட்சார்ச்சனை கேந்திரவிழாவின் போது அந்த அடியார் நான்தான் என்று கூறியபோது எனக்கு முதலில் ஆச்சரியம், ஆனந்தம், தவம் நன்றாக செய்ய வேண்டுமே என்ற அச்சம் என்னை சூழ்ந்து கொண்டது.

2001-ம் ஆண்டு முதல் தவம் ஆரம்பம் 17-10-2001 அன்று மாலை திரு. கே.எஸ்.கே. ஸ்வாமிகள் தவம் ஆரம்பித்து வைக்க எங்கள் இல்லத்திற்கு வந்தார். வரும்போதே கையில் ஒரு கோப்பு கொண்டு வந்தார். தீபாராதனை முடிந்தவுடன் உனக்கு குருசக்தி தவம் கிடைத்திருக்கிறது. திருமதி இந்திரா தாய்க்கு குருமாதா தவம் (தாயுடன் தவம் செய்வது), திருமதி கீதா தாய்க்கு குருபிதா தவம் (தகப்பனாருடன் தவம் செய்வது) உனக்கு பணியுடன் தவம் கிடைத்திருக்கிறது. ஆண்டவர் கேந்திரவிழா நடைபெறும் இடங்களில் எத்தனை அடியார்கள் அர்ச்சனை செய்தார்கள் மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகளை (புள்ளி விவரம்) எழுதச் சொன்னார். அப்போது திங்கள் திருப்பணி ஜோதி பத்திரிக்கை ஆரம்பிக்கவில்லை.

இரண்டு வருடம் கழித்து திரு. கே.எஸ்.கே. ஸ்வாமிகளின் தவத்திற்கு சென்றேன். "நீ எழுதும் புள்ளி விவரங்களை கொண்டுவா ஆண்டவர் செக் பண்ண சொல்கிறார்" என்றார், நான் மிகவும் பயந்து விட்டேன். ஆண்டவரை வேண்டி கோப்பை கொண்டு கொடுத்தேன்.

29-7-2003 அன்று மாலை 5 மணிக்கு வந்த குறிப்பில் "உன்னுடைய புள்ளி விவர அறிக்கை நன்றாக இருந்ததாக ஆண்டவரிடமிருந்து குறிப்பு வந்துள்ளது, அதைப்பாராட்டி இந்த ஆண்டு தவத்தின் போது சில பணிகள் தரக்கூடும்" என்று கூறினார். நான் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

அடுத்த ஆண்டு தவத்தின் போது "இணைக்கும் பணி" என்று குறிப்பு கிடைத்ததாக திரு. கே.எஸ்.கே. ஸ்வாமிகள் கூறினார். அதாவது தாய்க்கு பாவாடை தைத்து தரலாம் மற்றும் கைவேலைபாடுகள் செய்யலாம் என்ற கூறினார். அன்று முதல் யார் பாவாடை தைத்து தரவேண்டும் என்று கேட்டாலும், அது எந்த நேரமானாலும் உடனே தைத்து தந்து விடுவேன்.அதனால்தானோ என்னவோ எனக்கு ஆண்டவர் சன்னதிக்கு மிக அருகில் சென்று அவருடைய மூலஸ்தான சிலைக்கு பட்டு வஸ்திரம் அளவு எடுத்து தைத்துக் கொடுக்கும் வாய்ப்பினை எனக்கு அளித்தார் என்று நினைத்துக் கொள்வேன்.

2006-ம் ஆண்டு வீட்டில் மூன்று நாட்கள் தவம் செய்து திரு. கே.எஸ்.கே. ஸ்வாமிகள் இல்லத்தில் பூர்த்தி செய்த போது

"சாதனைக்கு பயன் உண்டு
சாட்சிகள் வருவதுண்டு"

என்று எழுதிக் கொடுத்தார் அதனுடைய பொருள் எனக்கு அப்போது புரியவில்லை.

அந்த மாதமே என் முதல் பெண் சுஜாதாவிற்கு திடீரென்று வலிப்பு நோய் வந்து அவசரமாக ஆபரேஷன் செய்து குழந்தையை எடுத்தார்கள். ஆண்டவர் அவளுக்கு மறுபிறவியை கொடுத்தார்.

அழகான ஆண் குழந்தையை கொடுத்து என்னை மகிழ்ச்சியில் ஆழ்த்தினார். சுஜாதாவையும், குழந்தையையும் ஆசீர்வாதம் செய்து விபூதி தடவி அன்று ஆண்டவர் கூறியதற்கு அர்த்தம் இப்போது புரிந்ததா? நீ தவம் புரிந்ததன் பயனாகத்தான் (சாதனைக்கு) சுஜாதாவின் பிரசவம் சாட்சியாக அமைந்திருக்கிறது என்று கூறினார். குருவின் அநுக்கிரஹத்துடன் குழந்தை பிறந்ததால் குழந்தைக்கு குருஅனுஷ் என்று பெயர் வைக்கச் சொல்லி திருமதி இந்திராதாய் கூறினார்.

இப்படியாக ஒவ்வொரு வருட தவத்தின் போதும் ஆண்டவர் சிலபணிகளை அளித்தார். 6 வருடங்கள் மூன்று நாட்கள் தவம் வீட்டிலே கடைபிடித்தேன். 2007-ம் ஆண்டு உனக்கு 12 நாள் தவம் தந்திருக்கிறார் என்று திரு. கே.எஸ்.கே. ஸ்வாமிகள் கூறினார். ஒருபுறம் மகிழ்ச்சியும் மற்றொரு புறம் பயம். வீட்டில் உள்ளவர்களுக்கு கஷ்டம் வேண்டாம் "தாயே நீயே துணை" என்று வேண்டி பிள்ளையார்குப்பத்தில் கடந்த 4 வருடங்களாக தவம் செய்து வந்தேன். தாயின் கருணையால் 12 நாள் தவம் எந்தவித பிரச்சனையும் இல்லாமல் ஆனந்தமாக அமைந்தது. இந்த ஆண்டும் பலவிதமான பணிகளை ஆண்டவர் அளித்தார். பிள்ளையார் குப்பத்தில் நடக்கும் நவராத்திரி விழாவில் போர்டின் மீது மாக்கோலம், பூக்கோலம், வண்ணக்கோலம், காகிதகோலம் என்று ஓர் ஆண்டு செய்யச் சொன்னார். ஓர் ஆண்டு பலவிதமான மணிகளை கோர்த்து அஷ்டலஷ்மி அலங்காரத்துக்கு உதவி புரிந்தேன்.

ஒரு ஆண்டு தவம் முடிந்தபிறகு திங்கள் திருப்பணி ஜோதியில் கேள்வி-பதில் பகுதியில் தெரியுமா உங்களுக்கு என்ற பகுதியாக எழுத வாய்ப்பு கிடைத்தது. சென்ற ஆண்டு (2010) பாடல்கள்-6 பதில்கள் 2 என்ற தலைப்பு கொடுத்தார். அதாவது ஆண்டவர் அருட்பாடலை படித்து அதில் ஒரே கருத்துகளை கூறும் இரண்டு பாடல்களை பொருளுடன் எழுது என்று கூறினார். ஆண்டவர் பாடல்கள் பல பாடினாலும் கருத்துணர்ந்து பாடியது

கிடையாது. இந்த பணியின மூலம் ஆண்டவரின் அருட்பாடல்களை நன்குபடிக்க ஆரம்பித்தேன். அதில் உள்ள கருத்துகளை புரிந்து கொண்டு எழுதினேன்.

இவ்வாறு ஒவ்வொரு ஆண்டும் ஒரு சிறுகுழந்தைக்கு வேலைகளை சொல்லிக் கொடுப்பது போல் சொல்லிக் கொடுத்து பிறகு அது நன்றாக அமைந்தபின் ஆனந்தப்படுவதை போல் ஆண்டவர் ஒவ்வொரு ஆண்டும் ஒரு பணியை கொடுத்து ஒவ்வொரு படியாக என்னை ஏற்றிவிடுகிறார் என்பதை நான் நன்கு அறிவேன்.

தவம் செய்யும் நாட்களில் பசி, தூக்கம் இவற்றை எல்லாம் மறந்து ஆண்டவரிடம் அனுதினமும் உறவாடி அவருடைய பெருமைகளை நாம் அறிந்துக் கொள்ள இந்த தவநாட்கள் உதவிபுரிகின்றன. எனவே எல்லா சட்ட அடியார்களும் முக்தி பெறுவதற்கு உறுதுணையாக இருக்கும் இந்த தவம் கிடைக்க பாடுபட வேண்டும். இனி வரும் ஆண்டுகளிலும் ஆண்டவர் எனக்கு பணிகளை அளித்து மேல்நிலையை அடைய வழிவகுக்க வேண்டும். "பணி அளித்து இன்பம் பயப்போய் போற்றி" என கூறி நிறைவு செய்கிறேன்.

–தவத்திருமாட்டி மாலா சுப்பிரமணியம்

தவத்திருமாட்டி சாரதா சுப்பிரமணியம் அனுபவங்கள்

அடிமை ஸ்ரீமத் மாம்பலம் சுவாமிகளின் குடும்பத்தில் ஒருவராக அங்கம் வகிப்பதால் பெற்ற பாக்கியந்தான் "சம்பூர்ண தவசி" எனப்படும் அளவிற்கு உயர்த்தப்பட்டேன். இறைநாட்டம் அதிகம் இல்லாத இல்லத்தில் கோவைநகர் உடுமலைப்பேட்டையில் பிறந்த எனக்கு ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகளின் சீடராக ஆகும் பாக்கியம்

கிடைத்ததும், தீவிரமாக சட்ட அனுஷ்டானம் ஏற்றேன். முழுக்க முழுக்க மாம்பலம் சுவாமிகளின் வழிநடத்துதலின் பேரில் அருட்சட்ட முறைப்படி நான்கு பிரசவங்கள் நேர்ந்ததும், கண்ஒளி மங்க நேர்ந்த காலத்தில் (30 ஆண்டுகளுக்கு முன்) ஸ்ரீலஸ்ரீ அருள்சக்தி அன்னையார் திருக்கரம்பட்டு பார்வை மீண்டதும், எனது அபிலாசையான மௌனத்தவக் கோரிக்கையை ஏற்று 3 நாட்கள் தவம் 8 ஆண்டுகளுக்கு முன் கிடைத்தது என் வாழ்க்கையின் மைல்கல் எனலாம். பின்பு நீட்டித்தரக் கோரியதை ஏற்று கடந்த ஆண்டு முதல் 12 நாட்கள் தவம் கிடைத்ததும் மாபெரும் பாக்கியம் என்றே கருதுகிறேன்.

தவத்தின்போது நல்ல மனநிறைவு, உடல் உபாதைகள் குறைய வழி பிறக்கிறது. இன்னமும் அதீதிவிரதையாக எண்ணம் மேலெழுகிறது. குடும்பப்பற்று, பொருள்கள் மீதுள்ள கொஞ்சநஞ்ச ஆசையும் குறைகிறது. ஆகாரக்கட்டுப்பாடு ஏற்படுகிறது. அடியார்கள் மீது அலாதி அன்பு, அவர்களை குடும்பத்தில் ஒருவராக பாவிக்கும் எண்ணம், ஏதாவது தொண்டு செய்து பலன் பெரும் மகிழ்வு ஏற்படுகின்றன. உறக்கம் குறைந்து சதா சர்வகாலமும் ஆண்டவரையே நினைத்து சகஜ நிஷ்டைக்கான தகுதி பெற ஆண்டவரை பிரார்த்திக்கிறேன்.

மற்ற எல்லா அடியார்களும் தவம் பெற தாக்கல் செய்து அதன்படி நடந்து பிறவா நிலை எய்த வழிகோல வேண்டும் என வேண்டுகிறேன். நிரஅக்ஷரகுச்சியான எனக்கு ஸ்ரீலஸ்ரீ அன்னை கொடுத்துள்ள பாக்கியம் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்று விழைவதோடு அவர்களும் அதற்கு முயலவேண்டும் என ஆசி கூறுகிறேன்.

–தவத்திருமாட்டி சாரதா சுப்பிரமணியன்

தவத்திருமாட்டி பிரேமா சந்திரசேகரன் அனுபவங்கள்



ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகளை வணங்குவோர் துன்பம் அடையமாட்டார் என்ற கூற்றுக்கு இணங்க ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகள் அடியார்களுக்கு அருளிய சட்டமும், அற்புதமானதாகவும் மிக எளிய முறையில் கடைபிடிக்க கூடியதாகவும் அமைந்துள்ளது. ஆண்டவரை வணங்கி விட்டு செய்யும் ஒவ்வொரு செயலும் மிக சிறப்பாகவும், மனதிற்கு திருப்தி அளிக்க கூடிய முறையிலும் நடைபெற்று முடியும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

சாதாரணமாகவே ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் அடியார்கள் கேட்கும் வரத்தை அள்ளித்தருவார். அதிலும் சுவாமிகளுக்கு பிடித்தமான தவம் என்ற விரதத்தை கடைபிடிக்கும்போது மனம் மகிழ்ந்து அகம் மகிழ்ந்து அடியார்களின் கோரிக்கைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவார் என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்று.

சிதம்பரம் பிரேமா தாய் இல்லம் என்றாலே அனைவருக்கும் தெரியும். நான் பாக்கம் ஸ்வாமிகள் என்று எல்லோராலும் பாசத்தோடு அழைக்கப்பட்ட முத்துராம ரெட்டியார் அவருடைய மகள் என்ற பெருமையை அனைத்து கேந்திராதிபதிகளின் மத்தியில் மிகுந்த பாசத்தையும் மரியாதையையும் அளித்தது. சிறுவயதில் இருந்து ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகளின் தீவிர பக்தைநான். எங்கள் வீடான பாக்கத்தில் லட்சார்ச்சனை கேந்திரம் வருடாவருடம் மிகச்சிறப்பாக நடைபெறும். எனது கல்யாணத்துக்கு பின் பல வருடங்கள் கழித்து இரெட்டியப்பட்டி ஸ்வாமிகளின் அருளாசியினால் சகஸ்ரநாம கேந்திரம் கிடைத்தது. அதனை

நானும் எனது வீட்டாரும் மிகுந்த மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு பூஜைகளை சிறப்பாகவும், மிகுந்த ஈடுபாட்டுடனும் செய்துவந்தோம்.

பூஜைகளை மிக சிறப்பாக செய்ததன் பலனாலும், ஆண்டவரின் மேல் வைத்துள்ள அளவற்ற பக்தியினாலும் கிடைத்த பலனாக அடுத்தப்படியான தவம் என்ற புனிதமான விரதத்தை அனுஷ்டிக்க வைத்தார். இது ஆண்டவரின் அன்புக்கு நான் பாத்திரமானேன் என்றும், இன்னும் மிகுந்த ஈடுபாட்டுடன் அவர்மேல் நான் இருக்க வேண்டும் என்ற ஆசையையும் உருவாக்கியது. முதலில் எனக்கு 3 நாட்கள் தவம் என்று திரு. கே.எஸ்.கே. ஸ்வாமிகளான அருட்பிரகாசதாசன் அவர்கள் கூறினார்கள். அந்த மூன்று நாட்களே என்னுடைய ஈடுபாட்டிற்கு கிடைத்த மிகப் பெரிய வெற்றி என்று நினைத்து சந்தோஷமடைந்தேன்.

அந்த மூன்று நாட்கள் தவத்தையும் மிகுந்த ஈடுபாட்டுடனும், பக்தியுடனும் இருந்து முடித்தேன். தவம் முடிந்து பின் திரு. கே.எஸ்.கே. ஸ்வாமிகளிடம் தவம் சிறப்பாக செய்தேனா? அல்லது ஏதேனும் பிழை செய்துவிட்டேனா? என்று ஆண்டவரிடம் நீங்கள் தாக்கல் செய்து கூற வேண்டும் என்று கூறினேன். அதன்படியே ஸ்வாமியும் ஆண்டவரிடம் தாக்கல் செய்து நீங்கள் மிகசிறப்பாக செய்தீர்கள் என்று குறிப்பு வந்துள்ளது என்று கூறினார்கள். அதன்படியே எங்களின் வியாபாரத்தில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டன. நிறைய கம்பெனி டீலர்ஷிப்களை நேரடியாகவே வாங்கினோம். இந்த முன்னேற்றம் ஆண்டவரை வழிபட்டதன் பலன் என்று எண்ணி நான் மிக்க மகிழ்ச்சி அடைந்தேன்.

திரு. கே.எஸ்.கே. ஸ்வாமிகள் தவமிருக்கும் போது அனைத்து அடியார்களிடமும் தங்களுக்கு தேவையான கோரிக்கைகளை

எழுதிக் கொடுத்தால் ஆண்டவரிடம் தாக்கல் செய்து பெற்று தருகிறேன் என்று கூறினார்கள். அதனால் எனது மூன்று நாட்கள் தவத்தை 12 நாட்கள் ஆக வேண்டும் என்ற கோரிக்கை வைத்தேன். அதன்படியே ஸ்வாமிகள் ஆண்டவரிடம் முறையிட்டு உங்களுடைய 3 நாள் தவம் 12 நாட்களாக உயர்ந்துள்ளது என்று அருள்சக்தி அன்னை ஆலயத்தில் நடைபெற்ற நவராத்திரி விழாவின்போது கூறினார்கள். அது எனக்கும், எனது குடும்பத்தில் உள்ளவர்களுக்கும் மிக்க மகிழ்ச்சி அளித்தது.

அதன்படியே நானும் எனது 12 நாட்கள் தவத்தை உண்மையாகவும், மகிழ்ச்சியுடனும் ஏற்றுக் கொண்டு சிறப்பாக செய்து முடித்தேன். அந்த தவத்தின்போது எங்களின் நீண்டநாள் கோரிக்கையான மிகவிரைவில் சொந்த வீடு வாங்க வேண்டும் என்பதை முன்மொழிந்தேன். இந்த கோரிக்கையை ஆண்டவரிடம் தினமும் கூறி வேண்டியும் முறையிட்டும் வந்தேன். அதன்படியே தவம் முடிந்த சில மாதங்களிலேயே நாங்கள் சொந்தமாக ஒருமனை வாங்கினோம். அதுவே எங்களுக்கு மிகுந்த சந்தோஷத்தை அளித்தது.

மேலும் மனை வாங்கிய சிலவாரங்களிலேயே கட்டுமானப்பணிகளையும் தொடங்கி விட்டோம். தற்போது அனைத்து பணிகளும் நிறைவடைந்த நிலையில் ஒரு அழகான வீட்டில் வசித்துவருகிறோம். எங்களின் நீண்ட நாள் ஆசை நிறைவேறிவிட்டது என்று ஆண்டவருக்கு நன்றி செலுத்தினோம்.

நான் 3 நாட்கள் தவம் இருக்கும் பொழுதும் சரி, 12 நாட்கள் தவம் இருக்கும் பொழுதும சரி மனதில் எந்தவொரு சலனமும் இல்லாமல் மனம் அமைதியாக இருக்கும். வீட்டில் உள்ளவர்கள் எப்படி இருக்கிறார்களோ? பிள்ளைகள் எப்படி உள்ளனர்? தொழில்

தவசிகள் சந்திப்பின் போது நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சி



தவசிகள் சந்திப்பில் நவாம்ச மூலதன விநாயகர் காட்சி

எப்படி நடக்கின்றது? என்ற சந்தேகங்கள் எதுவும் நமக்குத் தோன்றாது. நமக்கு ஆண்டவர் கொடுத்துள்ள விரதத்தை செம்மையாக கடைபிடிக்க வேண்டும் என்று நினைத்தாலே போதும். மற்ற அனைத்தையும் நம்மைவிட சிறப்பாக ஆண்டவரே பார்த்துக் கொள்வார்.

மற்ற நாட்களில், நாம் காலை, மதியம், மாலை, இரவு என்று ஆகாரம் எடுத்துக் கொள்வோமானால் தவம் இருக்கும் நாட்களில் எந்தவொரு ஆகாரமும் இல்லாமலே உடல்சோர்வு அடையாமல் உள்ளம் புது தெம்புடனும் இருக்கும். அந்த நாட்களில் முகம் புதுப்பொலிவுடன் காணப்படும். ஏனென்றால் நித்தமும் ஆண்டவரை வேண்டி, தொழுது, பூஜித்து, சதா ஆண்டவருடனே இருப்பதினால் முகம் பிரகாசிக்கும். மேலும் தவம் இருக்கும்போது ஆண்டவருக்கு மிக அருகில் இருக்கிறோம் என்ற எண்ணம் உருவாகும். அதனால் ஆண்டவரிடம் நமக்கு இருக்கும் ஐயத்தையும், வேண்டுதல்களையும், மிக இயல்பாக முறையிட்டுக் கொள்ளலாம்.

இதுமாதிரி பல அதிசயங்களும், அற்புதங்களும் நம் வாழ்க்கையில் நடைபெற்றுக் கொண்டே இருக்கும். அதற்கு ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகளின் அருளை பரிபூரணமாக பெற வேண்டும்.

–பிரேமா சந்திரசேகரன்

தவத்திரு. சுகுமாரன் ஸ்வாமிகளின் அனுபவங்கள்

1. மனிதப்பிறப்பின் நோக்கம் :



இம்மண்ணுலகில் உயிர்க்கும் எல்லா உயிர்களும் என்றோ ஒருநாள் இறைவன் அடியை சேர்ந்தே ஆகவேண்டும் என்பது இயற்கையின் நியதி. இறைவனிடமிருந்து வந்தவை அவ்விறைவனிடமே சென்று சேருதல் வேண்டும். அதனையே நாம் முக்தி அல்லது இரண்டற கலத்தல் என்கிறோம். அவ்வாறு இறைனோடு இரண்டறக் கலப்பதற்கு பல உயிர்களை காட்டிலும் மனித இனமே ஏற்றதாகும். ஏனெனில் மனிதனாகப் பிறக்கும் ஒருவனே தானமும், தவமும் செய்ய இயலும் என்றும் அதன் வழியாகவே முக்தியை பெற இயலும் என்றும் ஆன்றோர் கூறுவர். அத்தகு அரிதானது மனிதப்பிறவி! என்பதையம் ஔவையார்,

அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது
மானிடராய்ப் பிறந்த காலையும்
....
தானமும் தவமும் நயத்தல் அரிது
என்ற பொன்மொழியால் சொல்லுகிறார்.

2. எல்லோரும் முக்திபெற விழைதல் :

அதற்கு அரிதான மனிதப்பிறவி வாய்ந்த காலையும் மக்கள் ஜென்ம நோக்கமான பேரின்ப வீட்டை அடைய முயலாது, உலக இன்பதுன்பத்தில் சிக்கி உழல்வதை கண்டு பெரும் கருணைபூண்டு அனைவருக்கும் முக்தி என்னும் கரையை காட்டும் பெறும்

துணையாக முக்தியை தந்திடும் முதல்வனே ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகள் எனும் திருப்பெயர் பூண்டு இம்மேதினியில் அவதரித்தார். அவர் இம்மண்ணுலகில் மனிதனாய் பிறந்த எவரும் கடைபிடிப்பதற்கு மிக எளிதான அருள்சட்டம் என்னும் இல்லறத்தில் இருந்தே முக்தி பெறும் பெருநெறியை காட்டியருளினார். இந்நெறியில் முக்திபெற துறவு மேற்கொண்டு காடுகளுக்கோ, கோயில் குளங்களுக்கோ செல்ல வேண்டியதில்லை. இல்லறத்தில் இருந்து குடும்பம், தொழிலில் ஈடுபட்டு கொண்டே அதே நேரத்தில் இறைவன் திருநாமத்தை இடையறாது எண்ணினால் தாமரை இலை தண்ணீர் போல் மனமானது சிறிது சிறிதாக உலகப்பற்றில் இருந்து விலகி பக்குவப்படும் என்பதை ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகள் துணையாய் இருந்து வழிகாட்ட ஸ்ரீலஸ்ரீ அருள்சக்தி அன்னை, மாம்பலம் ஸ்வாமிகள், மாம்பலம் தாய் முதலான பல அடியார்களும் வாழ்ந்து காட்டி மெய்ப்பித்துள்ளனர்.

3. இளமையில் கிடைத்த தவம் :

கருணைக்கடலாம் குருநாதர் காட்டிய வழியில் சேர்ந்து அவருடைய சீடராக மாறும் பாக்கியம் அடியேனுக்கு 1970-ம் ஆண்டு என்னுடைய 11-ம் வயதில் கிடைக்கப் பெற்றது. அதுமுதல் அந்நெறியை கடைபிடித்துவர கடந்த 2004-ம் ஆண்டு நடைபெற்ற தவத்திரு. அருள்பிரகாச ஸ்வாமிகள் தவத்தின்போது அடியேன் மூன்று நாட்கள் தவத்தினை இரெட்டியப்பட்டிக்கு சென்று வசந்தவிழாவின்போது மேற்கொள்ள வேண்டும் என்ற அருள்குறிப்பு வந்தது. இதைகேட்டு சிறு வயதிலேயே எனக்கு தவம் கிடைத்ததை எண்ணி நானும் என் குடும்பத்தினரும் மகிழ்ந்தோம்.

4. முதலாமாண்டு தவம் :

முதல் ஆண்டு தவம் இரெட்டியப்பட்டியில் குருபாத நிலையத்தில் 2005-ம் ஆண்டு மணி ஸ்வாமிகளால் துவங்கி வைக்கப்பட்டது. ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகள் அவதரித்த ஊரில் அவர் சன்னதிக்கு அருகில் மூன்று நாட்கள் தவம் ஆற்றிய அனுபவம் இனிமையாக அமைந்தது. முதல் ஆண்டு தவத்தின் முடிவில் ஆண்டவர் அனுக்கிரஹத்தால் மூவேந்தரும் பால்பழம் அருந்தி மகிழ்ந்தனரே என்ற அருட்குறிப்பு வந்தது.

5. தவத்தின் பயனும் கேந்திர வளர்ச்சியும் :

முதலாம் ஆண்டு தவத்தை அடுத்து எங்களது இல்லத்து விழாவில் ஆழ்நிலை தியானத்தின் முடிவில் தவத்திரு. அருட்பிரகாசதாசன் ஸ்வாமிகள் இரெட்டியப்பட்டியில் நடைபெற்று கொண்டிருந்த குருநாதர் கருங்கல் திருப்பணி விரைவில் நிறைவு பெற்று, குடமுழுக்கு நடைபெற கேந்திராதிபதிகள் ஆகஸ்ட் மாதம் முதல் அக்டோபர் மாதத்திற்கு இடைபட்ட 90 நாட்களில் இரெட்டியப்பட்டிக்கு சென்று ஆண்டவரை வரவேற்று நாள்விருந்து செய்ய வேண்டும் என்ற குறிப்பை கூறினார். இதனை கேட்டு அனைத்து அடியவரும் அகம் மகிழ்ந்தனர்.

6. தவத்தால் ஒளிமயமானது வாழ்க்கை :

இல்லத்தை புனிதமாக்கிடுவாய் போற்றி என்ற அர்ச்சனை மந்திரத்திற்கேற்ப எங்கள் இல்லத்தை புனிதப்படுத்தும் விதமாக இரண்டாம் ஆண்டு தவம் ஆரணியில் இல்லத்திலேயே தவம் செய்து, ஆரணிஸ்வாமிகளின், உடையவன் திருவடி நிலையத்தில் பூர்த்தி செய்து கொள்ள குறிப்பு கொடுத்து அதன்படி

ஆரணிசுவாமிகள் தவம் தொடங்கி வைத்தார். தவம் கிடைத்த ஆண்டு முதல் எங்கள் வீட்டு பூஜை விழாவில் அடியார் உலகத்திற்கும், அருள்சட்ட வளர்ச்சிக்கும் பெரிதும் உதவும் குறிப்புகளை ஆண்டவர் கொடுத்து ஆண்டு முழுவதும் அதே சிந்தனையில் பணிபுரிய தெம்பு கொடுத்துள்ளார். அதன்படி 2006-ம் ஆண்டு எங்கள் இல்லத்தில் நடந்த விழாவில் தவத்தின் பயனாக "டாலடிக்கும் டாலடிக்கும் குருநாதர் அருள் டாலடிக்கும்" என்ற குறிப்பு வந்தது. அந்த குறிப்புபடி 2007-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1008டாலர் அபிஷேகம் செய்ய வேண்டும் என்றும், அதை அணிபவரின் வாழ்க்கை ஒளிமயமாக டாலடிக்கும் என்றும் கூறினார். அதன்படி செய்ததன் பயனாய் எனது மகன் B.Ed. கவுன்சிலிங்கில் மாநிலத்திலேயே முதல் மாணவனாக தேர்வு பெற்றான். அதுமுதல் அவனது வாழ்க்கையும், எங்கள் குடும்ப வாழ்க்கையும் அடியார்களது வாழ்க்கையும் ஒளிமயமாக திகழ்ந்து கொண்டு இருக்கிறது.

7. மூன்றாம் ஆண்டு தவம் :

2007-ம் ஆண்டு தவம் குறித்து சென்னை கோடி அர்ச்சனையில் கலந்து கொள்ள சென்ற சமயம் வந்த குறிப்பு :

"சிந்திக்கும் போது கூப்பிடு!
சந்திக்கும் போது புறப்படு!
விரும்பும் போது சாப்பிடு!
உறங்கும் முன்பு வழிபடு!"

அதாவது தெய்வ சிந்தனை வந்ததும் ஆண்டவரை நெருங்கி வந்து அவரை கூப்பிட வேண்டும். சந்திக்க வேண்டும் என்ற எண்ணம் வந்ததும் பிள்ளையார்குப்பம், இரெட்டியப்பட்டி மற்றும் பூஜை விழாவிற்கு புறப்படு என்றும், விரும்பியதை சாப்பிடு யாதொரு தடையும் இல்லை என்றும், உறங்கும் முன்பு ஆண்டவரை வழிபட வேண்டும் என்பதே இதன் விளக்கம்.

8. தவத்தால் சந்ததி பரிமளிக்கும் :

தவசிகளின் புத்திரர்கள் வாழ்வில் நன்கு பரிமளிக்கின்றனர், திரு. மாம்பலம் ஸ்வாமிகள் தவத்தின் பயனாக அவருடைய புத்திரர்கள் அனைவரும் தற்போது வாழ்வில் நன்கு பரிமளிப்பது போலவே, அடியேனின் குழந்தைகளும் 2008-ம் ஆண்டு முதலாய் பலபணிகளை அருளி அதன்மூலமாய் அவர்களுக்கு அருளிவருகிறார்.

நான்காம் ஆண்டு தவத்தை தொடர்ந்து 06-07-08 அன்று நடைபெற்ற எங்களது இல்லது விழாவிற்கு தவத்திரு. அருட்பிரகாசதாசன் வருகை தந்த பொழுது வரும் வழியிலேயே ஆண்டவர் அவரை அழைத்து அதிஅற்புதமான கிடைத்தற்கரிய அருட்குறிப்பு வழங்கி அருளினார். 36 ஆண்டுகளுக்கு பிறகு ஸ்ரீ அருள்சக்தி அன்னை குருபூஜையின் பொழுது புதுவையிலிருந்து பிள்ளையார்குப்பத்திற்கும் ஸ்ரீ ஆண்டவர் குருபூஜையின் போது மதுரையில் இருந்து இரெட்டியப்பட்டிக்கு பாதயாத்திரை மேற்கொள்ள வேண்டுமென்றும், அதில் பார்வையற்ற என் மகன் முன்னிலையில் பங்கு கொள்ள வேண்டும் என்றும் அருட்குறிப்பு வழங்கியிருந்தார். இதை கேட்டதும் நாங்கள் அனைவரும் ஆனந்த

கண்ணீர் மல்க ஆண்டவருக்கு நன்றி கூறினோம். அதற்கான குறிப்பு :

குளக்கரை குணாளனாக இருக்கிறாய் மணக்குள
நாயகரைத் தேடி
பிணக்குகள் யாவும் நீங்கிட பிள்ளையார்குப்பம் சென்று
கணக்குகளை காட்டி அருள் செய்த குருவின் குருபூஜையில்
இணக்கமாக பாதநடையில் அறுவர் சென்று மகிழ்ந்தனரே!

அனுஷத்தில் அமைதி கொண்ட அருள்குருநாதனை காண
நிமிஷத்தில் அனுக்கிரஹம் பண்ணும் பரிபூரணை
தரிசித்துவிட்டு பாதநடையில்
பன்னிருவர் பன்னிருநாட்கள் ஸ்தலம் சென்று பணி ஆற்றிட
பிறவி வீண் போகா துறவி பாலகனுக்கு அருள்செய்தனரோ?

2009-ம் ஆண்டு தவத்திருமாட்டி மாலா தாய் இல்லத்து விழாவிற்கு சென்ற பொழுது

"நூற்பதும் நாற்பதாகும்
பார்ப்பதும் சேர்ப்பதாகும்"

என்ற அருட்குறிப்பை அருட்பிரகாச தாசன் மூலமாக ஆண்டவர் அருளினார். அதன்படியே அடியேன் ஆரணியில் பட்டுநூல் மற்றும் துணியினை வாங்கி தவத்திருமாட்டி இந்திராதாயின் துணையோடு அரச வெண்சாமரத்தை போல பெரியதொரு விசிறியை செய்ய வேண்டும் என்று கூறினார். அவ்வாறே என் மகளும், மகனும் பெங்களூர் சென்று விசிறியை செய்து ஆடிப்பூரம் தொடங்கி 12 லட்சார்ச்சனை பெருவிழாவில் ஆண்டவருக்கு விசிறினார். அதன் பயனாக என் மகனுக்கு உடம்பில் இருந்த சில பிரச்சனைகள் நீங்கியதோடு அப்பணி செய்த

நாள் முதலாய் என் மகள் செல்வி கல்பனா எல்லா விழாக்களிலும் நடைபெறும் போட்டிகளில் பங்குபெற்று முதல்பரிசை பெற்று வருகிறாள். அவள் தற்போது பல பட்டங்களையும் ஆண்டவரின் அருளால் பெற்றுள்ளாள் என்று சொன்னால் மிகையாகாது.

9. தவப்பயன் கூட :

சென்ற ஆண்டு தவத்தின் பயனாக
வட்டவடிவில் மலர் அலங்காரக் காட்சி கண்டேன்
திட்டமிட்டு பணிபுரியும் சட்ட அடியார்கள் அனைவரும்
இட்டமுடன் அமர்ந்து அரும்தவம் ஆற்றும் முன்பு
அஷ்ட ஐஸ்வர்யம் பெற அகல்விளக்கு ஏற்றி
அழகாய் அமைத்தனரே!

என்ற அருட்குறிப்பு கிடைத்தது எங்கள் இல்லத்து விழாவில் தவசிகளும், கேந்திராதிபதிகளும், அடியவர்களும் 108 அகல் விளக்குகளை (30+36+42) மூன்று வட்டமாக ஏற்றி வைக்க வேண்டுமென்று, அவை எதிரிகளிடமிருந்து காக்கவும், தவசிகளின் தவப்பயன் கூடவும், உடல் நலமும், பொருள் வளமும் கூடவும் வழிவகுக்கும் என்றார்.

10. எழுச்சியுடன் அமைந்த ஏழாம் ஆண்டு தவம் :

இவ்வாண்டு தவத்தின் பொழுது யாது செய்ய வேண்டும் என ஆண்டவரிடம் கேட்ட பொழுது ஆண்டவர் தவத்திரு. குருமணி ஸ்வாமிகள் இல்லத்தில்



18-வது ஆண்டு தவத்தின் போது (8.8.2010)
பத்மபீட சித்தி விநாயகர் காட்சி

தவத்தின் போது அந்தாதிகள் அருள்பெறும் காட்சி

சிவனை போற்றி பாடும் பாடல்கள்
பஜனை போன்று அமைந்திடுமே!
குகனின் தொண்டினை போற்றிய இராமபிரான் போல்
மகனின் பங்களிப்பு என்றும் பரிமளிக்குமே!

இவ்வாண்டு தவத்தின் பொழுதும், இரங்கநாதன் தெருவில் நடக்கும் கோடிஅர்ச்சனையின் பொழுதும் என் மைந்தன் குழுவினரோடு சேர்ந்து சிவபெருமானுக்கு தொண்டு செய்யாவிடில் என்ற பாடல் தொடங்கி பல பாடல்களை பாட வேண்டும். அதுதாளம் வாசிக்கும் கச்சேரிபோல் அமையும் என்கிறார். ஆண்டவர் என்றும் விளக்கம் வழங்கப்பட்டது. அதன்படியே பாடிவந்த போது திரு. மணி என்பவர் இதனை கேட்டுவிட்டு தம் இல்லம் சென்று வாத்திய கருவியை கொண்டு வந்து ஆர்வத்தோடு அருட்பாடல் நிகழ்ச்சியில் பங்கேற்று ஆண்டவர் குறிப்பின் படியே அதை கச்சேரியாக மாற்றினார். தாள இசையை கேட்ட நாங்கள் அனைவரும் என்னே ஆண்டவரின் மகிமை! ஆண்டவர் குறிப்பின்படியே அனைத்தும் நடக்கின்றதே! என்று ஆண்டவர் அருளை வியந்து புகழ்ந்தோம். மேலும் இவ்வாண்டு அதிகளவில் பக்தர்கள் கலந்து கொண்டு குழுவாக அருட்பாடல் நிகழ்ச்சியை நடத்தி தவத்தை சிறப்பித்தனர்.

11. அருட்கதிரின் ஈர்ப்பு விசை :

ஸ்ரீ ஆண்டவரின் அருட்கதிரின் ஈர்ப்பு விசையின் காரணமாக ஒவ்வொரு ஆண்டும் தவத்திற்கு சென்னை, காஞ்சீபுரம், கலவை, சக்கரமல்லூர், வெண்மந்தை உள்ளிட்ட பல ஊர்களிலிருந்தும், உள்ளூர்களிலிருந்தும் அடியார்கள் பங்குபெற்றும் குருவின் பேரருளை பெற்றுச் செல்கின்றனர்.

குருநாதரின் அருட்கதிர்வீச்சை நன்கு உணர்ந்து கொண்ட பூத்தொடுப்பவரான திரு. ரங்கநாதன் அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் தாமாகவே முன் வந்து பூமாலை, புஷ்பம் ஆகியவற்றை இல்லம் தேடி வந்து கொடுத்துச் செல்கிறார். அதற்கு குருவின் கருணையே காரணம் என்றால் மிகையாகாது.

ஒவ்வொரு ஆண்டின் தவத்தின் போதும் இல்லத்து அரசியாரும், குழந்தைகளும் மிகுந்த ஈடுபாட்டுடன் பங்குபெற்று ஆண்டவரின் அருளை பரிபூரணமாக பெறுவதாலேயே ஆண்டுக்காண்டு அவர்களின் வாழ்க்கை வளமாக அமைகின்றது.

நான ஜீவன்க ளுள்ளும்
நரஜன்மம் அரிதா மன்றோ
ஆனாலும் மனிதத் துன்பம்
அளவிட முடியா தந்தோ
போனாலும் அறிவைக் கொண்டு
பொறையினால் பெரியோ ரெல்லாம்
தானாகிப் புகழ்ப ரக்கத்
தரணியில் வாழ்வார் என்றும்

என்ற ஆண்டவரின் அந்தாதி பாடலுக்கேற்ப கிடைத்தற்கரிய இம்மனித ஜென்மா பல துன்பங்களுக்கு ஆட்பட்டதென்றாலும் ஆண்டவரின் அருளால் கிடைக்கும் மெய்யறிவைக் கொண்டு ஆண்டவர் உணர்த்தும் தவம் முதலிய பல பணிகளை செவ்வனே செய்வோர்க்கு நிலைதிரியாத வாழ்க்கையும், தரணி போற்றும் புகழும் ஏற்படும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

வாழ்க தவசிகள்!

வாழ்க அருட்சட்டம்!!

– தவத்திரு. சுகுமாரன்

தவத்திரு. சிவக்குமார் ஸ்வாமிகளின் அனுபவங்கள்

ஆகஸ்டு 1993-ல் அருள்சட்டம் ஏற்று வாழ ஆரம்பித்தேன் நவம்பர் 1997-ல் நம் ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகளுக்கு கேந்திர விழா செய்யும் பாக்கியம் பெற்றேன்.

"மாதவம் மிக்க தன்பலனால் மாயையை விலக்கி
வேத வித்தகன் அருளால் வேள்வியை நடத்தி
பூதலத்தில் சற்குரு பெருமையை பார்எங்கும் சாற்றி
ஈதலத்தில் அருள்வேந்தராய் வந்தாள்வாய் போற்றி"

என்ற நம் ஸ்ரீ மாம்பலம் ஸ்வாமிகள்ப் பற்றிய பாடலை படித்த பிறகுதான் எனக்கு ஸ்வாமிகளின் பெருமையை உணரமுடிந்தது. அதன்பிறகு அவரை வேண்டியதன் பலனால் 2000-ல் நானும் கே.எஸ்.கே. ஸ்வாமிகளும் இரெட்டியப்பட்டியில் மாம்பலம் ஸ்வாமிகளின் கோயிலை வலம் வரும்போது கே.எஸ்.கே ஸ்வாமிகள் உங்களுக்கு தவம் வரும் அதன்தேதி பின்னர் அறிவிக்கப்படும் என்றார்.

அதன்படி 2001 ஏப்ரல் மாதத்தில் வசந்தவிழாவில் முதல் தவம் ஆற்றினேன். அதுமுதல் ஆண்டவர் அருளால் ஒவ்வொரு வருடமும் 3 நாள் தவம் வசந்த விழாவின் போது செய்து வருகிறேன். ஒவ்வொரு முறை தவம் ஆற்றும்போதும் நம்முள் ஏற்படும் ஆனந்த அனுபவத்தை சொல்லால் விவரிக்க முடியாது. அதை உணர்ந்தால்தான் புரியும்.

தவம் செய்வதால் நம்முள் ஓர் தனி ஆனந்தம், அமைதி கிடைக்கிறது. யாருக்கும் தீங்கு நினைக்க மனம் ஒவ்வாது, மற்றவரிடம் போட்டியோ, பொறாமையோ கொள்ள மனம் இடம் கொடுக்காது. யார் துன்பப்பட்டாலும் ஆண்டவரிடம் தாக்கல் செய்யும் மனப்பான்மை வரும். இந்த நிலைதான் நம்மை முழுமையாக இறைநிலைக்கு செல்ல ஓர் சிறந்த அஸ்திவாரம். இந்த அஸ்திவாரம் பலமாக இருந்தால் நாம் படிப்படியாக மேல்நிலை அடைய தடையில்லாமல் செல்லலாம் அப்படிப்பட்ட முழுமையான இறைநிலைக்கு செல்ல தவம் மிகவும் உதவியாக அமைகிறது.

இப்படிப்பட்ட தவ நெறியை அனைவரும் ஆண்டவரிடம் பிரார்த்தனை செய்து முழுமையான இறைநிலை அடைய முயற்சிக்க வேண்டும் என்பதே என் அவா. மிக உயர்ந்த தவநெறி வேறு எந்த சமய மார்க்கத்திலும் இல்லை என்பதை உணர்ந்து அருட்சட்ட அடியார்கள் பொக்கிஷமாக கருதி அதனை அடைய வேண்டும்.

தவத்திரு. ஆர். சிவக்குமார் ஸ்வாமிகள்

தவத்திரு. விநாயகம் பிள்ளை அனுபவங்கள்



தஞ்சாவூர் மாவட்டம் திருத்துறைபூண்டியில் வசித்து வந்த ரெத்தினத்தாச்சி அவர்கள் 1923-ல் ஆண்டவர் அருள்சட்டம் ஏற்று வழுவாமல் இருந்துவருகிறார்கள். அவர்களுக்கு நான் 1923-ல் மகனாக பிறந்து சட்ட நெறியில் தவறாமல் வாழ்ந்து வருகிறேன். இப்பொழுது எனக்கு வயது 88

(7-9-23) எனக்கு முதலாமாண்டு தவம் 20-9-2002-ல் கிடைத்தது. இரெட்டியபட்டியில் குருபாத நிலையத்தில் 7 ஆண்டுகள் தவம் இருந்தேன். 8-வது, 9-வது ஆண்டு தவம் தோப்படி தெருவில் நான் வசித்து வரும் இந்த இல்லத்தில் இருந்து வந்திருக்கிறேன்.

அருள்சக்தி தாய் அவர்கள் 1972-ல் எனது இல்லத்திற்கு வந்திருந்து ஆசி வழங்கியிருக்கிறார்கள். மாம்பலம் ஸ்வாமிகள் 1972-ல் வந்திருக்கிறார்கள். காஞ்சி புது பெரியவாள் 1956-ல் வந்து ஆசி வழங்கியிருக்கிறார்கள். தொடர்ந்து பல அடியார்கள் வருகை தந்து ஆசி வழங்கி வருகிறார்கள்.

–தவத்திரு. விநாயகம்பிள்ளை

தவத்திருமாட்டி. பானுமதி சண்முகசுந்தரம் அனுபவங்கள்

மனிதர்களாக பிறந்த ஒவ்வொருவருக்கும் கிடைக்க வேண்டிய பெரும் பாக்கியம், பொக்கிஷம் நம் குருநாதர் ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகள் ஆவார். அவர் அருட்சட்டத்தை வகுத்து அதன்படி நடக்கும் அவருடைய அடியார்களுக்கு வழிகாட்டியாக இருக்கவும் ஆண்டவரை எப்படியெல்லாம் நெருங்க இயலுமோ அதனை செயல்படுத்த ஆண்டவர் ஏற்படுத்திய அருள்நிஷ்டைதான் பிறகு தவம் என்று ஆகியது. ஆண்டவர் குறிப்பின்படி உயர்திரு. கே.எஸ்.கே. ஸ்வாமிகள் குறிப்பிட்ட சில அடியார்களை தேர்ந்தெடுத்து அவர்களை தவம் ஆற்ற சொல்லி அவர்களுக்கு தவசி என்று பெயர் கூறி அழைத்து அடியார்களின் சார்பாக ஆண்டவர் காரியங்களை முன்நின்று செய்விக்கிறார்.

2003-ம் ஆண்டு திரு. கே.எஸ்.கே. சுவாமிகளின் தவத்தின் போது அடிமைக்கு தவம்வந்திருப்பதாக குறிப்பு வந்து உள்ளது என்று கூறினார். இப்படிப்பட்ட பேறுபெற அடிமை என்ன தவம் முற்பிறவியில் செய்தேனோ யான் அறியேன். அந்த நற்செய்தியை கேட்ட உடன் மெய்சிலிர்த்து கண்கலங்கி பேச நா வரவில்லை. உடனே ஆண்டவருக்கும்அருட் சக்தி அன்னையார்க்கும் நன்றி கூறினேன். பிள்ளையார் குப்பம் தாய் சந்நிதியில் தவம் அமர வேண்டும் என்றது தாயின் கருணையை நினைத்து உருகி போனேன். 2003-ம் ஆண்டு தொடங்கி இன்று வரை சீரிய முறையில் நடைபெற்று வருகிறது.

ஆனால் முதல் ஆண்டு தொடங்கிய போது மனதில் பயம் அதிகமாக இருந்தது. எப்படி நடக்குமோ எந்தவித தடையும் வரக்கூடாதே என்று மனம் படபடப்பாக இருந்தது. இன்றும் மனதில் அந்த பயம் மட்டும் அப்படியே உள்ளது. முதல் ஆண்டு “தாழம்பூ தவம்” என்று கூறினார். அது எப்போதும் மணம் வீசும் என்று கூறினார். இரெட்டியப்பட்டியில் நம் ஆண்டவருக்கு கற்கோவில் கட்டப்பட்டு 2007-ம் ஆண்டு கும்பாபிஷேகம் இனிது நடந்தேறியது அனைவரும் அறிந்ததே. அவ்வாறு விரைவாகவும், அழகாகவும், சிறப்பாகவும் நடைபெற திரு. கே.எஸ்.கே. ஸ்வாமிகள் தாய் மற்றும் ஆண்டவர் குறிப்பின்படி ஆண்தவசிகளையும், பெண் தவசிகளையும் பல சிறப்பு பூஜைகள் செய்யும் படி கூறினார். அதன்படி பெண் தவசிகள் 12 குத்துவிளக்குகள் வைத்து வெள்ளக்கிழமை தோறும் சிறப்பு பூஜைகள் செய்வித்தார்கள். அதன்படி அடிமை செய்ய தொடங்கினேன். ஆண்டவர் கருணையால் நான் எதிர்பாராமல் 12 குத்துவிளக்குகளும் வெள்ளியால் ஆனதாக அமைந்தது. 12குத்து விளக்குகளின் ஐந்து முகங்களும் விடியற்காலை சுடர்விட்டு பிரகாசித்து எரியும் போது

ஏற்பட்ட அனுபவத்தை வார்த்தையால் வர்ணிக்க இயலாது. அந்த காட்சியை மறக்கவும் முடியாது. இது தவத்தின் பெயரால் கிடைத்த உணர்வு எனலாம்.

தவசிகள் அனைவரும் கையில் "கங்கணம்" கட்டிக்கொண்டு கூட்டுப்பிரார்த்தனையாக அடியார்களோடு கலந்து எந்த காரியம் செய்தாலும் அதில் வெற்றி இல்லாமல் போகுமா? இத்தனை ஆண்டு தவத்தினால் குடும்பம் மகிழ்ச்சியாக உள்ளது. மேலும் ஆண்டவர் காரியங்கள், பூஜைகள் சிறப்பாக நடக்கச் செய்யவும் குருநாதர் துணை புரிகிறார். தற்போது ரங்கநாதன் தெரு ஆலயத்திருப்பணியும் இரெட்டியபப்பட்டியில் ராஜ கோபுர திருப்பணியும் விரைவாகவும் அழகாகவும் நடைபெற தவசிகள் கோரிக்கை விடுத்துக் கொண்டு இருக்கிறார்கள்.

ஆகவே எல்லாம் வல்ல நம் குருநாதர் தாய் துணைக் கொண்டு சீரிய முறையில் திரு. கே.எஸ்.கே. ஸ்வாமிகள் நடத்த இருக்கும் 12வது கோடி அர்ச்சனை சிறப்பாக நடைபெற வேண்டும். நடைபெறும் என்ற ஆழ்ந்த நம்பிக்கையோடு அடிமைக்கு கொடுக்கப்பட்டிருக்கும் சித்ரான்னம் நைவேத்தியம் செய்ய ஆயத்தமாக உள்ளேன். இப்படி ஒரு வாய்ப்பினை அடிமைக்கு அளித்த ஆண்டவருக்கும் தாய்க்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே.எஸ்.கே. ஸ்வாமிகள் ஆண்டவர் குறிப்பின்படி எனக்கு கொடுத்த வாய்ப்பினை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்கிறேன்.

தவத்திருமாட்டி பானுமதி சண்முகசுந்தரம்

தவத்திரு. இராமானுஜம் ஸ்வாமிகள் அனுபவங்கள்

மாசற்ற அருள்சட்ட அடியாராம், கீழையூர் என்னும் கிராமத்தில் வசித்து வரும் தவத்திரு இராமானுஜம் என்பர் அடிமையுடன் தவம் ஆற்றுவதால் சிலவரிகள் எழுதுகிறேன்.

தவம் செய்ய பேராவல் கொண்டவர். ஆண்டவர் அருட்பாடல் பலவற்றை மனப்பாடம் செய்தவர். சதா பாடிக்கொண்டும், ஆடிக்கொண்டும் அதே சிந்தனையில் உள்ளவர். அவரது கோரிக்கையும், ஆண்டவர் ஏற்று தவம் தந்தமைக்கும் அதையே நீட்டி 12 நாட்கள் மௌனத்தவம் ஆக்கினதற்கும் அவர் அடைந்த ஆனந்ததந்தான் என்னே! பாதயாத்திரையில் கலந்துக் கொண்டு, தொய்வின்றி இந்த அவரது 83 வயதிலும் திறம்பட பூர்த்தி செய்தவர். கடந்த ஆண்டு சைக்கிளில் செல்லுகையில் வீழ்ந்து அடிப்பட்டு மருத்துவமனையில் சிலகாலம் தங்கி சொஸ்தமானவர். மீண்டும் தவம் ஆற்ற துடிக்கிறார். இந்த ஆண்டு நவராத்திரியில் பிள்ளையார்குப்பத்தில் தவம் செய்ய உள்ளார்.

எப்படி ஒருமுறை சுவைத்தவர் மீண்டும் மீண்டும் சுவைக்க எண்ணுவாரோ அப்படி தவம் செய்வதை தனக்குக் கிடைத்த மாபெரும் பாக்கியமாகக் கருதி ஆண்டுதோறும் தீவிரமாக கடைபிடிப்பதைக் கண்டு அவர் வீட்டில் உள்ளவர்கள் மற்றும் அக்கம் பக்கத்தவர்கள் மகிழ்வுருகின்றனர்.

– தவத்திரு. இராமானுஜம்

சொற்படி எஸ்.எஸ்.என்.

தவத்திருமாட்டி கீதா கணேஷ் அனுபவங்கள்

திருமதி கீதா கணேஷ் - குருபிதா என்று கூறப்பட்டு என்னுடனேயே சில ஆண்டுகள் இல்லத்தில் தவம் மூன்று நாட்கள் ஆற்றிவந்தார். பிறகு அடிமைக்கு பிள்ளையார் குப்பம் மாற்றலானதும் போரூரில் தனி இல்லத்தில் தவம் மேற்கொண்டு தவத்திரு. அருள்பிரகாசதாசன் ஸ்வாமிகள் இல்லம் சென்று பூர்த்தி செய்வார். இவரது ஓர் ஆண்டு தவத்தின் போது மாதவிடாய் சமயம் என்பது கவனிக்கவில்லை. அந்த நாட்கள் தொட்டு பெண்களுக்குத் தவம் ஏதாவது சௌகர்யப்பட்ட மூன்று நாட்கள் அந்த குறிப்பிட்ட மாதத்தில் இருந்து வழக்கம்போல் பூர்த்தி செய்ய அனுமதி அளித்தார் ஆண்டவர். இப்படி தவமசோதாவில் திருத்தம் ஏற்படுத்தியவர் இவர். தற்சமயம் வெளிநாட்டில் உள்ளார். எனினும் தவநாட்களில் சென்னை வந்து தவம் மேற்கொண்டு செவ்வனே இருந்து பூர்த்தி செய்து செல்கிறார். எனவே ஒரு முறை பாலை குடித்த பூனை மீண்டும் மீண்டும் வந்து பருக நினைப்பதும் பருகுவதும் போலத்தான் இந்த தவசிகளின் ஆர்வம் மற்றும் ஈடுபாடு எனலாம். தவநாட்களை நீட்டிக் கொள்ள விழைகிறார். ஏனோ அவரது குடும்ப சூழ்நிலை அறிந்த ஆண்டவர் காலம் நோக்கி வழங்க உள்ளார்.

–தவத்திருமாட்டி கீதா கணேஷ்

குருபிதா – எஸ்.எஸ்.என்.

தவத்திருமாட்டி சாந்தி ஜெயபாலன் அனுபவங்கள்



மூங்கில் தோட்டம் திருமதி சாந்தி ஜெயபாலன் தொடர்ந்து நவராத்திரியில் 3 தினங்கள் தமது இல்லத்திலேயே பூசை அறைக்கு அடுத்த அறையில் தவம் மேற்கொண்டு ஸ்ரீதாய் சந்நதி வந்து தரிசித்து செல்கிறார். எவ்வளவோ இன்னல்கள் எல்லாம் ஸ்ரீ ஆணடவர் மற்றும் ஸ்ரீலஸ்ரீ அன்னையின் கருணையினாலும் தடைகள் நீக்கப்பட்டு தவம் பூர்த்தியாகிறது. கடந்த 4 ஆண்டுகளாக கணவனுக்கு உடலில் உபாதை முழு பலன் வைத்தியரால் அளிக்க முடியவில்லை. ஆண்டவரையே உறுதியாக எண்ணி வாழ்ந்து வருவதால் மற்ற சிறுசிறு தொல்லைகள் கண்காணாமல் போகிறது. அவரது விடாமுயற்சி, வைராக்கியத்திற்கு கட்டாயம் நல்ல பலன் கிடைக்கும் என பூர்ணமாக நம்புகிறார். உடையவன் பொறுப்பு.

– தவத்திருமாட்டி சாந்தி ஜெயபாலன்
சொற்படி எஸ்.எஸ்.என்.

தவத்திருமாட்டி வேதவல்லி தாயின் அனுபவங்கள்

மனிதர்களாய் பிறப்பதற்கே மாதவம் செய்திடல் வேண்டும். எல்லோராலும் தவம் செய்ய முடியும் என்பதற்கு நம்குருநாதர் ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகள் ஓர் எளிய முறையை உலகிற்கு எடுத்துக் காட்டியுள்ளார்.

நம்முடைய குருநாதர் சத்சங்கத்தில் சேர்வதற்கே புண்ணியம் செய்திருக்க வேண்டும். அருட்சட்டத்தில் சேர்ந்த அடியார்கள் முற்பிறவில் புண்ணியம் செய்ய வேண்டும். இல்லறத்தில இருந்து கொண்டே அருட்சட்ட வழியில் நடந்து பிறவிப்பிணி நீங்கி முக்தி நிலை அடைய வேண்டும்.

தவம் எனறால் என்ன? என்பதை தவத்திரு. அருட்பிரகாசதாசன் ஸ்வாமிகள் தான் எல்லா அடியார்களையும் அழைத்து தன் தவ வலிமையால் தவத்தை பற்றி ஒவ்வொரு அடியாரிடம் ஆண்டவரிடம் தாக்கல் செய்து 3 நாள் தவம், 12 நாள் தவம், 24 நாள் தவம் என்று கொடுத்து அடியரை பக்குவப்படுத்துகிறார் என்றால் மிகையாகாது.

மாம்பலம் ஸ்வாமிகள் எப்படி கேந்திரங்கள் நடத்த வழி வகுத்தாரோ, அப்படி இன்று 72 இடங்களில் லட்சார்ச்சனை கேந்திரம், சகஸ்ரநாம கேந்திரம், வழிபாட்டு கேந்திரம் நடைபெறுகிறது. 1996-ல் எங்கள் வீட்டில் சகஸ்ரநாம கேந்திரவிழா

தொடங்கியது, எங்களுக்கு ஆண்டவர் மேலும் அடியார்கள் வந்து இல்லத்தை புனிதமாக்கினர். தவத்திரு. அருட்பிரகாசதாசன் ஸ்வாமிகள் எனக்கு 2001-ல் 3 நாள் தவம் என்று எங்கள் இல்லத்து பூஜையில் அறிவித்தார். எல்லையில்லா ஆனந்தம். தவம் என்றால் என்ன என்று தெரியாத எனக்கு தவம் தந்து ஆண்டவர் ஆட்கொண்டவிதம் மெய்சிலிர்த்து என்ன செய்வது என்றே தெரியவில்லை. கருணை மிகு வள்ளல் நம் குருநாதர் பாதங்கள் தவிர வேறு ஒன்றும் தெரியவில்லை.

ஒவ்வொரு வருடமும் இரெட்டியப்பட்டியில் ஜெயந்திவிழா அன்று 3 நாள் தவம் முடித்து ஆண்டவரை தரிசித்து வருவதற்கு வழிவகுத்து தந்த தவத்திரு. அருட்பிரகாச தாசன் ஸ்வாமிக்குத்தான் என்பதால் நான் வாழ்நாள் முழுவதும் நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். தவப்பயனாக என்னுடைய வறுமை நீங்கியது. வீட்டில் என்னுடைய இரண்டு பிள்ளைகள் நன்றாக டிகிரி முடித்து நல்ல வேலை கிடைத்துள்ளது. தவத்தின்போது ஆண்டவர் கல்யாணபாய் வாங்க சொன்னார். உடனே 2007-ல் என் மூத்த மகனுக்கு கல்யாணம் நடைபெற்றது. இப்போது இரண்டு குழந்தைகளுக்கு தந்தையாக உள்ளார்.

சின்னமகன் 2010-ல் கல்யாணம் ஆகி இப்போது ஒரு ஆண் குழந்தைக்கு தந்தையாக உள்ளார். இந்த இரண்டு மகன்களும் ஆண்டவர் கருணையால் நன்றாக உள்ளார்கள். பிரச்சனைகள் வரும்போது ஆண்டவரிடம் தாக்கல் செய்ய வழிவகுத்து தந்ததுதான்

இந்த தவத்தின் பலன். தவப்பயனால் எந்த ஒரு வியாதியும் அணுகாமல் வழிவகுக்கிறார். அதிகாலை 4 மணிமுதல் 4.30 மணிக்குள் பச்சைத் தண்ணீரில் குளித்தால் போதும், ஆகார கட்டுப்பாடுடன் நடந்து கொண்டேன் எந்த வியாதியும் உடனுக்குடன் நிவர்த்தி ஆகிறது.

தவத்திற்கு பிறகு சாந்தகுணமும், ஒவ்வொரு அடியாரும் ஆண்டவராக எண்ணி நடக்கும் மனப்பக்குவமும் கிடைத்துள்ளது. பிற உயிர்கண்டதும் அன்பு செலுத்தும் குணமும் வந்துள்ளது. தன்னை உணரும் மனபக்குவம் கிடைத்துள்ளது. எத்தனையோ சோதனைகள் வந்தபோது இந்த தவப்பயனால் வேதனையோடு இல்லாமல் சாதனையாக்கி தந்துள்ளார் நம்குருநாதர்.

வாழ்க நம் அருள் குருநாதர் வளர்க அருட்சட்டம்

– தவத்திருமாட்டி வேதவல்லி தாய்

முடிவுரை

தவம் பற்றியும், அதை முறையாக மேற்கொண்டு பயனடையும் வழிகள் பற்றியும் ஒருவாறு பார்த்தோம். க்ருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம் ஆகிய காலங்களில் தவம் செய்த அகத்தியர், பகீரதன், விசுவாமித்திரர், வால்மீகி முனிவர், துருவன் ஆகியோரைப் போல காட்டிற்குச் சென்றும், காவியுடை அணிந்தும், கமண்டலம் மற்றும் யோகதண்டம் ஆகியவற்றைக்கொண்டும் தவம்செய்ய வேண்டிய அவசியம் தற்போது இல்லை. ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகள் அருளியுள்ள தவம் யாவரும் எளிதில் பின்பற்றி பயனடையும் ஒன்று ஆகும். தவம் மேற்கொள்வதற்காக தாங்கள் செய்யும் தொழிலையும், நிர்வகிக்கும்குடும்பத்தையும் கைவிடவேண்டியதில்லை. இல்லறத்தில் இருந்து கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக பழகி தீவிரமாகி அருட்சட்டத்தின் வழியில் **தவம் செய்யலாம் தடையேதும் இல்லை**. வாரீர் வாரீர்!.

தவத்திரு. எஸ்.பி.மூர்த்தி ஸ்வாமிகள்

ஸ்ரீ மாம்பழம் ஸ்வாமிகள்

ஸ்ரீலஸ்ரீ மாம்பலம் தாய்

ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகள் திருக்கோயில்
ரங்கநாதன் தெரு, சென்னை - 600 017.

இந்நூல் கிடைக்குமிடம் :

அருள்சக்தி அன்னை பதிப்பகம்
30, ராஜாபாதர் தெரு, தி.நகர், சென்னை - 600 017.

ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகள் வாசகசாலை
33, நடேசன் தெரு, தி.நகர், சென்னை - 600 017

ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகள் திருக்கோயில்
6, ரங்கநாதன் தெரு, தி.நகர், சென்னை - 600 017.